**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு உறுப்பினருக்கும் தனித் தனியாகப் பதில் சொல்வதற்குப் பதிலாக, அனைத்து உறுப்பினர்களுக்கும், எந்தெந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்கப்படவிருக்கிறது என்ற விவரத்தை, ஒரு சுற்றறிக்கை வாயிலாகத் தெரிவித்துவிடுகிறேன். அதிலே மாண்புமிகு உறுப்பினர்களின் பகுதி இடம் பெற்றிருக்கிறதா என்பது தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் மாவட்டத் தலைநகரம் என்பது அனைவருக்கும் தெரியும். ஆனால், தமிழகத்தில் அநேகமாக ஒரு மாவட்டத் தலைநகரத்திலே, அந்த நகராட்சிக்கு உட்பட்ட துணை மின் நிலையம் இல்லாத ஒரு ஊர் இராமநாதபுரம்தான். இராமநாதபுரத்திற்குள்ளே ஒரு துணை மின் நிலையம் இருக்கின்றது. ஆனால், அதிலிருந்து மின்சாரம் கிராமப்புறங்களுக்குத்தான் செல்கிறது. எனவே, இராமநாதபுரம் நகராட்சிக்குட்பட்ட பகுதியிலே, இராமநாதபுரத்திற்கென தனியாக ஒரு துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 மே 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இராமநாதபுரம் நகருக்குள்ளே துணை மின் நிலையம் இருந்தால் மட்டும்தான் இராமநாதபுரம் நகருக்கு மின்சாரம் வழங்கப்படும் என்று இல்லை. பக்கத்திலே இருக்கும் கிராமத்தில் துணை மின் நிலையம் இருந்தாலும் மின்சாரம் வரும். இராமநாதபுரத்தை விட்டு அருகிலே உள்ள கிராமத்தில் துணை மின் நிலையம் இருந்தாலும், அந்தத் துணை மின் நிலையத்திலிருந்து மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தத் துணை மின் நிலையத்தின் திறன் போதவில்லையென்று சொன்னால், மின் பற்றாக்குறை இருந்தால், அதனுடைய திறனை மேம்படுத்துவதற்கு வேண்டுமானால் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆய்வுகள் மேற்கொண்டு, தேவையிருப்பின் உரிய நடவடிக்கைகளை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. கா. தமிழரசன் அவர்கள்.*

**திரு. கா. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், மதுரை கிழக்குத் தொகுதியிலுள்ள ஒத்தக்கடையில் சென்ற கூட்டத் தொடரில் ஒரு துணை மின் நிலையம் அமைத்துத் தரப்படும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இந்தக் கூட்டத் தொடரில் அந்தத் துணை மின் நிலையம் எப்போது அமைக்கப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களை மீண்டும் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் கவனத்திற்கு. இதுபோன்ற கேள்விகளை அனுமதிக்க முடியாது. பேரவையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு தடவை கேள்வி கேட்டு, அதுகுறித்து மாண்புமிகு அமைச்சர் உறுதியளித்திருந்தால், சட்டமன்ற உறுதிமொழிக் குழுவினால் சம்பந்தப்பட்ட துறையின்மூலம் நடவடிக்கை எடுக்கப்படும். அதனாலே, புதியதாக துணை மின் நிலையம் அமைப்பது குறித்து கேட்கலாமேயொழிய, சென்ற கூட்டத் தொடரில் கேள்வி கேட்டேன், அதற்கு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்பது போல் கேள்வி கேட்காதீர்கள். மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*



2012 மே 4]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட ஒத்தக்கடை பகுதி மதுரையின் வளர்ந்து வருகின்ற புறநகர்ப் பகுதி. அந்தப் பகுதிக்கு மின் தேவை அதிகமாக இருப்பதைக் கருத்தில் கொண்டுதான், அந்தப் பகுதியில் துணை மின் நிலையம் அமைப்பதற்கு ஏற்கெனவே அரசு ஆணைகள் வழங்கப்பட்டு, அதற்குரிய பணிகள் தொடங்கப்படும் என்று தெரிவித்திருந்தேன். அந்த அடிப்படையிலே, மாண்புமிகு உறுப்பினருடைய விருப்பம்போல எவ்வளவு விரைவாக முடிக்கப்படுமோ, அவ்வளவு விரைவாக அந்தப் பணிகளை முடிப்பதற்கு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 206, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர், மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**206—**

**பூங்கா**

***1407—திரு. ஜே.சி.டி. பிரபாகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வில்லிவாக்கம் சிட்கோ நகரில் பூங்கா அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) சென்னை மாநகராட்சி, 8-வது மண்டலம், வில்லிவாக்கம், சிட்கோ நகர், 32-வது தெருவில் அமைந்துள்ள திறந்தவெளி நிலத்தினை அபிவிருத்தி செய்து, பூங்கா அமைப்பதற்கு ஏற்கெனவே 2011-2012 ஆம் நிதியாண்டில் கோரப்பட்டு ஒப்பந்தம்

[2012 மே 4

இறுதி செய்யப்பட இயலாத நிலையில், இந்த நிதியாண்டு 2012-2013 ஆம் ஆண்டு இப்பூங்கா பணிக்கான மறுமதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, மறு ஒப்பம் கோரப்பட்டு, மாநகராட்சியின் மூலதன நிதியிலிருந்து பணிகள் நிறைவேற்றப்பட உள்ளன. புல்வெளி, வண்ணச் செடிகள், நடைபாதை, சிறுவர் விளையாட்டுப் பகுதி, சுற்றுச் சுவர் மற்றும் நீரேற்றும் அறை ஆகிய அம்சங்களுடன் சுமார் 910 சதுர மீட்டர் பரப்பளவில் இப்பூங்கா புதிதாக அமைக்கப்படவுள்ளது. இப்பணிக்கான தோராய மதிப்பு ரூ.11 இலட்சம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.சி.டி. பிரபாகர் அவர்கள்.

**திரு. ஜே.சி.டி. பிரபாகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செய்யத்தக்கத் திராணி இருக்கும்போது, செய்யத் தக்கவர்களுக்கு செய்யாமல் இராதே" என்று பரிசுத்த வேதாகமம் சொல்கிறது. செய்யத்தக்க அனைவருக்கும் இன்றைக்குக் கேளாமலேயே அவர்களைத் தேடி மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்து கொண்டிருக்கிறார்கள். இந்த அறிவிப்பிற்காக நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை வில்லிவாக்கம் மற்றும் சிட்கோ நகர் பகுதி மக்களின் சார்பில் தெரிவித்துக்கொள்கிறேன்.

தங்களுடைய அறிவிப்பால் 3-வது sector, 32-வது தெருவில் பூங்கா அமையவிருக்கிறது. 1983 ஆம் ஆண்டு 4-வது தெருவில், 47 ground-ஐ மேல்நிலைப் பள்ளிக்காகக் கொடுத்த உத்தரவில் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடலுக்கும் சேர்த்தே கொடுத்திருக்கிறார்கள். பூங்கா மற்றும் விளையாட்டுத் திடலுக்கு என்று ஒதுக்கப்பட்ட இடம் இன்றைக்குப் பள்ளி வளாகத்திற்குள்ளே இருக்கிறது. ஆனால், அரசு ஆணையில் பூங்கா மற்றும் விளையாட்டுத் திடலுக்கும் சேர்த்தே என்றிருக்கிறது. மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள், அந்த இடத்தை மாநகராட்சியின் பொறுப்பிலே எடுத்து, அங்கே பூங்கா மற்றும் விளையாட்டுத் திடல் அமைத்துத் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மே 4]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாநகராட்சி, பள்ளிக்காக அந்த இடத்தைக் கொடுத்திருக்கிறது. அப்படி இடம் கொடுத்திருக்கின்ற பட்சத்தில், அந்தப் பள்ளியினுடைய நிருவாகம் அந்த இடத்தில் சுற்றுச் சுவர் அமைத்து, அதற்குள் அந்தப் பூங்கா இருந்தால், மாநகராட்சி அந்தப் பூங்காவை சீர் செய்ய முடியாது. அப்படியில்லாமல் வெளிப் பகுதியில் இருந்தால், அதைத் துறை ஆய்வு செய்து, அதனடிப்படையிலே அந்தப் பூங்காவை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரம்பூர் தொகுதி, 36-வது வட்டம், எத்திராஜ் சாலையில், புதர் மண்டியும், சமூக விரோதிகளின் புகலிடமாகவும், மண்ணாசைக்காரர்களின் ஆக்கிரமிப்பை எதிர்நோக்கியும் ஒரு பெரிய இடமிருக்கிறது. அங்கே ஒரு பூங்கா அமைக்க வேண்டுமென்று நான் தொடர்ந்து நகராட்சி நிருவாகத்திடம் விண்ணப்பித்து வந்திருக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கே பூங்கா அமைத்துத் தர ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் 260 பூங்காக்கள் இருக்கின்றன. புதியதாக சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் இப்பொழுது மாநகராட்சியின் சார்பாக புதிதாக இருக்கின்ற இடங்களை ஆய்வு செய்து 100 பூங்காக்களை உருவாக்க வேண்டுமென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அதை நடைமுறைப்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதியை ஆய்வு செய்து, அவர் சொன்னதைப்போல, அந்த இடம் சமூக விரோதிகள் தங்குகின்ற இடமாக இருந்தால், நிச்சயமாக அந்த இடத்தைச் சுத்தம் செய்து,

[2012 மே 4

*சுத்தம் செய்வதோடு மட்டுமல்லாமல், நல்லவர்கள் சென்று அமர்ந்து ஓய்வு எடுக்கக்கூடிய அமைப்பாகவும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மாற்றி அமைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.கே. அசோக் அவர்கள்.*

**திரு. எம்.கே. அசோக்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கின்ற திசை நோக்கி வணங்குகிறேன். வேளச்சேரி-தரமணி பகுதியில், பெரியார் நகர் மற்றும் பாரதியார் நகரில் பூங்காக்களை அமைத்துத் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சியுடன் புதியதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளில் 100 பூங்காங்களை அமைப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறதென்று நான் ஏற்கெனவே சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன பகுதி அதில் இணைக்கப்படுகின்றபட்சத்தில், பூங்கா அமைப்பதற்குரிய வாய்ப்பும் வசதியும் மற்றும் போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல் அந்தப் பகுதி தனியாகவும் இருக்கின்றபட்சத்தில், நிச்சயமாக பூங்கா அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகரத்தினுடைய மக்களுக்கு குடிநீர் வசதி மற்றும் சாலை வசதி போன்றே பூங்காங்களும் இன்றைக்கு மிக அத்தியாவசியமாக தேவைப்படுகின்றன. குறிப்பாக, குழந்தைகள்*



2012 மே 4]

*மற்றும் பெண்கள் டி.வி. தொடர்களிலே அடைந்துக் கிடக்கிறார்கள். அவர்களை வெளியிலே கொண்டு வந்து, பூங்காக்களில் அமர வைத்து, அவர்கள் சிந்திப்பதற்கும், பொழுதுபோக்குவதற்கும், இயற்கையை ரசிப்பதற்குமான ஒரு மாற்று கலாச்சாரத்தை நாம் உருவாக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, திண்டுக்கல்லில், குமரன் தில்லை நகரில் ஒரு பூங்கா இருக்கிறது. அந்தப் பூங்காவை சீர்படுத்தி, நவீனமாக்கி, ஒரு பெரிய பூங்காவாக அமைத்துக் கொடுப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மாநகராட்சியைத் தவிர்த்து, மற்ற பகுதிகளில் ஒட்டுமொத்தமாக 1,156 பூங்காக்கள் இருக்கின்றன. அதிலே ஒரு பூங்காவைத்தான் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திண்டுக்கல் நகரத்திலே இருக்கின்றது என்று கூறுகிறார்கள். ஏற்கெனவே அது ஓரளவிற்கு நன்றாக இருக்குமென்று கருதுகிறேன். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல கருத்தைச் சொல்லியிருக்கிறார். அதனடிப்படையிலே, அந்தப் பூங்காவை மேம்படுத்துவதற்குரிய நடவடிக்கையை மேற்கொள்ள, சம்பந்தப்பட்ட நகராட்சிக்கு உத்தரவிட்டு, அது செயல்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-25*

*அதுமட்டுமல்லாமல், இதுபோன்ற பெரிய நகரங்களிலே ரோட்டரி கிளப், லயன்ஸ் கிளப், ஜேசீஸ் போன்ற பல அமைப்புகள் இருக்கின்றன. அதேபோன்று, அந்தப் பகுதிகளிலே சில தொழில் நிறுவனங்கள்கூட இருக்கின்றன. உதாரணமாக, ஓசூர் பகுதியை எடுத்துக்கொண்டால், தொழிற்சாலைகள் நிறைய இருக்கின்றன. அதுபோன்ற தொழிற்சாலைகள், அந்தப் பகுதிகளில் உள்ள பூங்காக்களைத் தத்தெடுத்துக்கொண்டு, மிக அழகாக, நேர்த்தியாக அவற்றைச் சீரமைத்து, பராமரித்துக் கொண்டிருக்கின்றன. அதனடிப்படையிலே, நம்முடைய திண்டுக்கல் நகரிலே இருக்கின்ற அந்தப் பூங்காவையும், ஏதாவது ஒரு அமைப்பு தத்தெடுத்துக் கொண்டால், மிகச் சிறப்பாக இருக்கும். அதற்கும்*

[2012 மே 4

நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், 'உடனடியாக நடவடிக்கை எடுப்பேன்' என்று நான் எழுந்திருக்கும்போதே சொல்லிவிட்டார். அதனால் அதுவும் நடக்கும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்து, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி நகராட்சியிலே, நகராட்சி அலுவலகக் கட்டடத்திற்கு எதிர்ப்புறமாக இருக்கின்ற வெங்கட்ராமன் பூங்கா பயன்படுத்த முடியாத நிலையிலே இருந்தது. அதனை மேம்படுத்துவதற்காக கடந்த வருடம், அக்டோபர் மாதம் 10 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இதுவரை அந்தப் பணி ஆரம்பிக்கப்படவில்லை. அந்தப் பூங்காவில் ஒலி, ஒளிக் காட்சியைக் காட்டுவதற்கு projector with screen வசதியை ஏற்படுத்துவதற்கு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 2 இலட்சம் ரூபாய் நிதியினை ஒதுக்கியிருந்தேன். ஆனால், அதற்கு அரசின் திட்டத்திலே வழிவகை இல்லை என்று கூறியிருக்கின்றார்கள். எனவே, அதற்கு வழிவகை செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அந்தப் பூங்காவை மேம்படுத்துவதற்காக 10 இலட்சம் ரூபாய் நிதி ஏற்கெனவே ஒதுக்கப்பட்டிருக்கின்றது என்று கூறியிருக்கிறார்; அதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். ஆனால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பொறுத்தவரையில், உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காகத்தான், கூடுதலாக 25 இலட்சம் ரூபாயையும் சேர்த்து, 2 கோடி ரூபாயாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயர்த்தியிருக்கிறார்கள். உள் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவது போன்ற பணிகள் இல்லாமல், இதுபோன்ற projector வசதிகளை ஏற்படுத்துவதற்கு அந்த நிதியைப் பயன்படுத்த அனுமதி அளித்தால், அதிலே சில தவறுகள் நடைபெற



2012 மே 4]

வாய்ப்புள்ளது. அதனால் அதற்கு வாய்ப்பில்லை. எனவே, வருங்காலத்தில் அப்படியொரு சூழ்நிலை வருகின்றபோது, அது நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். முருகுமாறன் அவர்கள்.

**திரு. என். முருகுமாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பேரூராட்சி, 5-வது வார்டு, பிடாரி தெருவிலே பூங்கா அமைக்கப்பட்டு, இன்னும் திறக்கப்படாமல் உள்ளது. அந்தப் பூங்காவினைத் திறந்திடவும், அந்தப் பூங்காவிற்கு, பொன்மேனித் தலைவன், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களுடைய பெயரினைச் சூட்டிடவும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நகராட்சியிலோ அல்லது பேரூராட்சியிலோ ஒரு பூங்கா அமைக்கும் பணி முடிக்கப்பட்டிருந்தால், அது இயற்கையாகவே பயன்பாட்டிற்கு வந்துவிடும். அதோடு மட்டுமல்லாமல், புரட்சித் தலைவருடைய பெயரை வைக்க வேண்டுமென்று சொன்னால், சம்பந்தப்பட்ட பேரூராட்சியோ, நகராட்சியோ அதுகுறித்து தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். அந்தத் தீர்மானம் அரசுக்கு வரவேண்டும்; அரசுக்கு வந்தவுடன், அரசின் வாயிலாக உத்தரவு பிறப்பித்த பின்புதான், அந்தப் பெயரைச் சூட்ட முடியும். எனவே, அதற்குரிய நடவடிக்கையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஈடுபட வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

[2012 மே 4

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய ஆம்பூர் நகரத்திலே பூங்காக்கள் கிடையாது. அதனால் பூங்காவை உருவாக்குவதற்காக, நகர மன்றத்தால் இடம் தேர்வு செய்யப்பட்டு, அதற்கான திட்டங்களும் தயாரிக்கப்பட்டு, துறைக்குக் கருத்துருவினை அனுப்பியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைப் பரிசீலனை செய்து, ஆம்பூர் நகரத்திலே ஒரு பூங்கா அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கொரு இடத்தைத் தேர்வு செய்து, கருத்துருவும் அரசுக்கு அனுப்பப்பட்டிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே கூறிவிட்டார். அதற்கு இப்போது நிதிதான் தேவைப்படுகிறது. அந்த நிதியையும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு ஒதுக்கித் தந்து, ஆம்பூர் நகரத்திலே அந்தப் பூங்காவினை அமைப்பதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் குடியிருப்பு வளாகத்தில், கடந்த ஆட்சியாளர்கள் செய்த தவறின் காரணமாக, மண்ணும், புதருமாகக் கிடக்கின்ற இடத்தில், நல்லதொரு பூங்காவினை ஏற்படுத்தி, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஒரு மகிழ்ச்சியான செய்தியை அறிவிப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது மாண்புமிகு பேரவைத் தலைவர் என்ற முறையில் தங்களுடைய ஆளுகைக்குட்பட்ட பகுதி. தங்களுடைய



2012 மே 4]

ஆளுகைக்குட்பட்ட அந்தப் பகுதியில், தாங்கள் உத்தரவு பிறப்பித்தால்தான், மேற்கொண்டு எங்களால் அங்கே பூங்காவினை அமைப்பதற்கான பணியைச் செய்ய முடியும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் உத்தரவு பிறப்பித்தால், அனுமதி அளித்தால், அதற்குரிய நடவடிக்கையை மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றமும், நம்முடைய சட்டமன்றப் பேரவை வளாகமும், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியும் பேரவைத் தலைவருடைய அதிகாரத்திற்குட்பட்ட பகுதிகள் என்ற காரணத்தினால், இதுபற்றி இங்கே விவாதிப்பது சரியல்ல. அதற்கென்று ஒரு குழு இருக்கின்றது. நிச்சயமாக அந்தக் குழுவிலே இந்தக் கருத்துகள் பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10-30*

வினா வரிசை எண் 207, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**207—**

## கொள்முதல் நிலையம்

***6815—திரு. சு. மாதேஸ்வரன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாபூர், எடப்பட்டி, கொட்டவாடி மற்றும் படையாச்சியூர் பகுதிகளில் பாக்கு கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஆத்தூர் தொகுதி, ஆத்தூர், பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாபூர், எடப்பட்டி, கொட்டவாடி

[2012 மே 4

மற்றும் படையாச்சியூர் பகுதிகளில் பாக்கு கொள்முதல் நிலையங்கள் அமைக்க சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆத்தூர் தொகுதிக்குட்பட்ட பெத்தநாயக்கன்பாளையம், ஏத்தாபூர், எடப்பட்டி, கொட்டவாடி மற்றும் படையாச்சியூர் பகுதிகளில் மொத்தம் 3,940 ஏக்கர் நிலங்களில் பாக்கு மரங்கள் பயிரிடப்பட்டுள்ளன. மாண்புமிகு அமைச்சர் அவர்களும் ஒரு விவசாயி, வேளாண்மைத் துறையைச் சார்ந்தவர். இப்பகுதியில் ஆண்டொன்றுக்கு 5 கோடி ரூபாய் அளவிற்குக் கொள்முதல் செய்யப்படுகிறது. தயவுகூர்ந்து இதை மறுபரிசீலனை செய்யுமாறு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மலைப் பயிரான பாக்குப் பயிரானது 5,456 ஹெக்டேர் நிலங்களில் பயிரிடப்பட்டு, 10,438 மெட்ரிக் டன் உற்பத்தி செய்யப்படுகிறது. இதில், கோவை மற்றும் சேலம் மாவட்டங்களில் 30% அளவிலும், ஏனைய 15 மாவட்டங்களில் 70% அளவிலும் சாகுபடி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் உற்பத்திச் செய்யப்படும் பாக்கு, செவ்வாய்ப்பேட்டை சந்தை மூலமாக கும்பகோணம், புதுக்கோட்டை ஆகிய மாவட்டங்களுக்கும், கோவை மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் பாக்கு மேட்டுப்பாளையம் சந்தை மூலமாக இதர மாநிலங்களுக்கும் விற்பனைச் செய்யப்படுகிறது. ஒவ்வொரு வருடமும் தமிழக அரசு, குறிப்பிட்ட பயிர்களுக்கு மட்டுமே வேளாண் செலவுகள் மற்றும் விலை குறித்த குழுவுடன் குறைந்தபட்ச ஆதரவு விலையை நிர்ணயம் செய்யுமாறு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்கிறது. அவ்வாறு குறிப்பிட்ட விவசாய விளைப் பொருள்களுக்கான பட்டியலில் பாக்குப் பயிர் இடம் பெறவில்லை. மேலும், பாக்கு உணவுப் பயிர்களின் வரிசையில் வராததாலும், உணவுப் பயிரான நெல் மட்டும் பொது



2012 மே 4]

விநியோகத் திட்டப் பயன்பாட்டிற்க்கு வருவதால் தானியமாக நெல் மட்டும் கொள்முதல் செய்யப்படுகிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியுள்ள இடங்களில் பாக்கு கொள்முதல் நிலையங்கள் அமைக்கின்ற சாத்தியக் கூறு இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்பகுதியில் ஆண்டொன்றுக்கு சுமார் 30,000 ஏழை கூலி விவசாயிகள் இப்பாக்குப் பயிரை நம்பி கூலி வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். அதுமட்டுமல்ல; குறிப்பாகச் சொல்ல வேண்டுமானால், இடைத் தரகர்கள் மூலமாக ஒவ்வொரு பாக்கு விவசாயியும் 30 சதவீதம்தான் பயன் பெறுகிறார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு முயற்சி செய்தால், கட்டயமாக நேரடியாக ஒவ்வொரு விவசாயியும் 100 சதவீதம் பயன் அடைவார்கள் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குக் கூறி அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குப் பாக்கினுடைய விலை ஓரளவுக்கு நல்ல நிலையில் இருக்கிறது. கிட்டத்திட்ட ஒரு ஹெக்டேருக்கு, முழுப் பாக்கிற்கு 2½ இலட்சம் ரூபாய் அளவிலும், சுத்தம் செய்து, வெட்டி வைத்த பாக்கிற்கு 5½ இலட்சம் ரூபாய் அளவிலும் இன்றைக்கு வருமானம் கிடைக்கிறது. அதுவே போதுமானதாக இருக்கிறது. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கை, மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்பட்டு, தேவையிருப்பின் வருங்காலத்தில் அதுபற்றி பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சின்னசாமி அவர்கள்.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாக்கு சம்பந்தமாக, பாக்கில் ஏதாவது மருத்துவ

[2012 மே 4

குணம் உண்டா? உண்டென்றால் எந்த வகையான மருத்துவ குணம் கொண்டது என்பதைத் தங்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கொட்டைப் பாக்கு என்ன விலை என்று கேட்டால், நீங்கள் பட்டுக்கோட்டைக்கு வழி சொல்கிறீர்கள். மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள், medicinal value பற்றிச் சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக பாரம்பரியமாக நாம் வெற்றிலையுடன் பாக்கைப் பயன்படுத்திக்கொள்கிறோம். கொட்டை பாக்கும், கொழுந்து வெற்றிலையும் பயன்படுத்தினால் நல்ல முறையில் இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மருத்துவ குணத்தைப் பொறுத்தவரையில், மனிதர்களுக்குக் குடல் புழு நீக்கம், தோல் வியாதி போன்றவற்றிற்குப் பயன்படுகிறது; வாய்ப்புண் குணம் அடைகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** **

*முற்பகல் 10-35*

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** கொட்டைப் பாக்கின் மருத்துவ குணங்கள் என்று பார்த்தால் குடல் புழு நீக்கம், தோல் வியாதிகளுக்குப் பயன்படுகிறது. வாய்ப்புண் குணமடைகிறது. இரத்தத்தில் சிவப்பணுக்கள் அதிகரிக்க உபயோகப்படுகிறது. விலங்குகளைப் பொறுத்தவரையில் அனைத்து விலங்குகளுக்கும் நாடா புழுக்கள் நீக்குவதற்காக பயன்படுகிறது. தொழிற்சாலையைப் பொறுத்தவரையில் தோல் பதனிடுதல், ஆலைகளில் சாயம் போடுதல் பொம்மை தயாரித்தல், சாக்லெட், மிட்டாய்கள், பிஸ்கட் தயாரித்தல், சேமியா தயாரித்தல் ஆகியவற்றில் பயன்படுகிறது. தீமையைப் பொறுத்தவரையில் அதிகமாக பாக்கைப் பயன்படுத்தினால் சிறுமூளை பாதிக்கப்படுகிறது, உடம்பிலுள்ள எதிர்ப்புச் சக்தி குறையும், குறிப்பாக ஜர்தா பாக்கு, பான்பராக் பயன்படுத்தாமல் இருப்பது நல்லது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 மே 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ** (குறுக்கீடு) மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன அந்தப் பாட்டு அவைக் குறிப்பிலிருந்து மொத்தமாக நீக்கப்படுகிறது. நான் சொன்னதையும் சேர்த்துதான்.

வினா வரிசை எண் 208, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**208—**

## சொந்தக் கட்டடம்

***4278—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியத்திலுள்ள ஆச்சாள்புரம் தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு கடன் சங்கத்திற்கு அலுவலகத்துடன்கூடிய கிடங்கு கட்டுவதற்காக ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் 30-11-2011-ல் ரூ.6 இலட்சம் அனுமதிக்கப்பட்டுள்ளது. அதில் ரூ.3 இலட்சம் கடனாகவும், ரூ.1½ இலட்சம் பங்குத் தொகையாகவும், ரூ.1½ இலட்சம் மானியமாகவும் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, இச்சங்கத்திற்கு அலுவலகத்துடன்கூடிய கிடங்கு கட்டும் பணி விரைவில் தொடங்கப்படவுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2012 மே 4

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.

**திருமதி ம. சக்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். சமநிலை சமுதாயம் உருவாக்கிட, இல்லாமை இல்லையென்றாகிட, சிறப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வரும் திராவிட திருவிளக்கே! தமிழகத்தை இந்தியாவின் முதன்மை மாநிலமாக்கிட திட்டங்கள் வகுத்து, செம்மைப்படுத்திடும் காவியத் தாயே! சரித்திரம் படைத்திட, சமத்துவம் நிலைத்திட நாளும் உழைப்பவரே! மக்கள் துயரத்தைத் துடைத்திட மகத்துவம் விளங்கிட மகிமை புரிபவரே! தமிழகத்தை முதல் மாநிலமாக்கிட சாதனை செய்பவரே! தரணி எங்கும் புகழ் படைத்திட்ட தங்கத் தாரகையே! கேட்டவுடனே வாரி வழங்குகின்ற வாழும் வள்ளலே! மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் சார்பாகவும், தொகுதி மக்கள் சார்பாகவும் நன்றியைக் காணிக்கையாக்கி அமருகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. வெங்கடாஜலம் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கோ. வெங்கடாஜலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மல்லகுப்பம்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, பழைய சூரமங்கலத்தில் நீண்ட காலமாக வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. அதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டித் தர முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**திரு. செல்லூர் கா. ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தச் சங்கத்திற்கு அடிமனை இருக்குமேயானால், தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தால் பராமரிக்கப்பட்டு வரும் கூட்டுறவு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி நிதியிலிருந்து வட்டியில்லா கடனும் அல்லது தமிழ்நாடு மாநில தலைமைக் கூட்டுறவு வங்கியால் பராமரிக்கப்படும் தொடக்கக் கூட்டுறவு வளர்ச்சி நிதியிலிருந்து மானியமாகவும் அல்லது ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம்



2012 மே 4]

நடைமுறைப்படுத்தப்படும் மாவட்டங்களிலிருந்து, அந்த நிதியிலிருந்து மானியத்துடன் கடன் கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கின்ற அந்தச் சங்கத்திற்கு சொந்த இடம் இல்லாமல் இருக்கும்பட்சத்தில், அதாவது அடிமனை இல்லாதபட்சத்தில் அந்தச் சங்கம் எந்த ஊராட்சிப் பகுதியில் இருக்கிறதோ அந்த ஊராட்சி மன்றம், அது இலவசமாக கொடுக்கின்ற அடிமனை அல்லது மாவட்ட வருவாய்த் துறையிலிருந்து கொடுக்கப்படுகின்ற இலவச இடம் அல்லது 99 வருடங்களுக்கு lease-க்கு கொடுப்பார்களேயானால், அந்த இடத்தில் மேற்கண்ட நிதியிலிருந்து அந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 209, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**209—**

## குடியிருப்புகள்

***7030—திரு. ப. டில்லி பாபு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் வனப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மலைவாழ் மக்களுக்கு வனத் துறைமூலம் குடியிருப்புகள் கட்டித் தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 2011-2012 ஆம் ஆண்டிற்கு பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் மாநிலம் முழுவதும் உள்ள பழங்குடியினரின் அடிப்படைத் தேவைகளான வீட்டு வசதி,

[2012 மே 4

மருத்துவ வசதி, குடிநீர் வசதி, கல்வி, தொலைத்தொடர்பு வசதிகளை மேம்படுத்தி வேலைவாய்ப்பு வசதியினை ஏற்படுத்தும்பொருட்டு ரூ.30.49 கோடி செலவில் இப்பணிகளை மேற்கொள்ள கருத்துரு ஒன்று முதன்மை தலைமை வனப் பாதுகாவலரிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சுமார் 16 மாவட்டங்களில் பழங்குடியின மக்கள் கொல்லிமலை, வெள்ளிமலை, பச்சைமலை, ஏற்காடு மலை, ஜவ்வாது மலை, ஆனைமலை, பர்கூர் மலை, எனது தொகுதியிலுள்ள சித்தேரி மலை என்று இப்படி 16 மாவட்டங்களில் இருக்கக்கூடிய மலைகளில் 4 இலட்சம் மக்கள் வாழ்கிறார்கள். ஜப்பான் நாட்டினுடைய நிதியுதவித் திட்டத்தில் வருடத்திற்கு 500 கோடி ரூபாய், 600 கோடி ரூபாய் காடு வளர்ப்புத் திட்டத்திற்காக செலவிடப்படுகிறது. அதில் ஒரு பகுதியாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவித்ததுபோல, மருத்துவம், குடிநீர் என்று பல்வேறுபட்ட கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவதற்கும், அதில் ஒரு பகுதியாக வீடு இல்லாத மக்களுக்கு வீடு கட்டித் தருவதற்கும் தமிழக அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மீண்டும் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனம் சார்ந்த மலைவாழ் மக்களுக்கு பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் அடிப்படைத் தேவைகளான வீட்டு வசதி, குடிநீர் வசதி, சாலை வசதி, மருத்துவம், கல்வி, தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்திட ரூ.30.49 கோடி மதிப்பீட்டில் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்ட கருத்துருவின்மீது 9-4-2012 அன்று சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறை அரசுச் செயலாளர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை இயக்குநருடன் கலந்தாலோசிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் தமிழ்நாட்டில் பழங்குடியினர் நலத்தினைக் காப்பதற்காக ஒரு சிறப்புத் திட்டம் ரூ.30.49 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டு,



2012 மே 4]

திருத்திய கருத்துரு ஒன்று அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக தமிழ்நாட்டின் 12 மாவட்டங்களில் மொத்தம் 60 மலைவாழ் பழங்குடியினர் கிராமங்களில், கிராமத்திற்கு 10 புதிய வீடுகள்வீதம் மொத்தம் 600 வீடுகள் 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டித் தருவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. மேலும், 14 மாவட்டங்களில் பழங்குடியினர் கிராமங்கள் உள்ள பழைய வீடுகளில் உள்ள கூரைகளை மாற்றி அவற்றிற்குப் பதிலாக எளிதில் தீப்பிடிக்காத G.I. தகடுகள் கொண்ட கூரைகளை 600 வீடுகளுக்கு அமைத்துக் கொடுப்பதற்கு ரூ.1.32 கோடி ஒதுக்கீட்டில் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. டில்லி பாபு அவர்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், தமிழக அரசுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். 600 வீடுகளைக் கட்டுவதற்கு முன்வந்திருப்பதன்மூலம், பழங்குடி மக்களின் பல ஆண்டுக்கால பிரச்சினை தீர்வதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. அதேநேரத்தில் ஏற்கெனவே இருக்கக்கூடிய வீடுகளுக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 'அதே நேரத்தில்' என்றெல்லாம் வேண்டாம். திரு. டில்லி பாபு, தயவு செய்து உட்காருங்கள். இன்னும் 3 பேர் துணைக் கேள்வி கேட்க இருக்கிறார்கள், உட்காருங்கள். 'முடித்துக் கொடுக்க இருப்பதற்கு நன்றி' என்று சொல்லிவிட்டு, 'அதே நேரத்தில்' என்று திரும்ப ஆரம்பித்து வராதீர்கள். அதே நேரத்தில் நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. டில்லி பாபு, கேள்வியை முடியுங்கள்.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இருக்கக்கூடிய குடிசை வீடுகளை மாற்றுகின்றபட்சத்தில் மின்சார வசதிக்காக மின்சாரத் துறை மூலம் அதற்கான ஆய்வுகள் செய்யப்பட்டு, அது நிலுவையில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. டில்லி பாபு, இதற்கு நீங்கள் தனிக் கேள்வி போடுங்கள். மின்சார வசதி செய்வதைப் பொறுத்தவரையில் அதற்கான அமைச்சர்தான் பதில் சொல்ல

[2012 மே 4

வேண்டும். வனத் துறை அமைச்சருக்கு சம்பந்தம் இல்லை. தயவு செய்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள தனியார் காடுகள் என்று வரையறுக்கப்பட்டிருக்கக்கூடிய பட்டா நிலங்களுக்கு அந்தச் சட்டத்திலிருந்து பிரிவு 3-ன்கீழ் விதிவிலக்கு அளிக்கப்பட்டு, பட்டா நிலங்களில் குடியிருப்புகள் ஏற்படுத்தவும், விவசாயம் செய்யவும் உதவிட அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் காடுகள் சட்டத்தின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர் அமைத்துள்ள கமிட்டியின் முன் விண்ணப்பித்தால் அரசு அதைப் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

**திரு. என்.வி. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேதாரண்யம் பகுதியில் உப்பு உற்பத்தித் தொழிலில் ஈடுபடும் 8,000 உப்புத் தொழிலாளர்களுக்கு குடிதண்ணீர் வழங்க உத்தரவிட்ட மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு தொகுதி மக்கள் சார்பாக நன்றியையும், வணக்கத்தையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரண்யம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட கோடியக்காடு பறவைகள், வனவிலங்கு சரணாலயக் காடு 25 சதுர கிலோ மீட்டர் சுற்றளவில் உள்ளது. ஆயிரக்கணக்கான மான்கள் உள்ளன. இக்காட்டினைச் சுற்றிலும் தடுப்பு வேலிகள் இல்லாததால் மான்கள் வெளியேறி உயிர் இழப்பு ஏற்படுகிறது. இதைத் தடுக்க தடுப்புச் சுவர் அமைத்துத் தருமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மே 4]

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வுசெய்து தடுப்பு வேலி அமைத்துக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

முற்பகல் 10-45

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் விதி 110-ன்கீழ் காவல் துறையிலே பணியாற்றுகின்ற காவலர்களுடைய வாழ்நாள் கனவாகிய சொந்த வீடுகள் 36,000 கட்டப்படும் என்று அறிவித்தார்கள். அதேபோல வனத் துறையிலே பணியாற்றுகின்ற . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள், அதற்குத் தனியாகக் கேள்வி போடுங்கள். தயவு செய்து உட்காருங்கள்.

வினா வரிசை எண் 210, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**210—**

## ஏற்றுமதி மையம்

***6576—திரு. மு. அருண் சுப்பிரமணியன்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் கிரானைட் கற்கள் மற்றும் வெள்ளைப் பாறைகள் ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி, தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2012 மே 4

(அ) மற்றும் (ஆ) திருத்தணி தொகுதி, பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் கிரானைட் கற்கள் மற்றும் வெள்ளைப் பாறைகள் ஏற்றுமதி மையம் அமைக்கும் திட்டம் தற்சமயம் ஏதும் இல்லை. சுரங்கக் குத்தகை பெற்று கிரானைட் கற்கள் உற்பத்தி செய்யும்பட்சத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி ஏற்றுமதி மையம் அமைக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்தணி தொகுதி மிக வறட்சியான பகுதி. நிலப்பரப்பு அதிகமாகக் கொண்ட பகுதி. அதிலே மூன்றில் ஒரு பங்கு மலைகள் நிறைந்து இருக்கின்றன. அந்த மலைகளிலே கிரானைட்டும் பாறைகளும் மிக அதிகமாக உள்ளன. அங்கு தொழிற்சாலைகள் ஏதும் இல்லை. பக்கத்தில் ஆந்திரா இருக்கிறது. அங்கு கிரானைட் தொழில் நடக்கிறது. பள்ளிப்பட்டை அடுத்த சோளிங்கர் பகுதியிலும் கிரானைட் வெட்டியெடுக்கப்பட்டு அங்கு அந்தத் தொழிற்சாலைகள் நடைபெறுகின்றன. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் பாடிய ஒரு பாடலில் 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்று சொல்லி இருக்கிறார். கனிம வளம் நிறைந்த திருத்தணி தொகுதியிலே அந்த கிரானைட் பாறைகளைச் சரியாகப் பயன்படுத்தி . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் பாடல்களை அடிக்கடி கோடிட்டுக் காட்டும் எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு சில பாடல்கள்தான் பிடிக்கும் போலிருக்கிறது. 'என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில், ஏன் கையை ஏந்த வேண்டும் வெளிநாட்டில்' என்ற பாடல் அவர்களுக்குப் பிடித்திருக்கிறது. ஆனால், 'நல்ல பொழுதை எல்லாம் தூங்கிக் கெடுத்தவர்கள் நாட்டைக் கெடுத்ததுடன் தானும் கெட்டார்' என்று பாடினால் மட்டும் அவர்களுக்குப் பிடிக்கவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் என்று அவர்கள்தான் விளக்கம் கூற வேண்டும். (குறுக்கீடுகள்)



2012 மே 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள், வினாக்கள்-விடைகள் நேரமிது. கொறடா, தயவு செய்து நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. அருண் சுப்பிரமணியன் அவர்கள்தான் இந்தக் கேள்வி கேட்டிருக்கிறார். அவர்தான் அந்தப் பாடலைக் குறிப்பிட்டார். திரு. மு. அருண் சுப்பிரமணியன் நீங்கள் பேசுங்கள்.

**திரு. மு. அருண் சுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலைவாய்ப்பை மனதில் கொண்டும், அரசுக்கு கூடுதல் வருமானம் வருவதை மனதில் கொண்டும் இப்படிப்பட்ட கிரானைட் வளத்தைச் சரியாகப் பயன்படுத்தி அங்கு தொழிற்சாலைகளையும் ஏற்றுமதி மையங்களையும் ஏற்படுத்தினால் ஒரு நாடு வளமாகும், முன்னேற்றமடையும். பள்ளிப்பட்டு பகுதியிலே திருத்தணி தொகுதியிலே இருக்கின்ற கிரானைட் கற்களைப் பயன்படுத்தி ஒரு ஏற்றுமதி மையம் அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னைக்கு அருகிலே இருக்கின்ற மணலியிலே அந்த ஏற்றுமதி நிலையம் இருக்கின்றது என்பது உங்களுக்கு நன்றாகத் தெரியும். அதற்குத் தேவையான கற்கள் எல்லாம் உங்கள் மாவட்டத்தில் இருந்துதான் வந்து பாலிஷ் செய்யப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றன. திருத்தணியிலே ஒரு ஏற்றுமதி மையம் அமைக்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். அப்படி ஒரு நிலையம் அமைப்பதற்கு 35 கோடி ரூபாய் ஆகும். நிதிநிலைக்கேற்ப மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 211, மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 மே 4

**211—**

## சுற்றுலாத் தலம்

*__1095—திரு. ப. சம்பத்குமார்:__

*மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) திருச்செங்கோடு தொகுதி, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு அர்த்தநாரீஸ்வரர் கோயில் ஒரு புகழ் பெற்ற திருக்கோயிலாகும். ஆணும் பெண்ணும் சரிசமம் என்று சொல்லக்கூடிய வகையிலே அங்கே தெய்வ வடிவம் திருவடிவமாக அமைந்துள்ளது. சுற்றுலாப் பயணிகள் அதிகமாக அங்கே வருவது தொடர்பாக கருத்துரு பெறப்பட்டதன் அடிப்படையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்களுடைய ஆணைப்படி அடிப்படை மற்றும் கட்டமைப்பு வசதிகளைச் செய்து தர வேண்டுமென்பதற்காக 2012-2013 ஆம் ஆண்டு சுற்றுலாத் துறை மானியக் கோரிக்கை அறிவிப்பிலேயே நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு தொகுதி, அருள்மிகு அர்த்தநாரீஸ்வரர் திருக்கோயில் பகுதிக்கு அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்பது 12-வது அறிவிப்பாக அறிவிக்கப்பட்டுள்ளது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், இந்து சமய அறநிலையங்கள் துறை மற்றும் நாமக்கல் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு திட்ட மதிப்பீடும் பெறப்பட்டு, இந்த ஆண்டிலேயே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு விரைவில் அந்தப் பணிகளைச் செய்யும் என்பதையும் தங்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*முற்பகல் 10-50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ப. சம்பத்குமார் அவர்கள்.*



2012 மே 4]

**திரு. ப. சம்பத்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென்னிந்தியாவிலிருந்து பக்தர்கள் ராகு, கேது பரிகாரம் செய்யவும், தரிசனம் செய்யவும், அதிக அளவில் அங்கு வருகின்றனர். அதுமட்டுமல்ல, அத்திருக்கோயிலில் திருமணங்கள் அதிகமாக நடைபெறுகின்றன. கொங்கு நாட்டில் உள்ள 7 சிவன் கோயில்களில் இது முதன்மைக் கோயிலாக உள்ளது. ஆகையால், அத்திருக்கோயிலைச் சுற்றுலாத் தலமாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அர்த்தநாரீஸ்வரர் கோயில் உள்ள திருச்செங்கோடு ஒரு ஆன்மிக சுற்றுலா தலம் என்று கருதித்தான் இந்த நிதி ஆண்டு 2012-2013-லேயே, சுற்றுலாத் துறையின் அறிவிப்பு 12-ல் மிகத் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அதோடு உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து கருத்துரு பெறப்பட்டு அந்தப் பணிகள் செய்யப்படும் என்பதையும் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 212, மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு, மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**212—**

## தொழிற்பயிற்சி நிலையம்

*__3738—திருமதி க. அழகுவேலு:__

*மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*கள்ளக்குறிச்சியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*கள்ளக்குறிச்சி, விழுப்புரம் மாவட்டத்திற்கு உட்பட்டதாகும். விழுப்புரம் மாவட்டத்தில் உளுந்தூர்பேட்டை மற்றும் சங்கராபுரம்*

[2012 மே 4

ஆகிய இரண்டு இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்களும் மற்றும் மாவட்டத்தில் 26 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்களும் இயங்கி வருகின்றன. இந்தத் தொழிற்பயிற்சி நிலையங்களில் உள்ள மொத்த 2,610 இருக்கைகளில் 483 இருக்கைகள் நிரப்பப்படாமல் காலியாக உள்ளன. எனவே, கள்ளக்குறிச்சி தொகுதியில் தற்போது இயங்கிவரும் தொழிற்பயிற்சி நிலையங்கள், தேவைக்குப் போதுமானதாக உள்ளன. எனவே, கள்ளக்குறிச்சி தொகுதியில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையம் தொடங்க வேண்டிய அவசியம் எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி க. அழகுவேலு அவர்கள்.

**திருமதி க. அழகுவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் கனவுகளை நனவாக்கிய தமிழகத்தின் தலைமை வள்ளலே, பெண் கல்வியைப் போற்றும் தமிழ்த் தாயே, பெண்களின் துயர் துடைத்த தெய்வமே, எங்களின் இதய தெய்வமே, மாண்புமிகு அம்மா அவர்களின் பாதம் பணிந்து வணங்கி எங்களுடைய கள்ளக்குறிச்சி பகுதியிலே அதிகமாக ஏழை விவசாயிகள் இருக்கிறார்கள். மலைவாழ் மக்களும் இருக்கிறார்கள். பொருளாதார ரீதியில் தனியார் தொழிற்பயிற்சி மையங்களுக்குச் செல்ல வாய்ப்பு இல்லாத சூழ்நிலை ஏற்படுகிறது. குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், உயர் படிப்பு படிக்க வசதி வாய்ப்புகள் இல்லாதவர்கள், படிப்பை நிறுத்திவிட்ட பிறகு, கடந்த ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் கருணையால் வழங்கிய அரசுக் கலைக் கல்லூரியில் சேர்ந்து படிக்கக்கூடிய வாய்ப்பைப் பெற்றார்கள். எங்களுடைய கள்ளக்குறிச்சி வருவாய்க் கோட்டத்தில் ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையம்கூட இல்லை என்பதால் மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு அம்மா அவர்களின் கருணைப் பார்வைக்கு எடுத்துச் சென்று, கள்ளக்குறிச்சி பகுதியிலே ஏழையெளிய மக்கள் பயன்படுகிற வகையில் ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைத்துத் தர முன்வரவேண்டுமாய் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 மே 4]

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம், அட்சய பாத்திரமாய், தமிழக மக்களுக்குக் கிடைத்த நல்ல மாமணியாய்த் திகழ்ந்து கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் கடந்த நாட்களிலே (மேசையைத் தட்டும் ஒலி) 10 தொழிற்பயிற்சி நிலையங்களை அறிவித்திருக்கிறார்கள். மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், அவர்கள் 5 ஆண்டுக் காலம் ஆட்சி செய்தபோது மூன்றே மூன்று தொழிற்பயிற்சி நிலையங்கள்தான் அறிவித்தார்கள். ஆனால், அம்மா அவர்களுடைய பொற்கால ஆட்சியில், வந்த 9 மாதங்களில் 10 தொழிற்பயிற்சி நிலையங்கள் கொடுத்திருக்கின்றார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை, சங்கராபுரம் ஆகிய இரண்டு இடங்களில் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் 360 இருக்கைகளுடன் இயங்கி வருகின்றன. இவற்றுள் சங்கராபுரம் அரசு தொழிற்பயிற்சி நிலையம் பழங்குடியின மாணவர்களுக்கு மட்டுமே இயங்கி வருகிறது. இவற்றுள் கள்ளக்குறிச்சியிலே இரண்டு தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் இயங்கி வருகின்றன. இவ்வாறு ஏற்கெனவே செயல்பட்டு வரும் அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், தனியார் தொழிற்பயிற்சி மையங்கள், கள்ளக்குறிச்சி பகுதியில் உள்ள மாணவர்களின் தேவையைப் பூர்த்தி செய்ய போதுமானதாக உள்ளதால், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கள்ளக்குறிச்சியில் அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை. இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு இதய தெய்வம் தமிழக புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, அரசு பரிசீலிக்கும் என்பதைக் கூறிக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ச. முத்துசெல்வி அவர்கள்.

**திருமதி ச. முத்துசெல்வி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சங்கரன்கோயில் தொகுதியில் ஒரு அரசு தொழிற்பயிற்சி நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

[2012 மே 4

*முற்பகல் 10-55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. சி.த. செல்லப்பாண்டியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், ஏற்கெனவே 4 இடங்களில் நம்முடைய அரசு தொழில் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அதுபோல, 26 தனியார் தொழில் பயிற்சி நிலையங்களும் உள்ளன. இருந்தாலும், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையினை ஏற்று மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் அம்மா அவர்களின் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 213, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**213—**

### மாணவர் சேர்க்கை

*__1131—திரு. எம். ஆறுமுகம்:__

*மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையை அதிகரிக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கை அதிகரிக்க மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு முழு முயற்சி எடுத்து வருகிறது. 25 ஆண்டுகளாக 50 இடங்களே இருந்த செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியில் 50 இடங்களிலிருந்து 100 இடங்களாக உயர்த்துவதற்கும், அதுபோல் சென்னை, கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரியில் 100 இடங்களிலிருந்து 150 இடங்களாக உயர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டு, இந்திய மருத்துவ கவுன்சில் ஆய்வு முடிந்து அதன் முடிவினை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம். அதுபோல், சிவகங்கை அரசு மருத்துவக் கல்லூரியில் 100 மாணவர்களைச் சேர்ப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நடவடிக்கை எடுத்து கடந்த மாதம் இந்திய மருத்துவ கவுன்சிலின் ஆய்வு முடிந்து, அதனுடைய முடிவினை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*



2012 மே 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிப்பதற்காக நடவடிக்கை மேற்கொண்டு வருவதை மனதாரப் பாராட்டுகிறோம். அதேநேரத்தில், தமிழகத்தினுடைய மக்கள் தொகை எண்ணிக்கைக்கு ஏற்றாற்போல் இல்லாமல் டாக்டர்கள் பற்றாக்குறையாக உள்ளார்கள். அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், மாநகராட்சி, நகராட்சிகளின்கீழ் இயங்கும் மருத்துவமனைகளில் மருத்துவர்கள் பணியிடங்கள் காலியாக உள்ளன. எனவே, அரசு மருத்துவமனை மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க இந்திய மெடிக்கல் கவுன்சில் அனுமதி பெறவும், கூடுதலான மாணவர்களை இந்த ஆண்டு சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் மொத்தம் 17 அரசு மருத்துவக் கல்லூரிகளில் 1,945 மாணவர் சேர்க்கை இடங்கள் உள்ளன. மருத்துவக் கல்லூரிகளில் மாணவர் சேர்க்கையை அதிகரிக்கும்பொருட்டு சென்னை மருத்துவக் கல்லூரியில் தற்போதுள்ள 125 மாணவர் சேர்க்கை இடங்களை 250 ஆகவும், சென்னை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் தற்போது 150 மாணவர் சேர்க்கை இடங்களை 250 ஆகவும் உயர்த்துவதற்கு*

[2012 மே 4

இந்திய மருத்துவக் குழுவிடம் அனுமதி கோரப்பட்டது. அதனை ஆய்வுசெய்து, இந்திய மருத்துவக் குழு தெரிவித்திருந்த சில குறைபாடுகளை நிவர்த்தி செய்யத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும், கடந்த 2011-2012 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையின்போது, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையின்பேரில், செங்கல்பட்டு மற்றும் கீழ்ப்பாக்கம் மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கையை அதிகரிக்க வேண்டுமானால் அதற்குரிய இந்திய மருத்துவ கவுன்சிலின் விதிகள் பின்பற்றப்பட வேண்டும். உள்கட்டமைப்பு வசதிகள் அதிகமாகவும், பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் எண்ணிக்கையும் அதிகமாக இருக்க வேண்டும். மேலும், நவீன மருத்துவப் பரிசோதனை உபகரணங்கள் மற்றும் மருத்துவம்சார் பணியாளர் எண்ணிக்கையும் அதிகரிக்கப்பட வேண்டும். மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு மருத்துவக் கல்லூரிகளில் மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க படிப்படியாக முயற்சி செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நடவடிக்கைகளுக்கு நன்றி. கோவை இ.எஸ்.ஐ. மருத்துவமனை மருத்துவக் கல்லூரியாக மாற்றப்பட்டு தொழிலாளியினுடைய பங்கும் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாணவர் சேர்க்கையினை அதிகரிப்பது குறித்ததுதான் மூலக் கேள்வி. திடீரென்று நீங்கள் கோவைக்கு jump ஆகாதீர்கள். Please sit down. வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*



2012 மே 4]

## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு மிக முக்கியமான மானியக் கோரிக்கை. மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் பேச வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அதனைத் தொடர்ந்து மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை உள்ளது. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் எடுக்கக் கோரும் கவன ஈர்ப்புகள் பின்னர் எடுத்துக்கொள்ளப்படும். Please sit down.

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கைகள்

### (அ) கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்கு கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் சிலை அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110-ன்கீழ் இரண்டு அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதாம் நூற்றாண்டில் புகழ் பெற்று விளங்கிய கவிஞர்களில் ஒருவராக விளங்கியவர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள். கவிமணியின் பாடல்களில் உண்மையும், அழகும் கைகோர்த்துச் செல்வதை உணர முடியும். கவிமணி அவர்களை "இனிமைக் கவிஞர்", "இளமைக் கவிஞர்", "உண்மைக் கவிஞர்", "உணர்ச்சிக் கவிஞர்" எனக் கூறுவது சாலப் பொருத்தமாக அமையும்.

"தேசிக விநாயகத்தின் கவிப் பெருமை தினமும் கேட்பது எனது செவிப் பெருமை" எனக் கூறியவர் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளை அவர்கள்.

இவரது உண்மையுள்ளம், உண்மைப் பாடல்களின் மூலமாய் உண்மை வித்துக்களைக் கற்பவர் மனதில் விதைத்து, உண்மைப் பயிரை செழித்தோங்கச் செய்கிறது; இவர் பாடல்களில் காணும்

தெளிவும், இனிமையும், இவரது உள்ளத்திலேயுள்ள தெளிவு, இனிமை முதலிய சிறந்த இயல்புகளின் நிழற்படமேயாகும் என்று புகழாரம் சூட்டியவர் பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள்.

கவிமணி அவர்கள் வாழ்ந்த நாஞ்சில்நாடு மலையாள நாட்டின் ஒரு பகுதியாக இருந்தாலும், தமிழ் இலக்கிய இலக்கணங்களை நன்கு கற்று கவி புனையும் ஆற்றலைப் பெற்றிருந்தார். பழந்தமிழ்ப் பண்பும், தமிழ் மணமும், புதுமைக் கருத்துகளும் நிறைந்த பல பாடல்களைக் கவிமணி அவர்கள் எழுதியுள்ளார். இப்பாடல்களின் தொகுப்பான "மலரும் மாலையும்" நூலில் இருந்து, இவருடைய நாட்டுப் பற்று, மொழிப் பற்று, இறை வழிபாடு, சாதி பேதம் கடிதல் மற்றும் குழந்தைகளிடம் கொண்ட பற்று ஆகியவற்றை அறியலாம்.

"பெற்ற சுதந்திரத்தை பேணிக் காப்பது நமது கடமை" என்றும், "உரிமை வாழ்வின் பயனை நினையாது வாதினை விளைவித்துச் சண்டை செய்வது தேவையற்றது" என்றும் வலியுறுத்தியவர் கவிமணி அவர்கள்.

குழந்தைகளுக்காக தாய்மார்கள் பாடும் தாலாட்டுப் பாடல்களையும், குழந்தைகள் தாமே பாடி மகிழத்தக்க எளிய, அழகிய பாடல்களையும் பாடியுள்ளார். பறவைகளைப் பற்றி குழந்தைகள் விளித்துப் பாடும் இவரது பாடல்கள் சுவை மிக்கவை.

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களின் தித்திக்கும் பாடல்கள் நமது செவிகளுக்கு என்றும் திகட்டாத இன்பம் தரக்கூடியவை.

இப்படிப்பட்ட தலைசிறந்த தமிழ் கவிஞரை, தமிழ்ப் பற்றாளரைப் போற்றும் வகையில், கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு தமிழக அரசின் சார்பில் சிலை வைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) கும்மிடிப்பூண்டி, ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைத்தல் குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாகன எண்ணிக்கை உயர்வினால் அதிகரித்து வரும் சாலை விபத்துகளைத் தவிர்க்கும் வகையில்,





"வேகம் விவேகமன்று" என்பதை உணர்ந்து, சாலை விதிகளைச் சரியாக கடைப்பிடித்து, வாகனங்களை இயக்கக்கூடிய திறமையான ஓட்டுநர்களை உருவாக்கக்கூடிய சர்வதேச தரம் வாய்ந்த ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைப்பது மிகவும் அவசியமாகிறது.

தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் பொருட்டு, சாலைப் போக்குவரத்து நிறுவனத்தால் கும்மிடிப்பூண்டியில் கனரக வாகன ஓட்டுநர் பயிற்சிப் பிரிவு ஒன்று 1979 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. 55 ஏக்கர் பரப்பளவில் அமைந்துள்ள இந்தப் பயிற்சிப் பிரிவு வளாகத்தில் அலுவலகம், வகுப்பறைகள், ஓட்டுநர் பயிற்சி ஆய்வுக் கூடம், பணிமனை, மாணவர் விடுதி மற்றும் பணியாளர்கள் குடியிருப்புகள் போன்ற வசதிகளுடன், ஓட்டுநர் பயிற்சித் திறன்களை மேம்படுத்தும் வகையில் ஓட்டுநர் பயிற்சி மைதானமும் 15 ஏக்கர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளது.

நவீன தொழில்நுட்பப் பயிற்சியின்மூலம் தரமான ஓட்டுநர்களை உருவாக்கும் வகையிலும், அறிவியல் ரீதியில் ஓட்டுநர் பயிற்சி அளிக்கும் வண்ணமும், அவர்களது பண்பாட்டினை உயர்த்தும் வகையிலும், விபத்துகளைத் தவிர்க்கும் வகையிலும், இந்த ஓட்டுநர் பயிற்சி மையம், பல்வேறு நவீன தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய சர்வதேச தரத்திற்கு இணையாக உறைவிடத்துடன்கூடிய ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையமாக 15 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இதன்மூலம், ஓட்டுநரின் திறமையை விஞ்ஞான முறையில் காணொலியுடன் பதிவு செய்யப்பட்ட வசதிகளுடன் ஆராய்ந்து, திறனில்லாத ஓட்டுநர்களை எளிதில் கண்டறியவும், அவர்களுக்கு தரமான பயிற்சி அளிக்கவும் வழிவகை ஏற்படும். இவ்வாறு பயிற்சி பெற்றவர்களுக்கு வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள், உள்ளூர் மற்றும் சர்வதேச ஓட்டுநர் உரிமங்களை வழங்கும்.

மேலும், இங்குள்ள கட்டமைப்பு வசதிகளை பயன்படுத்தி தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகங்கள், தனியார் மற்றும் பொதுத் துறை நிறுவனங்கள், காவல் துறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்களின் திறன்கள் மேம்படுத்தப்படும்.

சர்வதேச தரத்திலான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமாக கும்மிடிப்பூண்டியிலுள்ள ஓட்டுநர் பயிற்சி பிரிவு தரம் உயர்த்தப்படுவதன்மூலம் தமிழகத்திலுள்ள போக்குவரத்து விதிகளை நன்கு அறிந்து, சாலைகளின் தன்மைக்கேற்ப வாகனங்களை இயக்கி, விபத்துகளைப் பெருமளவில் தவிர்க்கும் திறன் கொண்ட ஓட்டுநர்களை உருவாக்குவதில் தமிழ்நாடு முதன்மை மாநிலமாகத் திகழும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். *(மேசையைத் தட்டும் பலத்த ஒலி)*

*முற்பகல் 11-05*

## 4. கவிமணி தேசிக விநாயகம் பிள்ளைக்கு சிலை அமைத்தல், ஓட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம் அமைத்தல்—முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு சமூகம், ஒரு இனம் பெருமைப்படுத்தப்பட வேண்டுமென்றால் அந்த சமூகத்தின், அந்த இனத்தின் மொழி, அந்த மொழியின் வரலாறு பாராட்டப்பட வேண்டும், போற்றப்பட வேண்டும். அந்த வகையிலே, தமிழகத்தின் பண்பாட்டைக் காப்பாற்றுகிற வகையிலே, தமிழகத்தின் மொழி வரலாற்றில் மிகச் சிறப்பான இடத்திற்குக் கொண்டு செல்கிற வகையில் மிகச் சிறந்த கவிஞரான தேசிக விநாயகம் பிள்ளையினுடைய திருவுருவச் சிலையை அவர் பிறந்த கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்திலே அவரை நினைவுபடுத்துகிற வகையிலே தமிழர்களின் மொழியாகவும், விழியாகவும், வழியாகவும் இருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அங்கே உருவாக்கவிருக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இன்றைக்கு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கை. மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணருக்கு மணிமண்டபம் தந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* ஆக, மொழிப் பேரறிஞர்களை சிறப்பிப்பதிலே வெறும் தேன்மொழி என்றோ, கனிமொழி என்றோ, செம்மொழி என்றோ பெயர்



வைத்தால் மட்டும் போதாது. அது செம்மொழியாய் சிறப்பிக்கப்பட வேண்டும் என்பதற்கு இலக்கணமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் திருவுருவச் சிலையை கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு ஏற்படுத்தவிருப்பதை தமிழ்கூறும் நல்லுலகின் சார்பில் பாராட்டி, வாழ்த்தி, அதேநேரத்தில் நீண்ட தொலைநோக்கோடு சர்வதேச அளவில் ஓட்டுநர் பயிற்சி மையத்தை ரூ.15 கோடி திட்ட மதிப்பீட்டில் சென்னையில் கும்மிடிப்பூண்டியில் ஏற்படுத்துகிற தொலைநோக்குத் திட்டத்தையும் வாழ்த்தி பாராட்டி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. தனியரசு அவர்கள்.

**திரு. உ. தனியரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுதந்திரத்திற்காக போராடிய உத்தம தியாகிகளை போற்றி அவர்களுடைய புகழை வருங்கால சந்ததியினர் அறிய வேண்டும் என்பதற்காக மேற்கு மண்டலத்திலே, சங்ககிரி கோட்டையிலே வெள்ளை அன்னிய ஆதிக்க எதிர்ப்புப்போரில் உயிர் துறந்த மாவீரன் தீரன் சின்னமலைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நினைவுச் சின்னமும், சிலையும் அமைக்க அறிவித்த இதே மாமன்றத்தில், கன்னியாகுமரி மாவட்டம் மொழிவழி மாநிலமாகப் பிரிக்கப்பட்டபோது நம்முடைய அன்னைத் தமிழ்நாட்டோடு அது இணைக்கப்பட வேண்டும் என்பதற்காக போராடிய நேசமணி அவர்களுக்கு, காங்கிரசாரின் கோரிக்கையை ஏற்று சிலை வைப்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள்தான் கேட்ட உடனேயே அனுமதியைத் தந்தார்கள்.

அதுபோன்று நம்முடைய தமிழ்நாடு என்கின்ற பெயரை நம்முடைய தாய்த் தமிழகம் பெறவேண்டும் என்பதற்காக உண்ணாவிரதம் இருந்து உயிர்துறந்த சங்கரலிங்க நாடாருக்கு விருதுநகரில் சிலை வைக்கவும், நினைவிடத்தை அமைப்பதற்கும் மாண்புமிகு அம்மா அவர்கள்தான் கேட்ட உடனேயே மனமுவந்து அறிவிப்பைச் செய்தார்கள். அதைப்போன்று நம்முடைய பொதுவுடைமை இயக்கவாதிகள் கேட்ட ஒரே நிமிஷத்தில் கலைவாணர் அரங்கத்தை உடனடியாகக் கட்டித் தர அனுமதித்ததும் நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அந்த அடிப்படையிலே நாட்டுப் பற்றோடும், மொழிப் பற்றோடும் நம்முடைய குழந்தைகளுடைய சிந்தனைகளை, அவர்களுடைய எல்லா வகையான அறிவாற்றலையும் வளர்த்திட வேண்டும் என்பதற்காக தொண்டாற்றிய, தமிழ் தொண்டாற்றிய கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு சுசீந்திரத்தில் சிலை அமைக்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இன்று அருள்கூர்ந்து அறிவித்திருக்கிற செய்தியை வரவேற்கிறேன்.

வளர்ந்து வருகிற வாகனப் பெருக்கத்திலே சாலை விபத்துகளிலே அரிய, உயர் கல்வி பெற்ற பொறியாளர்கள், மருத்துவர்கள், விஞ்ஞானிகள்கூட அனுதினமும் கொத்துகொத்தாய் மடிந்து போவதை உணர்ந்து, இந்தியாவிலேயே முதன்முதலாக ஒரு நவீன அறிவியல் சிந்தனையோடு (மேசையைத் தட்டும் ஒலி) ஓட்டுநர் பயிற்சி மையத்தை கும்மிடிப்பூண்டியிலே அனைத்துப் பிரிவு ஓட்டுநர்களுக்கும், அரசுத் துறையைச் சார்ந்த ஓட்டுநர்களுக்கும், தனியார் துறையைச் சார்ந்த ஓட்டுநர்களுக்கும் அறிவியல்பூர்வமாக, விஞ்ஞானபூர்வமாக உயர் தொழில்நுட்ப அடிப்படையிலே, பயிற்சி மையத்தை நிறுவி, பயிற்சி தருவதோடு மட்டுமல்லாமல், அவர்கள் வாழ்வியல் பழக்கவழக்கங்களிலேயும் மேம்பாடு அடைவதற்காக, ஒழுக்கநெறி சார்ந்த அறிவையும் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதற்காக ஓட்டுநர் பயிற்சி மையத்திற்கு இன்று மனமுவந்து ரூ.15 கோடியை அள்ளித் தந்த மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி பாராட்டி அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

*முற்பகல் 11-10*

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முதுபெரும் தமிழ் கவிஞர் தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுடைய திருவுருவச் சிலையை அவர் பிறந்த மண்ணில், சுசீந்திரத்தில், அமைப்பதற்கும், அதேபோல இன்று அதிகரித்து வருகின்ற விபத்துகளைத் தடுக்கக்கூடிய வகையில் நல்ல தரமான சர்வதேச தரம் வாய்ந்த ஓர் ஓட்டுநர் பயிற்சி மையத்தை உருவாக்க வேண்டுமென்ற அடிப்படையில், அதற்குக் கூடுதலாக இப்பொழுது கும்மிடிப்பூண்டியில் ஏற்கெனவே அமையப்பெற்றிருக்கக்கூடிய



ஓட்டுநர் பயிற்சி மையத்திற்கு 15 கோடி ரூபாயை வழங்கக்கூடிய தமிழக முதல்வர் அவர்களை புதிய தமிழகம் கட்சி பாராட்டுகிறது, வரவேற்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை பல துறைகளிலும் முன்னேற்றுவதற்கு இந்த அரசு உறுதிபூண்டு, அதற்கான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. தமிழ்நாட்டிலே இன்றைக்கு நான்கு வழிச் சாலைகள் பரவலாக வந்துகொண்டிருக்கக்கூடிய சூழலில், அந்த 4-way traffic discipline-ஐ, நான்கு வழிச் சாலையில் கட்டுக்கோப்புடன் ஓட்டக்கூடிய திறன்படைத்த ஓட்டுநர்கள் குறைவாகவே தமிழகத்தில் இருக்கின்றார்கள். அதனால்தான் விபத்துகள் ஏற்படுகின்றன. வேறெந்த மாநில அரசும் செய்யாத வகையிலே, கும்மிடிப்பூண்டியில் ஏற்கெனவே இருக்கக்கூடிய பயிற்சி மையத்தை 15 கோடி ரூபாய் செலவிலே தரம் உயர்த்தி, அதை உறைவிட பயிற்சி நிறுவனமாக (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு நல்ல, புதிய சிந்தனையோடு உருவாக்கி இன்று அறிவித்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி). மனித நேய மக்கள் கட்சியின் சார்பாக என்னுடைய நன்றியை அதற்காகத் தெரிவித்து அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு அவர்கள்.

**திரு. ம. கலை அரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இன்றைக்கு திருவுருவச் சிலை அமைக்கப்படுமென்று அறிவித்துள்ளார்கள். அதை வரவேற்கிறேன். இன்றைக்கு தினம் தினம் செய்தித்தாள்களைப் பார்க்கின்றபோது, மிகவும் வேதனை அளிக்கக்கூடிய விதத்தில் வருகின்ற செய்தி, விபத்துகள் பற்றியது. குறிப்பாக வாகன விபத்துகள். இதனால் பல உயிர்கள் கொத்துகொத்தாக மாண்டு போகின்ற சூழ்நிலையில், அவர்களை இழந்து வாடுகின்ற அந்தக் குடும்பத்தாருக்கு, சுற்றத்தாருக்கு ஆறுதல் அளிக்கின்ற வகையில், போக்குவரத்தை நெறிமுறைப்படுத்துகின்ற வகையில் விபத்துகள் இருக்கக்கூடாது என்கின்ற வகையில் உலகத் தரம் வாய்ந்த ஓட்டுநர்

பயிற்சி மையத்தை அமைக்கவிருக்கக்கூடிய, அறிவிப்பை வெளியிட்டிருக்கக்கூடிய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அறிவிப்பை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக வரவேற்கின்றோம், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் தமிழ் தொண்டாற்றிய என்னுடைய கொள்ளு தாத்தா கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்கள், (குறுக்கீடு) அவர் என்னுடைய கொள்ளு தாத்தாதான். நான் அவருடைய கொள்ளு பேத்தி. இதுகுறித்து எங்கள் ஊரில் எல்லோருக்கும் தெரியும். இன்றைக்கு எனக்கு பெரிய இன்ப அதிர்ச்சியாக இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் நான் கேட்கவேயில்லை. ஆனால், அவரே கொடுத்திருக்கிறார்.

“மங்கைய ராய்ப் பிறப்பதற்கே - நல்ல
மாதவஞ் செய்திட வேண்டும், அம்மா!”

என்று பாடியவர் அவர். அவர்களின் கூற்றிற்கேற்ப பெண் சமுதாயத்திற்கே எடுத்துக்காட்டாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சுசீந்திரத்தில் அவருக்கு சிலை அமைக்க முன்வந்தமைக்கு, என் குடும்பத்தின் சார்பாகவும், கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாகவும், தமிழக மக்களின் சார்பாகவும், தமிழ்மீது பற்றுகொண்ட அனைவரின் சார்பாகவும் நான் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் சர்வதேசத் தரத்தில் ஓட்டுநர் பயிற்சி மையத்தை 15 கோடி ரூபாய் செலவில் அமைக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் நல்லதொரு திட்டத்தைக் கொடுத்திருக்கிறார். அதற்காகவும் நான் நன்றிகளைத் தெரிவித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

முற்பகல் 11-15

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட



முன்னேற்றக் கழகம் பொறுப்பேற்றதற்குப் பின்னால், விடுதலைப் போராட்ட வீரர்கள், தமிழ் கவிஞர்கள், தமிழ் மொழிப் பற்றுடையவர்கள் இதுபோன்றவர்களுக்குத் தொடர்ச்சியாக, அவர்களைப் புகழக்கூடிய முறையில், தமிழ் மணம் கமழக்கூடிய முறையில், தமிழகத்திலே நல்ல பல நடவடிக்கைகளை நம்முடைய அரசு எடுத்து வருகின்றது. அதனுடைய ஒரு பகுதியாக தமிழ் கவிஞர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுடைய முழு உருவச் சிலை அவர் பிறந்த மண்ணான கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் நிறுவப்படும் என்று அறிவித்திருப்பது தமிழ் மக்கள் மத்தியிலே மகிழ்ச்சியை உருவாக்கி இருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சி பாராட்டுகிறது, வரவேற்கிறது.

அதேபோல, கும்மிடிப்பூண்டியில் நல்ல திறமையான, தரம்வாய்ந்த ஓட்டுநர்களுக்கு, சர்வதேச உரிமங்களை எல்லாம் வழங்கக்கூடிய முறையில், தமிழகம் விபத்தற்ற மாநிலமாக வரக்கூடிய முறையில், சர்வதேச தரத்திற்கு இணையான ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிக்காக 15 கோடி ரூபாயை ஒதுக்கி, விஞ்ஞான ரீதியாக செயல்படுவதற்கான முறையில் நடவடிக்கை எடுத்து இருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பாக மனதாரப் பாராட்டி, வாழ்த்தி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அடுத்த தலைமுறையை நற்செயலை நோக்கி நாம் ஆற்றுப்படுத்த வேண்டுமானால் ஆன்றோரை, சான்றோரை, தியாகிகளை நாம் போற்ற வேண்டும். அந்தவகையிலே பல முடிவுகள் இங்கே ஏற்கெனவே எடுக்கப்பட்டன. இப்பொழுது கவிமணி அவர்களுக்கு சிலை வைத்து, அவரை இந்தத் தலைமுறைக்கு நாளைய நாளிதழ்களே மிகப் பெரிய அளவுக்கு அறிமுகப்படுத்தப் போகிறது. அந்தச் செயலை நான் நன்றியோடு பாராட்டுகிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

நம்முடைய சாலைப் போக்குவரத்து நிறுவனம், கும்மிடிப்பூண்டியில் ஏற்கெனவே சிறப்பாக நடந்து கொண்டிருக்கிற ஓட்டுநர் பயிற்சி நிறுவனம். ஏற்கெனவே இந்த நிறுவனம் நடத்திக் கொண்டிருக்கிற பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி,

பாலிடெக்னிக், ஐ.டி.ஐ. போன்றவற்றோடு ஒவ்வொரு கழகங்களிலும் ஒரு ஓட்டுநர் பயிற்சிப் பள்ளி இருக்கிறது. அந்தப் பள்ளி உட்பட அனைத்தும் சிறப்பாக ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. தனியார் ஓட்டுநர் பயிற்சிப் பள்ளிகள், ஓட்டுநர் பயிற்சி கற்றுத் தரப்படும் என்பதைவிட, ஓட்டுநர் உரிமம் பெற்றுத் தரப்படும் என்கிற முறையிலேதான் இப்பொழுது செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. தமிழ்நாட்டில், இந்தியாவில், ஒட்டுமொத்தத்தில் ஓட்டுநர்களுக்கு பெரும் பற்றாக்குறை இருக்கிறது. நல்ல ஓட்டுநர்கள் இல்லாமல் இருப்பதற்குக் காரணம் நல்ல பயிற்சிப் பள்ளிகள் இன்மைதான். தமிழகத்திலே நடந்து கொண்டிருக்கிற வாகனப் பெருக்கத்தின் விளைவாக நல்ல ஓட்டுநர்களுக்கு ஏகப்பட்ட கிராக்கி இப்பொழுது இருக்கிறது. ஓட்டுநர் கிடைக்காமல் கார்களை ஓட்ட இயலாமல் பல உரிமையாளர்கள் இன்றைக்கு இருக்கிறார்கள். ஆகவே, இதை அதிகப்படுத்தக்கூடிய முறையிலேயும், தரமான ஓட்டுநர்களை உருவாக்கக்கூடிய முறையிலேயும், இன்னும் யோகா, தியானம் போன்ற மன அமைதி தருகிற பயிற்சிகளையும்கூட அங்கே செய்வார்கள் என்று நான் எதிர்பார்க்கிறேன். அப்படி சிறப்பாக ஒரு பயிற்சி நிலையம் நமக்குத் தேவைப்படுகிறது. மாவட்ட அளவிலேயும் இதைச் செய்யலாம் என்று என்னுடைய கருத்தைச் சொல்லி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.

**திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் சிலை வைப்பதை முழு மனதோடு வரவேற்கிறேன். சுசீந்திரம் என்று சொல்கிறபொழுது எனக்குப் பிடித்த ஊர் மட்டுமல்ல, அது நான் மின்சார வாரியத்தில் Engineer ஆகப் பணியாற்றிய ஊர். 1962 ஆம் ஆண்டு அன்றையதினம் ஒன்றாக இருந்த தி.மு.க.-வுக்கு வேலை செய்தேன் என்ற காரணத்திற்காக சென்னையிலேயிருந்து என்னை சுசீந்திரத்திற்குத்தான் மாற்றினார்கள். சுசீந்திரம் எனக்கு மிகவும் பிடித்த ஊர். ஏனென்றால், சுசீந்திரத்திற்கு அப்பால் மின்சார வாரிய அலுவலகமே அப்பொழுது கிடையாது, கன்னியாகுமரி வரையிலும் சுசீந்திரத்தில் இருக்கும் அலுவலகம்தான். சுசீந்திரத்தில்



கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு சிலை வைக்கப் போகிறோம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைக் கேட்டுக்கொண்டே வந்தபோது எனக்கு மிகவும் சந்தோஷமாகவும், மகிழ்ச்சியாகவும் இருந்தது. நான் இருந்த ஊரிலே கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு சிலையை அமைக்கின்றார்கள் என்பதிலே பெருமகிழ்ச்சி அடைகின்றேன், பாராட்டுகின்றேன், வரவேற்கின்றேன்.

பாரதிதாசன் அவர்களுடைய வார்த்தையிலே சொல்லப்போனால் 'தமிழுக்குத் தொண்டு செய்வோன் சாவதில்லை, தமிழ்த் தொண்டன் பாரதிதான் செத்ததுண்டோ' என்கின்றார். அதைப்போல கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை என்றுமே சாகவில்லை, அவர் என்றைக்கும் இருக்கிறார் என்பதை நினைவூட்டுகின்ற வகையிலே இந்தச் சிலை சுசீந்திரத்தில் செம்மாந்து இருக்க வேண்டும் என்று வாழ்த்தி என் உரையை முடித்து விடைபெறுகின்றேன், வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுசீந்திரத்திற்கு அருகில் உள்ள தேரூர் கிராமத்திலே பிறந்து, வளர்ந்து பல அரிய தமிழ் நூல்களை இயற்றிய தமிழ்க் கவிஞர் கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை அவர்களுக்கு, கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட சுசீந்திரம் பகுதியில் அரசு சார்பில் சிலை நிறுவ ஆணையிட்ட மாண்புமிகு தமிழக முதல்வர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கன்னியாகுமரி சட்டமன்றத் தொகுதி மக்களின் சார்பாகவும், கன்னியாகுமரி மாவட்ட மக்களின் சார்பாகவும் கோடானுகோடி நன்றி மலர்களை மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாத மலர்களில் காணிக்கையாக்குகின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'சாலைப் பாதுகாப்பினால் விளைவது

இன்பம். சாலை விபத்தினால் விளைவது துன்பம்' என்ற வைர வரிகளுக்கு உயிரோட்டமாக மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சாலை விபத்துகள் ஏற்படுவதை முழுமையாகத் தவிர்க்க வேண்டும்; விபத்தினால் உயிரிழப்பு இல்லாத மாநிலமாக தமிழகம் உருவாக வேண்டுமென்று சிந்தித்து, (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிற்கே வழிகாட்டியாக மற்ற மாநிலங்களில் இல்லாத அளவிற்கு தரமான ஒட்டுநர்கள் உருவாக்கப்பட வேண்டும், அப்படித் தரமான ஒட்டுநர்கள் உருவாவதன்மூலம் நிரந்தரமாக விபத்தில்லாத மாநிலமாக தமிழகத்தை உருவாக்க இயலும் என்ற சீரிய சிந்தனையோடு இந்தியாவில் முதல்முறையாக எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு (மேசையைத் தட்டும் ஒலி) சர்வதேசத் தரம் வாய்ந்த ஒட்டுநர் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையத்தை (மேசையைத் தட்டும் ஒலி) 55 ஏக்கர் பரப்பளவில் 15 கோடி ரூபாயில் உருவாக்கி இந்தியாவிற்கே வழிகாட்டியாக தரமான ஒட்டுநர்களை உருவாக்குகின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சி தலைவி அம்மா அவர்களுக்கு மனமார்ந்த நன்றியை துறையின் சார்பிலே சமர்ப்பித்துக்கொள்கிறேன்.

2010 ஆம் ஆண்டு, முந்தைய ஆட்சியின்போது விபத்தின்மூலம் ஏற்பட்ட உயிரிழப்பு 0.11 சதவிகிதம். 2011 ஆம் ஆண்டு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மூன்றாவது முறையாக முதலமைச்சராக பொறுப்பேற்று எடுத்த சீரிய நடவடிக்கையினால் விபத்தின்மூலம் ஏற்பட்ட உயிரிழப்பு 0.10 சதவிகிதம். மாண்புமிகு அம்மாவினுடைய நல்லாட்சியில் உயிரிழப்புகள் குறைக்கப்பட்டிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இதுவரை இல்லாத அளவிற்கு, வரலாறு காணாத அளவிற்கு, சாலைப் பாதுகாப்பு நிதியாக 2012-2013 ஆம் ஆண்டு 65 கோடி ரூபாய் நிதியை வாரி வழங்கியிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தரமான ஒட்டுநர்களை உருவாக்க வேண்டுமென்று சீரிய சிந்தனையோடு ஒட்டுநர் பயிற்சி மையம் இல்லாத 13 மாவட்டங்களுக்கு புதிய ஒட்டுநர் பயிற்சி மையங்களுக்கு 13 கோடி ரூபாய் நிதியை வழங்கி புதிய வரலாறு படைத்திருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு, (மேசையைத் தட்டும் ஒலி) சாலை விபத்தினால் பாதிக்கப்பட்ட சந்ததிகளின் வேதனையையும், சிந்திய கண்ணீரையும் துடைத்த தமிழகத்தின் உயிர்காக்கும் கடவுள், மாண்புமிகு முதலமைச்சர்



புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றி மலர்களை அவர்களுடைய பாதங்களிலே சமர்ப்பிக்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த புகழ்பெற்ற கவிஞர் என்பது நாம் அனைவரும் அறிந்ததே. அவரைப் பற்றி நான் படித்த ஒன்றிரண்டு நிகழ்வுகளை உங்களோடு பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன். கவிமணிக்கு சினிமா பார்க்கும் பழக்கம் கிடையாதாம். கவிமணி எழுதிய பாடல் 'கள்வனின் காதலி' படத்தில் இடம் பெற்றதற்காக ஒரு தொகை வழங்க கவிமணியின் இல்லத்திற்குச் சென்றிருக்கிறார்கள். தான் எப்போதோ எழுதிய பாடலுக்கு தற்போது தொகை தேவையில்லை எனக் கூறி மறுத்து விட்டாராம்.

கவிமணி சிறந்த கவிஞர் மட்டுமல்ல, நல்ல ஜனரஞ்சக மனிதர். நாதஸ்வர வித்வான் டி.என். இராஜரத்தினம் பிள்ளை, கவிமணியை சந்திக்கச் சென்றிருக்கிறார். இருவருக்கும் குளிர்பானம் வந்தது. கவிமணி ஸ்ட்ராவைக் காட்டி, எப்போதும் நாதஸ்வரம் ஊதுவீர்கள், தற்போது ஸ்ட்ராவை ஊதுங்கள் என்று கூறி, அனைவரையும் சிரிக்க வைத்தாராம்.

'ஆசிய ஜோதி', 'மலரும் மாலையும்', 'மருமகள் வழி மான்மியம்', 'கதர் பிறந்த கதை', 'உமர் கய்யாம் பாடல்கள்', 'தேவியின் கீர்த்தனைகள்', குழந்தைச் செல்வம் எனச் சிறந்த நூல்களைப் படைத்தவர். 'மணமகள்', 'பைத்தியக்காரன்', 'முதல் தேதி' போன்ற படங்களில் இடம்பெற்ற பாடல்கள் இன்றைக்கும் அனைவரது மனங்களையும் கவரக்கூடியவை. 'கள்வனின் காதலி' படத்தில் இடம்பெற்ற, 'வெயிலுக்கேற்ற நிழலுண்டு, வீசும் தென்றல் காற்றுண்டு' என்ற அவரது பாடல் வரிகள் மறக்க முடியாதவை.

இப்படிப்பட்ட தலைசிறந்த தமிழ்க் கவிஞருக்கு கன்னியாகுமரி மாவட்டம், சுசீந்திரத்தில் சிலை வைக்க உத்தரவிட்டு அறிவிப்பை வெளியிட்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு அனைத்து தமிழ் உள்ளங்களின் நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நேற்றைக்கு வருகை தந்திருந்த ஐரோப்பிய

கூட்டமைப்பினைச் சார்ந்த, இந்தியாவுடனான நல்லுறவிற்கான நாடாளுமன்ற குழுவினர், நம் அம்மா அவர்கள் அறிவித்துள்ள திட்டங்களைக் கேள்வியுற்று, இவ்வளவு நலத் திட்டங்களை எவ்வாறு செய்கின்றார்கள் என்று வியந்து பாராட்டிச் சென்றார்கள் என்பது மிகவும் மகிழ்ச்சியான ஒன்று. (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவுக்கு அம்மாவின் புரட்சிகரமான திட்டங்கள் இந்தியாவிற்கே, ஏன் உலகத்திற்கே முன்னோடியான திட்டங்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்று உலகத்திலுள்ள அனைவருமே பாராட்டுகின்றனர்.

அதைப்போல சர்வதேசத் தரத்திலான பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையமாகத் திகழும் கும்மிடிப்பூண்டியிலுள்ள ஒட்டுநர் பயிற்சிப் பிரிவைத் தரம் உயர்த்த அறிவிப்பு வெளியிட்டமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. அறிக்கைகள் அளித்தல்

### (அ) பொது நிறுவனங்கள் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். பொது நிறுவனங்கள் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், பொது நிறுவனங்கள் குழுவின் தலைவர்.

*முற்பகல் 11-25*

*__திரு. வி. சோமசுந்தரம்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏழைகளின் விடிவெள்ளியாக, எங்களின் உயிர் மூச்சாக, சோதனைகளையெல்லாம் சாதனைகளாக்கி, சாதனைகளையெல்லாம் சரித்திரங்களாக்கக்கூடிய ஆற்றல் படைத்த எங்கள் இதய தெய்வம் தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய பொற்பாதங்களை வணங்கி, 2011-2012 ஆம் ஆண்டிற்கான பொது நிறுவனங்கள் குழுவின் 29 முதல் 36 வரையிலான 8 அறிக்கைகளை இக்குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.



### (ஆ) சட்ட விதிகள் ஆய்வுக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் தலைவர் திரு. ஞா. செந்தமிழன் அவர்கள்.

*__திரு. ஞா. செந்தமிழன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நித்தம் நித்தம் நான் போற்றி வணங்குகின்ற எங்களுடைய இதய தெய்வம், கழகத்தின் நிரந்தர பொதுச் செயலாளர், வறுமையை ஒழிப்பதையே வாழ்நாளின் குறிக்கோளாகக் கொண்டு, மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தந்து, ஏற்றம் பெற்ற மக்கள் வாழ்வு வளம் பெற, வளம் பெற்ற மக்களின் சந்ததிகளின் வாழ்வு வளம் பெற திட்டங்கள் தந்து செயல்படுத்தும் இந்திய மக்களின் எதிர்பார்ப்பு, நாளைய பாரதத்தின் நல்வழிகாட்டி, நான்காம் தமிழாம் அறிவியல் தமிழ் கண்ட ஜகத்தின் மகத்தான முதல்வர் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) என்னுடைய நன்றியினைக் காணிக்கையாக்கி பணிந்து வணங்கி, 2011-2012 ஆம் ஆண்டிற்கான சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் 1-வது மற்றும் 2-வது அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

### (இ) அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகளை அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர் திரு. என்.டி. வெங்கடாச்சலம் அவர்கள்.

**திரு. என்.டி. வெங்கடாச்சலம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தெய்வம் மனுஷ்ய ரூபேன" என்ற புனித வரிகளுக்கேற்ப, தமிழக மக்களுடைய நலன் பேணிக் காக்கின்ற வகையில் பூமாதேவியினுடைய வடிவிலே இன்றைக்கு தமிழக மக்களுடைய நலன் காத்துக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிவோடு வணங்கி, 2011-2012 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் 17 முதல் 34 வரையிலான 18 அறிக்கைகளை குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளித்து அமர்கின்றேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2012–2013, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### கோரிக்கை எண் 4–ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2012-2013 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"*

*எனக் கோருகிறேன். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையாற்றும்போது தயவு செய்து அமைதி காக்கக் கேட்டுக்கொள்கின்றேன். வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 4, திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.*

**திரு. வி.சி. சந்திரகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 3135, திரு. சி.எச். சேகர் அவர்கள்.*



**திரு. சி.எச். சேகர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 1800, திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 3078, திரு. ப. டில்லி பாபு அவர்கள்.*

**திரு. ப. டில்லி பாபு:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:*

*"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வெட்டுத் தீர்மானம் எண் 618, திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மக்கள் குடியிருக்கும் பகுதிகளில்*

உள்ள மயானங்களுக்கு பாதை வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1389, திரு. எஸ்.ஆர். பார்த்திபன் அவர்கள்.

**திரு. எஸ்.ஆர். பார்த்திபன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட மற்றும் பழங்குடியினர் குழந்தைகளுக்குப் பள்ளிகளில் வழங்கப்படும் கல்வி உதவித் தொகையை அதிகரித்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1598, திரு. வி. முத்துக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1866, திரு. அழகாபுரம் ஆர். மோகன்ராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1908, திரு. ர.ம. பாபு முருகவேல் அவர்கள்.

**திரு. ர.ம. பாபு முருகவேல்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆரணி தொகுதியிலுள்ள ஆதி திராவிடர் நல விடுதிகளைப் புனரமைத்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1991, திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வடக்கன்குளம் என்ற ஊரில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் ஆதி திராவிட மாணவர் விடுதிக்கு சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2093, திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

**திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தனியார் துறை தொழில் நிறுவனங்களிலும் இட ஒதுக்கீட்டை பின்பற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2147, டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறப்பு உட்கூறுத் திட்ட நிதி ஒதுக்கீட்டின்மூலம் துறை வாரியாகப் பயன்பெற்ற பயனாளிகள் பட்டியலை வெளியிடுவதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2187, திரு. அ. அஸ்லம் பாஷா அவர்கள்.

**திரு. அ. அஸ்லம் பாஷா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகமெங்கும் ஆதி திராவிடர் மாணவர் நல விடுதிகளில் குடிநீர் வசதி செய்துதரவும், குளியல் சோப்பு, குளியல் எண்ணெய் அளிக்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2280, திரு. ப. பார்த்தசாரதி அவர்கள்.

**திரு. ப. பார்த்தசாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விருகம்பாக்கம் தொகுதியில் வசிக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்கள் அரசினர் விடுதி இல்லாமல் அவதிப்படுகிறார்கள். எனவே, அவர்களின் வசதிக்காக அரசினர் விடுதி கட்டிக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2438, திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "துப்புரவுப் பணியாற்றும் ஆதி திராவிடர்களுக்கு ஊதியத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2553, செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொப்பம்பட்டி பஞ்சாயத்து அப்பனூத்து கிராமத்தில் தலித் மக்களுக்கு அங்குள்ள பால் சொசைட்டி பாலூற்ற மறுப்பது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2603, திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர் தொகுதி, கலிங்கராஜபுரத்தில் ஆதி திராவிட நலத் துறையால் நடத்தப்படுகின்ற பள்ளிக்கு மாணவர்கள்

எண்ணிக்கைக்கேற்ப ஆசிரியர்கள் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2670, திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், ஆதி திராவிடர் நலத் துறைமூலம் நடைபெறும் வளர்ச்சிப் பணிகளைக் (civil works) கண்காணிக்க, பொறியாளர் அலுவலகம் திருநெல்வேலியில் உள்ளது. கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவிலில் ஒரு அலுவலகம் (sub-divisional office) அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2817, திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொருளாதாரத்திலும் கல்வி, நாகரிகம் மற்றும் பல்வேறு வகையில் பின்தங்கிய நிலையில், காடுகளிலும், சாலைகளிலும் வீடுகளின்றி, ஊசி, பாசி மாலை, தேன் போன்றவற்றை விற்றும், பிச்சை எடுத்தும் வாழுகின்ற 'நரிக்குறவன்' சமுதாயத்தினரைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்திட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2901, முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அருந்ததியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உள் ஒதுக்கீடு நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2924, திரு. க. பாலகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3222, திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த படித்த இளைஞர்களுக்கு நிரந்தர தொழிற்பயிற்சி மையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.135,21,79,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும்

பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு மாமன்ற உறுப்பினர்களுக்கு அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்பினை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கின்றேன் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கையின்மீது விவாதம். விவாதத்தைத் தொடங்கி வைப்பவர் மாண்புமிகு தே.மு.தி.க. உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

முற்பகல் *11-30*

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள் பிரச்சினைகளைப் பற்றி இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த எங்கள் குலதெய்வம் மாண்புமிகு கேப்டன் அவர்களை வணங்கிக்கொண்டு (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதான விவாதத்தைத் தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழங்குடியினர் மதம், சாதி சாராதவர்கள். தமக்கென்றே இறை வழிபாட்டைக் கொண்டவர்கள். இயற்கைக்குப் பாதுகாவலராக இருந்தவர்கள். தம்மைத் தாமே ஆண்டு கொண்டவர்கள். யாருக்கும் அடிமைப்பட்டுக் கிடந்தவர்கள் அல்லர். சொத்து இல்லாமல் அவல நிலை வந்ததில்லை. குறிப்பிட்ட வாழ்விடங்களில் வாழ்ந்தவர்கள். தீண்டாமை என்பதையே அறியாதவர்கள். அப்படிப்பட்டவர்கள் சுதந்திரம் பெற்று 60 ஆண்டுகள் கடந்த

@ 173 முதல் 216 வரையிலான பக்கங்களில் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.



நிலையிலும் சொந்த மண்ணில் கேட்பாரின்றி வாழ்கின்றனர். எனவே, பழங்குடியினரின் வாழ்வாதார உரிமைகளைப் பாதுகாக்க தமிழகத்தில் பழங்குடியின மக்கள் வாழும் பல பஞ்சாயத்துகள், ஒன்றியங்களில் பிரித்து வைத்திருப்பதை அரசு எல்லை மறுவரையறை செய்து பழங்குடியின மக்கள் வாழும் பகுதிகளை இந்திய அரசியல் சாசன ஷரத்து 244 பிரிவு (1)-ன்படி, 5-வது அட்டவணைப் பகுதியாக அறிவிக்கத் தேவையான நடவடிக்கைகளைத் தீவிரமாக எடுக்க வேண்டுகிறேன்.

நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், முள்ளுக்குறிச்சி பிர்காவில், மூலைக்குறிச்சி, ஊனந்தாங்கல் ஆகிய இரண்டு ஊராட்சிகளிலுள்ள நான் சார்ந்திருக்கின்ற பழங்குடியினத்தின் பெண்கள் 12 பேருக்கு கடந்த கால அரசு இலவச நிலம் வழங்கும் திட்டத்தில் இலவச நிலப் பட்டா வழங்கியது. அந்தப் பெண்களுக்கு சிட்டா, அடங்கல் மற்றும் அதற்குரிய வரைபடம் கொடுக்கப்பட்டுள்ளன. 2008 முதல் 2011 வரை இந்த 12 பெண்களும் மாவட்ட ஆட்சித் தலைவர் முதல் கடைநிலை அதிகாரிகளாக இருக்கின்ற கிராம நிருவாக அலுவலர் வரையிலும் சென்று, எங்களுக்குப் பட்டா கொடுத்ததற்குரிய நிலம் எங்கே இருக்கிறது என்று 4 வருடங்களாகப் போராடி வந்தனர். திடீரென இன்றைய அரசு 5-1-2012 அன்று தாசில்தார் மூலமாக ஒரு அறிவிப்பு—notice பட்டா வைத்துள்ள பெண்களுக்கு வழங்கியுள்ளது. அதில் நிபந்தனை மீறப்பட்டுள்ளது என்று ஒரு வரியில் காரணத்தை மட்டும் சொல்லி, பட்டா இரத்து செய்யப்பட்டதாக அறிவிப்பு கொடுக்கப்பட்டுள்ளது. அப்படியானால், கடந்த ஆட்சியில், இலவசப் பட்டா நிலம் இல்லாமலேயே, பழங்குடியின மக்களை ஏமாற்றுவதற்காகவே பட்டா வழங்கப்பட்டதா? 4 வருட காலமாக நிலம் எங்கே இருக்கிறது என்று கேட்டபோது அதிகாரிகள் ஏதோ சாக்கு, போக்குகளைச் சொல்லி தட்டிக் கழித்தது, கடந்த ஆட்சியாளர்களைக் காப்பாற்றுவதற்காகவா அல்லது தன்னுடைய சக அதிகாரிகளைக் காப்பாற்றுவதற்காகவா? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் பட்டாக்கள் வழங்க வேண்டுமென்று ஒரு வரையறை வகுத்து, பல இலட்சம் பேர்களுக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று ஒரு

புள்ளிவிவரத்தை சட்டமன்றத்திலே தந்தார்கள். பட்டா வழங்கப்பட்டிருக்கிறது என்பதற்கு கையில் ஏடு மட்டும்தான் இருக்கிறதே தவிர, நீங்கள் குறிப்பிட்டதைப் போல இடமில்லை. ஆனால், காகிதத்திலே பட்டா இருக்கிறது. என்ன செய்வது? கோபாலபுரத்திற்குச் சென்றுதான் நீங்கள் கேட்க வேண்டுமே தவிர, எங்களிடத்திலே கேட்டுப் பயனில்லை. *(மேசையைத் தட்டும் ஒலி)* அதைப் புரிந்துகொண்டுதான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உண்மையிலேயே யார், யாருக்குப் பட்டாக்கள் வழங்கப்பட்டிருக்கின்றன, எந்த இடத்தில் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை ஆய்வு செய்ததற்குப் பிறகு, இடமே இல்லாமல் பட்டா வழங்கியதன் காரணமாக அவை இரத்து செய்யப்பட்டிருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் சொல்வது சரிதான். இப்பொழுது பட்டா இரத்து செய்யப்பட்டுள்ளது. நான் கேட்பதெல்லாம் பட்டா வழங்கிய அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர் முதல் கடைநிலை அதிகாரியான கிராம நிருவாக அலுவலர் வரையிலும், அந்த இடத்தைப் போய் பார்க்காமல் எப்படி அதில் கையெழுத்திடலாம் என்பதுதான். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியைப் பொறுத்தவரையிலும், 4 ஆண்டு காலம் தாமதம் ஏற்பட்டதற்கு என்ன காரணம் என்பதை ஆய்வு செய்ய வேண்டும். அதிலே, உரிய அதிகாரிகளால் தவறு ஏற்பட்டிருக்குமானால், இதற்கு முன்னாலே குறிப்பிடும்போது நான் சட்டமன்றத்திலே பேசுகின்றபோது துறையின் சார்பாகச் சொன்னேன்—அன்றைக்கு ஒரு இலக்கை எட்ட வேண்டும், மக்களை ஏமாற்ற வேண்டும் என்பதற்காகவெல்லாம் இதுபோன்ற நிகழ்ச்சி நடைபெற்றிருக்கிறது. சட்டமன்றத்திலே நாங்கள் எதிர்க் கட்சியாக இருந்தபோது வருவாய்த் துறை அமைச்சரிடத்திலே 2 ஏக்கர் நிலம் எங்கே இருக்கிறது என்று கேட்டோம். இரண்டு ஏக்கர் நிலம் எங்களிடத்திலே இல்லையென்றாலும், கையளவு நிலத்தையாவது நாங்கள் தந்தோமா, இல்லையா என்று கேட்டார்.



அப்போது நாங்கள் சட்டமன்றத்திலே பேசுகிறபோது, 'கையளவு நிலத்தை வைத்துக்கொண்டு ஒற்றைக்காலிலே dance ஆடுவதா' என்று பேசியதுகூட பதிவேட்டிலே பதிவு செய்யப்பட்டிருக்கிறது. ஆக, அப்படிப்பட்ட நிலை சென்ற ஆட்சியிலே நடைபெற்றிருக்கிறதே தவிர, நம்முடைய ஆட்சியைப் பொறுத்தவரையிலும் சரியான முறையிலே பட்டாக்கள் வழங்குவதற்கு உரிய நடவடிக்கையை நாங்கள் மேற்கொண்டிருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)* இடத்தைத் தேர்வு செய்ததற்குப் பிறகுதான் பட்டாக்கள் வழங்க முடியும். இது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இட்டிருக்கிற கட்டளை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்தத் துறையிலே இருக்கின்ற அதிகாரிகள், அதை யார் வழங்கினார்கள் என்பதை ஆய்வு செய்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் நேரடி கவனம் செலுத்தி, அந்த 12 பழங்குடியின பெண்களுக்கும் நிலத்தையும், அதற்குரிய இலவசப் பட்டாவையும் வழங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். பாரம்பரியமாக... *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையின் மூலமாக அந்தப் பகுதியிலே, நத்தம் புறம்போக்கு இருக்குமேயானால் உடனடியாக அதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்**: மாண்புமிகு உறுப்பினர், ஒரு படத்திலே வரும் பாருங்கள், கிணற்றைக் காணவில்லை என்று. அந்தமாதிரி கதையாக இருக்கிறது. *(சிரிப்பு)* உங்கள் உரையைத் தொடருங்கள்.

**திருமதி ஆர். சாந்தி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரம்பரியமாக வனம் சார்ந்து வாழும் பழங்குடியினர், வன நில உரிமைச் சட்டம் 2006-ன்படி நிலம் கிடைக்குமென்று நம்பினார்கள். பல மாநிலங்களில் இலட்சக்கணக்கான குடும்பங்களுக்குப் பட்டா கொடுக்கப்பட்டது. ஆனால், தமிழகத்தில் இதுவரை ஒரு சென்ட் நிலம்கூட தரப்படவில்லை. ஏனென்றால், சென்னை உயர் நீதிமன்றத் தடையாணை எண் 4533/2008-ஐக் காரணம் காட்டுகின்றனர். ஆனால், இந்தத் தடையாணை, வன உயிரின மண்டலத்திற்கு மட்டும்தான் பொருந்தும். எல்லா மலைகளுக்கும் பொருந்தாது என்று தெரிந்தும், எந்த அதிகாரியும் பட்டா வழங்க முன்வரவில்லை. எனவே, உடனே பட்டா வழங்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட பழங்குடியின குடும்பங்கள் கிழக்கு மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழ்வாதாரமாக நிலத்தையும், உயிர்மூச்சாக விவசாயத்தையும் நம்பியிருக்கிறார்கள். இதில், 30,000 பழங்குடியினர் குடும்பங்கள் அரசுப் புறம்போக்கு நிலத்தைச் சீர்திருத்தி, காலம் காலமாக பயிர் செய்து வருகின்றனர். இந்நிலையில் மலைப்பகுதியில் அரசுப் புறம்போக்கு நிலத்திற்குப் பட்டா வழங்க தடையாணை எண் 1168/26-7-1984-ல் வெளியிடப்பட்டுள்ளது. எனவே, இந்த அரசு தடையாணையை நீக்கி, மலைப் பகுதிகளில் பயிர் செய்து வரும் பழங்குடியின மக்களுக்குப் பட்டா வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

பழங்குடியினர் துணைத் திட்டத்தில் செம்மறியாடு, வெள்ளாடு, கறவை மாடுகள் இவற்றை வருமான உச்சவரம்பின்றி பழங்குடியினர் அனைவருக்கும் இலவசமாக வழங்கக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மக்களுக்கான பஞ்சமி நிலத்தை ஆதி திராவிடர்களுக்கே கொடுக்க, கடந்த ஆட்சியில் 3 நபர் கொண்ட கமிட்டி ஒன்று போடப்பட்டது. அந்த கமிட்டிக்கு தி.மு.க. அரசு அதிகாரம் கொடுக்கவுமில்லை, என்ன செய்ய வேண்டுமென்று சொல்லவும் இல்லை. எனவே, அரசு இதில் தலையிட்டு, ஆதி திராவிடர் மக்களுக்கு பஞ்சமி நிலத்தை மீட்டுத் தரக் கேட்டுக்கொள்கிறேன்.

தமிழகத்தில், மலைப் பகுதிகளான கொல்லிமலை, சேர்வராயன் மலை, ஏலகிரி மலை, ஜவ்வாது மலை, கல்வராயன் மலை போன்ற



மலைப் பகுதிகளுக்கு தனித்தனியாக வளர்ச்சிக்கான திட்டக் குழுவை உருவாக்கி, அதற்குப் பழங்குடியினரைப் பொறுப்பாக அமர்த்திட அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

துணைத் திட்டம் தயாரித்ததில் பழங்குடியினத்தைச் சார்ந்த பஞ்சாயத்துத் தலைவர், ஒன்றியத் தலைவர், கவுன்சிலர், சட்டமன்ற உறுப்பினர் ஆகியோரின் பரிந்துரைகள் கேட்டுப் பெறப்பட்டு, அவற்றின் அடிப்படையில் பழங்குடியினர் துணைத் திட்டத்தை முடிவு செய்ய வேண்டுமென்றும், மாநில அளவில், துணைத் திட்டத்திற்கு ஒரு தனி அதிகாரக் குழுவை வளர் ஆணையர் தலைமையில் அமைக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையில் ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவிகளுக்கு சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் படிக்கும் அனைத்து விதமான அங்கீகரிக்கப்பட்ட படிப்புகளுக்கும் கல்விக் கட்டணச் சலுகைக்காக ரூ.331.31 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. முதலாமாண்டில் சேர்ந்தவர்களுக்கு மட்டுமல்லாமல், இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு மற்றும் நான்காம் ஆண்டு பயிலும் ஆதி திராவிட, பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கும் கல்விக் கட்டணச் சலுகையை அளிக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

ஏழையெளிய ஆதி திராவிடர், பழங்குடியினர் அரசுப் பணியில் சேர்வதற்கும், போட்டித் தேர்வைச் சமாளிப்பதற்கும் சென்னையில் இலவசப் பயிற்சி மையம் உள்ளதுபோல், ஒவ்வொரு மாவட்டத்திலும் இச்சமுதாய மக்கள் அதிக அளவில் வசிக்கும் இடங்களில் இலவச பயிற்சி மையம் அமைக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-40*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பட்டியல் இனத்தோர் துணைத் திட்டம் என்பது ஆதி திராவிடர் மக்களின் தனித்த முன்னேற்றத்திற்காக முன்வைக்கப்படும் உயிர் மூச்சான திட்டமாகும். ஆனால், ஆதி திராவிடர் மக்களின் உண்மையான முன்னேற்றத்திற்கு இல்லாமல், வாக்கு வங்கியை குறிவைத்தே முந்தைய தி.மு.க. அரசு இத்திட்டத்தைக் கையாண்டு வந்தது. எல்லா ஏழைகளுக்குமான வளர்ச்சித் திட்டம் என்ற

போர்வையில், ஆதி திராவிடர் மக்களை, ஏழைகள் பட்டியலில் இணைத்து, சிறப்புக் கூறு நிதியை அதில் சேர்த்து பொத்தாம் பொதுவாகச் செயல்படுத்தியது.

அனைவருக்கும் கல்வித் திட்டம், மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், வீட்டு வசதித் திட்டம், வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி, வேட்டி-சேலை வழங்கல், வேலையில்லா இளைஞர்களுக்கு ஊக்கத் தொகை போன்றவற்றில் சிறப்புக் கூறு நிதியை திசைமாற்றம் செய்து, கணக்குக் காட்டியது நெறிமுறைகளுக்கு முரணானதாகும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2002-2003 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், சிறப்புக் கூறுகள் திட்டம் மற்றும் பழங்குடியினர் துணைத் திட்டம் அணுகுமுறை வழியாக, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களுக்குச் செய்யப்படும் நலத் துறை பணிகளுக்கான நிதி ஒதுக்கீடுகளில் 1996 முதல் 2001 வரை தி.மு.க. ஆட்சியில் முரண்பாடுகள் இருந்ததாகவும், முன்னுரிமை ரீதியில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் மேம்பாட்டுக்கு எத்தகையத் திட்டங்கள் தேவை என்பதை ஆய்வு செய்து கண்டறிய உயர்மட்டக் குழு ஒன்று நியமிக்கப்பட வேண்டும் என்றும் இன்றைய அரசு கூறியுள்ளது. ஆனால், 10 ஆண்டுகள் முடிந்தும் குழு அமைக்கப்படவில்லை. இதுவரையிலும் ஏதும் கூறாமல் மௌனம் காக்கப்படுகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு தமிழக பட்ஜெட்டின் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடுகளின்படி, 'தானே' புயலுக்கு ரூ.200 கோடி, 'தாய்' திட்டத்திற்கு ரூ.150 கோடி, பள்ளிக் கல்விக்கு ரூ.80 கோடி என வழங்கப்பட்டுள்ளது. எந்த அடிப்படையில், ஆதி திராவிடர் நலனுக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கண்ட திட்டங்களுக்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்று தெரியவில்லை. பள்ளிக் கல்வித் துறையின்கீழ் செயல்பட்டு வந்த உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாக . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாமன்ற உறுப்பினர் குறிப்பிட்டுக்



கொண்டிருப்பதெல்லாம், கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியில் நடந்ததைப் பற்றிக் கூறிக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்தவுடன், ஆதி திராவிடர் மக்களுக்கான எல்லாத் திட்டங்களையும் செவ்வனே செய்து கொண்டிருக்கின்றார்கள். மாமன்ற உறுப்பினர் கூறிக் கொண்டிருப்பதெல்லாம் கடந்த ஆட்சியைப் பற்றியே கூறிக் கொண்டிருக்கின்றார் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இன்றைய ஆட்சியில் நடப்பதைப் பற்றிதான் சொல்லிக் கொண்டிருக்கின்றேன். பள்ளிக் கல்வித் துறை செயல்பட்டு வந்த . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைய ஆட்சியில் என்ன நடந்திருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்லுங்கள். இப்போதே அதற்கு விளக்கம் கொடுத்துவிடுகிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி, மாண்புமிகு அமைச்சருடைய கேள்வி, தற்போதைய ஆட்சியில் ஏதாவது குறைபாடுகள் இருந்தால் அதை மட்டும் சுட்டிக்காட்டும்படி சொல்கிறார்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் முன்பே சொன்னேன். அதை மறுபடியும் நான் படித்துக் காட்டுகின்றேன். இந்த ஆண்டு தமிழக பட்ஜெட்டின் திட்ட மதிப்பீடுகளின் துணை வெளியீடுகளின்படி 'தானே' புயலுக்கு ரூ.200 கோடி, 'தாய்' திட்டத்திற்கு ரூ.150 கோடி, பள்ளிக் கல்விக்கு ரூ.80 கோடி என வழங்கப்பட்டுள்ளது. எந்த அடிப்படையில், ஆதி திராவிடர் நலனுக்கென ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து மேற்கண்ட திட்டங்களுக்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டது என்பது தெரியவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய துறையினுடைய ஒதுக்கீடுகள் அனைத்துமே கிட்டத்தட்ட 21 துறைகளின் வாயிலாக செயலாக்கப்படுகிறது. உள்ளாட்சித் துறை மூலமாகவும், மின் துறை மூலமாகவும், ஆதி திராவிடர் நலத் துறை மூலமாகவும், இதுபோன்று பல்வேறு துறைகள் மூலமாக நிதி ஒதுக்கப்படுகின்றது. இதுமாதிரி பல்வேறு துறைகளுக்கு ஒதுக்கப்படுகிறது. அது எந்த விதிமுறையில் இதுமாதிரி ஒதுக்கியிருக்கிறார்கள் என்று உறுப்பினர் கேட்கின்றார். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்தை நன்றாக படித்துப் பார்த்தால் தெரியும். 21 துறைகள் மூலமாக செயலாக்கிக் கொண்டிருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் 'தானே' புயலுக்காக ஆதி திராவிடர் நலத் துறையிலிருந்து நிதி ஒதுக்கியதாக ஒரு குற்றச்சாட்டைச் சொல்கிறார். நான் அவர்களுக்கு இங்கே ஒரு விளக்கத்தை குறிப்பிட விரும்புகிறேன். தற்பொழுது, பசுமைக் குடில் திட்டத்திற்காக 1,100 கோடி ரூபாய் ஒதுக்கியிருக்கிறார்கள். அவ்வாறு பசுமைக் குடில் திட்டத்தின்கீழ் 1,100 கோடி ரூபாய் ஒதுக்கினால்கூட, 30 விழுக்காடு ஆதி திராவிட சமூகத்தைச் சார்ந்தவர்களுக்கு வீடுகள் ஒதுக்கப்படுகின்றன. அதன் அடிப்படையிலேதான் அந்த திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட நிதியும் இதிலே இணைத்து கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-45*

இவ்வாறு விரிவாக கொடுக்கப்பட்டிருக்கிற எல்லா நிதியுமே ஆதி திராவிட மக்களைச் சென்றடையக்கூடிய நிதி என்ற அடிப்படையிலேதான் இங்கே குறிப்பிடப்பட்டிருக்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'தானே' புயலானாலும்சரி, ஆடு, மாடுகள் வழங்குகிற திட்டமானாலும்சரி, எல்லா திட்டங்களிலும் குறிப்பிட்ட 30% தாழ்த்தப்பட்ட மக்களைச் சென்றடைய வேண்டும் என்கின்ற முறையிலேதான் பயன்படுத்தப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி பயிலும் ஆதி திராவிட வகுப்பைச் சார்ந்தவர்களுக்கு இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் கல்வித் திட்டத்தினை இந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். கல்விக் கட்டணச் சலுகை உயர் கல்வித் துறையைச் சார்ந்ததாக இருந்தாலும்கூட, அந்தக் கட்டணச் சலுகை ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகத்தான் அமல்படுத்தப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்வித் துறையில் மட்டுமல்ல, உள்ளாட்சித் துறையில் மட்டுமல்ல, எல்லா துறைகளிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய திட்டமான ஆடு, மாடுகள் கொடுக்கின்ற திட்டத்திலும்கூட (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிட மக்களுக்காக தனியாக 30 விழுக்காடு கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆதி திராவிட மக்களுக்குக் கொடுக்கக்கூடிய திட்டங்களின் வாயிலாக வருகின்ற நிதி குறித்து கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. இது எங்கிருந்து வருகிறது என்று கேட்டால், இங்கிருந்துதான் வரும். வேறு எங்கிருந்து வரும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். நேரம் ஆகிக்கொண்டிருக்கிறது. (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** ஒரேயொரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக 18 விழுக்காடுதான் ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எல்லா திட்டங்களிலும் 30 விழுக்காடு கொடுத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது பசுமைக் குடில் திட்டத்தை எடுத்துக்கொண்டாலும் 30 விழுக்காடு கொடுக்கிறார்கள். 18 விழுக்காடு அல்ல, 19 விழுக்காடுதான் கொடுக்க வேண்டும். ஆனால் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 30 விழுக்காடு எனச் சேர்த்து கொடுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட தொகையானது ரூ.6,108.60 கோடியாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இத்தொகை 21 துறைகளின் வாயிலாக செயலாக்கப்படுகிறது. ஒவ்வொரு துறையுமே, பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை, கல்வித் துறை, விவசாயத் துறை, உள்ளாட்சித் துறை, கால்நடைத் துறை போன்ற பல்வேறு துறைகளுக்கும்—ஆடு, மாடுகள் கொடுக்கிறார்கள் என்று சொன்னால், 30% ஆதி திராவிட நலத் துறையின் மூலமாக போகிறது. சீருடை கொடுக்கிறார்கள் என்று சொன்னால், ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகக் கொடுக்கிறார்கள். சைக்கிள் வழங்குகிறார்கள் என்று சொன்னால், ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகத்தான் கொடுக்கிறார்கள். லேப்-டாப் கொடுக்கிறார்கள் என்று சொன்னாலும், அந்த மாணவர்களுக்கு ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாகத்தான் கொடுக்கப்படுகிறது. அதனை எப்படிக் கொடுக்கிறார்கள், எந்த விகிதத்தில் கொடுக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். இதுகுறித்து கொள்கை விளக்கக் குறிப்பை நன்றாகப் படித்துப் பார்க்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி. ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. நான் எதனால் இதைக் கேட்டேன் என்றால், ஆதி திராவிடர்களுக்கு என்று ரூ.6,108.60 கோடி நிதி ஒதுக்கியுள்ளீர்கள். ஆனால், இந்த நிதியிலிருந்து ரூ.80 கோடி பள்ளிக் கல்வித் துறைக்காக ஒதுக்கியுள்ளீர்கள். ஏன், எதற்கு? ரூ.80 கோடி ரூபாயை நேரடியாக பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கியிருக்கலாமே? இதுபோல, 'தானே' புயல், 'தாய்' திட்டம் என்று நிதி நேரடியாக ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்டிருக்கலாமே? இதுதான் என்னுடைய கருத்து. நான் அடுத்த கேள்விக்குப் போகின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பள்ளிக் கல்வித் துறைக்கு...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அடுத்த கேள்விக்குப் போகட்டும். நான் வேண்டாமென்று சொல்லவில்லை. அதற்கு முன்னால், ஒவ்வொரு துறையிலும்—படிக்கின்ற மாணவர்களானாலும்சரி, பணி செய்கின்றவர்களானாலும்சரி, எந்தெந்தத் திட்டங்கள் வருகின்றனவோ, அந்தத் திட்டங்களின் வாயிலாக 19% தான் கொடுக்க வேண்டும். ஆனால், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கூடுதலாக, அந்தச் சமூகம் மேம்பட வேண்டுமென்பதற்காக 30% எனச் சேர்த்துக் கொடுக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன் அடிப்படையிலேதான் இந்த நிதிகள் ஒட்டுமொத்தமாக ஆதி திராவிட மக்களைச் சேர்கிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், 19 விழுக்காட்டிலிருந்து 30 விழுக்காடு ஆகியிருக்கிறது. இதனால் enhance தான் ஆகியிருக்கிறது. ஒன்றும் குறையவில்லை. (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 11-50

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 2010-2011 ஆம் நிதியாண்டில், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், அவர்கள் சரியாக 19 விழுக்காடுதான் கொடுத்தார்கள். கொடுத்துவிட்டு, நிதிநிலை அறிக்கையில் என்ன சொல்கிறார்கள் என்றால், அதாவது, "இந்த வரவு-செலவுத் திட்டத்தில் ரூபாய் 3,828 கோடியாக உயர்த்தப்பட்டுள்ளது என்பதையும், இந்த ஒதுக்கீடு மொத்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 19 விழுக்காடு ஆகும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று 2010-2011 இல் சொல்லியிருக்கிறார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2012-2013 ஆம் நிதியாண்டில் 6,108 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறார்கள். அதாவது, 21.82 சதவிகிதம் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த தி.மு.க. ஆட்சியில், அவர்கள் 19 விழுக்காடு ஒதுக்கி, ஆதி திராவிடர் பெருமக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியை மற்ற துறைகளுக்கெல்லாம் 'செம்மொழி மாநாடு' போன்ற உருப்படியில்லாத, அவர்கள் நடத்தினார்களே தன்னல தம்பட்ட மாநாடு, அந்த மாநாடுகளுக்கெல்லாம் சென்றது என்பது ஒரு மிகப் பெரிய குற்றச்சாட்டாக கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் இருந்தது என்பதனை மாண்புமிகு உறுப்பினருக்கு நினைவுக்கூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. டி.கே.எம். சின்னையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முக்கியமாக இந்த நேரத்திலே ஒன்றைச் சொல்ல வேண்டும். கடந்த 2011-2012 ஆம் ஆண்டு, ஆடு, மாடுகள் வழங்கும் திட்டத்தில்கூட, 30 சதவிகிதம் பேர் தாழ்த்தப்பட்டவராக இருக்க வேண்டுமென்று அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், அம்மாவினுடைய ஆட்சியிலே 40 சதவிகிதம் கொடுத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்து மாண்புமிகு அமைச்சர்களுடைய பதிலுரைக்கும் நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பள்ளிக் கல்வித் துறையின்கீழ் செயல்பட்டு வந்த உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டன. தரம் உயர்த்தப்பட்ட பள்ளிகளுக்குத் தலா 10 ஆசிரியர்கள் வீதம் பணியிடங்களை உருவாக்க அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. ஆனால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் செயல்பட்டுவரும் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தப்பட்டு, தலா 5 ஆசிரியர்கள் வீதம் பணியிடங்களை உருவாக்கிட அரசு உத்தரவிட்டுள்ளது. பிற சமுதாயத்தினர் படிக்கும் பள்ளிகளைப்போலவே எங்கள் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் படிக்கும் பள்ளிகளுக்கும் 10 ஆசிரியர் பணியிடங்களை உருவாக்கிட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2009-லே ஏற்பட்ட நிலையை இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்கிறார்கள். ஓராண்டுக் காலமாக நீங்கள் சட்டமன்ற உறுப்பினராக இருந்து கொண்டிருக்கிறீர்கள், இதுபோன்ற ஆக்கிரமிப்புகள்மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று என்றும் சொல்லவில்லை. பத்திரிகையில் வரவேண்டுமென்பதற்காகத்தான் இன்றைக்கு நீங்கள் பேசுகிறீர்களே தவிர, உறுப்பினர் மனதார அதை நிறைவேற்ற வேண்டுமென்று எண்ணியிருந்தால், நீங்கள் ஓராண்டுக் காலம் இங்கே

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

பணியாற்றுகிறபோது ஒரு கடிதத்தை பேரவைத் தலைவரிடம் கொடுத்திருந்தால் நாங்கள் அதன்மீது உரிய நடவடிக்கையை மேற்கொண்டிருப்போம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள்.

முற்பகல் 11-55

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** நான் அதற்கான ஆதாரத்தை வைத்திருக்கின்றேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் அதைக் கொடுக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சட்டப் பேரவைத் தலைவரிடம் உண்மையான ஆதாரத்தைக் கொடுத்தால், அதற்கு உரிய பதில் கிடைக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமன்றப் பெண் உறுப்பினர் என்பதால், நான் குறுக்கிடவில்லை. பொதுவாக, பிற உறுப்பினர்கள் இம்மாதிரி பேசினால், காலையிலே என்னிடம் வந்து ஆதாரம் கொடுத்திருக்க வேண்டுமென்று சொல்லியிருப்பேன். நீங்கள் ** சம்பந்தமாகப் பேசியிருக்கிறீர்கள். திடீரென்று சொல்லும்போது, அமைச்சர்களிடம் அதுசம்பந்தமான குறிப்புகள் இருந்தால்தான் அவர்களும் பதில் சொல்ல முடியும். என்னிடத்தில் காலையில் அதுசம்பந்தமான ஆதாரங்களைக் கொடுத்திருந்தால், இன்னின்ன பிரச்சினைகளை உறுப்பினர்கள் எழுப்புவார்கள், நீங்கள் தயாராக இருங்கள் என்று அமைச்சர்களை alert செய்திருக்க முடியும். இதுமாதிரி நீங்கள் பொத்தாம் பொதுவாகச் சொல்வது ஏற்புடையதல்ல. இனி வருங்காலத்தில் இம்மாதிரியான practice வைத்துக்கொள்ள வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் உரையைச் சீக்கிரம் முடித்தால், அதுவே பெரிதும் உதரியாய் இருக்கும் எனக்கு.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஆதாரத்தைக் கொடுத்து விடுகின்றேன்.

சேந்தமங்கலம் தொகுதி பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட தொகுதி. தொகுதி சீரமைப்பு என்ற பெயரில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஓர் ஆதாரத்தைக் காண்பித்திருக்கின்றார்கள். அது காலையில் என்னிடத்தில் காண்பிக்கப்படவில்லை. எனவே, அவர்கள் அந்த ஆதாரத்தை இப்பொழுது என்னிடத்தில் தரட்டும். அந்த ஆதாரத்தைப் பார்த்துவிட்டு, அதுவும் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசியதும் ஒத்திருந்தால், அது நிச்சயமாக அவைக் குறிப்பில் ஏற்றப்படும். அதுவரை, அது அவைக் குறிப்பில் ஏற்றப்படாது.

**திருமதி ஆர். சாந்தி:** சேந்தமங்கலம் தொகுதி பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட தொகுதி. தொகுதி சீரமைப்பு என்ற பெயரில் பழங்குடியினர் அதிகமாக வசிக்கின்ற நாமகிரிப்பேட்டை ஒன்றியத்தில் பெரப்பன்சோலை ஊராட்சி, மூலக்குறிச்சி ஊராட்சி, ஊனந்தாங்கல் ஊராட்சி, கார்கூடல்பட்டி ஊராட்சி, மூலப்பள்ளிப்பட்டி ஊராட்சி, முள்ளுக்குறிச்சி ஊராட்சி ஆகிய பகுதிகளை சேந்தமங்கலம் தொகுதியிலிருந்து பிரித்து, ராசிபுரம் தொகுதியில் சேர்த்துள்ளார்கள். எனவே, இப்பகுதியை மீண்டும் சேந்தமங்கலம் தொகுதியில் சேர்க்க வேண்டுமென்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் நலத் துறை, பழங்குடியினர் நலத் துறை இரண்டிற்கும் தனித்தனியாக துறைச் செயலாளர்கள். . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி சீரமைப்பு என்பது, அதற்கான குழுக்கள் அமைத்து, மத்திய அரசால் அங்கீகரிக்கப்பட்டு, அதற்குப் பிறகு தேர்தல் ஆணையத்தின் மூலமாக தொகுதி வரையறுக்கப்பட்டிருக்கிறது. இப்பொழுதே அந்தப் பகுதிகளை ராசிபுரத்திலிருந்து மாற்றி சேந்தமங்கலத்தில் சேர்க்க வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசைக்

கேட்கிறார்கள். இனி 30 ஆண்டுகளுக்குப் பிறகுதான் இதற்கான ஆய்வு நடைபெறும், அதற்குப் பிறகு நீங்கள் கோரிக்கை வைக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஆர். சாந்தி அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தே.மு.தி.க. உறுப்பினர் பேசும்பொழுது, சுய நிதிக் கல்லூரிகளில் படிக்கும்போது 32,500 ரூபாய், முதல் வருடத்தில் மட்டும்தான் கொடுக்கிறார்கள். இரண்டாம் ஆண்டு, மூன்றாம் ஆண்டு, நான்காம் ஆண்டு தரப்படுமா என்று கேட்டார்கள். ஒவ்வொரு வருடமும், முதல் ஆண்டு 32,500 ரூபாய், அதேமாதிரி, இரண்டாம் ஆண்டும், மூன்றாம் ஆண்டும், நான்காம் ஆண்டும் தொடர்ந்து நான்கு ஆண்டுகளுக்கும் கொடுக்கிறார்கள். அதேபோல, ரூ.32,500, ரூ.40,000, ரூ.62,500, பல் மருத்துவத்திற்கு ரூ.75,000 தொடர்ந்து கொடுக்கப்படுகிறது. மருத்துவப் படிப்பிற்கு 2¼ இலட்சம் ரூபாய் கொடுக்கிறார்கள். அதுவும் நான்கு வருடங்களுக்குக் கொடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்றாகக் கவனத்துடன் படித்துப் பார்த்துவிட்டுப் பேச வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, பள்ளி மாணவர்களின் எண்ணிக்கை, பாடப் பிரிவுகளுக்கேற்ப ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்கவில்லையென்று சொன்னார்கள். எந்தெந்தப் பள்ளிக்கூடங்களுக்கு, எத்தனை ஆசிரியர் பணியிடங்கள் ஒப்பளிப்பு செய்யப்பட வேண்டும் எனக் கோருகிறார்களோ அதற்கேற்ப கருத்துரு வந்த பிறகு மாண்புமிகு அம்மா அரசு ஆய்வு செய்து உடனுக்குடன் sanction செய்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள். (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள்.

**திருமதி ஆர். சாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு இலவசமாகக் காலணி வழங்குகிறது. சீருடைப் பணியாளர்களுக்கும் காலணிகள், பெல்ட்டுகள் போன்றவற்றை அரசு இலவசமாக வழங்குகிறது. தமிழகத்திலுள்ள பெருவாரியான



அருந்ததியர் மக்கள் இத்தொழிலில்தான் ஈடுபடுகின்றனர். எனவே, அவர்கள் பயன்பெறும் வகையில், கூட்டுறவு காலணிகள் தயாரிக்கும் சங்கங்களுக்கு ஆர்டர் கொடுத்து, அதன்மூலம் கொள்முதல் செய்தால், அந்த மக்கள் பயன்பெறுவதோடு மட்டுமல்ல, அவர்களது வாழ்க்கைத்தரமும் உயரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிப் பிரச்சினைகளைத் தங்களிடம் கொடுத்துவிடுகிறேன். அவற்றை அவைக் குறிப்பில் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதி சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அவைக்குறிப்பில் பதிவு செய்யப்படும்.

**திருமதி ஆர். சாந்தி:** தொகுதிப் பிரச்சினையைப் பொறுத்தவரை, சேந்தமங்கலம் ஒன்றியம், கல்குறிச்சி ஊராட்சி, அய்ன்குட்டையில் சர்வே எண் 171/3-ல் அரசு குட்டை புறம்போக்கு நிலம் ஆக்கிரமிப்பில் உள்ளது. இந்த ஆக்கிரமிப்புகளை அகற்றி நீர்தேங்கும் குட்டையாக மாற்றி நிலத்தடி நீர்மட்டம் உயர வழிவகை செய்ய வேண்டும் என்று அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை ஒன்றியம், வளர்பூர்நாடு ஊராட்சி, பொரனிக்காடு முதல் கருமனூர் பள்ளத்துவளவு வரை 4.50 கி.மீ. பழுதடைந்த சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

எருமப்பட்டி ஒன்றியம், வரகூர் கிராமம் முதல் செல்லாண்டியம்மன் கோயில் செல்லும் மண் சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

ராசிபுரம் முதல் பேளுக்குறிச்சி, சேந்தமங்கலம், அலங்காநத்தம் பிரிவு சாலை, எருமப்பட்டி வழியாக துறையூர் சென்றடைய அரசு பேருந்துகள் இயக்கினால் பல கிராம மக்கள் பயன் பெறுவார்கள். எனவே, உடனடியாக பேருந்து வசதி செய்து கொடுக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலை ஒன்றியம், பெரக்ரைநாடு ஊராட்சி, வாழக்காடு முதல் போல்காடு வரை 3.50 கி.மீ. மண் சாலையை தார்ச்சாலையாக மாற்ற அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலையில் இயங்கும் வல்வில் ஓரி பழங்குடியினர் நல உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிக்குச் சொந்தமான சுமார் 38 ஏக்கர் நிலத்தில் தற்போது சுமார் 10 ஏக்கர் மட்டுமே உள்ளது என்று 2011-2012 ஆம் ஆண்டு மானியக் கோரிக்கையில் பேசியபோது, அன்றைய வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறினார்கள். ஆனால் இதுவரை எந்த செயல்பாடும் இல்லை. எனவே, பழங்குடியினர் நலன் கருதி அபகரிக்கப்பட்ட நிலத்தை உடனே எடுத்து, பள்ளிக்குக் கொடுக்க அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

கொல்லிமலையில், பண பலம் கொண்ட சமவெளி பகுதியினர், மலைவாழ் மக்களுடைய ஏழ்மையைப் பயன்படுத்திக்கொண்டு, மலைவாழ் மக்களுக்கு மட்டுமே சொந்தமான கண்டிஷனல் பட்டா நிலத்தை வாங்கிக் கொண்டு, மலைவாழ் மக்களுக்குக் கொடுக்கும் மானியத்தை முழுவதும் பயன்படுத்துகின்றனர். எனவே, பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட மானியத்தை பழங்குடியினருக்கு மட்டும் ஒதுக்கீடு செய்ய அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் த. ஹரிதாஸ் அவர்கள்.

***டாக்டர் த. ஹரிதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்கி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றி தெரிவிக்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இந்தியத் துணைக் கண்டத்திற்குச் சுதந்திரம் வாங்கித் தந்தவர் தேசப் பிதா அண்ணல் மகாத்மா காந்தி. மகாத்மா காந்தி இந்தத் தேசத்திற்குத் தந்தை.



இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வகுத்துத் தந்தவர் அண்ணல் டாக்டர் பி.ஆர். அம்பேத்கர். டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் சட்ட திட்டங்களுக்குத் தந்தை.

தமிழ்நாட்டில் கல்விக் கண் திறந்தவர் கர்ம வீரர் காமராஜர். கர்ம வீரர் காமராஜர் கல்விக்குத் தந்தை. *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்கள், அமைதியாக இருங்கள்.

**டாக்டர் த. ஹரிதாஸ்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம் தந்து ஏழையெளிய மக்களின் துயர் துடைத்தவர் வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள் என்ற தத்துவ வரிகளுக்குரியவர் நமது பாரத ரத்னா, புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள். புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் சத்துணவுக்குத் தந்தை.

எல்லாவற்றிற்கும் மேலாக, இதயத்தைத் தொட்டு உலகம் வியக்கும் அளவிற்குக் கல்வியைத் தந்து, சத்துணவு தந்து, எந்த முதலமைச்சரும் செய்திராத அளவுக்குக் கல்வித் தரம் உயர, ஏழையெளிய மக்களின் வாழ்க்கைத் தரம் உயர, சுகாதாரமாய் வாழ, பல்லாயிரக்கணக்கான நலத் திட்டங்களைத் தந்து, உலக சரித்திரம் பல படைத்து, அந்தச் சரித்திரங்களையெல்லாம் உலக அதிசயங்களில் ஒன்றாக்கி, எட்டாவது அதிசயமாய் ஐக்கியமாகி இருப்பவர் நமது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் அம்மா அவர்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி, டாக்டர் அம்மா அவர்கள் நலத் திட்டங்களுக்குத் தாய்.

அம்மா நீங்கள் எட்டாவது அதிசயம் மட்டுமல்ல; இனிவரும் அதிசயங்கள் அனைத்துமே நீங்கள்தான்! உங்கள் சாதனைகளை எவரும் தொட்டுவிட முடியாது. உங்கள் சாதனைகளை நீங்களேதான் முறியடிக்க முடியும் என்று கூறிக்கொண்டு தங்களின் பொற்பாதங்களை வணங்கி மகிழ்கிறேன்.

மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சித்திரை முதல் நாளை தமிழ்ப் புத்தாண்டு நாளாக அறிவித்ததை அனைவரும் ஏற்றுக் கொண்டதைப் போல, சித்திரையும் ஏற்றுக்கொண்டது. அதனால்தான் இம்முறை ஒரு நாள் முன்னதாகவே பிறந்துவிட்டது. எனவே, இனிமேலாவது

தமிழுக்காகப் போராடுபவர் எனத் தனக்குத்தானே தம்பட்டம் அடிக்கும் தமிழ் தலைவலிகள் தமிழ்ப் புத்தாண்டைப் பற்றிக் கூறுவதை நிறுத்தட்டும்.

தமிழ்ப் புத்தாண்டுக்குத் தந்த விளக்கத்தால், எத்திசையும் புகழ் மணக்கச் செய்த, தமிழ் மணக்கச் செய்த மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதம் பணிந்து என் உரையைத் தொடங்குகிறேன்.

தமிழ் இலக்கியக் கருத்துகள் அனைத்திற்கும் தானே மொத்த குத்தகைக்காரர் என்று தனக்குத் தானே சொல்லிக்கொள்பவர்களும் விளங்கிக்கொள்ளும் அளவிற்கு, தமிழ்ப் புத்தாண்டிற்கு விளக்கம் அளித்த புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என் நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்களையும், நன்றியையும் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

காலத்தைத் தள்ளும் அரசு இதுவல்ல; தொலைநோக்குத் திட்டத்தால் காலத்தை வெல்லும் அரசு இது என்ற வகையில் நாளுக்கொரு நலத் திட்ட அறிவிப்பைச் செய்து, அதற்குரிய நிதியையும் ஒதுக்கி, செயல்படச் செய்து, கண்காணித்து வரும் ஞானப் புதையலாய் விளங்கும் புரட்சித் தலைவி தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு என் வணக்கத்தைத் தங்களின் பொற்பாதங்களில் வைத்து வணங்குகிறேன்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு நிதிக்காக கருணை கொண்ட அரசல்ல. மக்களுக்காக கருணையோடு நிதி ஒதுக்கும் அரசு என்பதால்தான், 2012-2013 ஆம் ஆண்டில் பட்டியலினத்தவருக்கான துணைத் திட்டத்திற்காக இதுவரை எப்போதும் ஒதுக்கப்படாத அளவில் 6,108.60 கோடி ரூபாய்களை ஒதுக்கினார்கள். ஆதி திராவிடர் நலனில் புரட்சித் தலைவி அம்மாவின் அரசு கொண்டுள்ள அக்கறைக்கு இதுவே சான்று. இது இந்த ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில் 21.82 சதவீதம் ஆகும்.

புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நோக்கு, சிங்க நோக்கு. சிங்கம் நடக்கும்போது, நான்கு பக்கமும் பார்த்தபடிதான் நடக்குமாம். நடக்கும்போது முன்னே பார்த்தபடியே தலையை வலதுபுறமும், இடதுபுறமும் ஆட்டியபடி பார்க்குமாம். மூன்று பக்கமும் பார்த்தபடி செல்லும்போது ஒரு 10 அடி சென்று, நின்று



வந்த வழியை, அதாவது பின் பக்கமும் பார்க்குமாம். பிறகு செல்லுமாம். எனவே நான்கு பக்கமும் பார்வை செலுத்துவதை 'சிங்கநோக்கு' என்பார்கள். அந்த நோக்கு உள்ள காரணத்தினால்தான், மாண்புமிகு அம்மா அவர்கள் ஆளுநர் உரையிலேயே அறிவார்ந்த ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். அந்த அறிவிப்பு என்னவென்றால், ஆதி திராவிடர் நலனுக்கு ஒதுக்கப்பட்ட இந்த நிதியின் முழுப் பயன்களும் ஆதி திராவிடர்களையே சென்றடையும் என்ற உறுதியான அறிவிப்பை வெளியிட்டார்கள். இந்த அறிவிப்பு, ஆதி திராவிட மக்களின் காதுகளில் செந்தேனாய் இனித்தது; இனிக்கிறது; இனியும் இனிக்கும். ஏனென்றால், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு "அறிக்கையில் சொல்வோம், சொன்ன அனைத்தையும் செய்வோம்" என்ற கொள்கை வழி நடக்கின்ற அரசு என்பதைப் புரிந்து வைத்துள்ளார்கள்.

பிற்பகல் 12-05

சவலைப் பிள்ளைகளையும் சத்துள்ள பிள்ளைகளாக மாற்ற முயற்சிக்கும் தாய் போல, பொருளாதாரத்தில் தாழ்ந்து கிடக்கும் ஆதி திராவிடர்களின் நலனில் தனிக் கவனம் செலுத்தும் தாய்தான், நமது மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

கடந்த ஆட்சியில் ஆதி திராவிடர்களுக்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதியை, தான் விரும்பும் துறைகளுக்கும், டி.வி. கொடுப்பதற்கும் மாற்றி செலவழித்துவிட்டார்கள். ஆதி திராவிடர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி அத்துறைக்குச் செலவழிக்கப்படவில்லை என்று மத்திய நிதி தணிக்கைக் குழு சுட்டிக்காட்டி கண்டனம் தெரிவித்திருந்தது.

ஒருவருக்கு உரிமையான நிலத்தை மற்றவர்கள் எடுத்துப் பயன்படுத்தினால் அது நில அபகரிப்பு ஆகும். அதேபோல ஒரு துறைக்கு மத்திய அரசால் ஒதுக்கப்பட்ட நிதியை, வேறு துறைக்குச் செலவழித்தால் அது நிதி அபகரிப்பு ஆகும். இந்த இரு செயல்களுமே கடந்த ஆட்சியில் ஒட்டிப் பிறந்த இரட்டைக் குழந்தைகளாக வளர்ந்தன. அதுபோன்ற பழிக்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு ஆளாகாது. ஆளாகக் கூடாது என்பதால்தான் ஆதி திராவிடர் நலத் துறைக்கு ஒதுக்கப்பட்ட

நிதியின் முழுப் பயன்களும் ஆதி திராவிடர்களையே சென்று சேரும் என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அறிவித்தார்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் தலைமையில் இயங்கும் இந்த அரசு "Sound mind in a sound body" என்பதன் முழுப் பொருளையும் உணர்ந்தது. 'உடம்பை வளர்த்தேன், உயிர் வளர்த்தேனே' என்றார் திருமூலர். அந்த வகையில், ஆதி திராவிட இனத்தைச் சார்ந்த பள்ளிப் பிள்ளைகள் நல்ல கட்டுடலோடு வளர வேண்டும் என்பதற்காக, அரசு உயர்நிலைப் பள்ளி மற்றும் மேல்நிலைப் பள்ளி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு இதுவரை வழங்கி வந்த மாத உணவுப் படியை ரூ.450/-லிருந்து ரூ.550/- ஆகவும், அரசுக் கல்லூரி விடுதிகளில் தங்கிப் படிப்போருக்கு மாத உணவுப் படியை ரூ.650/-லிருந்து ரூ.750/- ஆக உயர்த்தியுள்ள தாயுள்ளத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்; எவ்வளவு புகழ் பாடினாலும் தகும். தெய்வத்தைப் புகழ் பாடலாம்; தேன் தமிழைப் புகழ் பாடலாம்; தலைமையைப் புகழ் பாடலாம்; தருமத்தைப் புகழ் பாடலாம்; தகுதியைப் புகழ் பாடலாம்; தாயைப் புகழ் பாடலாம். எனவே தமிழக மக்கள் அனைவருக்கும் தாயாக இருந்து நலம் சேர்க்கும் அம்மாவை இங்கே புகழ் பாடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆனால், ஊழல் போதையிலே பொழுதைக் கழித்தவர்கள் குறை காணுகின்ற இந்தக் காலத்தில் "அறிக்கையில் சொல்வோம், சொன்ன அனைத்தையும் செய்வோம்" என்ற கொள்கை வழி நடக்கும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசை எல்லோரும் பாராட்டுவது போல, ஆதி திராவிட மக்களும் நெஞ்சாரப் பாராட்டுகிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்.

மாணவர்களுக்கு உணவுப் படியை உயர்த்தியதன்மூலம் இந்த அரசுக்கு ரூ.76.76 கோடி செலவாகும் என்றாலும், கோடியைப் பற்றிக் கவலைகொள்ளாத அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு. அந்த மாணவர்கள் வாடிவிடக் கூடாது என்பது பற்றியே கவலைகொள்ளும் அரசு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு.

ஆதி திராவிட நல மாணவர், மாணவியர் விடுதிகள் இனி தனியார் கட்டடங்களில் இயங்கக்கூடாது, அரசு விடுதிகளில்தான்



இயங்க வேண்டுமென்று திட்டமிட்டு, இந்த நிதியாண்டில் 49 விடுதிகளும், 2012-2013 ஆம் நிதியாண்டில் மீதமுள்ள 44 விடுதிகள் கட்டப்படும் என்று அறிவித்துள்ளார்கள். அதேநேரத்தில், அரசின் பழைய விடுதிக் கட்டடங்களின் கதி என்ன என்று யாரும் கவலைப்படக் கூடாது என்ற நிலையில், 1,080 மாணவ, மாணவியர் விடுதிகளில் உள்ள இன்றியமையாத கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக 82.40 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள்.

மேலும் மாண்புமிகு அம்மா அவர்களின் முற்போக்கு சிந்தனையின் அற்புத நிகழ்வாக, ஒரு முன்முயற்சியாக கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவர்கள் தரையில் படுத்துத் தூங்குவதை முற்றிலும் தவிர்க்க, 2012-2013 ஆம் ஆண்டு கட்டில் வசதி ஏற்படுத்தித் தர வேண்டும் என்று திட்டமிட்டுள்ளார்கள். இதுபோன்ற சிந்தனைகளையும், செயல் திட்டங்களையும் இந்தியா எங்கள் அம்மாவிடம்தான் கற்றுக்கொள்ள வேண்டும். கற்றுக்கொள்ளும் காலம் விரைவில் வரும் என்பதையும் இந்த மாமன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-10

ஆதி திராவிட மாணவர்கள் 10 ஆம் வகுப்புக்கு முன் pre-matric scholarship என்றும், 10 ஆம் வகுப்பிற்குப் பிறகு post-matric scholarship என்றும் கல்வி உதவித் தொகை பெற 331.31 கோடி ரூபாய் ஒதுக்கியுள்ளார்கள்.

இதுமட்டுமல்ல; தமிழக வரலாற்றில் முதல்முறையாக மெட்ரிக் மேல் படிப்பிற்கு வழங்கப்படும் கல்வித் தொகை முழுவதும் அரசால் வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்துள்ளார்கள். அதனால் அவரை கல்விக் கடவுள் சரஸ்வதி என்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** டாக்டர் த. ஹரிதாஸ், இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**டாக்டர் த. ஹரிதாஸ்:** என் தொகுதிக்குள் உள்ள மரக்காணத்திலிருந்து நான்குபுறமும் 40 கி.மீ. வரையில் எந்தக் கல்லூரியும் இல்லை. மிகவும் பிற்படுத்தப்பட்ட இனத்து மக்கள் இங்கே வாழ்கிறார்கள். மீனவர் இனப் பிள்ளைகளும், குறிப்பாக ஆதி திராவிட இனத்துப் பிள்ளைகளும் தினமும் 40 கி.மீ. தொலைவு சென்று படித்து வர இயலாத நிலையுள்ளது. எனவே,

இந்த மாமன்றத்தில் நியாயமான கோரிக்கை அனைத்தையும் அடுத்த நொடியே ஏற்று, ஆணை வழங்கி, அற்புதங்களை நிகழ்த்திவரும் மாண்புமிகு அம்மா அவர்கள், ஆதி திராவிட இனத்துப் பிள்ளைகளும் படிக்கும் வகையில், மரக்காணத்தில் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி அமைத்திட அனுமதி வழங்குமாறு மிகவும் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

'நாய்கள் குரைத்துக் கொண்டே இருக்கும்; ஒட்டகம் பயணித்துக் கொண்டே இருக்கும்' என்பது அரேபியப் பழமொழி. தமிழ் மொழி, தமிழ்நாடு, தமிழர்களின் உன்னத வளர்ச்சிக்கான திட்டங்களைச் செயல்படுத்திவரும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசைப் பற்றி, பொறாமையில் சிலர் புலம்பிக் கொண்டேயிருந்தாலும், மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு இலக்கை அடைய பயணித்துக் கொண்டேயிருக்கும். தமிழக மக்கள் எல்லோருக்கும், குறிப்பாக, ஆதி திராவிட மக்களுக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், வாழ வைக்கும் தெய்வமாக, வழிபடக்கூடிய தெய்வமாக விளங்குகிறார்கள் என்பதைப் பெருமையோடு கூறிக்கொள்கிறேன். ஆதி திராவிட மக்கள் என்றென்றும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசுக்கு உறுதுணையாக இருப்பார்கள் என்பதையும் இந்த மன்றத்தில் அறிவித்து, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து என் உரையை முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டினுடைய மூத்த குடிமக்கள் (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இரண்டும் ஒன்றுதான்; நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) ஒன்றும் பிரச்சினை இல்லை, பேசுங்கள். (குறுக்கீடு) இந்த Chair-லே உட்கார்ந்தாலே தலைவர்தான்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** Thank you Sir. தமிழ்நாட்டினுடைய மூத்த குடிமக்கள், தமிழ் இலக்கியங்களிலே, குறிப்பாக தொல்காப்பியத்தில் சொல்லப்பட்ட 5 வகை நிலங்களிலே, மருத நிலங்களிலே வாழ்ந்த மக்கள், இன்றைக்கு ஒடுக்கப்பட்ட மக்களாக,



பட்டியலின மக்களாக, ஆதி திராவிட மக்களாக அழைக்கப்படுகிறார்கள். சுதந்திரம் பெற்று 65 ஆண்டுகள் கழிந்த பிறகும்கூட, இந்த மக்களுடைய இன்றைய வாழ்நிலை, அந்த அளவிற்கு மகிழ்ச்சிகரமாக இல்லை; பிற மக்களோடு ஒப்பிடுகின்ற வகையில், கல்வியிலும், பொருளாதாரத்திலும் அவர்கள் சமநிலையில் இல்லை என்பதை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள்.

ஏறக்குறைய கடந்த 20 ஆண்டுக் காலமாக நாங்கள் வலியுறுத்தி வரக்கூடிய பல்வேறு கோரிக்கைகளில் மிக முக்கியமான ஒன்றைப் பற்றி நான் இங்கே குறிப்பிட விரும்புகிறேன். 1982 ஆம் ஆண்டு, அன்றைய பாரதப் பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள், ஒடுக்கப்பட்ட மக்களுக்கான சிறப்பு உட்கூறுத் திட்டம் ஒன்றை அறிமுகம் செய்தார்கள். ஆனால், அந்தச் சிறப்பு உட்கூறுத் திட்டத்தை எந்த கட்சியினுடைய பிரதமராக இருந்த திருமதி இந்திரா காந்தி அவர்கள் அறிவித்தார்களோ, அந்த காங்கிரஸ் கட்சி ஆளுகின்ற மாநிலங்களிலேயே அதை அமலாக்கவேயில்லை. தொடர்ந்து இதற்காகக் குரல் கொடுத்ததனுடைய விளைவாக, இன்றைக்கு இந்தியாவிலே இருக்கக்கூடிய பிற மாநிலங்களுக்கும் முன்னோடியாக, தமிழ்நாட்டிலே வாழ்கின்ற ஒடுக்கப்பட்ட மக்களுடைய மக்கள் தொகையைக் காட்டிலும் 2 சதவிகிதம் கூடுதலாக இந்தச் சிறப்பு உட்கூறுத் திட்ட நிதியை, அதுவும் பிரித்துப் பார்க்கக்கூடிய (divisible) இனமாக, இன்றைக்கு 21 துறைகளின் வாயிலாக அதை அமலாக்குவதற்கு நிதிநிலை அறிக்கையிலே, அதற்கான நிதியை ஒதுக்கித் தந்திருக்கிற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை, தமிழ்நாடு அரசை, புதிய தமிழகம் கட்சி பாராட்டுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இதில் மிக முக்கியமாக நான் சொல்ல விரும்புவது, இந்த சிறப்பு உட்கூறுத் திட்ட நிதியைப் பொறுத்தமட்டிலும், அது ஏதோ ஒரு சடங்குக்காக ஒதுக்கப்பட்டது அல்ல.

பிற்பகல் 12-15

நான் ஒரே ஒரு புள்ளிவிவரத்தைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தமிழ்நாட்டில் வாழக்கூடிய ஒட்டுமொத்த மக்கள் தொகையில், 20 சதவீதம் மக்கள் ஒடுக்கப்பட்டோர் என்று சொன்னால், நிலம் வைத்திருப்போருடைய எண்ணிக்கையைப் பார்க்கின்றபோது, வெறும் 7% ஒடுக்கப்பட்ட மக்களிடத்திலே நிலம் இருக்கிறது. அந்த 7% பேருடைய நிலமும் எவ்வளவு என்று

சொன்னால், அரைக் காணி நிலத்திலிருந்து அதிகபட்சம் 5 ஏக்கர் நிலம், அதாவது 20 ஏக்கருக்கு அதிகமாக, தமிழகத்திலே ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட மக்கள் எத்தனை பேரிடத்தில் நிலம் இருக்கிறது என்று சொன்னால், வெறும் 10 பேர்களிடத்தில் மட்டும்தான் நிலம் இருக்கிறது. எனவே, பொருளாதாரத்தில் அடித்தளத்திலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடிய இந்த மக்களுடைய வாழ்க்கை முன்னேற்றப்பட வேண்டுமென்ற நோக்கத்தில்தான் இந்த சிறப்பு உட்கூறுத் திட்டம், 21 துறைகளின் வாயிலாக நிறைவேற்றப்படவிருக்கிறது. எதற்காக, இதைப் பாராட்டுகிறேன் என்று சொன்னால், கடந்த ஆட்சியிலே, கடந்த காலகட்டங்களிலே இந்த சிறப்பு உட்கூறுத் திட்டத்தை எப்படி பிரித்துக் காட்டுவது என்பதுகூடத் தெரியாமல் தவறு இழைக்கப்பட்டு வந்தது. இப்பொழுது 6,108.6 கோடி ரூபாயும், 21 துறைகளின் வாயிலாக பிரித்துக் காட்டப்பட்டிருக்கிறது. அதற்காக, நான் மீண்டும் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேநேரத்தில், நான் சொல்ல விரும்புவது, இப்பொழுது அந்த சிறப்பு உட்கூறுத் திட்டம் link page 75-ல், ஒவ்வொரு இன வாரியாக சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே, நெல் கொள்முதல் செய்து, விநியோகம் செய்ய- ரூ. 1.2 கோடி; எண்ணெய் வித்துக்கள் உற்பத்தி-ரூ. 8.3 கோடி; பயிர் விதை உற்பத்தியைப் பெருக்க-ரூ. 8.2 கோடி; வேளாண் காப்புறுதித் திட்டம்-ரூ. 7.1 கோடி; தேசிய வேளாண்மை அபிவிருத்தி-ரூ. 28.9 கோடி; தோட்டக்கலை-ரூ. 24 கோடி; வேளாண்மை காப்புறுதித் திட்டம்-ரூ. 80 கோடி; உழவர் ஊக்கத் தொகை-ரூ. 80 கோடி; ஆக மொத்தம் பயிர் வளர்ப்புக்கு மட்டும்-ரூ. 256 கோடி ரூபாய் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறது. நான் வேளாண்மைத் துறையை வேண்டிக்கொள்வது, இந்த சிறப்பு உட்கூறுத் திட்டத்திலே காட்டப்பட்டிருக்கிற ரூ. 256 கோடி ரூபாயும் அடுத்த ஒரு ஆண்டுக் காலத்தில் ஒடுக்கப்பட்ட மக்களுக்கே சென்றால், 2023-ல், ஐரோப்பிய நாடுகளில் இருக்கக்கூடிய, மத்திய வருமானம் ஈட்டக்கூடிய நாடுகளில் இருக்கக்கூடிய மக்களுக்கு சமமாக தமிழகத்தை உயர்த்த வேண்டும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கனவு காண்கின்றாரே, அந்த இலட்சியத்தை நிறைவேற்ற முடியும் என்பதை நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எனவே, இது சிந்தாமல், சிதறாமல், அந்த மக்களுக்குப் போய்ச் சேர வேண்டும். அதற்காகத்தான் ஒவ்வொரு துறைவாரியாக கண்காணிப்பு கேட்கிறேன்.



இதேபோல்தான், மண் வளத்திலே-ரூபாய் 14 கோடி; கால்நடையிலே-ரூ. 76 கோடி; பசுமை வீடுகள்-ரூ. 344 கோடி; ஊரக வேலைவாய்ப்பு-ரூ. 214 கோடி; நபார்டு-ரூ. 34 கோடி; 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு வீடு கட்டுவதற்கு-ரூ. 200 கோடி; கான்கிரீட் வீடுகள், பசுமை வீடுகள் திட்டத்திற்கு-ரூ. 326 கோடி; தாய் திட்டத்திற்கு-ரூ. 150 கோடி; மாவட்டச் சாலைகள் விரிவாக்கத்திற்கு-ரூ. 115 கோடி; விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி வழங்க-ரூ. 500 கோடி; விலையில்லா காலணிகள் மற்றும் புத்தகப் பைகளுக்கு-ரூ. 24 கோடி; மடிக் கணினிக்கு-ரூ. 375 கோடி; இலவச நோட்டுப் புத்தகத்திற்கு-ரூ. 10 கோடி; சீருடைக்கு-ரூ. 62 கோடி; மேல்நிலைக் கல்வி இடைநிற்றலைத் தடுக்க-ரூ. 650 கோடி; அனைவருக்கும் கல்வித் திட்டத்திற்கு-ரூ. 171 கோடி; முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு திட்டத்திற்கு-ரூ. 180 கோடி; மருத்துவக் காப்பீட்டுக்கு- ரூ. 248 கோடி; குடிநீர் வழங்கலுக்கு-ரூ. 186 கோடி; நகர்ப்புற மேம்பாட்டுக்கு-ரூ. 52 கோடி; கல்விச் செலவுக்கு-ரூ. 169 கோடி; இந்திரா காந்தி ஓய்வூதியத் திட்டம் உட்பட பல்வேறு திட்டங்களுக்கு- ரூ. 1,014 கோடி; சத்துணவுக்கு-ரூ. 265 கோடி ஆக மொத்தம் ரூ. 6,108.6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. (குறுக்கீடு)

பிற்பகல் 12-20

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒடுக்கப்பட்ட இந்தச் சமூகத்தினுடைய வாழ்க்கைத்தரம் மேம்பட வேண்டுமென்பதற்காக, ஒவ்வொன்றாக, அவர்களுக்கு அடிப்படை வசதியான குடியிருக்க வீடு, அதற்காக ஒரு நிதியாதாரத்தை ஒதுக்கி கொடுத்திருக்கிறார்கள். அவர்களுக்கு உணவுக்குத் தேவையான நிதியாதாரத்தை கொடுத்திருக்கிறார்கள்.

இதுபோன்று, ஒவ்வொரு துறையின் வாயிலாகவும், ஒதுக்கப்பட்ட நிதி எந்தச் சூழ்நிலையிலும், சிந்தாமல், சிதறாமல் நேரிடையாக அவர்களுக்குச் சென்றடைய வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார். இந்த நிதிகள் முழுவதுமே அவர்களுடைய சாதியின் அடிப்படையிலே, அந்த விழுக்காடு, இப்போது 19 விழுக்காடு என்பது—வீடு

கட்டிக்கொடுக்க 30 விழுக்காடு கொடுக்கப்பட்டிருக்கின்றன. எனவே, எங்குமே எந்த இடத்திலுமே தவறு ஏற்படாது. ஏனென்று சொன்னால், ஒரு ஒன்றியத்திற்கு 200 வீடுகள் கொடுக்கப்படுகின்றன என்று சொன்னால், 30 விழுக்காடுகள் ஆதி திராவிடர் மக்களுக்கு நேரிடையாகச் சென்று சேரும். அதில் தவறு நடப்பதற்கு வாய்ப்பில்லை. எங்கே என்று சொன்னால், இந்த நிலம் வைத்திருகின்றவர்கள், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியைப் பற்றிய விழிப்புணர்ச்சியோடு அவர்கள் இருக்க வேண்டும். அந்த நிதியை கண்காணித்து அந்த நிலத்திற்குரியவர்கள் சென்று, அதைப் பெற்றுக்கொள்ள வேண்டும். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அந்த விழிப்புணர்ச்சியை ஏற்படுத்த வேண்டுமென்பதற்காகதான் ஒவ்வொரு கிராமத்திலும் இப்போது உழவர் பெருவிழாவை வைத்து, இந்தெந்த நிதி இதற்காக ஒதுக்கப்பட்டிருக்கின்றது, அதை நீங்கள் பெற்றுக்கொள்ளுங்கள் என்று கிராமங்களுக்குச் சென்று, அரசின் திட்டங்களைச் செயல்வடிவமாக மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உருவாக்கிக் கொடுத்து கொண்டிருக்கின்றார்கள். எனவே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஒரு திட்டத்தைக் கொண்டு வருவதற்கு முன்பாக, அந்தத் திட்டத்தினுடைய நிதி யாருக்குச் செல்ல வேண்டுமோ, அந்த நிதி அவர்களுக்குச் சென்று சேரவேண்டுமென்ற வகையில் செயல் திட்டங்களை உருவாக்கி, அதற்கேற்றவாறு திட்டங்களை அமல்படுத்தியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எந்தச் சூழ்நிலையிலும் ஆதி திராவிட மக்களுக்குச் சேர வேண்டிய தொகையை நிச்சயமாக மாண்புமிகு புரட்சித் தலைவியினுடைய அரசு, ஆதி திராவிட மக்களுக்குச் சென்று அடையச் செய்யும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் இதை வரவேற்கிறேன், பாராட்டுகிறேன். மாண்புமிகு முதல்வருடைய நோக்கம் தெளிவானது, நம்முடைய அரசினுடைய நோக்கம் தெளிவானது. அந்தந்தத் துறை வாரியாக



அமலாக்கப்படும்போது, கூடுதல் கவனம் செலுத்த வேண்டுமென்பதுதான் நம்முடைய நோக்கமாகும்.

இந்தத் திட்டம் ஐந்து ஆண்டுக்காலத்திலே செயல்பட்டாலே மிகப் பெரிய வெற்றியை அடைய முடியும். அடுத்து, தமிழக அரசின் சார்பாக இலவச காலணிகள், பள்ளி மாணவர்களுக்கு இலவச பைகள் . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:__ மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கையின் அறிவிப்பில்கூட நாங்கள் குறிப்பிட்டிருந்தோம். நடப்பாண்டிலே 5.85 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில், 385 வட்டாரங்களில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி விவசாயிகள் மேம்பாட்டிற்காக, இளைஞர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, குழுக்கள் அமைக்கப்பட்டு, விவசாயிகள் பயன்பெறும் பொருட்டு, அந்தந்தப் பகுதிக்கேற்ற கருவிகள், இயந்திரங்கள் அனைத்தும் விலையில்லாமல் வழங்கப்படும் என்று மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** அடுத்து, தமிழக அரசினுடைய மிகப் பெரிய நல்லதொரு திட்டம், நிலம் வழங்கும் திட்டம். ஒடுக்கப்பட்ட மக்களின் வாழ்வு நிலை பின்னடைவிற்குக் காரணம், அவர்களிடத்தில் நிலம் இல்லாமை. பல இடங்களிலே சமூகக் கொடுமைகள் நிலவி வருவதன் காரணம் நிலம் இல்லாததுதான். இன்றும் ஒடுக்கப்பட்ட மக்களில் 100-க்கு 90% பேர்களுக்கு நிலமில்லை. இந்தக் குறையை உணர்ந்துதான் 2001-2006 ஆம் ஆண்டு முதல் முறையாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கு நிலத்தை விலைக்கு வாங்கித் தரும் திட்டத்தை தாட்கோ மூலமாக இன்றைய முதல்வர் அப்போது முதலமைச்சராக இருந்தபோது அவர்கள் அறிவித்தார்கள். ஆனால், அதற்குப் பிறகு, இடையிலே இரண்டு ஏக்கர் நிலங்கள் இலவசமாகக் கொடுப்பது என்று திசை மாறி,

இப்போது எதுவுமே இல்லாமல் போய்விட்டது. இப்பொழுது அதற்கு மீண்டும் உயிர் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதை வரவேற்கிறோம். என்னுடைய வேண்டுகோள், இப்போது எல்லாருக்கும் தெரியும் விவசாய நன்செய் நிலங்களை 2 இலட்சம் அல்லது 3 இலட்சம் ரூபாய்க்கு வாங்க முடியாது. இப்போது 2½ ஏக்கர் நிலம், நன்செய் நிலம் அல்லது புன்செய் நிலமாக இருந்தால், 5 ஏக்கர் என்று நாம் சொல்லுகிறோம். எனவே, இதற்கு நம்முடைய தமிழக அரசு அந்த நன்செய் நிலத்திற்கு உண்டான விலையை உயர்த்திக் கணக்கிட வேண்டும். 7½ இலட்சம் ரூபாயில் நிச்சயமாக இன்றைய விலைவாசியில் 2 ஏக்கர் நிலத்தை வாங்க முடியாது. அதுமட்டுமல்ல, இந்தத் திட்டத்திற்கு இன்னும் கூடுதலாக நிதி ஒதுக்கப்பட வேண்டும். ஒரு வருடத்திற்கு ஒரு திட்டம், ஒரு கிராமத்திலே நிலமற்ற விவசாயிகளுக்கு, இந்த ஆண்டு ஒரு பத்து பேர்கள், ஒவ்வொரு கிராமத்திலேயும் 10 பேர்கள், 20 பேர்கள் தேர்ந்தெடுத்து, நிலமற்றவர்களுக்கு, அவர்களை நிலவுடைமையாளர்களாக ஆக்குவது என்ற ஒரு இலட்சியத்தோடு செயல்பட்டால், எந்தவொரு திட்டமும் வெற்றிகரமாக அமையும். ஆனால், நன்செய் மற்றும் புன்செய் நிலத்திற்கும் விலையை உயர்த்தித் தர வேண்டும். அடுத்து தனி நபருடைய வளர்ச்சிக்காக இப்போது 7½ இலட்சம் ரூபாய் கடனுதவி அளித்து, 30% மானியம் அல்லது 7½ இலட்சம் வண்டி விலை, இதில் எது குறைவாக இருக்கிறதோ அது தரப்படுகிறது. இதில் இருக்கிற ஒரேயொரு சிறிய பிரச்சினை என்னவென்று சொன்னால், இப்போது யாராவது ஒரு வாகனத்தை வாங்க வேண்டுமென்று சொன்னால், நல்ல முறையில் ஓடி பொருளீட்ட வேண்டும், இலாபகரமாக ஓட வேண்டுமென்று சொன்னால், அந்த வாகனத்தை எல்லாம் 12 இலட்சம் ரூபாய், 13 இலட்சம் ரூபாய், 15 இலட்சம் ரூபாய் இல்லாமல் வாங்க முடியாது. அதைத் தாட்கோ மூலமாக இப்போது ஏழரை இலட்சம் ரூபாய் என்றிருப்பதை, குறைந்தது 15 இலட்சம் ரூபாய் வரையிலும் உயர்த்துவதற்குண்டான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

பிற்பகல் 12-25

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எப்போதுமே புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தன்னுடைய சிந்தனைகள் ஒரு தூண்டுகோலாக இருக்க வேண்டுமென்று நினைப்பவர். ஒரு தொழிலாளி, முன்னுக்கு வரவேண்டுமென்ற சிந்தனையுடையவர்களிடத்திலே அவருக்குத் தேவையான அடிப்படை வசதிகளை, இப்போது ஏழரை இலட்சம் ரூபாய் கொடுக்கிறோம் என்று சொன்னால், ஒரு வண்டியை வாங்குகிறோம் என்று சொன்னால், 7½ இலட்சம் ரூபாய் என்ற அளவிலே தாட்கோவிலே கொடுக்கப்படுகிறது. மீதியை அந்த வங்கியே அவர்களுக்குக் கடனாகக் கொடுக்கிறார்கள். அந்தக் கடனை அடைப்பதற்கு வசதியாக நீண்டகாலக் கடனாகவும் கொடுக்கப்படுகிறது. அவர்கள் உழைத்து, கடனைக் கட்டி அந்த வண்டியை அவர்களுக்குச் சொந்தமாக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காகத்தான் இந்த நிதியாதாரத்தை உருவாக்கிக் கொடுக்கிறார்கள். 15 இலட்சம் ரூபாயை முழுவதுமாக மானியமாகக் கொடுத்துவிட்டால், அவர்கள் உழைக்காமல் வேறுவிதமாகச் சென்றுவிடுவார்கள். எனவே, அவர்கள் உழைப்பதற்குரிய வாய்ப்பையும் உருவாக்கிக் கொடுக்க வேண்டும் என்ற அடிப்படையிலேதான் இந்த நிதியாதாரங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடுக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி**: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது 15 இலட்சம் ரூபாயை முழுவதுமாகக் கேட்கவில்லை. 15 இலட்சம் ரூபாய் project-ஐயே வங்கியில் ஒத்துக்கொள்வதில்லை. ஏழரை இலட்சம் ரூபாய் project இருந்தால்தான் ஏற்றுக்கொள்கிறார்கள். 10 இலட்சம் ரூபாய், 12 இலட்சம் ரூபாய் என்றால் ஏற்றுக்கொள்வது இல்லை. நாங்கள் ஏழரை இலட்சம் ரூபாய்க்கு மட்டும்தான் லோன் கொடுக்க முடியும் என்று சொல்கிறார்கள். எனவே, project cost-ஐ நாம் அதிகரிக்க வேண்டும். Project cost-ஐ more than 7½ lakhs என்று நாம் அங்கீகரிக்க வேண்டும்.

அடுத்தது, இப்போது தமிழ்நாடு அரசு சார்பாக மாணவர்களுக்கு இலவச காலணிகள், பைகள் கொடுக்கிறோம். இதைப் பெரிய கம்பெனிகளுக்குக் கொடுப்பதற்குப் பதிலாக, நெசவாளர்களிடத்திலே நாம் நூலை கொடுத்து, நெய்யச் சொல்லி,

பிறகு அரசே அதை கொள்முதல் செய்கிறது. 32 மாவட்டங்கள் இருக்கின்றன, ஆங்காங்கே இருக்கக்கூடிய ஒடுக்கப்பட்ட சமுதாயத்திற்குப் பயிற்சி அளித்து, அவர்களுக்குச் சிறு தொழில் பயிற்சி அளிக்க வேண்டும். இந்தப் பை செய்வது எல்லாம் பெரிய தொழில்நுட்பம் வாய்ந்தது கிடையாது. காலணிகளை ஏற்கெனவே செய்து கொண்டிருக்கிறார்கள். எனவே, அவர்களையே ஊக்குவித்து, அவர்களிடத்திலேயே மூலப்பொருளைக் கொடுத்து, செய்து வாங்கினால் என்ன? இதைப் பற்றி அரசு. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் நான் என்னுடைய துறை மானியக் கோரிக்கை விவாதத்திற்கு பதில் சொல்கிறபோது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கேதான் இருந்தார்கள். தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் சார்பாக புதிதாக தொழில் செய்ய முனைவோர்களுக்கு எந்தவித சொத்து ஜாமீனும் இல்லாமல் 5 இலட்சம் ரூபாய் அளவிற்கு தொழில் செய்வதற்காகக் கொடுப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள் என்று சொல்லியிருக்கின்றேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியவாறு, இதுபோன்ற தொழில்களைத் தொடங்க முன்வருவார்களேயானால், எந்தவித ஜாமீனும் இல்லாமல் 5 இலட்சம் ரூபாய் அளவிற்குக் கடன் கொடுப்பதற்கு T.I.I.C. தயாராக இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், காலணி, பை செய்கிற தொழில் குறித்துக் கேட்கிறார்கள். இதற்கான கடன்களை எல்லாம் தாட்கோவிலே தருகிறார்கள். யாருமே முன்வந்து கடன் வாங்க வர மாட்டேன் என்கிறார்கள். ஏனென்றால் கடன் பெற்று உற்பத்தி செய்யப்படும் பொருள்களை மார்க்கெட்டிங் செய்வதற்கு யாரும் எடுத்துக்கொள்ள மாட்டேன் என்கிறார்கள் என்பதற்காகவோ, என்னவோ தெரியவில்லை. ஆனால், மாமன்ற உறுப்பினர் சொல்லிக் கொண்டிருக்கிறார், கடன்



தருவதற்கு வங்கிகள் முன்வரவில்லை என்று. யாரும் இந்த மாதிரி காலணிகள் தயாரிப்பதற்கு என்று மனு தரவில்லை. என்னிடம் மனுக்கள் எல்லாம் வந்தன. யாரும் காலணி தயாரிப்பதற்கு, பை தயாரிப்பதற்கு மனு கொடுக்கவில்லை. பெரிய அளவில் தொழில் தொடங்குவதற்குத்தான் அனுமதி கேட்டு வருகிறார்களேயொழிய, அவர் சொன்னது மாதிரி 15 இலட்சம் ரூபாய், 50 இலட்சம் ரூபாய் என்று கேட்டு வருகிறார்கள். அந்த அளவுக்குக் கேட்கும்போது அந்த வங்கிகள் எல்லாம், அவர்களுக்கு சொத்துக்கள் ஏதாவது இருந்தால்தான் தர முடியும் என்று சொல்கிறார்கள். அதுதான் காரணமேயொழிய சிறு தொழில்களுக்கெல்லாம் தாட்கோ லோன் தந்து கொண்டுதான் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கேட்பது, தமிழ்நாடு அரசு ஒரு குறிப்பிட்ட அளவுக்கு மாணவர்களுக்கான பைகளை கொள்முதல் செய்கிறது. அதற்கு நீங்கள் ஒடுக்கப்பட்டவர்கள், பட்டியலின தொழில் முனைவோர் செய்யக்கூடிய இடத்திலிருந்துதான் நாங்கள் வாங்குவோம் என்று Tie- up, buy back agreement போட்டீர்கள் என்றால் அதிலே நட்டமும் வராது, ** அதேநேரத்தில் இவர்கள் guarantee உடன் அந்தத் தொழிலைச் செய்ய முடியும். பிரச்சினை என்னவென்றால், சுய தொழில் செய்கின்றபோது, இவர்கள் செய்யக்கூடிய தொழிலுக்கு support இருப்பது இல்லை. கடந்த 1991-1996 காலத்தில் தமிழ்நாட்டில் ஒரு புரட்சிகரமான திட்டத்தை இன்றைய முதலமைச்சர் கொண்டு வந்தார்கள். திருப்பூரில், முதலிபாளையத்தில் 30 இலட்சம் ரூபாய், 60 இலட்சம் ரூபாய் கொடுத்து hosiery unit ஆரம்பித்தார்கள், அவர்களுக்கு support இல்லை. அதனாலே அந்தத் தொழிலுக்கு அன்று support இல்லாமல் போனது. ஏன், அப்படியென்றால் அரசாங்கம். . . (குறுக்கீடு) அரசாங்கத்தை நான் குறை சொல்லவில்லை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

*பிற்பகல் 12-30*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே ஒரு நியாயமான கோரிக்கை வைக்கிறார்கள். ஏற்றுக்கொள்ளக்கூடிய கோரிக்கைதான். அப்படி முயற்சி செய்து பொருள்களை உற்பத்தி செய்தால் அதாவது சொசைட்டி மூலமாகவோ அல்லது அந்த சமூகத்தைச் சேர்ந்தவர்களோ அதற்கு முயற்சி செய்து அவர்கள் கொண்டு வருவார்கள் என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதற்கு முதன்மையாக அந்தப் பொருள்களை எடுத்துக் கொள்வதற்குரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த சமூகத்தைப் பொறுத்தமட்டிலும் இன்னும் கல்வி இருந்தாலும், தகுதி இருந்தாலும், திறமை இருந்தாலும்கூட 'ஜாதி' என்ற tag இடையிலே முட்டுக்கட்டையாக இருக்கிறது. அதற்கு அரசை ஏன் நான் இட ஒதுக்கீடு வேண்டுமென்று . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் ஒரு தவறான தகவலைக் கொடுக்கிறார். ஜாதி முட்டுக்கட்டை என்பது ** (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, எல்லா சமூகத்திலும் திறமையுள்ள மக்கள் இருக்கிறார்கள். திறமையான தொழிலாளர்கள் இருக்கிறார்கள். திறமையான முதலீட்டாளர்கள் இருக்கிறார்கள். அதேபோல, நம்முடைய ஆதி திராவிட சமூகத்திலும் மிக உயர்ந்த

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



இடத்திலே நிறைய பேர் இருக்கிறார்கள். அதனால் அவருடைய திறமையை வைத்துத்தான் அவர்களுக்கு உரிய வாய்ப்பைக் கொடுக்க வேண்டுமே அல்லாமல் தயவு செய்து ஜாதியை முன் நிறுத்துவது அவருடைய உழைப்பையும், தியாகத்தையும், உணர்வையும் வேறுவிதமாகக் கொண்டு சென்றுவிடும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தயவு செய்து தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், ஒரு நிமிடத்தில் உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது, மத்திய அரசே இந்தியா முழுமைக்கும் திட்டங்களை அறிவிப்பதற்கு ஜாதிவாரியாகக் கணக்கெடுப்பு நடத்துகிறது. அது எதற்காக என்று சொன்னால், முன்னேறாத சமுதாயத்திற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், ஒரு நிமிடம் இருங்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஜாதி அமைப்பு என்பது பல்லாயிரம் ஆண்டுக்காலமாக சமூகத்தில் சித்தாந்த ரீதியாக உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கும் திறனுக்கும் சம்பந்தமே இல்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தத் திறன் என்பதை ஜாதியோடு, அதனுடைய பரிமாணத்தோடு ஒப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொன்ன கருத்தை சரியாகப் புரிந்து கொண்டிருந்தால் இந்தக் கேள்வியை அவர் எழுப்பியிருக்கமாட்டார். அவர்தான் ஜாதியை முன் நிறுத்தினார். அதற்காகத்தான் சொன்னேன். திறமை இருக்கின்றபட்சத்தில் ஜாதிகள் எழுவதே இல்லை. (குறுக்கீடுகள்) இல்லை, இல்லை, திறமைகள் எல்லா இடத்திலும் இருக்கின்றன.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு கருத்தைச் சொல்லிவிட்டு, இப்போது நியாயப்படுத்த முயற்சி செய்கிறார். தயவு செய்து நான் சொல்கின்ற கருத்தை follow செய்ய வேண்டும். திறமை இருக்கின்ற இடத்தில் அவர்கள் நிச்சயமாக மிளிர்வார்கள். அவர் அந்த ஒரு வார்த்தையைச் சொன்ன காரணத்தினால்தான் இந்தக் கருத்தைச் சொல்ல வேண்டிய சூழ்நிலை வருகிறது. இல்லையென்று சொன்னால் அந்த வார்த்தையை நானும் எடுத்துச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. எனவே, நான் சொல்கின்ற கருத்து அவர் அந்த ஒரு வார்த்தையை சொன்னதனால், தயவு செய்து திறமை உள்ளவர்களை நீங்கள் வேறுவிதமாக ஒரு கருத்தைச் சொல்லி அவருடைய வேகத்தைக் குறைத்து விடாதீர்கள் என்றுதான் சொன்னேனேயொழிய, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தவறான ஒரு சிந்தனையோடு இந்தக் கருத்தைச் சொல்கிறார் என்றே நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், ஒரு நிமிடத்தில் உரையை சீக்கிரம் முடியுங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் ** என்று பொருள்படும்படி பேசினார். தயவு செய்து அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் வைத்த வேண்டுகோளின்படி அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அதாவது, there is a stigma. ஒடுக்கப்பட்ட மக்கள் தாங்கள் தொழில் செய்கின்றபோது இந்தச் சமூக அமைப்பில் பல்வேறு விதமான இன்னல்களைச் சந்திக்கிறார்கள். இந்த சமூகத்தில் அவர்கள் பிறந்த அந்தச் சமுதாயம் ஒரு tag-ஆக இருக்கிறது. ஒரு ஓட்டல் ஆரம்பித்தால் குறைவாக விற்பனை

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



ஆகிறது. அதற்கு ஒரு background support வேண்டும். வளர்ந்து வரக்கூடிய சமுதாயத்தில் அரசுதான் உதவி பண்ண வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, விவாதம் நல்ல பாதையை விட்டு வேறு பாதையில் சென்று கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த விவாதத்தை ஒரு முடிவுக்குக் கொண்டு வந்து ஆரோக்கியமான விவாதத்தை மாண்புமிகு உறுப்பினர் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள், நேரமாகி விட்டது. உரையை முடியுங்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அடுத்தது, நியமனப் பதவிகள், ஏறக்குறைய அரசு பல்கலைக்கழகங்கள் 15 இருக்கின்றன. ஒரு பல்கலைக்கழகத்தில்கூட துணை வேந்தராக தாழ்த்தப்பட்ட மக்கள் இல்லை. எனவே, அந்தப் பல்கலைக்கழகங்களில் உரிய அளவிற்கு நியமனம் செய்ய வேண்டும். (குறுக்கீடு)

பிற்பகல் 12-35

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் நியமனத்தைப் பொறுத்தவரையில் அதற்கென்று தனியாக தேர்வுக் குழு அமைக்கப்பட்டிருக்கிறது. கடந்த ஆட்சியில் எப்படி துணை வேந்தர்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பது மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றாகத் தெரியும். அதுபோல் இல்லாமல், மாண்புமிகு முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சி அமைந்தவுடனேயே தகுதியின் அடிப்படையில் திறமை வாய்ந்த, பல்கலைக்கழகத் துணை வேந்தர்கள் நியமிக்கப்படுவார்கள். அதற்கான குழு உருவாக்கப்படும் என்று கடந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அதன் அடிப்படையில் தற்போது தமிழகத்தில் காலியாக உள்ள அனைத்து துணை வேந்தர் பணியிடங்களை நிரப்புவதற்கான தேர்வுக் குழுவை அமைத்திருக்கிறோம். 3 பேர் கொண்ட Search Committee (தேர்வுக் குழு) அதற்கான பணியைச் செய்யும். 3 பேர் கொண்ட தேர்வுக் குழு, மூன்று அறிவார்ந்த, திறமை வாய்ந்த, தகுதி உள்ள, அனுபவம் உள்ள கல்வியாளர்களைத் தேர்வு செய்து வேந்தருக்கு அனுப்பி வைக்கும். வேந்தர் அதில் ஒருவரைத் துணை வேந்தராக நியமிப்பார். இதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல் திறமையின் அடிப்படையில் அந்த இனத்தவர் வந்தால் அவரும் பங்கு பெறுவார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**HON'BLE SPEAKER:** Dr. Krishnasamy, please conclude your speech.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பல்கலைக்கழகங்களில் வேலைவாய்ப்புகள் உருவாகின்றபோது இட ஒதுக்கீடுகளை—உயர்ந்த கல்வி நிறுவனங்கள், அவர்கள்தான் பிற கல்வி நிறுவனங்களுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டும். கடந்த ஆட்சியில் சிறு தவறு நடந்தது, இட ஒதுக்கீட்டில் உள் ஒதுக்கீடு கொண்டு வந்தார்கள். G.O. No.65 அதில், தெளிவாகச் சொல்லியும்கூட பல்கலைக்கழகங்கள் தவறாக interpret செய்வதால் தொடர்ந்து பல பிரச்சினைகள் இருக்கின்றன. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் ஏற்பட்ட அந்த இட ஒதுக்கீட்டின் அடிப்படையில்தான், அவர்கள் கொண்டு வந்திருக்கிற சட்டமுன்வடிவை வைத்து அதுபோன்ற பதவியில் நியமனம் செய்யப்படுகிறது. ஆகவே, இந்தப் பதவி நியமனத்தைப் பொறுத்தவரையில் சட்டம் என்ன சொல்கிறதோ அதன் அடிப்படையில்தான் அரசு செய்து வருகிறது. தற்போது இதுபோன்று இட ஒதுக்கீடு சம்பந்தமாக யாருக்கும் எந்தவிதமான



பாதிப்பும் இல்லாமல் விளம்பரப்படுத்தப்பட்டு, அதில் இன்னின்ன இனத்திற்கு, இன்னின்ன பதவிகள் என்று துறைவாரியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தகுதியின் அடிப்படையில்தான் தற்போது நியமனம் நடைபெற்று வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாங்கத்தின் சில துறைகளில் விளம்பரங்கள் கொடுத்து வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. அண்மையில் வேளாண்மைத் துறையில் ATMA என்ற திட்டத்தில் வேலைவாய்ப்புக்கு அழைப்பு கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அதில் இட ஒதுக்கீடு பற்றி ஒரு வரிகூட கொடுக்கவில்லை. சில நிறுவனங்கள்தான் விளம்பரம்மூலம் வேலைவாய்ப்பை அளிக்கிறார்கள். அந்த நிறுவனங்கள் எப்படி இட ஒதுக்கீட்டை அமலாக்க முடியும்? இது அரசாங்கத்தின் சமூக நீதிக்கு எதிரானது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ATMA திட்டத்தின் மூலமாக தற்காலிக பணிக்குதான் எடுக்கப்பட்டது. இருந்தாலும்கூட அவர்கள் நினைக்கிற அளவிற்கு மேல் இட ஒதுக்கீடு கொடுத்திருக்கிறோம். அதுபற்றிகூட உங்களிடம் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். அது வரும்போது முழுமையாக அதைப் பற்றி விளக்குவேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதையே பதிலாக எடுத்துக்கொள்ளலாமா?

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** இல்லை, அப்படி சொல்லக்கூடாது, தெளிவாகச் சொல்ல வேண்டும். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்தது, தமிழ்நாடு அரசின் முற்போக்கு திட்டத்தில். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை இருக்கிறது, please sit down, (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் உட்காருங்கள், டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள் ஒரு நிமிடத்தில் முடித்து விடுவார்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சுதந்திர போராட்டத் தியாகிகள், தமிழுக்குத் தொண்டாற்றியவர்கள், கவிஞர்கள், அதேபோல பல்வேறுவிதமான முன்னோடிகளின் பெயர்களிலே மணி மண்டபம் அமைக்கிறார்கள், சிலைகள் அமைத்துத் தருகிறார்கள். தளபதி சுந்தரலிங்கம் 200 வருடங்களுக்கு முன்பே தற்கொலைப் படையாகச் செயல்பட்டு உயிர் நீத்தவர், அவருடைய பெயரிலே மணி மண்டபம் சென்னையிலே அமைத்திட வேண்டும். அவருக்குச் சிலை அமைத்திட வேண்டும். தியாகி இமானுவேல் சேகர் அவருடைய பெயரிலே அரசு விழாக்கள் அறிவித்திட வேண்டும். அதேபோன்று நீண்ட நாட்களாக தென் தமிழக மக்கள் தங்களை தேவேந்திரகுல வேளாளர்கள் என்று அடையாளப்படுத்த அரசாணை பிறப்பிக்க வேண்டும் என்று கோரிக்கை வைத்து வருகிறார்கள்.

அதேபோல, இந்த ஒட்டுமொத்த தமிழகத்தில் இருக்கிற 76 சமுதாய மக்களையும் ஒன்றாக இணைக்கக்கூடிய துறை, இந்தியாவின் எந்தப் பகுதியிலேயும் சமூக நீதித் துறை என்றுதான் இருக்கிறது. இதுபோன்று ஜாதியின் பெயரில் துறை இல்லை, எனவே சமூக நீதித் துறை அல்லது பட்டியல் மரபினர் துறை என்று இந்தத் துறைக்குப் பெயரிட வேண்டும் என்று வலியுறுத்தி, ஒட்டுமொத்தத்தில் தமிழ்நாடு அரசு, ஒடுக்கப்பட்ட மக்களுடைய சமூகப் பொருளாதார மேம்பாட்டிற்காக எடுத்து வரக்கூடிய நடவடிக்கைகள், குறிப்பாக சிறப்பு உட்கூறுத் திட்டத்திலே சிறப்பான கவனம் செலுத்த வேண்டும். இதுநாள் வரை கடந்த 10 வருடங்கள், 15 வருடங்களாக அது கவனிப்பாரற்ற நிலையில் இருப்பதை மாற்றி இப்போது நூற்றுக்கு நூறு divisible என்று பிரித்துக்காட்டக்கூடிய வகையில் 21 துறைகள் வாயிலாக . . .

பிற்பகல் 12-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையின்மீது எனக்குப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் இந்த மானியக் கோரிக்கையின்மீது



என்னுடைய கருத்துகளைப் பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழ்நாட்டில் மொத்த மக்கள் தொகையில் ஐந்தில் ஒரு பகுதி மக்களாகிய ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் வாழ்க்கையில் சமூக முன்னேற்றம், பொருளாதார மேம்பாட்டிற்கான விவாதம் இது. 4,000 ஆண்டுகளுக்கு மேலாக சமுதாயத்திலிருந்து ஒடுக்கப்பட்ட இந்த மக்கள் இவர்கள். சமூக அமைப்பின் அடிமட்டத்தில் கிடக்கும் இவர்களை, சமூக நீரோட்டத்தில் அனைத்துத் துறைகளிலும் சமமாக உயர்த்திட வேண்டும் என்று நமது அரசியல் சட்டம் சொல்கிறது. கல்வி, வேலைவாய்ப்பு, விவசாயம், குடியிருப்பு, மருத்துவ மேம்பாடு என அனைத்திலும் இவர்களுக்குத் நியாயமான பங்கை உறுதிப்படுத்த வேண்டுவது அரசின் கடமை என்று சட்டம் கூறுகிறது. அதோடு, சமூக அவலங்களிலிருந்து இவர்களை மீட்டெடுக்க வேண்டும். தலித், பழங்குடி மக்கள் என்பதற்காக எந்தவொரு மனிதனையும் அவமானப்படுத்தக்கூடாது. இப்பிரச்சினையில் அரசு நிருவாகம், அதிகாரிகள் என ஒவ்வொரு தனி மனிதனும் சமூக அக்கறையுடன் இதற்காக ஒன்றுபட்டு குரல் கொடுப்பதன்மூலமே தீண்டாமை எனும் களங்கத்தை, கறையை அகற்ற முடியும். 1979-ல் மத்திய அரசால், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் பொருளாதார கல்வி மேம்பாட்டிற்காகக் கொண்டுவரப்பட்ட திட்டம்தான் சிறப்பு உட்கூறு திட்டம். அந்தவகையில், இந்த ஆண்டு பட்ஜெட்டில் சிறப்பு உட்கூறு திட்டத்தினை அமலாக்குவதற்கு தலித் மற்றும் பழங்குடியின மக்கள் மேம்பாட்டிற்காக ரூ.6,108.60 கோடியும், பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கு ரூ.349.30 கோடியும் ஒதுக்கீடு செய்திருப்பது பாராட்டுக்குரியதாகும். இந்த தலித், பழங்குடியினர் மக்களின் சுய சிந்தனையை பலப்படுத்திட, சமூக அந்தஸ்தை உயர்த்திட, கல்வியில் தமிழக அரசு கூடுதல் கவனம் செலுத்தி இருப்பது வரவேற்கத்தக்கது, பாராட்டப்பட வேண்டியது. கல்வியின் எல்லா மட்டங்களிலும் தலித் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டிற்குக் கூடுதலான கவனம் செலுத்தப்பட்டுள்ளது. குறிப்பாக, பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் மாணவர் இல்லங்களில் தங்கி தொழிற்கல்வியை பயில்வோருக்கு இதுவரை இல்லாத நடவடிக்கையாக ரூ.7,500/-, ரூ.8,000/- என மானியம் வழங்குவது எனத் தமிழக அரசு அறிவித்திருப்பது மிகவும் பாராட்டப்படக்கூடிய விஷயம் ஆகும்.

அதேவேளையில், படித்த ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்களுக்கு தனியார் நிறுவனங்களில் வேலை ஒதுக்கீடு செய்யப்படுவது இல்லை. பெரும் பகுதி தொழில்கள் தனியார் மயமாகிவரும் உலகச் சூழலில், தனியார் நிறுவனங்களில் தலித் பழங்குடியினருக்கு இட ஒதுக்கீட்டினை தமிழக அரசு உறுதிப்படுத்திடவில்லை என்றால், படித்தும் பலன் இல்லா நிலை ஏற்படும். இதைத் தமிழக அரசு கவனத்தில்கொண்டு செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சுய வேலைவாய்ப்பிற்கும், பயிற்சிக்கும் தாட்கோமூலம் கடன் மற்றும் மானியம் வழங்கப்பட வேண்டும் என்று மத்திய அரசாங்கமும், மாநில அரசாங்கமும் தங்கள் கொள்கையை பிரகடனப்படுத்தியுள்ளன. ஆனால் தொழில்முனைவோர் அல்லது தொழிற்பயிற்சிக்குச் செல்வோர் கடன் பெற வங்கிகளை அணுகினால், கடன் கிடைப்பது குதிரைக் கொம்பாக உள்ளது. தாட்கோவிடம் கொடுக்கப்படும் மனுக்கள் வங்கிகளுக்கு சிபாரிசு செய்யப்படுகின்றன. ஆனால், பெரும்பாலான வங்கிகள் கடன் கொடுப்பதில் எந்த அளவிற்கு காலதாமதம் செய்து அதை இழுத்தடிக்க முடியுமோ, அவ்வாறு செய்து தலித் பழங்குடியினர் மக்களை நோகடிக்கச் செய்யும் பணிகள்தான் கடந்த காலங்களில் இருந்தது. அதை இன்றைய தமிழக அரசு களைந்திடவில்லையென்றால், அரசின் நோக்கங்கள் வங்கிகளின் அக்கறையற்ற போக்குகளினால் அமலாகாத நிலை ஏற்படும். எனவே, தாட்கோவில் கடன் கிடைக்கக்கூடிய முடிவை தலித், பழங்குடியினர் துறை அதிகாரிகள் முடிவு செய்து வங்கிகளுக்கு உத்தரவிடுவதன் மூலமாக கடன் கிடைத்திடும் நடவடிக்கைகளை உறுதிப்படுத்திட வேண்டும்.

தலித்துகளுக்கு, விவசாயிகளுக்கு நிலம் வழங்கும் திட்டம் என்பது பொருளாதார மேம்பாட்டில் ஒரு முக்கியமான விஷயமாகும். ஆனால், அது கடந்த காலங்களில் தமிழ்நாட்டில் அமல் ஆகவில்லை என்றே சொல்லலாம். எனவே, நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் கிடைத்திட வேண்டும் என்ற அரசு கொள்கை பிரகடனம் அமலாக வேண்டும் என்றால், சில நூறு கோடி ரூபாய்களை சிறப்பு திட்ட நிதியிலிருந்து அதற்கென ஒதுக்கி, அரசே விவசாய நிலங்களை வாங்கி, ஏழை விவசாயிகளுக்கு குடும்பத்திற்கு ஒரு ஏக்கர் தருவது என்ற முடிவை அமல்படுத்தினால்தான் சாத்தியம். அதுபோல, முன்பு தலித்



மக்களுக்கு குடிமனை இடங்களை அரசே விலைக்கு வாங்கி பட்டாக்கள் கொடுத்து வந்தது. சமீப காலங்களில் இதுபோன்ற நடைமுறைகள் இல்லையென்று சொல்லும் நிலையே ஏற்பட்டுள்ளது. காரணம், நிலத்தின் கடும் விலை உயர்வு. (குறுக்கீடு)

*பிற்பகல் 12-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வீடுகள் கட்டுவதற்கு நிலங்களை ஆர்ஜிதம் செய்வது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்றபோது, இப்போது இல்லை என்ற நிலைதான் இருக்கிறது என்று குறிப்பிட்டார்கள். இப்போதுகூட எங்களுடைய பகுதியிலே பார்க்கின்றபோது, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலத்தை ஆர்ஜிதம் செய்து பட்டாக்கள் வழங்கிடும் நிகழ்ச்சியும் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆனால், நடைமுறையில் நிலங்களின் விலை அதிகரித்ததால் நீதிமன்றங்களுக்குச் செல்கின்றார்கள். அதன்விளைவாக அந்த நிலங்கள் தலித்துகளுக்கு காலத்தில் எடுக்கப்படாமல் நீதிமன்றங்களில் வழக்கு நிலுவையில் உள்ளது என்பதை நாம் அனைவரும் அறிவோம். இதுபோன்ற பிரச்சினைகளை முடிவுக்கு கொண்டுவர வேண்டும். அரசின் நிதி ஒதுக்கீடும், மார்க்கெட்டில் நிலத்தின் விலை உயர்வுக்கும் மிகப் பெரிய ஏற்றத்தாழ்வு இருப்பதால் அரசின் இந்தத் திட்டத்தை சமீப காலங்களில் அமல்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இந்நிலையை சொல்லிக்கொண்டே இருப்பதனால் மட்டும் எந்தத் தீர்வும் கிடைக்காது. இந்நிலையை அகற்றிட தமிழக அரசு சிறப்பு உட்கூறு திட்ட நிதியிலிருந்து வருடத்திற்கு சுமார் 500 கோடி ரூபாயை ஒதுக்கீடு செய்து, குடிமனைக்கான பட்டா இடங்களை மார்க்கெட் விலையில் வாங்கி மக்களுக்கு குடிமனை நிலம்

வழங்கிட வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். இதற்கு சிறப்பு உட்கூறு திட்ட நிதியை தமிழக அரசு பயன்படுத்திட வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

விடுதிகளில் தங்கிப் படிக்கும் தலித் பழங்குடி மாணவர்களுக்கான உதவித் தொகையை ரூபாய் ஆயிரமாக உயர்த்தி வழங்கிடக் கேட்டுக்கொள்கிறேன், கொடுக்கின்ற தொகை போதாது என்கின்ற காரணத்தினால். கொடுத்திருப்பது நன்று. அதை மேலும் உயத்தித் தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல நிலங்களை விலைக்கு வாங்குவதில் கடினமான சூழ்நிலையிருக்கிறது. விலை நிர்ணயிக்கின்றபோது சில பேர் நீதிமன்றம் போகின்றார்கள். சிவில் நீதிமன்றம் மட்டுமல்ல, உயர் நீதிமன்றம் வரை செல்கின்றனர். அதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் சில ஆலோசனைகளை இந்தத் துறைக்கு வழங்கியிருக்கிறார்கள். Conditional land என்று சொல்லப்படுகின்ற 5 ஏக்கர், 10 ஏக்கர் தரிசு நிலங்கள் அங்கே பல பகுதிகளில் இருக்கின்றன. அவ்வாறு விவசாயம் செய்ய முடியாத சூழ்நிலை இருக்கின்ற இடங்களை உடனடியாகக் கண்டறிந்து, அந்த நிலங்களையெல்லாம் எடுத்து, ஏழையெளிய மக்களுக்குப் பட்டாக்கள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று உத்தரவு வழங்கியிருக்கிறார்கள். ஆகவே, அந்தப் பணிகளை வருவாய்த் துறை செய்து கொண்டிருக்கிறது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே ஆதி திராவிடர் குடியிருப்பிற்கு அருகில் 5 ஏக்கர் நிலத்திற்குமேல் இருந்தால் அதை ஆர்ஜிதம் செய்துகொண்டு ஆதி திராவிட மக்களுக்கு வீடு கொடுப்பதற்கான ஒரு சட்டம் இருக்கிறது. அதைப் பயன்படுத்தி, அதன்மீது ஒரு பேச்சுவார்த்தை நடத்தி அல்லது சுமுகமான நிலைக்குச் சென்றாலே



அவர்களுக்கு அந்த நிலத்தில் வீடு கட்டிக் கொடுப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது நல்ல யோசனை. ஆனால், அந்த மக்கள் ஏற்றுக்கொள்வதில்லை. நிலத்தின் உரிமையாளர்கள் ஏற்றுக்கொள்வதில்லை. அதுதான் பிரச்சினை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதில் விவாதம் கிடையாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துப் பகுதி மக்களின் பொதுத் திட்டங்களை அமல்படுத்துகின்ற காலத்தில் தலித்துகளுக்கான பங்குகளையும் பொதுத் திட்டத்தோடு இணைத்து வழங்கிட வேண்டும். அதே காலத்தில் சிறப்பு உட்கூறு திட்ட நிதிகளை வேலைவாய்ப்பு, குடியிருப்பு, கல்வி மேம்பாடு, விளைநிலம் வழங்கல் போன்ற நடவடிக்கைகளில் தலித்துகளுக்கு கூடுதல் பொருளாதார இலாபம் ஈட்டுகின்ற விதத்தில் பயன்படுத்திட வேண்டும். அதை ஆதி திராவிடர் பழங்குடியின மேம்பாட்டுத் துறையிடமே ஒப்படைத்திட வேண்டுமென மத்திய அரசின் 1979 ஆம் ஆண்டு உட்கூறு திட்டம் கூறுகிறது. ஆனால், அதனுடைய கணிசமான நிதிகள் பொதுத் திட்ட அமலாக்கத்திற்கு அல்லது வேறு பணிகளுக்கு கடந்த காலங்களில் மடை மாற்றப்பட்டது. இது சிறப்பு உட்கூறு திட்டத்தையே சிதைத்துவிடும். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தப் போக்கினைக் களைந்திட உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

தீண்டாமை தமிழ்நாட்டில் பல வடிவங்களில் இன்னும் ** இவற்றைக் கண்டறிந்து களைவதற்காக மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தலைமையில் உருவாக்கப்பட்ட குழுக்கள் உரிய முறையில் செயல்படாத நிலை உள்ளது. வருடா வருடம் மாவட்ட ஆட்சித் தலைவர் தன்னுடைய ஆளுகைக்குட்பட்ட மாவட்டத்தில் தீண்டாமை இல்லையென்று

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

ஓர் அறிக்கையை அரசுக்கு அளிப்பதன் மூலமாக அவருடைய கடமை முடிந்துவிட்டதாகக் கருதும் நிலை உள்ளது. ஆனால், ** தலித்துகளின் சுடுகாடு ஆக்கிரமிப்பு . . .(குறுக்கீடு)

பிற்பகல் 12-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது ஆதி திராவிடருடைய உரிமைகள், தீண்டாமை சில கிராமங்களில் ** என்று சொன்னார். அந்த வார்த்தை ஏதோ பிரைவேட் நிறுவனமோ அல்லது தனியார் நிறுவனமோ ** போன்ற அந்த வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும். (குறுக்கீடு) எந்தக் கிராமத்தில், எந்தப் பகுதியில் இந்த மாதிரியான தீண்டாமை இருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால், அதற்குரிய நடவடிக்கையைக் கண்டிப்பாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெட்டுத் தீர்மானத்தில் நான் அப்பனூத்து என்ற கிராமத்தில் ஆதி திராவிடர் மக்களுக்கு பால் சொசைட்டி பாலூற்ற மறுப்பது குறித்து கொடுத்துள்ளேன் (குறுக்கீடு) வெட்டுத் தீர்மானத்தில் இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடம். Please sit down. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானும் அதைத்தான் சொல்கின்றேன் எந்தப் பகுதியில், எந்தக் கிராமத்தில் இருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு உறுதியாக, கண்டிப்பாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர்அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களது வெட்டுத் தீர்மானத்தில் இருக்கிறது என்றாலே அது உண்மை அல்ல. நீங்கள் உங்கள் சார்பில் கொடுத்திருக்கிறீர்கள். அரசு அதை விசாரித்து அந்த விசாரணையின் அடிப்படையில்தான் நடவடிக்கை எடுக்க முடியும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கொடுத்ததாலே அது உண்மையாகிவிட முடியாது. உங்களுடைய கருத்தைச் சொல்லியிருக்கிறீர்கள். இப்போதுகூட மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொல்லியிருக்கின்ற கருத்து பரிசீலனையில் இருக்கும். அதில் உண்மையிருக்கும் பட்சத்தில் அரசு நடவடிக்கை எடுக்கும். வெட்டுத் தீர்மானங்கள் முழுவதுமே உண்மையாகிவிடாது. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. சவுந்தரராசன் அவர்கள்.

***திரு. அ. சவுந்தரராசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தீண்டாமை ** என்பதற்குப் பதிலாக வேறு வார்த்தைப் போடலாம். ஆனால், தீண்டாமை என்பது தமிழகத்தில் இப்போதும் இருக்கிறது என்கிற பொது வரையறையை நீங்கள் ஒத்துக்கொள்ள மறுத்தால் (குறுக்கீடு) என்னுடைய ஒரே கேள்வி, வன்கொடுமைச் சட்டம் எதற்காக தமிழ்நாட்டில் இருக்கிறது? தீண்டாமை இல்லையென்றால் அந்தச் சட்டமே தேவையில்லையே? ஆகவே, பொதுவாக இருக்கிறது என்பதை ஒத்துக்கொள்வதிலே யாருக்கும் எந்தத் தடங்கலும் இருக்கவேண்டிய அவசியம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முற்காலத்தில் வன்கொடுமை, தீண்டாமை இருந்ததால்தான் அது ஒழிக்கப்படவேண்டும் என்பதற்காக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

வன்கொடுமை தடுப்புச் சட்டம் கொண்டுவரப்பட்டது. அந்தச் சட்டத்தின் அடிப்படையில் எந்த மூலையிலாவது இதுபோன்ற தவறுகள் நடந்தால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு அதைக் கண்டிப்பாக அடக்கி ஒடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர், மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல ஏற்கெனவே நீங்கள் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னபடி இந்த இடத்தில், இந்தக் கிராமத்தில் தீண்டாமை இருக்கிறது என்ற அந்தக் கருத்தைச் சொன்னால், அதுகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். எனவே, பொதுவாகப் பேசாமல் குறிப்பிட்டுச் சொன்னால், நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும். உரையைச் சுருக்கமாக முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய வார்த்தையில் தீண்டாமை ** என்று சொன்னால் அதை நான் திருத்திக்கொள்கிறேன். அது பல இடங்களில் நடைமுறையில் இருக்கிறது என்கிற பொருளில்தான் அதை நான் குறிப்பிட்டேன். இன்றைக்கும் விவரங்கள் சொல்வது என்பது பேரவைத் தலைவர் அனுமதித்தால் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசின்மீது . . . *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நடைமுறையில் இருக்கிறது என்று சொன்னால் போதாது. குறிப்பிட்ட இடங்களில், இந்த இடங்களில், இந்தக் கடைகளில், ** முறை இருக்கிறது. இதை இவர் இந்தக் கடையின் உரிமையாளர், இப்படிப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார் என்று சொன்னால், உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வெட்டுத் தீர்மானம் கொடுத்திருக்கிறேன் என்று சொல்வதைப் போலவே, அவர்

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பொதுவான ஒரு கருத்தைச் சொல்லிக்கொண்டிருக்கிறார். தயவுசெய்து, அதுபோன்ற கருத்துகளைப் பதிய வைக்கக்கூடாது என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாகத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனென்று சொன்னால் பொறுப்பாகச் சொல்லவேண்டும் ஏதோ ஒரு வார்த்தையை பொத்தாம்பொதுவாகச் சொல்லிவிட்டுச் சென்றால், அரசுக்குக் களங்கம் ஏற்படுகின்ற வகையிலே அது வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** தீண்டாமை கூடாது. அது முற்றிலுமாக ஒழிக்கப்பட வேண்டும் என்பது அரசினுடைய ஆணித்தரமான நிலை. இதிலே எந்தவிதமான ஒரு மாறுபட்ட கருத்தும் இல்லை. எனவே, அதற்கு ஒரு உள்நோக்கம் கற்பிக்கின்ற வகையில் பேச்சு நிச்சயமாக அமையக்கூடாது. எனவே, நல்ல எண்ணம் இருந்தால்—உங்கள் மாவட்டத்தைச் சேர்ந்தவர்தான் மாண்புமிகு பேரவை முன்னவர்—நீங்கள் அவரிடத்தில் சொல்லலாம். கடுமையாக நடவடிக்கை எடுப்பதற்கு அரசு தயாராக இருக்கின்றது. எனவே, அதிலே மாறுபட்ட கருத்தாக எதுவும் தயவு செய்து கூறவேண்டாம். எனவே, அந்தத் தீண்டாமை ஒழிப்பு குறித்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன அந்தக் கருத்தின்படி உங்களுடைய கருத்து அவைக் குறிப்பில் இருக்காது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

*பிற்பகல் 12-55*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் எங்கேயாவது நடந்தது என்றால், அதுகுறித்து அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்தால், அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற வகையிலேதான் அவருடைய பேச்சு இருக்க வேண்டுமேயொழிய, குற்றச்சாட்டாக இருக்கக்கூடாது. ஏனென்றால் அந்த நிலை இங்கு தமிழகத்தில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் மிகவும் தெளிவாகச் சொல்லியிருக்கிறார். அப்படி எங்கேயாவது ஒன்றிரண்டு சம்பவங்கள் இருந்தால், அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வாருங்கள். அப்போது, அதுகுறித்த உங்களுடைய பேச்சு அதுமாதிரி நடவடிக்கை எடுப்பது குறித்ததாகத்தான் இருக்க வேண்டுமேயொழிய—இது ஏதோ

குற்றஞ்சாட்டி, ஆதரிக்கின்ற ஒரு நிலைமை நிச்சயமாக இருக்கக்கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குற்றச்சாட்டே இல்லை. பல்லாயிரம் வருடங்களாக இருக்கிறது. நாம் பார்க்காத பிரச்சினையா? இந்தியா முழுவதும் தீண்டாமை என்பது இருக்கிறது. எந்தக் கட்சி ஆட்சியில் தீண்டாமை இல்லை? அப்படி நாம் சொல்லவில்லை. அப்படி எங்கே இருக்கிறது என்று சொல்கிற சில வார்த்தைகளில் வேண்டுமென்றால், அதை நாம் திருத்திக்கொள்ளலாம். மற்றபடி வேறு ஒன்றுமில்லை. இருக்கக்கூடிய, சமூகரீதியாக நிலவிக்கொண்டிருக்கக்கூடிய அந்தத் தீண்டாமை வடிவங்கள் குறித்து இன்னும் கவனமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வளவுதான் எங்களது வேண்டுகோள், வேறு ஒன்றுமே இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிச்சயமாக நடவடிக்கை உண்டு. அதில் மாறுபட்ட கருத்துகள் இல்லை. (குறுக்கீடு) நிச்சயமாக நடவடிக்கை உண்டு. நீங்களும் ஒத்துழைப்புக் கொடுங்கள். இந்த மாதிரி இடங்களிலே இந்த மாதிரி இருக்கிறது என்று சொன்னால், அதுகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் என்ற இயக்கமே தந்தை பெரியாரால் உருவாக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணாவால் பண்படுத்தப்பட்டு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்.-ஆல் கொண்டுவரப்பட்டது. (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சமூக நீதி காத்த வீராங்கனை என்ற பட்டத்தைப் பெற்றவர். (மேசையைத் தட்டும் ஒலி) எதனடிப்படையிலே என்று சொன்னால், தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட சமூக மக்கள் மேம்படுவதற்காகவே ஆட்சி செய்து கொண்டிருப்பவர் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அம்மா அவர்கள் ஆட்சிப் பொறுப்பில் இருக்கின்றபொழுது



நிச்சயமாக அந்தச் சமூகத்திற்குத் தேவையான நேர்மை, நீதி, சம அந்தஸ்து உறுதியாகக் கிடைக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அதனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட வன்கொடுமை தடுப்புச் சட்டத்தை எடுத்துவிட வேண்டுமென்று சொன்னார். இந்தியாவில் சில பகுதிகளில், இந்தச் சட்டம் தேவைப்படுவதால்தான் அரசு இச்சட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறது. வருங்காலத்தில் அமைதியான ஒரு சூழ்நிலை வருகின்றபொழுது, அந்தச் சட்டம் தானாகவே வெளியேற்றப்பட்டுவிடும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மேற்கொண்டு இதுகுறித்து விவாதம் தேவையில்லை. Please sit down. (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னது, நடக்க வேண்டுமென்கிற நோக்கத்தில்தான் நான் சொல்கிறேன். வேறெதுவும் கிடையாது. குற்றமல்ல.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, திரு. ஏ. லாசர் வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. ஏ. லாசர்:** அடுத்தபடியாக இங்கே ஒரு விஷயத்தைக் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்று கருதுகிறேன். ** என்று சொல்லியிருப்பதைத் தங்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஏ. லாசர், திரும்பவும் நான் அதே கருத்தைத்தான் சொல்கிறேன். ** நீங்கள் அது குறித்து குறிப்பிட்டுக் கூறினால், அதை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்கலாம். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** இங்கு சபையில் விவாதத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது. ஆகவே, அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்த ** என்ற சொற்றொடர் அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. ஏ. லாசர், வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள். இதுகுறித்து detailed ஆக discuss செய்யப்பட்டுவிட்டது. Front line-ல் இருக்கின்ற உங்கள் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்களும் பேசியிருக்கிறார்கள். அடுத்த சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. ஏ. லாசர்:** அடுத்த விஷயத்திற்கு வருகிறேன். தமிழக அரசினுடைய கவனத்திற்காக இதைக் கொண்டு வருகிறேன். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் கிருஷ்ணசாமி, உங்களுக்கு என்ன வேண்டும்? *(குறுக்கீடு)* Silence please. மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக இந்த அவையில் தவறாக எந்தக் கருத்தையும் நாங்கள் சொல்வதில்லை. 70,000 கிராமங்களில் அங்கொன்றும் இங்கொன்றுமாக இருக்கக்கூடிய சில சமூகக் குறைபாடுகளைச் சுட்டிக்காட்டுகின்றபொழுது, அதை நீங்கள் நல்ல நோக்கத்தோடு அணுக வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அடுத்தது, caste tag பற்றி சொல்கிறபோது சாதி—தமிழ்நாட்டில் தனித் தொகுதியில் 46 பேர் சட்டமன்ற உறுப்பினர்கள் இருக்கிறோம். தமிழ்நாடு சட்டமன்றத்திலே தொகுதி அடையாள அட்டை கொடுக்கின்றபோது 'SC' என்றே போடுகிறார்கள். நான் அதுகூடாது என்றுகூட சொன்னேன். அதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இதுகுறித்து ஏற்கெனவே என் அறையில் வந்து discuss செய்தீர்கள். நான் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன். Election Commission அறிவுறுத்தலின் அடிப்படையிலேதான் Identity Card கொடுக்க முடியும் என்று சொல்லியிருக்கிறேன் *(குறுக்கீடு)* Election Commission-இடம் நீங்கள் முறையீடு செய்யுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



பிற்பகல் 1-00

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வன்கொடுமை தடுப்புச் சட்டத்திற்குள்ளே ஓடிக்கொண்டிருக்காமல் மக்களுக்குச் சேவை செய்கின்ற முறையில் நீங்கள் வேறு மாற்றத்திற்கு வெளியே வந்தால் நன்றாக இருக்கும். அதையே தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதைத் தவிர்க்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, நீங்கள் இந்த அடையாள அட்டையில் S.C. என்ற குறியீடு எல்லாம் குறிப்பிடுவதாகச் சொன்னீர்கள். இது என் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டதன் அடிப்படையிலே Election Commissioner அவர்களிடம் நாங்கள் கடிதம் எழுதிக் கேட்டோம். 'இந்த மாதிரி குறியீடுகள் வருவதை மாண்புமிகு உறுப்பினர்கள் விரும்பவில்லை. எனவே, பொதுவாக அவர்களுக்கு அடையாள அட்டை கொடுக்க வேண்டும்' என்று சொன்னபோது அவர்கள், 'இது எங்களுடைய purview-ல் வராது, மத்திய அரசுதான்' என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, மத்திய அரசுக்கு முழுமையான அளவிற்கு உங்களுடைய கருத்தை எடுத்து வையுங்கள், நாங்களும் உங்களுடைய கருத்தை தெரிவிக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்கள். *(குறுக்கீடு)* திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள், அதை நீங்கள் எழுதிக் கொடுங்கள். *(குறுக்கீடு)* தயவு செய்து உட்காருங்கள். *(குறுக்கீடு)* திருமதி சுபா, நீங்கள் இந்த மாதிரி ஏதாவது இருந்தால் எழுதிக் கொடுத்துவிடுங்கள். *(குறுக்கீடு)* மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு ஜனநாயக நாட்டில் எல்லோரையும் பேணிக் காக்க வேண்டிய கடமை ஓர் அரசுக்கு இருக்கிறது. அதற்கான சட்டங்களை நாம் வகுத்துக் கொண்டிருக்கிற நேரத்தில், அதற்கு அனைத்து சட்டமன்ற உறுப்பினர்களும் உறுதுணையாக

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இருந்து அந்தப் பணிகளை மேற்கொள்ள வேண்டிய கடமை நம் அத்தனை பேருக்கும் இருக்கிறது. ஆகவே, அதை கொச்சைப்படுத்துகின்ற வகையில், தேவையற்ற முறையில் இதையே திருப்பித் திருப்பிச் சொல்லிக்கொண்டு, இது நடக்கிறது, அது நடக்கிறது என்று சொல்வதைக் காட்டிலும், நீங்கள் எந்த இடத்தில், எப்போது நடைபெற்று இருக்கிறது, அதற்குச் சாட்சிகள் இருக்கிறதா, வழக்கு தொடரப்பட்டிருக்கிறதா, அங்கு இருக்கிற காவல் துறைக்கு நீங்கள் கடிதங்கள் கொடுத்திருக்கிறீர்களா, அல்லது வருவாய்த் துறைக்குக் கொடுத்திருக்கிறீர்களா என்பதைச் சொன்னால் முறையாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள், உங்களுடைய தொகுதியில் அந்த மாதிரி ஏதாவது ஒரு பிரச்சினை நடைபெற்று இருந்தால், அது சம்பந்தமாக நீங்கள் எழுதிக் கொடுத்து விடுங்கள்; அது சம்பந்தமாக நடவடிக்கை எடுக்கப்படும். நீங்கள் சொன்னது அவைக் குறிப்பில் இருக்காது, இப்போது உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. லாசர், வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சமி நிலங்களின் பெரும்பகுதி தலித் அல்லாதவர்களின் ஆக்கிரமிப்பில் தொடர்கிறது என்பது அனைவரும் அறிந்ததே. இந்நிலங்களை மீட்டு தலித் மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என்று கடந்த அரசு பெயரளவில் நியமித்த குழுகூட தற்போது இல்லை. ஆக்கிரமிக்கப்பட்ட நிலங்களின் விவரங்களை தகவல் உரிமைச் சட்டத்தில் கேட்டால்கூட மாவட்ட நிருவாகங்கள் தருவதற்கு ஒத்துழைப்பதில்லை. எனவே, இதுபோன்ற விஷயத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுடைய தலையீட்டின் மூலமாக பஞ்சமி நிலங்களைக் கையகப்படுத்துகிற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்கள், தற்போது மணி 1-02 ஆகிவிட்டது. மாண்புமிகு அமைச்சரின் பதிலுரை இருக்கிறது. இன்னும் நான்கு, ஐந்து பேர்கள் பேச வேண்டியிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.



(குறுக்கீடு) உங்கள் கட்சி உறுப்பினர்கள்தான் 10 பேர் வரை பேசிக்கொண்டே இருக்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. லாசர் அவர்கள், பழங்குடியினர் பற்றி மட்டும் சொல்லிவிட்டு உரையை முடியுங்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி, சேலம், நாமக்கல் மாவட்டங்களில் உள்ள பன்னியாண்டி என்ற தலித் இனத்தவர்களுக்கு S.C. என்ற சான்றிதழ் வழங்க அரசின் துறை சார்ந்த துணைச் செயலாளர் அவர்களே உத்தரவிட்டும், தாசில்தார் சாதிச் சான்றிதழ் வழங்க மறுக்கிறார். குறவன் என்ற ஜாதியை, குறவர் என்று போட்டால் சாதிச் சான்றிதழ் தர முடியாது என்று அதிகாரிகள் குறிப்பிடுகிறார்கள். எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இவற்றைக் கண்டறிந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறவர் என்று இருக்கிறது, குறவாஸ் என்று இருக்கிறது, பல்வகைப்படுத்தப்பட்டு இருக்கிறது. நீங்கள் தெரிந்தால் அதைச் சொல்லுங்கள். விதிமுறைகளுக்கு உட்பட்டு இருக்கிறது, உச்ச நீதிமன்றத்தில் வழக்கும் இருக்கிறது. குறிப்பிட்ட நபருக்கு விதிமுறைகளுக்கு உட்பட்டும் எங்கே வழங்கவில்லை என்று சொன்னால் முறையாக நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை நிதி ஒதுக்கீட்டின்பேரில் எனது கருத்துகளைப் பதிவு செய்வதற்கான ஒரு வாய்ப்பை வழங்கி இருக்கிற தங்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

60 ஆண்டுக் கால சட்டமன்ற வரலாற்றில் இந்த நிதி ஒதுக்கீட்டின் பேரிலே மிக அதிகமான முறையில் பேசியவன் என்கிற ஒரு தனிச் சிறப்பை எனக்கு வழங்குவதற்கு துணை

நின்று இருக்கிற போற்றுதலுக்குரிய மாண்புமிகு தமிழக முதலமைச்சர், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 1-05*

*16*-வது முறையாக இந்த நிதி ஒதுக்கீட்டு விவாதத்திலே பங்கேற்கிற வாய்ப்பை எனது அரசியல் வளர்ச்சியிலும், எனது தனிப்பட்ட வளர்ச்சியிலும், அனைத்து வளர்ச்சியிலும் ஒரு மூத்த சகோதரியாய், ஒரு தாயாய், பரிந்த உணர்வோடு என்னை, என்னுடைய வளர்ச்சியிலே அக்கறை கொண்டு ஆளாக்கி இருக்கிற முதலமைச்சர் அவர்களுக்கு தனிப்பட்ட வகையிலும் என்னுடைய நன்றியை இந்த மாமன்றத்திலே பதிவு செய்வது எனது கடமையென்றே கருதுகிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இந்திய மக்கள் தொகையிலே, *24* சதவிகிதம் பேர் இன்றைக்கு *ஆதி திராவிட மக்களாக, நலிந்த மக்களாக, அடித்தளத்து மக்களாக இருக்கிறார்கள். தமிழக மக்கள் தொகையிலே இன்றைய மக்கள் தொகை கணக்கீட்டின்படி *20* சதவிகிதம் பேர், *ஆதி திராவிட மக்களாய் இருக்கிறார்கள் என்பது ஒரு கணக்கீடு என்றாலும் அது முடிந்த முடிவல்ல என்கிற வகையிலே ஏறக்குறைய *21* சதவிகிதத்திற்கு மேலாகவே அடித்தளத்து மக்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள் என்பதுதான் ஒரு பொதுவான கணக்கீடாக இருக்கிறது. தமிழகத்தைப் பொறுத்தவரையிலே இந்திய மாநிலங்களிலே *ஆதி திராவிட நலிந்த மக்கள் வசிக்கிற மாநிலங்களிலே ஐந்தாவது மாநிலமாக தமிழ்நாடு இருக்கிறது. தமிழ்நாட்டிலே ஐந்திலே ஒருவன் தாழ்த்தப்பட்டவனாக, நலிந்தவனாக, * ஆதி திராவிடனாக, புறக்கணிக்கப்பட்டவனாக இருந்து கொண்டிருக்கிற அப்படிப்பட்ட ஒரு நிலைமைதான் வரலாறுப் பூர்வமாக இருந்து கொண்டிருக்கிற ஒரு உண்மையாக இருக்கிறது. ஐந்திலே ஒருவன் தமிழகத்திலே *ஆதி திராவிடன். பொதுவாகவே சமூக வாழ்நிலையை எடுத்துக்கொண்டால் நிலம், தொழில், அமைச்சுப் பணி என்று மூன்றாகப் பிரிக்கலாம். நிலத்தை பயன்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள், தொழிலைப் பயன்படுத்தி வாழ்ந்து கொண்டிருக்கின்றவர்கள்,

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



அமைச்சுப் பணி என்கிற நிர்வாகப் பணியை, அரசுப் பணியை அதைத் தொடர்ந்து நம்பி கொண்டிருக்கின்றவர்கள்: இப்படித்தான் பிரிக்கலாம். நிலத்தைப் பொறுத்தவரையிலே இன்னமும் தமிழகத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் உரையாற்றுகின்றபொழுது ஐந்தில் ஒருவர் தமிழகத்தில் ** என்கிற பொருள்படப் பேசினார்கள். ஐந்தில் ஒருவர் ஆதி திராவிடப் பெருமக்கள் என்று பேசினால் அது சரியான பேச்சாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள் சொன்னதுபோல மாண்புமிகு உறுப்பினர் செ.கு. தமிழரசன் அவர்களுடைய கருத்து மாற்றப்படுகிறது.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** ** என்று சொன்னதை, மாற்றிக் கொள்வதிலே எனக்கு ஒன்றும் மாறுபட்ட கருத்து இல்லை. Depressed என்று சொல்வதற்கு ** அப்படியென்றுகூட தமிழிலே பொருள் இருக்கிறது. D.C. நிலம் என்று சொன்னாலே Depressed Community நிலம் என்றுதான் பொருள். ஆகவே, அதை மாற்றிக்கொள்வதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆக, ஐந்திலே ஒரு பங்கு ஆதி திராவிட மக்களாக இருக்கிறார்கள். நிலம், தொழில், அமைச்சுப் பணி என்றால் நிலத்தைப் பொறுத்தவரையிலே தமிழக மொத்த நிலம் அதிலே *7* சதவிகித நிலம் தான் **, தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, ஆதி திராவிட மக்களுக்கு சொந்தமான நிலமாக இருக்கிறது. தொழில் என்று சொன்னால் பெருந்தொழிலோ அல்லது வேறு தொழிலோ எந்த வகையிலும் இன்னமும் *4* சதவிகிதத்தைகூட—ஒரு Industry என்று வருகிறபோது அந்தத் தொழிலிலே *4* சதவிகிதம்கூட இந்த மக்கள் இன்னமும் முழுமையாக தொழிலதிபர்களாகவோ, தொழிற்சாலை வைத்திருக்கிறவர்களாகவோ, பெருந்தொழிலை, பெரும் மூலதனத்தை வைத்து நடத்துகிறவர்களாகவோ இல்லை. அரசுப் பணிகளைப் பொறுத்தவரையிலே பாபா சாகிப் அம்பேத்கர்

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

அவர்கள் ஒரு இட ஒதுக்கீட்டு முறையை 1932-லே பூனா ஒப்பந்தத்தின் விளைவாக சுதந்திரம் வருவதற்கு 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே—1947-லேதான் நாம் சுதந்திரம் பெற்றோம்—1932-லேயே பாபா சாகிப் அம்பேத்கரின் கடுமையான உழைப்பினால், அர்ப்பணிப்பினால் பூனா ஒப்பந்தம் ஏற்பட்ட பின்னாலே அதன் விளைவாக வந்த சமூக இட ஒதுக்கீட்டு வழிமுறையால்—ஏறக்குறைய தமிழகத்தைப் பொறுத்தவரையிலே ஒரு 80 ஆண்டுக் கால இட ஒதுக்கீட்டு முறையால் இந்த 19 சதவிகித இட ஒதுக்கீடு கிடைத்திருக்கிறது. 18 சதவிகிதம் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு, 1 சதவிகிதம் மலைவாழ் மக்களுக்கு, என 19 சதவிகித இட ஒதுக்கீடு இருக்கிறது. இந்த 19 சதவிகித இட ஒதுக்கீட்டு வழியாக, தமிழகத்திலே முழுமையாக எல்லா துறைகளிலும் இந்த முழுமையான 19 சதவிகிதம் கிடைத்திருக்கிறதா என்றால் அதிலேயும்கூட நாம் முழுமையாக அந்த 19 சதவிகித இட ஒதுக்கீட்டைப் பெறமுடியவில்லை என்பதுதான் நம்முடைய அரசாங்கத்திலேயே தந்திருக்கிற புள்ளிவிவரக் கணக்கு. ஏனென்றால் கூட்டுறவுத் துறையிலே தரவே முடியவில்லை. கூட்டுறவுத் துறையிலே எவ்வளவு முயற்சித்தாலும் அது ஒரு தனித்தனி யூனிட்டாக இருப்பதனாலே கூட்டுறவுத் துறையிலே தரவே முடியவில்லை. மற்ற துறைகளுக்கெல்லாம் கட்டுப்பட்ட துறையாக இருப்பது அது. எனவே, அது தனித்தனி யூனிட்டாகவே இருக்கிறது. ஆகவே தரவே முடியவில்லை. 19 சதவிகித இட ஒதுக்கீடு என்பது ஏதோ தமிழகத்திலே மட்டுமல்ல, மற்ற மாநிலங்களிலேயானாலும், மத்திய அரசிலேயானாலும், மத்திய அரசினுடைய 22 சதவிகிதத்திலேயானாலும், இன்னமும் முழுமையாக இதிலே ஒரு நிறைந்த ஒரு புள்ளிவிவரத்தை எடுக்க முடியவே இல்லை. இதுதான் தமிழகத்தின் 80 ஆண்டுக் கால வரலாற்று உண்மை. இந்த 80 ஆண்டுக் கால வரலாற்றிலே முடியவில்லை.

பிற்பகல் 1-10

ஆக, தொழில் துறையிலும் முழுமை இல்லை, நிலத்தைப் பொறுத்தவரையில் 7 சதவிகிதத்திற்கும் மேலே போகவில்லை. அரசு பணிகளிலும் நாம் திட்டமிட்டபடி அந்த 19 சதவிகிதத்தை எட்டிட முடியவில்லை. அப்படிப்பட்ட நிலையிலே, மிகப் பெரும்பான்மையான சமுதாயம், விவசாயக் கூலிகளானாலும் அதிலே 80 சதவிகிதம், இழிந்த தொழில் எதுவாக இருந்தாலும், தூய்மைத் தொழில் எதுவாக இருந்தாலும், துப்புரவிலிருந்து



கடைசியில் மனிதன் சுடுகாட்டிற்குப் போகிறவரையில் உள்ள அனைத்துத் தூய்மைத் தொழிலிலும், சலவை செய்கிற தொழிலாகட்டும், முடி வெட்டுகிற தொழிலாகட்டும், எந்தத் தொழிலிலும் 80 சதவிகிதம் அந்தத் தொழிலுக்குச் சொந்தக்காரர்கள் இந்த மக்கள்தான். ஆகவே, விவசாயக் கூலிகளானாலும், தூய்மைத் தொழிலானாலும், வறுமைக் கோட்டிற்குக் கீழே இருக்கின்ற below the poverty line கணக்கிலேயானாலும் 75 சதவிகிதம் உள்ள மக்கள் இந்தச் சமூக மக்கள்தான்.

அதற்கு மேலே, வாக்களிப்பதிலே 80 சதவிகிதமும், அரசியலிலே பங்கேற்கின்ற வகையில் 75 சதவிகிதமும் உள்ள சமூகம் இந்தச் சமூகம். இந்த அவையிலேகூட 234 சட்டப் பேரவை உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். இவர்களிலே 48 சட்டப் பேரவை உறுப்பினர்கள் இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். 44 பேர் தாழ்த்தப்பட்டவர்கள், 2 பேர் மலைவாழ் மக்கள், 2 சகோதரர்கள் பொதுத் தொகுதியிலே நின்று வெற்றி பெற்றவர்கள், இந்தச் சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பொதுத் தொகுதியிலே நிறுத்தப்பட்டு இந்தச் சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இங்கு ஐந்திற்கு ஒன்று என்ற அளவிற்கும் மேலாகவே உள்ளது. ஆகவே, இப்படிப்பட்ட மக்கள் சமூகத்தினுடைய பிரச்சினை என்பது கவலையோடும், ஒரு மனிதநேய அணுகுமுறையோடும், அப்படிப்பட்ட ஒரு நீண்ட தொலைநோக்கோடும், ஒரு உணர்வோடும் விவாதிக்கப்பட வேண்டிய ஒரு நுண்ணிய பிரச்சினையாக இருக்கிறது. ஏனென்றால் இந்த மக்களுடைய பிரச்சினை என்பது ஏதோ இன்றைக்கு, நேற்றைக்கு ஏற்பட்ட பிரச்சினை அல்ல. இதற்கு எந்த அரசையும் நாம் குற்றம் சாட்ட முடியாது. அதிலே எந்த அரசு இவர்களை முன்னேற்றுவதிலே, இவர்களை வளர்ப்பதிலே, முனைப்புக் காட்டுவதிலே, இவர்களை மனிதநேயத்தோடும், சகோதரத்தன்மையோடும், அரவணைத்து இவர்களுடைய பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதிலே அக்கறை காட்டியிருக்கிறது என்று சொன்னால், மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அரசானாலும், புரட்சித் தலைவி அம்மா அரசானாலும் அதிலே மிகப் பெரிய அக்கறையோடு, அர்ப்பணிப்போடு பணியாற்றியிருக்கின்றன. (மேசையைத் தட்டும் ஒலி) அப்படித் திட்டங்களை நிறைவேற்றியிருக்கின்றன. இதைத்தான் நாம் மகிழ்ச்சியோடு பாராட்ட வேண்டும்.

எனக்குத் தெரிந்து, சாதியத்தைப் பற்றி ஆராய்ந்த மாமேதைகளில் ஒருவரான டாக்டர் அம்பேத்கர் அவர்கள் ஒரு முறை சொன்னார். "சாதியம் எதற்குத்தான் பயன்பட்டிருக்கின்றது என்று யோசித்து யோசித்துப் பார்த்தேன்; எந்த தனி மனிதனும் என்னுடைய சொந்த சாதிக்காரன் உழவு செய்த நிலத்திலிருந்து வருகிறதைத்தான் சாப்பிடுவேன் என்று சொல்வதில்லை; எந்த சாதிக்காரனும் என் சொந்த சாதிக்காரன் தைத்துக் கொடுத்த சட்டையைத்தான் போட்டுக்கொள்வேன் என்று சொல்வதில்லை; எந்த சாதிக்காரனும் என் சொந்த சாதிக்காரன் தைத்த செருப்பைத்தான் அணிவேன் என்று சொல்வதில்லை; எதற்காகவும் இந்த சாதி பயன்படவில்லை; சடங்குகளுக்கோ, சம்பிரதாயங்களுக்கோ, திருமணங்களுக்கோதான் பயன்பட்டிருக்கிறது. ஆகவே, அதை தகர்த்தெறிகிற வகையிலே, இந்த அரசு சடங்குகளையும், சம்பிரதாயங்களையும் உடைத்தெறிகிற வகையிலே, கலப்புத் திருமணங்களை ஊக்குவிக்கின்ற வகையிலே, எந்த அரசு முன்னுக்கு வருகிறதோ, அந்த அரசு அதிலே வெற்றிபெறும்" என்று சொன்னார். "Annihilation of caste-சாதியை ஒழிக்க வழி" என்ற டாக்டர் அம்பேத்கரின் புத்தகத்தை முதலிலே தமிழிலே மொழிபெயர்த்திருப்பவர் தந்தை பெரியார் அவர்கள். இந்தப் புத்தகத்திலே இதை தெளிவுபடுத்தினார்கள். ஆகவே, அப்படிப்பட்ட ஒரு அணுகுமுறையை ஓராண்டுக்காலமாக இந்த அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு செய்து வருகிறது.

மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த ஓராண்டுக்காலத்தில் சாதிய மோதல்கள் எங்காவது தலைதூக்கியிருக்கின்ற சிந்தனையையாவது நாம் பார்க்க முடிகிறதா? (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 10 ஆண்டுக் காலமாக, 1991-ல் ஆட்சியில் இருந்தார், 2001-ல் ஆட்சியில் இருந்தார், இப்போதும் ஆட்சிக்கு வந்திருக்கின்றார். சாதிய மோதல்களைத் தகர்ப்பதிலும், அதைக் கட்டுப்படுத்துவதிலும், பாரபட்சம் இல்லாமல் நடவடிக்கை எடுப்பதிலும் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) சாதிகளுக்கெல்லாம் அப்பாற்பட்டவராக நடவடிக்கை எடுத்திருக்கின்றார் என்பதற்கு நான் ஏராளமான சான்றுகளை இங்கே நான் சொல்ல முடியும்.



பிற்பகல் 1-15

கடந்த ஆட்சியிலே அமைச்சர் ஒருவர் பெயரிலேயே ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. நான் இங்கே அதைப் பதிவு செய்வதிலே ஒன்றும் தவறில்லை. பெயரைச் சொல்வதிலேயும் ஒன்றும் தவறில்லை. சுற்றுலாத் துறை அமைச்சராக இருந்த திரு. சுரேஷ் ராஜன் என்கின்ற அமைச்சர் பெயரிலேயே ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டது. அந்த வழக்கைத் தொடுத்தவர் சாமானியர் அல்ல, பாமரர் அல்ல, படிப்பறிவில்லாதவர் அல்ல, மாவட்ட வருவாய் அலுவலராக, டி.ஆர்.ஓ. ஆக இருந்தவர். (குறுக்கீடு) அதற்குப் பிறகு அவர் மாவட்ட வருவாய் அலுவலராக வந்துவிட்டார். அவரது பெயர் திரு. ஜனார்த்தனன். அதற்குப் பிறகுதான் அவர் ஓய்வு பெற்றார். மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட காவல் துறை அலுவலர் ஆகியோரால் அந்தக் குற்றம் பதிவு செய்யப்பட்டும் ஒரு நடவடிக்கையும் இல்லையே!

மத்திய உள் துறை அமைச்சர் அவர்கள் கடந்த முறை நடந்த ஆய்வுக் கூட்டத்தில்—தமிழகத்தில் மட்டுமல்ல, இந்தியாவில் இருக்கின்ற எல்லா மாநிலங்களிலும் இவ்வித குற்றச்சாட்டுகள் இருக்கின்றன. இவ்வித குற்றச்சாட்டுகளைப் பற்றி, இங்கே அங்கொன்றும், இங்கொன்றுமாக சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்றபோது குறிப்பிட்ட அந்தக் குற்றச்சாட்டுகள், இந்த மாநிலத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் இருக்கின்றன. உத்தரப் பிரதேச மாநிலத்திலே 5 ஆண்டுக் காலம் இதற்காகத் தன்னுடைய வாழ்க்கையையே அர்ப்பணித்துக் கொண்ட, ஒரு கொள்கையாகவே வைத்துப் போராடிய சகோதரி மாயாவதி முதலமைச்சராக இருந்தபோதுகூட இந்தக் குற்றச்சாட்டுகள் இருக்கத்தான் செய்தன. இதற்கு ஆட்சி மட்டுமே பொறுப்பல்ல, சமூகமும் பொறுப்பு. இந்தச் சமூகத்திலே இதைக் களைவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

மத்திய உள் துறை அமைச்சர் அவர்கள் சொல்கின்றபோது— இந்தியாவிலே பல மாநிலங்களிலே 2 சதவீத குற்றங்களுக்குக்கூட தண்டனை கிடைக்கவில்லை, ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரையில் அதற்கு மேலாக 6 முதல் 7 சதவீதத்தை எட்டிப் பிடிக்கின்ற அளவிற்கு குற்றங்களுக்கான தண்டனைகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதுதானே மத்திய அமைச்சரகமே ஆய்வில் சொல்லியிருக்கின்ற புள்ளிவிவரம்? பிற மாநிலங்களை ஒப்பிடுகின்றபோது, அதுவும் குறிப்பாக, மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இனக் கலவரம் நடந்த

பகுதியில் நேரடியாகப் போய் ஆய்வு செய்தபோது, முதல் ஒரு பகுதியாக எங்கே போனார் என்றால் *ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிக்குப் போய்விட்டுத்தான் அடுத்த பகுதிக்குப் போனார். அப்படிப்பட்ட ஒரு பரிவு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களிடத்தில் இருந்திருக்கிறது என்பதை கடந்தகால நிகழ்வுகள் மிகத் தெளிவாகப் புலப்படுத்தியிருக்கின்றன.

பாபா சாகிப் அம்பேத்கர் அவர்கள் ஒருமுறை சொன்னார், “இந்தியாவிலே எனக்குப் பெண்கள் பெயரிலே மிகப் பெரிய மரியாதை இருக்கிறது. ஏனென்றால், ஒரு சாதாரண ஆய்வின்படி 90 சதவீத பெண்கள் தங்கள் பெயருக்குப் பின்னால் சாதிகளைப் போட்டுக் கொள்வதில்லை. அப்போதும் சரி, இப்போதும் சரி, நான் அதைப் பார்த்திருக்கிறேன். ஆகவே, எனக்குப் பெண்கள் பெயரில் மிகுந்த மரியாதை இருக்கிறது” என்று ஒரு பெண்கள் மாநாட்டில் பேசுகின்றபோது பேசினார். சாதிகளுக்கு அப்பாற்பட்ட தலைவியான நமது முதலமைச்சர் அவர்கள்தான் பாபா சாகிப் அம்பேத்கர் பெயரிலே மணி மண்டபம் கொண்டுவந்தார். அவர்கள்தான் தாத்தா ரெட்டைமலை சீனிவாசனுக்கு நினைவு மண்டபத்தைக் கொண்டுவந்தார். அவர்கள்தான் மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணர் அவர்களுக்கு நினைவு மண்டபத்தைக் கொண்டுவந்தார். அவர்கள்தான் பாபா சாகிப் அம்பேத்கர் அவர்களுக்கு சென்னையிலே ஒரு திருவுருவச் சிலையை வைத்தார். அவர்கள்தான் மாபெரும் தந்தை சிவராஜ் அவர்களுக்கு சென்னையிலே ஒரு திருவுருவச் சிலையை வைத்தார். இப்படிப் பல்வேறு நடவடிக்கைகளிலே. . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை சீக்கிரம் முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேறு எந்தப் பகுத்தறிவுவாதிகள்—நாங்கள் காஞ்சியிலே படித்தவர்கள், ஈரோட்டிலே படித்தவர்கள் என்றெல்லாம் பேசிக் கொள்பவர்கள்—செய்யாத சாதனைகளைத் தமிழகத்திலே செய்திருக்கின்றவர் முதலமைச்சர் அவர்கள். ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாக சில யோசனைகளை மட்டும் நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன். (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக்கிணங்க மாற்றப்பெற்றது.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நிமிடத்தில் யோசனை சொல்லிவிடுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொல்லிவிடுகிறேன். ஆதி திராவிடர் நலத் துறை என்ற பெயர் 1987-1988 ஆம் ஆண்டிலே மாண்புமிகு புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் காலத்தில், சமூக நலத் துறையிலிருந்து ஆதி திராவிடர் நலத் துறையைப் பிரிக்க வேண்டுமென்ற கோரிக்கையை சட்டமன்றத்திலே எழுப்பி, முதலமைச்சரிடம் தனியாகவும் பேசி, அதற்குப் பின்னர், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் முதலமைச்சராக இருந்தபோது சமூக நலத் துறையிலிருந்து பிரிக்கப்பட்ட துறைக்கு என்ன பெயர் வைக்கலாம் என்று யோசித்தபோது, அவர் கைப்பட எழுதிய பெயர்தான் ஆதி திராவிடர் நலத் துறை என்பது. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள்தான் இந்தப் பெயரை இத்துறைக்கு வைத்தார்கள். இன்றும்கூட இக்குறிப்பு அந்தக் குறிப்பேடுகளிலே இருக்கும். அந்தத் துறையைச் சேர்ந்தவர்களுக்கு அது தெரியும். ஆக, இந்தத் துறையின் பெயரை மாற்ற வேண்டும் என்று விரும்புவது வரலாற்றுக்கே நாம் செய்கின்ற இழுக்கு. திராவிடம் என்பது ஒரு தனி சாதியே அல்ல. (குறுக்கீடு)

பிற்பகல் 1-20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** தமிழ்நாட்டில், அதாவது இந்தியா முழுமைக்கும் Scheduled Castes என்று ஒரு பட்டியல் அண்ணல் அம்பேத்கர் அவர்களால் தயாரிக்கப்பட்டது. Scheduled Castes என்பதற்கு நேரடியாக மொழியாக்கம் மட்டும்தான் செய்ய வேண்டுமே தவிர, அவரவர்களுடைய இஷ்டம்போல் பெயர் வைக்க இயலாது. ஏனென்று சொன்னால், இங்கேயிருந்து டெல்லிக்கு, அதாவது, இந்தியாவிலுள்ள மாநிலங்களில் இருக்கக்கூடிய Scheduled Castes-உடைய செயலாளர்களிடத்திலே போனால், நீங்கள் எந்தத் துறை என்று கேட்கும்போது, ஆதி திராவிடர் என்று சொன்னால், ‘‘What is Adi Dravida?’’ என்று கேள்வி கேட்கிறார்கள். They have to represent as Scheduled Caste. நான் கேட்கிறேன், ஆதி திராவிடர் என்பது 76 சாதிகளில் ஒன்று. தேவேந்திரகுல வேளாளர்கள், பள்ளர்கள், குடும்பர்கள்,

அருந்ததியர்கள், மாதாரிகள் என்று பல்வேறு பெயர்களில் இருக்கிறார்கள். B.C.-க்கு, M.B.C.-க்கு எந்த ஒரு சாதியினுடைய பெயரையும் இடவேயில்லை. M.B.C.-க்கு Most Backward Class என்றுதான் அழைக்கிறோம். B.C.-க்கு Backward Class என்றுதான் அழைக்கிறோம். இதில் மட்டும் ஆதி திராவிடரை எப்படி அழைப்பது? ஆதி திராவிடர் என்ற பெயரில் வேறு ஜாதி இல்லையென்று சொன்னால், பொதுவாகச் சொல்லலாம். ஒரு ஜாதியினுடைய பெயரை 76 பேருக்குச் சூட்டுகிறபோது அதை எப்படி விஞ்ஞான ரீதியாக ஏற்றுக்கொள்வார்கள்? அதை எந்தக் காரணத்தைக் கொண்டும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஒருவேளை அந்தப் பெயரை வைத்தால் அது திணிப்புக்குச் சமமாகிவிடும். அதனால்தான் நாங்கள் என்ன சொல்கிறோமென்றால், எல்லோரும் ஒன்றாக இருக்க வேண்டுமென்ற அடிப்படையில் பொதுவான பெயர் சூட்டவேண்டி ஏற்கெனவே நான் இதே மன்றத்தில் பேசியிருக்கிறேன். 1996 ஆம் ஆண்டு இந்தச் சட்டமன்றத்திலே பேசி, அன்றைய அமைச்சர் மாண்புமிகு வீரபாண்டி ஆறுமுகம் அவர்கள், பட்டியல் துறை என்றுதான் அழைக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். இப்பொழுது நான் கேட்பது, Scheduled Caste-க்குத் தமிழாக்கம் என்ன என்பதுதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'பூனைக்குட்டி வெளியே வந்துவிட்டது' என்று சொல்வார்கள். ஆகவே, இந்த விவாதத்திற்கு நான் பதில் சொல்லியாக வேண்டும். 1921-லே இந்த மாமன்றத்திலே அந்தப் பெயருக்கான அங்கீகாரம் சட்டபூர்வம் ஆக்கப்பட்டிருக்கிறது. 1921-லே இந்த மாமன்றத்திலே அந்தப் பெயருக்காக சட்ட அங்கீகாரம் செய்யப்பட்டிருக்கிறது. 77 சாதிகளிலே அது ஒரு சாதி என்று சொல்வது தவறு. 76 சாதிக்கும் மேலாக ஒரு 77-வது சாதி என்று ஒரு பொதுப் பெயர். 76 சாதி தான். அது ஏற்கெனவே இருந்த சைமன் கமிஷனிலே, தேர்ந்தெடுக்கப்பட்ட சைமன் கமிஷன் இந்தியாவுக்கு வந்தபோது, தமிழகத்திலே அடையாளம் கொடுக்கப்பட்ட சாதிகளிலே . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தமிழரசன், வேறு சப்ஜெக்ட்டுக்குப் போங்கள்.



**முனைவர் செ.கு. தமிழரசன்:** விவாதம் என்று வந்துவிட்டதனாலே நான் பதில் சொல்லியாக வேண்டும். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் ஏதோ தன்னிச்சையாகவோ, அவராகவோ எடுத்த முடிவல்ல. 1921-லேயே இந்த மாமன்றத்திலே அங்கீகாரம் செய்யப்பட்ட பெயர். இந்த விவாதத்திலே நான் அந்த வார்த்தைகளைப் பயன்படுத்துவதிலே தவறில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அவர் ஒரு கருத்தைச் சொன்னார், நீங்கள் 1921-ஐச் சொல்லிவிட்டீர்கள். அதுவும் பதிவு செய்யப்படும். Please sit down. அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) திரு. தமிழரசன், இன்னும் ஒரு நிமிடத்தில் உங்கள் உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) இன்னும் மூன்று மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டும்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** நான் என்னுடைய உரையை முடித்துவிடுகிறேன். என்னுடைய கோரிக்கைகளை மட்டும் இங்கே நான் சொல்லி முடித்துவிட விரும்புகிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையிலே ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகள் இருக்கின்றன. ஆயிரத்திற்கும் மேற்பட்ட அந்த பள்ளிகளிலே ஏறக்குறைய ஒன்றரை இலட்சம் மாணவ, மாணவிகள் படிக்கிறார்கள். இவ்வளவு பேர் படிக்கிற அந்தத் துறைக்கு ஒரு தனி Directorate, ஒரு தனி இயக்குநரகம் வேண்டும். அது தனியாக ஏன் இப்போது ஒரு I.A.S. அதிகாரியினுடைய கட்டுப்பாட்டிலேயே இருக்கிறது? ஆகவே, ஒரு தனி Directorate, ஒரு தனி இயக்குநரகம், அந்த ஆதி திராவிடர் நலப் பள்ளிகளுடைய கல்வித் துறை இயக்குநரகம் என்று ஒரு இயக்குநரகத்தை உருவாக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள். (குறுக்கீடு) உங்கள் உரையை முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** அதேபோல், ஏறக்குறைய பல நூறு கோடி ரூபாய் புழங்குகிற தாட்கோவிற்கு ஒரு தனி வங்கி உருவாக்கிட வேண்டும். அதைப்போலவே, இந்தியாவிலே இருக்கிற எல்லா தேசிய ஆணையங்களும் தமிழகத்திலே இருக்கின்றன. கடந்த முறை இந்தச் சட்டமன்றப் பேரவையிலே குழந்தைகள் ஆணையம் உருவாக்க வேண்டுமென்று அம்மா அவர்களிடம்

நான் ஒரு கோரிக்கை வைத்தேன். இப்போது ஒரு 20 நாட்களுக்கு முன்னால் அந்த ஆணையமும் வந்துவிட்டது. ஆகவே, எல்லா தேசிய ஆணையமும் இருப்பதுபோல, தாழ்த்தப்பட்ட மக்களுக்கான ஒரு நல ஆணையத்தை, மாநில ஆணையத்தை உருவாக்க வேண்டும். அதைப்போலவே, பாபா சாகிப் அம்பேத்கருடைய . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், உட்காருங்கள். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. மாதேஸ்வரன் அவர்கள்.

*__திரு. சு. மாதேஸ்வரன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். அன்னை சந்தியா தாய் ஈன்றெடுத்த சரித்திரம் போற்றும் சாதனைத் தலைவியே! அறம் தவறா பாரதத் தாய் ஈன்றெடுத்த தன்னலமில்லா தலைமகளாம் நம் தமிழ் அன்னைக்குத் தொண்டு செய்யும் எங்கள் காவியத் தலைவியே! ‘முயற்சி செய்வது நமது வேலை, முடித்து வைப்பது மக்களின் கடமை’ என ஊக்கத்தோடு ஆக்கப் பணிகளில் அயராது பாடுபடும் அன்புள்ளம் கொண்ட புரட்சித் தலைவி அம்மா! 7 கோடி தமிழர்களின் நிகழ்காலமே; 120 கோடி இந்தியர்களின் எதிர்காலமே; 1½ கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் இதய தெய்வமே; அம்மா! உங்களுக்கு எல்லாம் தெரியும், எங்களுக்கு உங்களை மட்டும்தான் தெரியும். உங்கள் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன் தாயே!

பிற்பகல் 1-25

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான ஆதி திராவிடர் நலத் துறை மீதான மானியக் கோரிக்கையின்மீது என்னுடைய கருத்துகளைச் சொல்லி, அதை வரவேற்பதற்கான சில காரணங்களையும் சொல்ல முற்படுகிறேன்.

நமது மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள், “மெய் வருத்தம் பாராது, கண் துஞ்சாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, செவ்வி அருமையும் பாராது” நன்றாகப் படைத்திருக்கின்ற பண்பான அறிக்கையாகும். இதை எதிர்க்கட்சி நண்பர்கள்,

> ‘கண்ணிற்கு அணிகலம் கண்ணோட்டம் அஃதின்றேல்
> புண்ணென்று உணரப் படும்’



என்ற அளவில் இதைக் கட்சிக் கண்ணோட்டம் இல்லாமல் பார்த்தால் நிச்சயமாக ஏழை சமுதாயம் மறுமலர்ச்சியான சமுதாயத்தை அடையும். “Vision 2023” என்ற கனவுத் திட்டம் புரட்சித் திட்டமாக அமையும் என்பது திண்ணம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012-2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே, ஆதி திராவிட மக்களின் நலன் கருதி, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், ஆதி திராவிட, பழங்குடியினர் மக்களின்மீது வைத்துள்ள அன்பின்பாலும், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின்மீது அவர்கள் வைத்திருக்கின்ற அசைக்க முடியாத நம்பிக்கையின்பாலும் இதுவரை வரலாற்றில் இல்லாத அளவிற்கு ரூ.6,108.60 கோடி நிதியொதுக்கி இம்மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திய, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை எனது பணிவான நன்றியை தங்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன் தாயே!

புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்ற விதி 110-ன்கீழ் அறிக்கை அளிக்கிறார்கள் என்றாலே தமிழக மக்களுக்கு நல்லதொரு திட்டம் என்றுதான் இந்த மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் அறிவார்கள். இதை இந்த நாடே அறியும். அதைப்போலத்தான், மாண்புமிகு அம்மா அவர்களுடைய சீரிய சிந்தனையில் உருவான 2012-2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை புத்தகத்தில், பக்கம் 68-ல், பத்தி எண் 110 என்பது ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனைப் பற்றிய அறிவிப்பு இயற்கையாகவே அமைந்துள்ளது. மனிதநேய புனிதராக தங்களைக் காண்கின்றோம் அன்னையே!

“கொட்டுகின்ற தெய்வம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும்” என்பது பழமொழி. ஆனால், கூரைகூட இல்லாமல் கிராமத்தில் வாழ்கின்ற ஏழையெளிய மக்களெல்லாம் கோணிப் பைகளையே கூரைகளாகவும், சுவரொட்டிகளையே சுவர்களாகவும் பயன்படுத்தி வந்த அவல நிலையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனவுத் திட்டமான பசுமை வீடு திட்டம், விலையில்லா மின் விசிறி, மிக்ஸி, கிரைண்டர் திட்டம், கறவை மாடுகள், வெள்ளாடுகள் மற்றும் செம்மறி ஆடுகள், அதேபோல ஏழை எளிய மாணவ, மாணவியருக்கு மடிக் கணினி மற்றும் சைக்கிள் போன்ற சிறப்பான

திட்டங்களை வழங்கி அம்மக்களின் பொருளாதாரத்தை உயர்த்தியுள்ளார்கள் அம்மா அவர்கள். ஆனால், கடந்தகால மைனாரிட்டி கருணாநிதி சொத்து குவிப்பதையே தொழிலாக செய்து செய்து, தெய்வ குறள் படித்து, பதவி வெறி பிடித்து, சூது மிகை வளர்த்து, ஊதி உடல் பெருத்து பாதி தமிழகத்தையே பரம்பரைக்கு எழுதிட தவிக்கின்றான், எண் கிழவன் இங்கே.

புரட்சித் தலைவி அம்மா அவர்களோ, 2001-2006 ஆம் ஆண்டில் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு தமிழ் அகராதிப் புத்தகத்தை வழங்கினார்கள். ஆனால், கருணாநிதியின் மைனாரிட்டி அரசோ, தமிழ், தமிழ் என்று தம்பட்டம் அடித்துக் கொண்டு, அம்மா அவர்களால் வழங்கப்பட்ட தமிழ் அகராதிப் புத்தகத்தை நிறுத்தியதுதான் தமிழ் மீதுள்ள, கருணாநிதியின் தமிழ் சாதனை.

கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் 5 ஆண்டுகளில் பள்ளி விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை கூடுதலாக்கியது 1,000 மட்டுமே. ஆனால், புரட்சித் தலைவி அம்மா அவர்களோ, பதவியேற்ற 10 மாத காலத்தில் கூடுதலாக 1,000 ஒதுக்கி சாதனை படைத்துள்ளார்கள் என்பதைப் பெருமையாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

கடந்தகால மைனாரிட்டி தி.மு.க. அரசினர், மத்திய அரசு வழங்கிய நிதியை ஆதி திராவிடர் பழங்குடியினர் மக்களின் மேம்பாட்டிற்கு வழங்காமல், தன் குடும்ப நலன் ஒன்றையே கருத்தில் கொண்டு, அந்த நிதியைத் தொலைக்காட்சிப் பெட்டிக்கு ஒதுக்கி, தன் குடும்ப வருமானத்தை உயர்த்திக் கொண்டார்கள். இவர்களை மனதில் வைத்துக் கொண்டுதான் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்றே பாடினார். "மக்கள் நலன், மக்கள் நலன் என்றே சொல்லுவார், தன் மக்கள் நலன் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்" என்று. புரட்சித் தலைவர் பாடிய வரிகள் (மேசையைத் தட்டும் ஒலி) கருணாநிதியால் உண்மையாக்கப்பட்டுள்ளன என்பதை இந்த நாடே அறியும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்களைப் போன்றே இன்றும் ஒரு சிலர் இம்மாமன்றத்தின் மாண்பு புரியாமல் நாவை வைத்துக் கொண்டு நர்த்தனம் ஆடுகிறார்கள். ஆனால் இவர்கள் ஒன்றை மட்டும் மறந்துவிட்டார்கள்.



நினைவுபடுத்துகின்றேன். எங்கள் தாயின் நா அசைந்தால் இந்த நாடே அசையும் என்பது வரலாறு. இதற்கு உதாரணம் சங்கரன்கோவிலில் வெற்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தத் தொகுதிக்கும் இல்லாத சிறப்பு எனது ஆத்தூர் சட்டமன்றத் தொகுதிக்கு உண்டு. தொகுதியினுடைய. . .

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவற்றையெல்லாம் தயவு செய்து எழுதிக் கொடுத்துவிடுங்கள்; நன்றி சொல்லி உரையை முடியுங்கள்.

**திரு. சு. மாதேஸ்வரன்:** நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சென்ற வாரம் எனது தொகுதியான ஆத்தூர் மற்றும் ஓமலூர் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்காக ரூ.257 கோடியை வாரி வழங்கியுள்ளார் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

தொகுதிப் பிரச்சினைகளைப் பொறுத்தவரையில் ஆத்தூர் தொகுதிக்கு வடமேற்கே ஏற்காடு, அரூர், ஊத்தங்கரை போன்ற தனித் தொகுதிகளும், தென்மேற்கே ராசிபுரம், சேந்தமங்கலம் போன்ற தனித் தொகுதிகளும், தெற்கே துறையூரும், தென்கிழக்கே பெரம்பலூரும், கிழக்கே கெங்கவல்லி, கள்ளக்குறிச்சி போன்ற 9 தனித் தொகுதிகளும் ஆத்தூரை மையமாக வைத்து காணப்படுகின்றன. ஆத்தூர் விவசாயத்தையே சார்ந்த தொகுதியாகும். ஆத்தூரில் இதுவரை எந்தவிதமான அரசு சார்ந்த கல்லூரிகளும் கிடையாது.

எனவே, இம்மக்களின் குழந்தைகள் பயன்பெறும் வகையில் உயர் கல்வி பயில ஒரு பொறியியல் கல்லூரியோ அல்லது வேளாண்மைப் பொறியியல் கல்லூரியோ அல்லது தொழில்நுட்பக் கல்லூரியோ அமைத்துத் தருமாறு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், ஆத்தூர்-சேலம் மாநில நெடுஞ்சாலையில் நரசிங்கபுரத்தில் 1901 ஆம் ஆண்டு ஆங்கிலேயர் ஆட்சியில் கட்டப்பட்ட குறுகிய பாலம் உள்ளது. இப்பாலம் ஆட்கொல்லி பாலம் என்று மக்களால் அழைக்கப்படுகின்றது. இப்பாலத்தை அகற்றி புதிய அகலமான பாலம் ஒன்றை மாண்புமிகு இதய

தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் அமைத்துத் தருமாறு பொற்பாதம் வேண்டி கேட்டுக்கொண்டு, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றி கூறி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

***திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'அறிவு மனிதனை அடிமையாக இருக்க அனுமதிக்காது' என்பார் அமெரிக்க கறுப்பின மக்களின் தலைவர் டக்ளஸ் அவர்கள்.

ஆண்டாண்டு காலமாக ஒதுக்கப்பட்டு, ஒடுக்கப்பட்டுள்ள மக்கள் கல்வியின் மூலம்தான் விடுதலை பெறமுடியும் என்பதை நன்றாக உணர்ந்து முன்வைக்கப்பட்ட கொள்கை விளக்கக் குறிப்பாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தப் பேரவையிலே முன்வைத்துள்ள கொள்கை விளக்கக் குறிப்பு அமைந்துள்ளது.

68 பக்கங்களைக் கொண்ட கொள்கை விளக்கக் குறிப்பிலே 28 பக்கங்கள் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்கு பல்வேறு அறிவிப்புகளை செய்திருப்பதை நன்றியோடு வரவேற்கின்றேன்.

விடுதிகளிலே தங்கிப் படிக்கும் மாணவர்களுக்காக உணவுக் கட்டணத்தை உயர்த்தியிருப்பதும், 10 ஆம் வகுப்பில் அதிக மதிப்பெண் பெறும் மாணவர்களைத் தேர்வு செய்து, தரமான பள்ளிகளிலே சேர்க்கும் திட்டமும், 5 ஆம் வகுப்பு படிக்கும் மாணவர்களைத் தேர்வு செய்து, தரமான உண்டி உறைவிடப் பள்ளிகளிலே சேர்த்து 6 ஆம் வகுப்பிலிருந்து 12 ஆம் வகுப்புவரை படிக்க வைக்கும் திட்டமும், மிகுந்த வரவேற்புக்கு உரியதாகும்.

இதைப் போலவே, சுயநிதி கல்லூரிகளில் பயிலும் SC/ST மாணவர்களுக்கு கல்விக் கட்டணத்தைச் செலுத்த செய்துள்ள ஏற்பாடும் மிகுந்த பயனளிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

ஈரோடு மாவட்டத்தில், மொடக்குறிச்சிக்கு பல்கலைக்கழக உறுப்புக் கல்லூரியை அறிவித்து, அரசுக் கல்லூரியே இல்லாத மாவட்டம் என்ற குறையைப் போக்கிய, மாண்புமிகு முதல்வர்



அம்மா அவர்கள், தாழ்த்தப்பட்ட பழங்குடியினர் நிறைந்த, மலையும், மலை சார்ந்த வனமும் சூழ்ந்த, கல்வியில் பின் தங்கியுள்ள எனது பவானிசாகர் தொகுதிக்கு ஒரு அரசு கலை-அறிவியல் கல்லூரியை அறிவிப்பார் என்ற நம்பிக்கையோடு எனது தொகுதி மக்கள் உள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் கடந்த ஆண்டு மொத்த மாநில ஆண்டு திட்ட ஒதுக்கீட்டில் 21.27 சதவீதமும், இந்த ஆண்டு 21.82 சதவீதமும், அதேபோல் பழங்குடியினருக்கு 1.25 சதவீதமும், ஒதுக்கப்பட்டிருப்பதும் மிகுந்த பாராட்டுக்குரியதாகும்.

பழங்குடியினர் இனச்சான்று பெறுவதிலே இன்னும் சிரமங்கள் நீடிக்கின்றன. ஈரோடு மாவட்டத்திலே, வருவாய்த் துறை அதிகாரிகள் ஒரு நல்ல முயற்சியில் ஈடுபட்டிருக்கிறார்கள். V.A.O., R.I., தாசில்தார் ஆகிய அனைவரும் ஒரே நாளில் ஒரு பழங்குடி கிராமத்திற்குச் சென்று முகாமிடுவார்கள். மக்களை நேரடியாக விசாரித்து, ஆவணங்களைப் பூர்த்தி செய்வார்கள். இன்னொரு நாள் R.D.O அவர்கள் அந்தப் பழங்குடி கிராமத்திற்குச் சென்று, அவரும் விசாரித்து ஆவணங்களைப் பரிசீலித்து உடனடியாக ஆயிரக்கணக்கான பழங்குடி மக்களுக்கு அலைச்சல் இல்லாமல், காலதாமதம் இல்லாமல் சான்றுகள் வழங்கப்பட்டு வருகின்றன. இந்த முறையைத் தமிழகம் முழுவதும் விரிவுபடுத்துமாறு அரசை வேண்டி, விரும்பி கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகம் முழுவதும் பழங்குடியினராக உள்ள 'மலையாளி' இன மக்கள் ஈரோடு மாவட்டத்தில் மட்டும் பழங்குடியினர் பட்டியலில் இருந்து விடுபட்டுள்ளார்கள்.

சென்னைப் பல்கலைக்கழகத்தின் மானுடவியல் துறையும் இவர்கள் பழங்குடியினர்தான் என்று ஆய்வு செய்து சொல்லியிருக்கிறது. ஊட்டியில் உள்ள பழங்குடியினர் ஆய்வு மையமும் ஈரோடு மாவட்ட 'மலையாளி' இன மக்கள் பழங்குடியினர்தான் என்று ஆய்வு செய்து பரிந்துரை செய்துள்ளது.

கடந்த ஆட்சியினர் மைய அரசுக்கு அனுப்பிய முன்மொழிவு உரிய முறையில் இல்லாததால், இம்மக்கள் பழங்குடியினர் பட்டியலில் இன்னும் சேர்க்கப்படாமல், பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மலைப் பகுதியிலே படிக்க வசதியும்

இல்லாமல், கீழே வந்தால் சான்று இல்லாததால், விடுதிகளிலும் சேரவும் இயலாமல் ‘மலையாளி’ இன பழங்குடியின மாணவர்களின் கல்வி பாதிப்பிற்குள்ளாகிறது. இம்மக்களை பழங்குடியினர் பட்டியலிலே சேர்க்க உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக்கொள்கின்றேன்.

காட்டில் வாழும் பழங்குடி மக்களுக்கு, சிறு வனப் பொருள்கள் சேகரித்து விற்பனை செய்வதே பிரதான வாழ்வாதாரமாகும். 2006 ஆம் ஆண்டு பழங்குடியினருக்கு வன நில உரிமையை வழங்கும் சட்டத்தினை மத்திய அரசு கொண்டு வந்தது. ஆனால், அதற்கும் முன்பே 2003 ஆம் ஆண்டிலேயே மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், வன விளைபொருள்களை விலையில்லாமல் பழங்குடியினர் எடுத்து பயன்படுத்த உத்தரவினைப் பிறப்பித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால், சத்தியமங்கலம் வனப் பகுதியில் ஒரு நெல்லிக்காயைக்கூட பழங்குடியினர் தொட முடியாத நிலையுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-35

ஆடுகள் மற்றும் கறவை மாடுகள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களுக்கு வழங்கப்படுகின்றன. ஆனால், வனத் துறை, காட்டில் ஆடுகளையும், மாடுகளையும் மேய்க்கத் தடை விதிக்கின்றது.

வனச் சரணாலயங்கள், காப்பகங்கள் என்ற பெயரில் மாநில அரசின் பழங்குடியினருக்கான வளர்ச்சித் திட்டங்கள் நிறைவேற மத்திய அரசின் வனச் சட்டங்கள் பெருந்தடையாக இருக்கின்றன என்பதை இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். பழங்குடி கிராமத்தில் பள்ளிக் கூடம் அமைக்க கல்வித் துறை நிதி ஒதுக்கி ஓராண்டுக் காலத்திற்கு மேலாகியும் பள்ளிக் கூடம் கட்ட முடியவில்லை.

நெடுஞ்சாலைத் துறையால்கூட சாலை பராமரிப்புச் செய்ய இயலவில்லை. எனது தொகுதியில் தடைப் பட்டிருந்த இப்படிப்பட்ட ஓரிரு பிரச்சினைகளை, மரியாதைக்குரிய தலைமைச் செயலாளர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவந்து, அவரும் தீவிர நடவடிக்கையினை எடுத்து, நேற்றுதான் இப்பிரச்சினை ஒரு முடிவுக்கு வந்துள்ளது என்பதை நன்றியுடன் குறிப்பிட விரும்புகிறேன். இப்பிரச்சினைகளுக்கு நிரந்தரமாக



முற்றுப்புள்ளி வைக்கவும், பழங்குடியினர் மற்றும் வனம் சார்ந்து வாழும் மக்களைப் பாதுகாக்கவும், பழங்குடியினர் நலத் துறையிடம் ஒரு பேராயுதம் இருக்கிறது. 2006 ஆம் ஆண்டின் பழங்குடியினர் வன நில உரிமைச் சட்டம்தான் அது. இதுகுறித்து உள்ள வழக்குகளை விரைந்து முடித்து, இச்சட்டத்தை முழுமையாக அமல்படுத்துகிற நடவடிக்கையிலே பழங்குடியினர் நலத் துறை முனைப்புடன் ஈடுபட வேண்டுமெனப் பணிவோடு வேண்டுகிறேன்.

பழங்குடியினருக்கு நலத் துறை மூலமாக வீடுகள் கட்டித் தருவது மிகுந்த வரவேற்புக்கு உரியதாகும். சமவெளிப் பகுதியில் உள்ளவர்களுக்குக் கட்டுவதைப்போன்ற வடிவத்திலேயே பழங்குடியினருக்கும் வீடுகளைக் கட்டாமல், அந்த மக்களோடு ஆலோசித்து, வீட்டின் வடிவத்தை மாற்றி, அவர்களுக்குத் தேவையான வடிவத்தில் வீடுகளைக் கட்டுவதற்குப் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரேயொரு விஷயத்தை மட்டும் குறிப்பிட்டு முடிக்க விரும்புகிறேன். ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம், பவானிசாகர், அந்தியூர் ஆகிய வனப் பகுதிகள் வீரப்பன் இருப்பிடமாக இருந்த பகுதிகளாகும். (மணியடிக்கப்பெற்றது) வீரப்பன் பிரச்சினைக்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் முடிவு கட்டியபின், இப்போதுதான் பழங்குடியின மக்கள் நிம்மதிப் பெருமூச்சு விடுகிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வீரப்பன் நடமாட்டம் இருந்த 25 ஆண்டுக் காலமும் இப்பகுதியில் வளர்ச்சிப் பணிகள் பெரிதும் தடைப்பட்டிருந்தன. இதனால் பழங்குடிகள் வாழும் ஊராட்சிப் பகுதிகள், பிற பகுதிகளைக் காட்டிலும் அடிப்படை வசதிகளில் மிகவும் பின்தங்கி இருக்கின்றன. வீரப்பனுக்கு முடிவு கட்டிய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள், தடைப்பட்டிருந்த வளர்ச்சிப் பணிகளை நிறைவு செய்யும் வகையில், தாளவாடி, அந்தியூர் ஒன்றியத்தைச் சார்ந்த 14 ஊராட்சிகளுக்குச் சிறப்பு நிதி ஒதுக்கி பழங்குடியினருக்கு உதவ வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ‘தாட்கோ’ உதவியுடன்கூடிய வங்கிக் கடன் வழங்கப்படுகிறது. ‘தாட்கோ’ மானியத்தை அளிக்கிறது. ஆனால், வங்கிகள் முழுமையாகக் கடன் கொடுக்க மறுக்கின்றன.

அதேபோல், பழங்குடியினருக்கும் மற்றும் ஆதி திராவிட மக்களுக்கும் தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுக்கப்படுகின்றன. ஆனால், தொகுப்பு வீடுகள் பழுதடைந்த நிலையில் மக்கள் வாழ வழியில்லாமல் இருக்கிறார்கள். சிறப்புக் கவனம் செலுத்தி, அந்த மக்களுக்கு கச்சா வீடுகள் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் முழுமையாக அந்த வீடுகளைக் கட்டித் தர வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

ஒரேயொரு கோரிக்கை. மலைவேடன் என்கிறவர்கள் மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் போன்ற மாவட்டங்களில் அதிகமாக வாழ்கின்றார்கள். அவர்களையும் பழங்குடியினர் பட்டியலில் சேர்க்கத் தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்தமைக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். நரிக்குறவர்கள் என்ற குருவிக்காரன் பிரிவு, மிகவும் பிற்படுத்தப்பட்ட பிரிவாகத் தற்போது உள்ளது. அதை பழங்குடியினர் பிரிவு (S.T.) ஆக மாற்ற வேண்டுமென்ற கோரிக்கை நீண்டநாள் கோரிக்கையாக இருந்து வருகிறது. ஆந்திராவிலும், கர்நாடகாவிலும் இது பின்பற்றப்படுகிறது என்று நான் அறிகிறேன். அதைத் தமிழகத்திலும் அமல்படுத்த பரிசீலிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் பள்ளிகளில் முன்னுரிமை அடிப்படையில், ஆங்கில வகுப்புகள் தொடங்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். எனது விளவங்கோடு தொகுதியில் கடையாலுமூடு மற்றும் பலுகல் பகுதிகளிலும் ஆங்கில வகுப்புகள் முன்னுரிமை அடிப்படையில் அமைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். Botany, Zoology ஆய்வகங்கள் அமைக்கவும் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-40

கன்னியாகுமரி மாவட்டத்தில் ஆதி திராவிடர்களுக்கு சாதித் சான்று வழங்கப்படுகிறது. பழங்குடியினர்களான மலை ஜாதி



மக்களுக்குச் சாதிச் சான்று வழங்குவதில் காலதாமதம் ஏற்படுகிறது. இதனால், எனது தொகுதியிலுள்ள மோதிரமலை, தச்சமலை போன்ற பகுதிகளில் வசிக்கும் ஏழை மலைவாழ் மக்களுக்குச் சாதிச் சான்று பெறுவதில் பெரும் சிரமம் ஏற்படுகிறது. எனவே, சாதிச் சான்றுகளை விரைந்து வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மதம் மாறிய ஆதி திராவிடர்கள், பழங்குடியின மக்களுக்கும் அனைத்து சலுகைகளும், அரசு மானியங்களும் கிடைக்கச் செய்வதற்கு அரசு இயந்திரம் வேகமாகச் செயல்பட்டு ஆவன செய்ய வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, சாதிச் சான்றிதழ் பெறுவதில் காலதாமதம் ஏற்படுகிறது என்று சொன்னார்கள். எந்தப் பகுதியில் அவ்வாறு காலதாமதம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சொன்னால், ஒரே வார காலத்தில் அது வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வன உரிமைச் சட்டம், 2006-ஐ முழுமையாக அமல்படுத்த வேண்டும். மலைவாழ் மக்கள், பழங்குடியின மக்கள் மலைப் பகுதிகளில் அவர்கள் குடியிருக்கின்ற வீடுகளுக்குப் பட்டா வழங்குதல், பயிர் செய்யும் நிலங்களுக்குப் பட்டா உரிமை வழங்குதல் போன்றவை முழுமையாக நிறைவடையாமல் இருக்கின்றன.

எனது விளவங்கோடு தொகுதியிலுள்ள மோதிரமலை, தச்சமலை, புறாவிளை போன்ற மலையோரக் குடியிருப்புகளில் வசிக்கும் ஏழைப் பழங்குடியினர், பட்டியல் இனத்தவர்களுக்குப்

பட்டா முழுமையாக வழங்கப்படவில்லை. எனவே, அரசு இயந்திரம் விரைந்து செயல்பட்டு, பட்டா வழங்கிட ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் பல மலைக் கிராமங்களுக்கு மின்வசதி செய்யப்பட்டபோதிலும், குறிப்பாக புறாவிளை, மோதிரமலை, தச்சமலை, குருசுமலை, வலியஏலா போன்ற பகுதிகளுக்கு மின்சார வசதி, பாதை வசதி, சாலை வசதி போன்றவை இன்னும் செய்யப்படவில்லை. எனவே, இந்தப் பகுதியில் வசிக்கும் மலைவாழ் மக்களுக்கும் அனைத்து வசதிகளும் கிடைத்திட அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலையோரங்களில் வசிக்கும் மக்களுக்காக சிறப்பாகச் செயல்படும் N.G.O.—தொண்டு நிறுவனங்கள் மூலமாக, சுய உதவிக் குழுக்களிலுள்ள மகளிர் பலர் சுய தொழில் புரிகின்றனர். அந்த N.G.O.-க்களுக்கு மகளிர் திட்டத்தில் பதவி இல்லாத காரணத்தால், சுழல் நிதி கிடைக்காமல் உள்ளது. எனவே, மலையோரங்களில் வசிக்கும் SC/ST மகளிர் சுய உதவிக் குழுக்களில் சிறப்பாகச் செயல்படுபவர்களுக்குச் சுழல் நிதியும், பொருளாதாரக் கடன்களும் கிடைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், கல்வியில் சிறந்த மாவட்டம். இங்கு பல ஆதி திராவிட மாணவ, மாணவிகளுக்கான விடுதிகள் இயங்குகின்றன. உயர் கல்வி பயிலும் மாணவர்களுக்கு, P.G. Hostel, Polytechnic Students Hostel தனியாகக் கட்டிக் கொடுக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஆதி திராவிடர் மாணவர் விடுதிகளில் துப்புரவுத் தொழிலாளர் பணியிடம் காலியாக உள்ளது. இதனால், விடுதிகளில் சுத்தம், சுகாதாரம் பேணுவதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. எனவே, சுகாதாரப் பணியாளர்களை பணியமர்த்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

கல்லூரி, பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை வழங்கப்படுகிறது. கன்னியாகுமரி மாவட்டம், கலிங்கராஜபுரம் ஆதி திராவிடர் பள்ளியில் ஆசிரியர் பணியிடங்கள் முழுமையாக உள்ளன. ஆனால், ஆசிரியர் அல்லாத



Clerk, Watchman, O.A., துப்புரவுப் பணியாளர் போன்ற பணியிடங்கள் காலியாக உள்ளன.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கடந்த 7 ஆண்டுகளாக ஆதி திராவிடர் நலத் துறைக்கு நிதி ஒதுக்கப்பட்டிருந்தாலும், புதிதாகக் காலனிகள் அமைக்க நிலம் கையகப்படுத்தாமல் உள்ளது. விளவங்கோடு, மேல்புறம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் அருகில் இடம் உள்ளது. அந்த இடத்தில் ஆதி திராவிடர் காலனி அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் ரீத்தாபுரம், கலங்குன்று ஆகிய ஊர்களில் ஆதி திராவிடர் காலனிகள் உள்ளன. இந்தக் காலனிகளில் சமுதாய நலக் கூடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சேதமடைந்த தெருக்களை கான்கிரீட் தெருக்களாக மாற்றி, உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ராஜாக்கமங்கலம் ஊராட்சி, பண்ணையூர், ஒற்றன்தெங்கன்விளை போன்ற ஊர்களில் ஆதி திராவிடர் காலனி வீடுகள் கட்டப்பட்டு சுமார் 30 வருடங்கள் கடந்துவிட்டன. இந்த வீடுகள் ஓடு வேயப்பட்ட கூரை வீடுகள். அனைத்து வீடுகளும் சூறாவளிக் காற்றினால் சேதமடைந்துள்ளன. 30 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட இந்த வீடுகளை மீண்டும் R.C.C. வீடுகளாகக் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு ஊராட்சி ஒன்றியம், அயக்கோடு ஊராட்சி, அருவிக்கரை வருவாய் கிராமம், அண்டுகோடு Re-survey No. 430/3-ல் சுமார் 12 ஆதி திராவிடர் வீடுகள் உள்ளன. இவர்கள் இந்தப் பகுதியில் 25 ஆண்டுக் காலமாக காலனி வீட்டில் வசித்து வருகின்றனர். இவர்களின் வீடுகளுக்குப் பட்டா வழங்கப்படவில்லை. எனவே, இவர்களுக்குப் பட்டா வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-45

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறு அருகே உள்ள வலியாற்றுமுகம் ஊரில் பெரிய S.C. காலனி உள்ளது. இந்த காலனி தெருக்கள்

சேதமடைந்துள்ளன. அணுகு சாலை மோசமாக உள்ளது. குடிநீர் குழாய்கள் பழுதுபட்டுள்ளன. எனவே, காலனி வீடுகளையும், Colony Infrastructure-களையும் மேம்படுத்தவும், Community Hall கட்டவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தில் இரண்டு ஆதி திராவிடர் தாசில்தார்கள் (நாகர்கோவில், தக்கலை) உள்ளனர். இந்த அலுவலகங்களில் போதிய பணியாளர்கள் இல்லை, அதுமட்டுமல்லாது ஒரு Jeep உண்டு, ஓட்டுநர் இல்லை. இதனால் அலுவலகப் பணிகள் சரிவர நடைபெறுவதில்லை. வளர்ச்சிப் பணிகள், நலத் திட்டங்கள் செயல்படுத்துவதில் தொய்வு ஏற்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், அவர்கள். (குறுக்கீடு) இப்போது மணி 1-45. Please sit down.

**திரு. செ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. காமராஜ், உட்காருங்கள். திருமதி விஜயதரணி, நன்றி சொல்லி முடியுங்கள்.

**திருமதி எஸ். விஜயதரணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு கோரிக்கையை மட்டும் வைக்கிறேன். தாட்கோ வங்கி, விவசாயக் கூட்டுறவு வங்கிகளில் ஆதி திராவிடப் பழங்குடியினர்களுக்கு 25 சதவிகிதம் மானியம் வழங்கி தொழில் கடன்கள், விவசாயக் கடன்கள் வழங்குமாறு கேட்டுக்கொண்டு, இம்மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைக் கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ், அவர்கள்.

**திரு. செ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்குக் கொஞ்சம் கூடுதலாக நேரம் வேண்டும். ஏனென்றால் நான் கடைசியாகப் பேசுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, “எல்லாரும் எல்லாமும் பெறவேண்டும். தமிழகத்தில் இல்லாமை இல்லாத நிலை வேண்டும்” என்ற உயரிய நோக்கத்தோடும், வள்ளல்



உள்ளத்தோடும், தமிழகத்திலுள்ள கோடானுகோடி மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் உன்னத நோக்கில், ஆட்சி புரியும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்கி, எனது உரையைத் துவங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“இயற்றலும் ஈட்டலும் காத்தலும் காத்த
வகுத்தலும் வல்லது அரசு”

என்ற வள்ளுவரின் வாக்குப்படி, தமிழக மக்களைக் காத்துவரும், எங்கள் இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மானியக் கோரிக்கையில் எனக்குப் பேச வாய்ப்பளித்த டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து நன்றியைக் காணிக்கையாக்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழகத்தில் மூன்றாவது முறையாக ஆட்சி அமைத்து, தமிழகத்தில் உள்ள ஏழையெளிய நலிந்த மக்களின் நலன் கருதி விலை இல்லாத பொருட்களைத் தந்து, மக்களை மகிழ்வித்துக் கொண்டிருக்கிறார்கள். எனது தொகுதியான கிருஷ்ணராயபுரத்தில் இருக்கும் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் மாண்புமிகு அம்மா அவர்கள் வழங்குகின்ற விலையில்லா அரிசி, ஏழைப் பெண்களுக்குத் தாலிக்குத் தங்கம், திருமண உதவித் தொகை ரூ.25,000/-, பட்டயப் படிப்பு படித்தவருக்கு ரூ.50,000/-, பசுமை வீடுகள் கட்டுவதற்கு ரூ.1,80,000/-, முதியோர் உதவித் தொகையாக ரூ.1,000/-, (மேசையைத் தட்டும் ஒலி) ஏழை விவசாயிகளுக்கு நான்கு ஆடுகள், கறவை மாடுகள், முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் ஆகிய அனைத்துத் திட்டங்களின் பயன்களையும், பெற்று முழுமையாகப் பயன் அடைகின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்கும் நோக்கத்தில் பள்ளி, கல்லூரிகளில், மாணவ, மாணவியருக்கென விலையில்லா மடிக் கணினி, விலையில்லா மிதிவண்டி, பஸ் பாஸ், சீருடை,

கல்வி ஊக்கத் தொகை, பாடநூல், நோட்டுப் புத்தகம், புத்தகப் பை, Geometry Box, Colour Pencils, உலக வரைபடம், காலணிகள் ஆகியவை தந்தது மாண்புமிகு அம்மா அவர்கள்தான். தான் பயின்ற தரமானக் கல்வியைப் போலவே, தமிழகத்திலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியரும் தரமான கல்வி பயில வழிவகுத்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளை அவர்களின் பொற்பாதங்களில் சமர்ப்பிக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலுள்ள ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர் அரசு விடுதியில் தங்கிப் பயிலும் பள்ளி மாணவ, மாணவியருக்கு உணவுப் படியை ரூ.450/-லிருந்து ரூ.650/- ஆக உயர்த்தியும், கல்லூரி மாணவ, மாணவியருக்கு ரூ.550-லிருந்து ரூ.750/- ஆக உயர்த்தியும், Pre-Matric Scholarship/Post-Matric Scholarship ஆகிய திட்டங்களுக்கு வரும் நிதியாண்டில் ரூ.331.31 கோடி ஒதுக்கீடு செய்து சரித்திரம் படைத்த புரட்சித் தலைவி மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மக்களின் முன்னேற்றத்திற்கு நமது மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் அரசு சிறப்பு முன்னுரிமை வழங்கி வருகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் பட்டியலினத்தவர்களுக்கான துணைத் திட்டத்திற்கான ஒதுக்கீடு, இதுவரை எப்பொழுதும் ஒதுக்கப்படாத அளவில், 6,108.60 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் நலனில் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு கொண்டுள்ள அக்கறையை இது காட்டுகிறது. இது ஆதி திராவிட மக்கள் தொகை விகிதாச்சாரமான 19 விழுக்காட்டைக் காட்டிலும் மாநிலத்தின் ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டில், 21.82 சதவீதம் ஆகும். இதன் முழுமையான பயன்களும் ஆதி திராவிடர்களையே சென்றடையும் வகையில், அனைத்து நடவடிக்கைகளும் மாண்புமிகு அம்மாவின் அரசால் மேற்கொள்ளப்படும் என்று அறிவித்த சரித்திரம் படைத்திட்ட சாதனைத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



பிற்பகல் 1-50

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் நடந்த சாதனைகள், கட்டப் பஞ்சாயத்து; கந்து வட்டிக் கொடுமை; வழிப்பறிக் கொள்ளை; பாலியல் பலாத்காரம்; திருட்டு லாட்டரிச் சீட்டுகள்; ஏழையெளிய மக்களுடைய நிலங்கள் அபகரிப்பு; பசி, பட்டினி, வறுமை; சட்டம்-ஒழுங்கு சீர்கேடு; அஞ்சா நெஞ்சன்-ரவுடி மன்னன் 2ஜி ஸ்பெக்ட்ரம் ஊழல்; தமிழகத்தை ஆள திராணி இல்லாமல் எங்கும் ஊழல், எதிலும் ஊழல். தான் மட்டுமா என்றால், இல்லை, இல்லை. அனைத்து இலாகா மந்திரிகள்தான் என்பார் கருணாநிதி. இதில் ஒன்றுதான் திஹார் சிறையில் உள்ள ராஜா என்பார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆறு வருடங்கள் அரசியல் அனுபவம் என்பார். ஒன்றோடு வந்தவர், மாண்புமிகு அம்மா அவர்களுடைய கருணையால் 29 ஆனார். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியின் சாதனையைக் கேட்டால், ஆகட்டும் ஆறு மாதம் என்பார். ஆனால், அதன்பின் சட்ட சபைக்கு வர மறுப்பார். சங்கரன்கோவில் இடைத் தேர்தலுக்கு சவால்விட்டார். முடிவில் டெபாசிட் இழந்தார். நாக்கைத் துருத்துவார், தனது தொண்டனைத் துவைத்து எடுப்பார். நானே கேப்டன் என்பார். வரும் 2016 ஆம் ஆண்டில் அரசியலில் காணாமல் போய்விடுவார்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பகுத்தறிவு நெறியே, பண்பட்ட நெறி என்ற தந்தை பெரியாரைப் போல; கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற பேரறிஞர் அண்ணாவைப் போல; சமத்துவம் கண்டு, சம நீதி காண்போம் என்ற டாக்டர் அம்பேத்கரைப் போல; சத்துணவு தந்த சரித்திர நாயகன் டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களைப் போல; அன்றும், இன்றும், என்றும் மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்திருக்கும் உலகத் தமிழர்கள் நெஞ்சமெல்லாம் நிறைந்து வாழ்கின்ற எங்களுடைய தாயே, தமிழே, தன்னிகரில்லா தலைவியே, என்றும் உங்கள் வழியில் உழைப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை. (குறுக்கீடு) உங்களுக்கு support அதிகமாக இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. காமராஜ் அவர்கள்.

**திரு. செ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதி, கடவூர் தாலுகா அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடமும், கிருஷ்ணராயபுரம் பேரூராட்சியில் புதிய குடிநீர் திட்டப் பணிகளும், தாந்தோணி ஒன்றியம், பள்ளபாளையம், ஆண்டார்கோவில் ஊராட்சிகளுக்குப் புதிய காவிரி குடிநீர் திட்டமும் வழங்கிய வாழும் வள்ளல், வரலாற்று முதல்வர், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களில் என்னுடைய நன்றியைக் காணிக்கையாக்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தன் மனதை பொன் மனதாக்கி, தன்னம்பிக்கை மின் ஒளியாக்கி, தமிழகத்தின் நலன் காக்க, தன் நலத்தை புறந்தள்ளி, சிந்திக்கும் வேகத்தில், செயலாக்கும் விந்தை புரிந்து, நல்லாட்சி நடத்துகின்ற தாயே! ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் வாழ்வில் ஜோதியாகத் திகழும் எங்கள் புரட்சி சுடர் ஒளியே! புரட்சித் தமிழ் வடிவே! மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையினைத் தொடங்குகின்றேன்.

2012-2013 ஆம் ஆண்டு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆதி திராவிடர் நலத் துறைக்கு ரூ.1,290.91 கோடி நிதி ஒதுக்கீடு செய்து, அதில் கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக மட்டும் 81.65 விழுக்காடு செலவிட உத்தரவிட்டுள்ளார்கள். இந்த ஒதுக்கீடு கடந்த நிதியாண்டின் ஒதுக்கீட்டைவிட, ரூ.206 கோடி அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி) முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தின் ஒதுக்கீட்டைவிட, ரூ.401 கோடி அதிகமாகும். இதன்மூலம் பள்ளியில் சேர்க்கை விகிதம் அதிகரித்து, பள்ளி இடைநிற்றல் விகிதம் குறைந்துள்ளது என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

1980-81-ல் புரட்சித் தலைவர் காலத்தில் தொடங்கப்பட்ட ஆதி திராவிடர்களுக்கான துணைத் திட்டத்தின்கீழ், ஆதி திராவிடர்



மக்கள் தொகை விகிதாச்சாரமான 19 விழுக்காட்டிற்கும் குறைவில்லாமல் மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.28,000 கோடியில், பகுக்கப்படும் தலைப்பின்கீழ், ரூ.6,108.60 கோடி, அதாவது 21.82 விழுக்காடு ஒதுக்கியுள்ளது, ஆதி திராவிடர் மக்களின் பாதுகாவலரான மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் புதிய வரலாறு ஆகும். இது கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தின் ஒதுக்கீட்டினைவிட ரூ.2,280 கோடி அதிகமாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், “Vision 2023” என்கிற மகத்தான திட்டத்தைத் தந்துள்ளார்கள். மாநிலத்தின் பொருளாதார வளம், சுகாதாரம், உள்கட்டமைப்பு, முதலீடு, அறிவுசார் தலைநகரம், அமைதி, பாதுகாப்பு, செழுமை, பாரம்பரிய சிறப்பைப் பேணுதல், இயற்கைச் சீற்றங்களிலிருந்து பாதுகாப்பு, வெளிப்படையான நிருவாகம் போன்றவற்றை முக்கிய அம்சங்களாக கொண்ட அந்தத் திட்டம் சாத்தியப்படாது என்று எதிர்க்கட்சியினர் பிதற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

பிற்பகல் 1-55

பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கும் அதே நேரத்தில், மாநில மக்களிடம் நிலவும் ஏற்றத்தாழ்வைக் குறைத்து, சமூகத்தில் பின்தங்கியுள்ள ஆதி திராவிடர்களையும், மற்றவர்களுக்கு ஈடாக வளர்ச்சி பெறச் செய்வதே மாண்புமிகு அம்மா அவர்களின் முக்கிய நோக்கமாகும். எனவேதான், பள்ளி கல்வித் துறைக்கு, என்றைக்கும் இல்லாத அளவில், 14,553 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்துள்ளார்கள். இதன்மூலம், 100 விழுக்காடு கற்றவர்கள் உள்ள மாநிலமாகத் தமிழகம் விளங்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த “Vision 2023” திட்டத்தின் மூலமாக, எதிர்க்கட்சிகளின் கனவுகளுக்கு மாண்புமிகு அம்மா அவர்கள் சம்மட்டி அடி கொடுத்திருக்கிறார்கள். கல்வி, பொருளாதார வளர்ச்சி, சமூகத்தில் அந்தஸ்து போன்ற பல்வேறு நலன்களை அனுபவிக்கும் ஆதி திராவிட பெருமக்கள் உட்பட, அனைத்துத் தமிழக மக்களும், நாளைய பாரதத்தின் வழிகாட்டியாக, மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் வரவேண்டுமெனக் காத்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாழ்த்தப்பட்ட மாணவர்கள், பொறியியல் மற்றும் தொழில்சார்ந்த உயர் படிப்புகளில், சுயநிதிக் கல்வி நிறுவனங்களில் சேர்ந்து பயில, பொதுப் பிரிவு மாணவர்களுக்கு இணையாக அனைவரும் முன்னேற வேண்டும் என்ற உயரிய சிந்தனையில், கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ, மாணவியர்களுக்கு, ஒரு நபர் குழு நிர்ணயித்த கட்டாயக் கட்டணத்தினை, 2011-2012 ஆம் கல்வியாண்டு முதல் முழுவதுமாக வழங்கிட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

இதன்மூலம், அடித்தட்டு மக்களாகிய தாழ்த்தப்பட்டவர்கள் என்ற நிலையினை மட்டுமல்லாமல், 'தாழ்த்தப்பட்டவர்கள்' என்ற நினைப்பினையே மாற்ற வேண்டுமென்றும், அம்மக்களின் உயர்வே, உண்மையான பொருளாதார வளர்ச்சி என்றும் உணர்ந்து, தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு அம்மா அவர்கள், பொதுப் பிரிவினர்களைப்போல் முன்னேற வழிவகுத்து, எம்மக்களின் மனதில் நீங்காத இடம் பெற்று, விடிவெள்ளியாகத் திகழ்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

இத்திட்டத்திற்காக 2011-2012 ஆம் ஆண்டில், 26,000 மாணவ, மாணவியர்களுக்கு ரூபாய் 111.45 கோடி நிதி வழங்கியுள்ளார்கள். இதன்மூலம், இலவச மற்றும் கட்டண இருக்கைகளில் பயிலும் பொறியியல் மாணவர்களுக்கு, கட்டாயக் கல்விக் கட்டணம் ரூ.32,500/-, ரூ.40,000/-, ரூ.62,500/- வழங்கப்படும். மருத்துவப் படிப்பிற்கு 2,25,000/- ரூபாயும், பல் மருத்துவ மாணவருக்கு 75,000/- ரூபாயும் வழங்கப்படும். மொத்தத்தில் 2011-2012 ஆம் கல்வியாண்டில் கல்வி உதவித் தொகையாக 7,42,329 மாணவ, மாணவிகளுக்கு, கல்வி நிறுவனங்கள் மூலமாக 360.69 கோடி ரூபாய் வழங்கியுள்ளார்கள். 2012-2013 ஆம் ஆண்டிற்கு 410 கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளார்கள்.

தெய்வம்கூட கேட்டால்தான் வரம் கொடுக்கும். ஆனால், எங்கள் அம்மா அவர்கள், கேட்காமலேயே கொடுக்கின்ற தெய்வத் தாய்! (மேசையைத் தட்டும் ஒலி) பேதம் பாராமல், பொழிகின்ற கருணை முகிலே! இப்படி ஆதி திராவிட மக்களுக்காக அள்ளி அள்ளிக் கொடுத்து வாழ்வு தந்த மாண்புமிகு அம்மா அவர்களின் கருணையைப் போற்றி வணங்குகிறோம்.



'அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பெதற்கு?' என்கிற எதிர்மறை மொழியைத் தகர்த்து, தவிடுபொடியாக்கும் வகையில், முதன்முதலாக 1995 ஆம் ஆண்டில், மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில்தான், பெண் கல்வி ஊக்குவிப்புச் சிறப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். இத்திட்டத்தின்படி, 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில் பயிலும் பெண் குழந்தைகள், ஆண்டொன்றுக்கு 500/- ரூபாயும், 6 ஆம் வகுப்பில் பயிலும் பெண் குழந்தைகள், ஆண்டொன்றுக்கு 1,000/- ரூபாயும் பெறுகின்றனர். இந்த உதவித் தொகையானது, அவரவர் அஞ்சலகச் சேமிப்புக் கணக்கில் செலுத்தப்படுகிறது. 2010-2011 ஆம் ஆண்டு வரை 16 மாவட்டங்களில் மட்டுமே, 1.20 இலட்சம் பெண் குழந்தைகளுக்கு 8 கோடி ரூபாய் என்ற குறிப்பிட்ட அளவே ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. ஆனால், தற்போது தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், இந்தத் திட்டத்தினைத் தமிழகம் முழுமைக்கும் விரிவுபடுத்தி, 6.38 இலட்சம் பெண் குழந்தைகளும் பயன்பெறும் வகையில் செயல்படுத்திட, 2011-2012 ஆம் ஆண்டில் ரூபாய் 40 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள். இதற்காக 2012-2013 ஆம் ஆண்டிற்கு ரூபாய் 42 கோடி ஒதுக்கியுள்ளார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டு மக்கள் எல்லாம் மாண்புமிகு அம்மா அவர்களின் பக்கம் இருப்பதைக் கண்டு பொறுக்காமல், சென்னையில் நடந்த ஒரு கூட்டத்தில், ஒரு கட்சியின் தலைவர் பேசும்போது, 'தமிழ்நாட்டில் ஐஸ் கட்டிக்குப் பஞ்சம் ஏற்பட்டுவிட்டது; அ.தி.மு.க.-வினர், இருக்கின்ற ஐஸ் கட்டிகளையெல்லாம் தங்கள் தலைவியின் தலையில் வைத்து, ஆராதனை செய்து கொண்டிருக்கிறார்கள்' என்று விமர்சனம் செய்கின்றார். அவருக்கு ஞாபக மறதி அதிகமாகி விட்டது என்றே நினைக்கின்றேன். ஏனென்றால், 1969 ஆம் ஆண்டு பேரறிஞர் அண்ணா அவர்களின் மறைவுக்குப் பிறகு, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் தலையில் ஐஸ் வைத்து, கெஞ்சிக் கூத்தாடி, முதலமைச்சர் ஆனவர்தான் இவர். (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், டெல்லிக்குப் போகும்போதெல்லாம், அதனருகே இருக்கின்ற இமய மலையில் இருக்கும் ஒட்டுமொத்த ஐசையும் கொண்டுவந்து, டெல்லி தலைமையின் தலையில் வைத்து, தனக்கு, தன் பிள்ளைகளுக்கு, தன் பேரன்களுக்கு, தன் பேத்திகளுக்கு, தன் கொள்ளுப் பேரன்களுக்கு, தன் கொள்ளுப் பேத்திகளுக்கு, மொத்தத்தில் தன் குடும்பத்திற்காக மட்டுமே ஆட்சி நடத்திய

அத்தலைவர், வாய் புளித்ததோ, மாங்காய் புளித்ததோ என்ற வகையில், அ.தி.மு.க.-வினரை விமர்சனம் செய்வதை நிறுத்திக்கொள்வது நல்லது.

பிற்பகல் 2-00

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** அண்ணல் அம்பேத்கர், தந்தை பெரியார் பிறந்த நாட்களில் மட்டும் மேடை ஏறி, ஆதி திராவிடர் நலன் பற்றிப் பேசிவிட்டு, நடையைக் கட்டும் சில தலைவர்களைப்போல் அல்லாமல், ஆக்கபூர்வமாக, அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த, பல நலத் திட்டங்களுடன் அயராது உழைப்பவர்தான் மாண்புமிகு அம்மா அவர்கள்.

12 ஆம் வகுப்பில் மாநில அளவில் முதலிடம் பிடித்த ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவருக்கு முதல் பரிசு ரூ.50,000/-, இரண்டாம் பரிசு ரூ.30,000/-, மூன்றாம் பரிசு ரூ.20,000/- என வழங்கியுள்ளார்கள். அதேபோன்று, 10 ஆம் வகுப்பில் மாநில அளவில் முதலிடம் பிடித்த மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவருக்கு முதல் பரிசு ரூ.25,000/-, இரண்டாம் பரிசு ரூ.20,000/-, மூன்றாம் பரிசு ரூ.15,000/- என வழங்கியுள்ளார்கள். 12 ஆம் வகுப்பில் 25 பாடங்களில் மாநில அளவில் முதலிடம் பிடித்த மாணவர் அல்லது மாணவி ஒருவருக்கு ரூ.2,000/- வீதமும், 10 ஆம் வகுப்பில் 5 பாடங்களில் மாநிலத்தில் முதலிடம் பிடித்த மாணவர் அல்லது மாணவிக்கு ரூ.1,000/- வீதமும், மொத்தம் 126 பரிசுகள் வழங்கப்படுகின்றன. அதேபோன்று, 12 ஆம் வகுப்பில், மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் முதல் பரிசு ரூ.6,000/- வீதம் வழங்கப்படுகிறது. 10 ஆம் வகுப்பில், மாவட்ட அளவில் அதிக மதிப்பெண்கள் பெற்ற மாணவர் ஒருவர் மற்றும் மாணவி ஒருவருக்கு, முதல் பரிசு ரூ.2,000/- வீதம், இரண்டாம் பரிசு ரூ.1,000/- வீதம், மூன்றாம் பரிசு ரூ.500/- வீதம் வழங்கப்படுகிறது. 12 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில், அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவர் 1,000 பேர் மற்றும் மாணவியர் 1,000 பேர் தொடர்ந்து படித்தால், அவர்களுக்கு



முதல்வரின் தகுதிப் பரிசாக ஆண்டொன்றுக்கு ரூ.3,000/- வீதம் 5 ஆண்டுகளுக்கு வழங்கப்படுகிறது.

கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில் சரியான பராமரிப்பின்றி கைவிடப்பட்ட பல ஆதி திராவிட மாணவர் விடுதிகள் அகழ்வாராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்ட மொகஞ்சதாரோ—ஹரப்பாவை நினைவுபடுத்தும் வகையில், இடிபாடுகளுடன் இருளடைந்து கிடப்பதை அறிந்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அவ்விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவிகள் நல்ல சுகாதாரமான சூழ்நிலையில், கல்வி பயில வாய்ப்பு கிடைக்காமல் இருந்த நிலையில், யாரும் செய்திராத, செய்ய இயலாத சாதனையான 1,080 பள்ளி மற்றும் கல்லூரி மாணவ, மாணவியர் விடுதிகளை, (மேசையைத் தட்டும் ஒலி) பராமரிக்க ஒரே தடவையில் ரூ.83.40 கோடியினை 2011-2012 ஆம் ஆண்டில் ஒதுக்கி, பணிகள் அனைத்தும் முடிவடையும் தருவாயில் உள்ளன. தற்போது, ஆதி திராவிடர் நல விடுதிகள் அனைத்தும், சீரமைக்கப்பட்டு புதிய விடுதிகள்போல் தோற்றமளிக்கின்றன. இதற்கு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் எப்பொழுதும் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நன்றிக் கடன்பட்டவர்களாக இருப்பார்கள் என்பதை இம்மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கல்லூரி மற்றும் தொழில்நுட்ப விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு உணவுக் கட்டணமாக ரூ.750/-ம், சோப்பு, எண்ணெய் போன்ற பலவகைச் செலவினங்களுக்கு ரூ.75/-ம் வழங்கப்படுகிறது. பள்ளி விடுதியில் தங்கிப் படிக்கும் மாணவ, மாணவியருக்கு உணவுக் கட்டணமாக ரூ.650/-ம், சோப்பு, எண்ணெய் போன்ற பலவகைச் செலவினங்களுக்காக ரூ.50/-ம் வழங்கப்படுகிறது.

ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க ஊரக வளர்ச்சித் துறைமூலம் ஊராட்சிகளுக்கு குடிநீர் வசதிக்கு 15 விழுக்காடும், இணைப்புச் சாலை வசதிக்கு 10 விழுக்காடும் செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

சாதிச் சான்றுகள், ஆதி திராவிடர்களுக்கு வட்டாட்சியரும், பழங்குடியினருக்கு கோட்டாட்சியரும் வழங்கிட அதிகாரம்

வழங்கப்பட்டுள்ளது. வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மெய்த்தன்மையை அறிய, கூர்நோக்குக் குழு உள்ளது. ஆதி திராவிடருக்கு மாவட்ட அளவிலும், பழங்குடியினருக்கு மாநில அளவிலும் உள்ளது. வன்கொடுமை தடுப்பு நடவடிக்கைகளுக்காக, சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்றும் திறம்பட செயல்பட்டு வருகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், ஒரு பழங்குடி இன இளைஞருக்கு ஏற்பட்ட இன்னலை இங்கே குறிப்பிட விரும்புகிறேன். திருவண்ணாமலை மாவட்டம், கல்வராயன் மலை அடிவாரத்தில் உள்ள வீரமாரப்பட்டி என்ற கிராமத்தைச் சேர்ந்த பி. குமார் என்ற இளைஞர், சிறப்புக் காவல் படையில் சென்னையில் கான்ஸ்டபிளாகப் பணியாற்றி வந்தார். 2007 ஆம் ஆண்டு TNPSC Group-I தேர்வு நடத்தியதில், இவர் D.S.P. ஆக தேர்ச்சிப் பெற்றார். பழங்குடி இனத்தைச் சேர்ந்த இவருடைய ஜாதிச் சான்றிதழ் TNPSC ஆல் நிராகரிக்கப்பட்டு, இவர் D.S.P. பணியில் சேர முடியாமல் 5 ஆண்டுகளாகப் போராடி வந்தார். தற்போது, மாண்புமிகு அம்மா அரசு SC/ST கமிஷன் இவருடைய சான்றிதழை சரிபார்த்து, அங்கீகரித்தது. TNPSC-யும் அதை ஏற்றுக் கொண்டு, தற்போது D.S.P. ஆக பணிபுரியும் வாய்ப்பை வழங்க மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் உத்தரவு கொடுத்தார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில்தான் TNPSC தன்னுடைய பணிகளை சுதந்திரமாக செய்து ஒரு பழங்குடியின இளைஞரின் வாழ்வில் ஒளியேற்றி உள்ளது. சென்ற ஆட்சியாளர்கள் தங்களுடைய குடும்ப நலத்தைப் பேணுவதில் மட்டுமே கவனம் செலுத்தினர் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு ஊரில் ஏழை ஒருவன் இருந்தான். ஆனால், பேராசை பிடித்தவன். அவன் தினமும் கடவுளிடம், 'சொர்க்கத்திற்குப் போக வேண்டும்' என்று வேண்டிக் கொண்டே இருந்தான். கடவுளும், ஒருநாள் அவன் முன் தோன்றி, 'இளைஞனே, நீ எதற்காக இப்போதே சொர்க்கத்திற்குப் போக வேண்டும் என்று சொல்கிறாய்? நீ போய் திருமணம் செய்து கொண்டு திரும்பி வா' என்கிறார். அவனும், ஊருக்குள் சென்று திருமணம் செய்து கொள்கிறான். மீண்டும்,



கடவுளிடம் வந்து, 'நான் சொர்க்கத்திற்குப் போக வேண்டும்' என்று கூறுகிறான். கடவுளும், 'இப்போதுதான் உனக்கு திருமணம் ஆகியிருக்கிறது, போய் குழந்தை குட்டிகளைப் பெற்றுக்கொள்' என்று அனுப்பி வைக்கிறார். அவனும், வீட்டுக்கு வந்து, குழந்தை குட்டிகளைப் பெற்றுக் கொள்கிறான். மீண்டும், கடவுளிடம் வந்து, 'கடவுளே நான் சொர்க்கத்திற்குப் போக வேண்டும்' என்று வேண்டுகிறான். கடவுளும் அவன் முன் தோன்றி, 'எதற்காக அவசரப்படுகிறாய்? உன் குழந்தைகள் எல்லாம் வளரட்டும், உன் பேராசைக்கு ஏற்றாற்போல், குறுக்கு வழியில் நீ அதிகாரங்களைப் பெற்றிடுவாய் போ' என்று அனுப்பி வைக்கிறார். மீண்டும் அவன் ஊருக்குள் வந்து, புற வழியாக, அரண்மனைக்குள் புகுந்து, அதிகாரப் பீடத்தில் அமர்கிறான். அதிகாரம் கிடைத்தவுடன், அகம்பாவம் பிடித்து, அட்டூழியங்களைச் செய்கிறான். கஜானாவையும் காலி செய்கிறான். அவனுடைய பிள்ளைகளும் வளர்ந்து, அதிகாரங்களைப் பங்கிட்டுக்கொண்டு, மக்களை துன்புறுத்தி, அத்துமீறல்களைச் செய்கிறார்கள். அந்தப் பேராசைப் பிடித்தவன், மீண்டும் கடவுளிடம் வருகிறான், "கடவுளே சொர்க்கத்திற்குச் செல்ல வேண்டும்" என்று மன்றாடுகிறான். கடவுளோ "நீ செய்த குற்றங்களுக்கு எல்லாம் சொர்க்கத்தில் இடமில்லை. நீ நரகத்திற்குச் சென்று அங்காவது இடமிருக்கிறதா என்று பார்" என்று அனுப்பி விடுகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பேராசைப் பிடித்தவனும் நரகத்திற்குச் சென்று, அங்குள்ள பதிவேட்டில் தன் பெயர் உள்ளதா என்று பார்க்கிறான். ஆனால், அவனது பெயரோ அங்கு இல்லை. இவனைப் பார்த்த நரகவாசிகளும் கொதித்தெழுந்து நாங்களோ சிறிய தவறுகள் செய்ததால்தான் இங்கு வந்திருக்கிறோம். ஆனால், நீ செய்த தவறோ மிகப் பெரியது. உலகமகா தவறு. அதனால் உனக்கான இடம் இது அல்ல. நீ வேறெங்காவது செல்" என்று நரகத்தில் இருந்தும் விரட்டியடிக்கிறார்கள். அவன் இப்போது தான் செல்ல வேண்டிய இடம் எது என்று தெரியாமல், அங்கும் இங்கும் அல்லாடிக் கொண்டு அலைகிறான்.

*பிற்பகல் 2-05*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1995 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான, வன்கொடுமை தடுப்பு விதிகள் பிரிவு 17-ன்படி, மாவட்ட ஆட்சித் தலைவர், தலைமையில் ஐந்து உறுப்பினர்கள் கொண்ட மாவட்ட

அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மாநில அளவில் முதல்வர் தலைமையில், உயர்மட்ட கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. இதற்காக 2012-2013 ஆம் ஆண்டிற்கு ரூ.2.25 கோடி நிதி ஒதுக்கியுள்ளார்கள்.

மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அரசு, பழங்குடியினர் நலனைக் காக்கவும், அவர்களின் கல்வி, பொருளாதார நிலை மேம்பாடு அடையவும், பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் ரூ.349.31 கோடியினை ஒதுக்கியது. இது 1.25 விழுக்காடாகும். பழங்குடியினர் மக்கள் தொகை விகிதாச்சாரமான 1.04 விழுக்காட்டைவிட அதிகமாகும் என்பதை இந்த மாமன்றத்தில் பதிவு செய்ய விரும்புகின்றேன்.

மாநிலத்தில் 36 வகை பழங்குடியினர்களில் 6 வகை பழங்குடியினர்களான தோடா, கோட்டா, குரும்பாஸ், இருளர், பனியன் மற்றும் காட்டு நாயக்கன் ஆகியோர் அழிந்து வரும் நிலையிலுள்ள பழங்குடியினர் எனக் கண்டறியப்பட்டுள்ளனர். அம்மக்களுக்கு வருவாய் ஈட்டித் தரும் தொழில்களுக்கும், தேவையான அடிப்படை வசதிகள் செய்வதற்கும் ரூ.10.76 கோடி செலவில் பணி மேற்கொள்ளப்படுகிறது.

பழங்குடியினரும், மலைவாழ் மக்கள் வாழும் பகுதிகளுக்கு, சாலை மற்றும் போக்குவரத்து வசதி செய்து மற்ற நகரங்களுடன் அவர்களை இணைத்து, அவர்களின் கைத்தொழில், பொருளாதார மேம்பாட்டுக்கு நிதி உதவிகள் வழங்கி, கல்வி மற்றும் வேலைவாய்ப்பில் முன்னுரிமை தந்து ஆதி திராவிடர்களை ஜோதி திராவிடர்களாக ஒளிரச் செய்து வருபவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே.

இந்திய அரசியலமைப்புச் சட்டப் பிரிவுக் கூறு 275(1)-ன்படி மத்திய அரசின் நிதியுதவியின்கீழ், சேலம் மாவட்டம், அபிநவம் மற்றும் விழுப்புரம் மாவட்டம், வெள்ளிமலை ஆகிய இரு ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளை நிருவகிக்கவும், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளில் அடிப்படை வசதிகளை மேம்படுத்தி, வனப் பாதுகாப்புச் சட்டம், 2006-ஐச் செயல்படுத்த, 2012-2013 ஆம் ஆண்டுக்கு ரூ.6.14 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



தாட்கோ நிறுவனத்தின் மூலதனமானது மாநில, மத்திய அரசுகளால் 51:49 விகிதத்தில் பகிர்ந்து கொள்ளப்படுகிறது. இப்பங்கு மூலதனமானது, தாட்கோமூலம் செயல்படுத்தப்படும் வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களுக்குக் குறைந்த வட்டியில், விளிம்புக் கடன் தொகையாக ஆதி திராவிட மக்களுக்கு வழங்கப்பட்டு வந்தது. தாட்கோ நிறுவனம் வழங்கிய கடன் வசூல் பெருமளவு குறைந்துவிட்ட நிலையில், இந்நிறுவனம் நலிவுற்ற நிலையில் இருந்தது. அதற்கு புத்துணர்வு அளிக்கும் வகையில் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான், சென்ற ஆண்டில் ரூ.13.26 கோடி நிதியினை ஒதுக்கி, புத்துயிரூட்டினார் என்பதையும் இம்மான்றத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல், 2012-2013 ஆம் ஆண்டிற்கும் ரூ.13.26 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்கள்.

தாட்கோ நிறுவனம்மூலம், 1,059 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் சீரமைப்புப் பணிகள், 779 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் கழிப்பறைகள், 49 புதிய விடுதிகள் மற்றும் 10 சமுதாய நலக் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகள் 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.138.42 கோடி செலவில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

நபார்டு ஊரக உட்கட்மைப்பு மேம்பாடு 12 மற்றும் 14-வது திட்டத்தின்கீழ் 121 பள்ளிகள் மற்றும் 249 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்பு பகுதிகளின் உள்கட்டமைப்பு பணிகள், ரூ.161.01 கோடியில் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியார் கட்டடங்களில் இயங்கி வந்த 93 விடுதிகளில் 49 விடுதிகளுக்கு ரூ.30.95 கோடியில் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. மீதமுள்ள 44 விடுதிகளுக்கும் இந்த ஆண்டில் சொந்தக் கட்டடம் நபார்டு திட்டத்தில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த இடத்தில் நான் ஒன்றைக் குறிப்பிட்டாக வேண்டும். கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக அரசானது, ஐந்து ஆண்டுகளாக எந்த விடுதிக் கட்டடமும் கட்டவில்லை. அதேபோன்று சமுதாயக்கூட கட்டடமும் கட்டவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான், எங்கெங்கெல்லாம் விடுதிகள் தேவை இருந்ததோ, தேவையின் அடிப்படையில் அங்கெல்லாம் இடங்கள் தேர்வு செய்யப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது புதிய விடுதிகளைக் கட்டிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதையெல்லாம் கண்ணுற்றபொழுது மாண்புமிகு புரட்சித் தலைவி

அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகுதான் இந்த ஆதி திராவிடர் நலத் துறை மேம்பட்டது தெரியும். இந்த ஆதி திராவிடர் நலத் துறை பற்றி ஒவ்வொரு ஆண்டும், பட்ஜெட் புத்தகத்தைப் பார்த்தால் ஒரு பத்து வரிகள்தான் வரும். மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகுதான், கிட்டத்தட்ட இரண்டு வருடங்களாகப் பார்க்கிறேன்; 3 பக்க அளவிற்கு ஆதி திராவிட நலத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்து, பட்ஜெட் புத்தகத்திலேகூட 3 பக்கம் கொடுக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அளவிற்கு சிறப்பைப் பெற்றதாக இருப்பதும் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில்தான்.

பிற்பகல் 2-10

ஆதி திராவிட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக, பல்வேறு வகையான வருவாய் ஈட்டக்கூடிய திட்டங்களின்கீழ் எப்போதும் இல்லாத வகையில், 51,479 ஆதி திராவிடப் பயனாளிகளுக்கு 2011-2012-ல் ரூ.79.86 கோடி அளவிற்கு மானியமும், ரூ.145 கோடி அளவிற்கு வங்கிக் கடனும் பெற்றுத் தரப்பட்டுள்ளது. ஏன் இதைச் சொல்கிறேன் என்றால், தாட்கோ கடனே கொடுக்கவில்லை என்று சொன்னார்கள். திரு. லாசர் அவர்கள்தான் சொன்னார் என்று நினைக்கிறேன். 51,479 பேருக்கு இந்த வருடம் வங்கிக் கடன் மட்டும் தாட்கோ மூலமாக வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் வங்கியிடமிருந்து கொடுத்தது மட்டும் ரூ.145 கோடி. தாட்கோ மூலமாகக் கொடுக்கப்பட்ட subsidy மட்டும் ரூ.79.86 கோடி. கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சிக் காலத்தில் வழங்கப்படாமல் நிலுவையில் இருந்த ரூ.21 கோடி மானியமும் இந்தாண்டு மாண்புமிகு அம்மா அவர்கள்தான் விடுவித்திருக்கிறார்கள்; (மேசையைத் தட்டும் ஒலி) அதுவும் கடனாக வழங்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள், ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண, தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக, 2011-2012 ஆம் ஆண்டு தாட்கோமூலம் செயல்படுத்தப்படும் வருவாய் ஈட்டக்கூடிய தனி நபர் திட்டங்களுக்காக, திட்ட மதிப்பீட்டில் 30 விழுக்காடு அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்பட்டு வருகிறது. கடந்த ஆட்சிக் காலத்தில் ரூ.25,000 மட்டுமே மானியமாக வழங்கப்பட்டு வந்தது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



ஆதி திராவிட மக்கள் அதிகமான அளவில் பயன்பெறும் வகையில், அம்மக்களின் ஆண்டு வருமானம் ஒரு இலட்சம் வரை உள்ளவர்கள் தாட்கோமூலம் செயல்படுத்தப்படும் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்கள் பெறத் தகுதி உடையவர்களாக மாண்புமிகு அம்மா அவர்களால் 2011-2012 ஆம் ஆண்டில் ஆணையிடப்பட்டு, தற்போது செயல்படுத்தப்பட்டு வருகிறது. அதற்கு முன்பெல்லாம், அவர்களுடைய ஆண்டு வருமான உச்ச வரம்பு ரூ.40,000 என்று இருந்தது. அதனாலே யாருமே கடன் பெற முடியவில்லை. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வந்ததற்குப் பிறகுதான் இந்த இனத்து மக்கள் முன்னேற வேண்டும் என்பதற்காகத்தான் ஒரு இலட்சம் ரூபாயாக அவர்களுடைய ஆண்டு வருமான உச்சவரம்பை உயர்த்தியுள்ளார்கள் என்பதையும் இந்தத் தருணத்தில் குறிப்பிட விரும்புகிறேன்.

மாநில அரசின் சிறப்பு நிதியுதவித் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிடர்களும் பயன்பெறும் வகையில் அவர்களுக்குத் திறன் வளர்க்கும் பயிற்சிக்காக ரூ.25 கோடி செலவில் பல்வேறு வகையான வேலைவாய்ப்பு சார்ந்த பயிற்சிகள் சுமார் 25 ஆயிரம் இளைஞர்களுக்கு வழங்கப்பட்டு, பயிற்சி முடித்தவுடன், பயிற்சி பெற்றவர்களில் 50 விழுக்காடு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உறுதியும் அளிக்கப்படுகிறது. தமிழக மக்கள் நலனை மட்டுமே மனதில் நினைத்து, தமிழர்களுக்காக ஆட்சி செய்து,

அறிவை வளர்த்திட வேண்டும் - மக்கள்
அத்தனை பேருக்கும் ஒன்றாய்,
பிரியோரை மேம்பட செய்தால், பின்பு
தெய்வம் எல்லோரையும் வாழ்த்தும்

என்றார் பாரதியார். அன்னாரின் வரிகளுக்கேற்ப அன்பு தெய்வம், அறிவு தெய்வம், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கல்வியை மேம்படுத்தும் முகமாக, பல திட்டங்களைச் செயல்படுத்தி, ஏழைகளின் ஒட்டுமொத்த நலன் காத்து வாழ வைப்பதால், தெய்வம் வாழ்த்துகிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரு விஞ்ஞானி தவளையைப் பிடித்து, ஆராய்ச்சி செய்கிறார். உயிரோடு தவளையை தரையில் கிடத்தி, 'ஜம்ப்' என்கிறார். அதுவும் 'ஜம்ப்' ஆகிறது. ஒரு காலை வெட்டுகிறார், உடனே 'ஜம்ப்' என்கிறார்,

அந்தத் தவளையும் 'ஜம்ப்' செய்கிறது. அந்தத் தவளையின் இரண்டாவது காலை வெட்டுகிறார், 'ஜம்ப்' என்கிறார், அந்தத் தவளை குதிக்கிறது. மூன்றாவது காலை வெட்டுகிறார், தவளையை 'ஜம்ப்' என்கிறார். அதுவும் குதிக்கின்றது. அடுத்து, நான்காவது காலை வெட்டியவுடன் 'ஜம்ப்' என்கிறார். அந்தத் தவளை போட்ட இடத்திலேயே கிடக்கிறது. உடனே அந்த விஞ்ஞானி, அதி மேதாவி, நான் கண்டுபிடித்து விட்டேன், கண்டுபிடித்துவிட்டேன் என்று ஊரைக் கூட்டுகிறார். மக்கள் எல்லாம் வந்து பார்க்கிறார்கள். அப்போது, 'தவளையின் நான்கு கால்களை வெட்டியவுடன் அதற்குக் காது கேட்பதில்லை என்பதைக் கண்டுபிடித்துவிட்டேன்' என்று அந்த விஞ்ஞானி, அதி மேதாவி சொல்கிறார். இப்படித்தான் இங்கே சபைக்கே வராத ஒருவர் வெளியில் பிதற்றிக்கொண்டு தான் என்ன செய்வதென்றே தெரியாமல் பிதற்றிக் கொண்டிருக்கிறார் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அம்மாவின் காலத்தில் வாழ்வதே பெருமை, அம்மாவின் நல்லாட்சியே அருமை. நிறைவாய் தமிழகத்தை தலைநிமிரச் செய்து, நலிவடைவோர் யாண்டு, ஈங்கில்லை என்று, நல்லாட்சி புரிந்திடும் மாதரசியாம், மக்களுக்காக மகத்தான பணி செய்யும் மாமணியாம். ஆணாதிக்கத்தின் பிடியில் சிக்கித் தவித்த தமிழக அரசியல் சதுரங்கத்தில் அரசியல் சூழ்ச்சியில் ஆண்களுக்கு நிகர் என்ன, அதைவிட பன்மடங்கு அதிகமாகவே மக்கள் சேவை செய்ய முடியும் என்று நிரூபித்துக்காட்டி, *(மேசையைத் தட்டும் ஒலி)* இந்தியாவிற்கே, இல்லை, உலகத்திற்கே முன்னோடியாக, முதல் மாநிலமாக, தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லும், துணிச்சலில் வேங்கை, தொண்டிலே வாழை, உழைப்பிலே தேனீ, உள்ளத்திலே வானம், அரசியலில் அறிவுச் சுரங்கம், ஆற்றலில் பெருங்கடல், சிந்தனைப் பேரொளி, குருட்டுக் கண்களைத் திறக்க வந்த அறிவு மருத்துவர், மொத்தத்தில் என் கடன் பணி செய்து இருப்பதே என வாழ்ந்துவரும் விடிவெள்ளியான தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பணிந்து வணங்குகிறோம்.

*பிற்பகல் 2-15*

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் இந்த



ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் குடியிருப்புகளில் திருமணம் உள்ளிட்ட சமுதாய நிகழ்ச்சிகள் நடத்துவதற்கு 10 சமுதாயக் கூடங்கள் ரூ.150 இலட்சம் செலவில் கட்டிடவும், ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு செய்முறை பயிற்சிக்காக 75 பள்ளிகளுக்கு தலா ஒரு இலட்சம் வீதம் அறிவியல் ஆய்வுக்கூட உபகரணங்கள் வழங்கவும், 1,277 ஆதி திராவிடர் நல விடுதிகளில் சமையல் எரிவாயு இணைப்பு வழங்கப்படாத 180 விடுதிகளுக்கு தலா ரூ.30,000 வீதம் ரூ.54 இலட்சம் செலவில் சமையல் எரிவாயு வழங்கவும், 41 ஆதி திராவிடர் நல மேல்நிலைப் பள்ளிகளுக்கு தலா ரூபாய் ஒரு இலட்சம் வீதம் ரூபாய் 41 இலட்சம் செலவில் நூலகப் புத்தகங்கள் வழங்கவும், ஆதி திராவிடர் நலப் பள்ளி விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு சுத்தமான குடிதண்ணீர் வழங்க ரூபாய் 18 இலட்சம் செலவில் 200 விடுதிகளுக்கு குடிநீரைத் தூய்மைப்படுத்தும் கருவி வழங்கவும், மொத்தமுள்ள 299 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் முதற்கட்டமாக 15 உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளிகளில் 2,373 மாணவ, மாணவியர்களுக்கு 791 அடுக்கு கட்டில், மெத்தை, தலையணை மற்றும் இரண்டு படுக்கை விரிப்புகள், ரூபாய் 87 இலட்சம் செலவில் வழங்கிடவும் மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள் என்பதை இந்த மாமன்றத்திலே பதிவு செய்ய விரும்புகின்றேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மா அவர்கள், சிங்கம் போல கம்பீரத்துடன் தமிழகத்தை ஆட்சி செய்து வருகிறார். *(மேசையைத் தட்டும் ஒலி)* சிங்கம் ஆக்ரோஷமானது, வீரமானது, ஆற்றல் வாய்ந்தது. எதிரிகள் வாலாட்டினால், சிங்கம் தன்னுடைய கூரிய பற்களால், எதிரிகளை நார் நாராகக் கிழித்துவிடும், அதே சிங்கம், தன்னுடைய குட்டிகளைப் பாசத்துடன் கவ்வும்போது, அந்தக் குட்டிகளுக்கு வலியே தெரியாது, ஏனென்றால், சிங்கம் பாசத்தோடும், தாய்மை உணர்வோடும், கருணையோடும், குட்டிகளைக் கவ்வும். அதுபோல்தான் எதிரிகளை வேரோடும், வேரடி மண்ணோடும் புறமுதுகிட்டு ஓடச் செய்யும். அதுபோல் மாண்புமிகு அம்மா அவர்கள், தமிழக மக்களைப் பாதுகாப்பதில் குட்டிகளைக் கவ்வும் தாய் சிங்கம்போல, தாய்மையோடு பாதுகாக்கிறார்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)*

வரலாற்றுச் சிறப்புமிக்க புதுக்கோட்டை நகராட்சியின் நூற்றாண்டை முன்னிட்டு, மாண்புமிகு அம்மா அவர்கள் புதுக்கோட்டை மாநகரைப் புதுப்பிக்கவும், அதன் வளர்ச்சிப் பணிகளுக்காகவும் ரூபாய் 50 கோடி நிதியை வழங்கி இருக்கிறார்கள். பணிகள் தொடங்கப்பட்டவுடன் புதுக்கோட்டை மாநகரம் பெயருக்கு ஏற்றாற்போல், புதிய கோட்டையாக புதுப்பொலிவு பெற்றுத் திகழப் போகிறது.

பாட்டுக்கு ஒரு கோட்டை பட்டுக்கோட்டை, செட்டி நாட்டுக்கு புகழ் சேர்க்கும் தேவகோட்டை! திருச்சிக்கு அடையாளம் மலைக் கோட்டை, திருக்கோயில் நகரமாம் காஞ்சிதான் கலைக் கோட்டை! அம்மா அவர்கள் ஆட்சி செய்வதோ செயின்ட் ஜார்ஜ் கோட்டை, நாளை அம்மாவின் தலைமைக்குக் காத்திருப்பதோ டெல்லி செங்கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) புதுக்கோட்டை மாண்புமிகு அம்மா அவர்களின் எஃகுக் கோட்டை, புதுக்கோட்டை அது எதிரிகளை தவிடுபொடியாக்கும் அம்மாவின் வெற்றிக்கோட்டை. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டில் இத்துறை மீதான மானியக் கோரிக்கையில் மாண்புமிகு அம்மா அவர்களின் உத்தரவுப்படி வெளியிடப்பட்ட அறிவிப்புகள் அத்தனையும் நிறைவேற்றப்பட்டுள்ளன. சென்ற மைனாரிட்டி ஆட்சியில் பெயரளவில் மட்டுமே இருந்த ஆதி திராவிடர் நலத் துறை மாண்புமிகு அம்மாவின் அறிவார்ந்த தலைமையில் இன்று புத்தெழுச்சி பெற்று அடித்தட்டு மக்கள் மாண்புமிகு அம்மாவை வாழ்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் ஆணைப்படி புதிய அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்.

### 1. இரண்டு சிறப்பு நீதிமன்றங்கள் உருவாக்குதல்

வன்கொடுமையால் பாதிக்கப்படும் ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் வழக்குகளை விசாரிக்க நான்கு சிறப்பு நீதிமன்றங்கள் திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. விழுப்புரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் வழக்குகள் அதிக அளவில் நிலுவையில் உள்ளதால், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, விழுப்புரம் (கடலூருடன் சேர்த்து) மற்றும் சிவகங்கை (இராமநாதபுரத்துடன் சேர்த்து) மாவட்டங்களில் சிறப்பு நீதிமன்றங்கள், ஒரு நீதிமன்றத்திற்கு ரூ.75.00 இலட்சம் வீதம் மொத்தம் ரூ.150.00 இலட்சம் செலவில் உருவாக்கப்படும்.



### 2. தீண்டாமை கடைப்பிடிக்காத கிராமங்களுக்கு வழங்கப்படும் ஊக்கத் தொகையினை உயர்த்துதல்

ஒவ்வொரு மாவட்டத்திலும் தீண்டாமையினைக் கடைப்பிடிக்காமல் நல்லிணக்கத்துடன் மக்கள் வாழும் கிராமம் ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டு தற்போது ரூ.2.00 இலட்சம் அடிப்படை வசதிகளை மேம்படுத்த உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இத்தொகை ரூ.10.00 இலட்சமாக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதற்காக ஆண்டு ஒன்றிற்கு ரூ.310.00 இலட்சம் (சென்னை நீங்கலாக) வழங்கப்படும்.

### 3. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கான ஆசிரியர்களை சிறப்புத் தேர்வின்மூலம் நியமனம் செய்தல்

பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பணியமர்த்தப்படும் ஆசிரியர்கள் பணியில் சேருவது இல்லை அல்லது பணியில் சேர்ந்த பிறகு பணி மாறுதல்மூலம் அப்பள்ளியை விட்டுச் சென்று விடுகின்றனர். அதனால் குழந்தைகளின் கல்வி பாதிக்கப்படுவதைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, வனத் துறையில் உள்ளது போல "Out of Turn" முறையில், வேலைவாய்ப்புத் துறையிலிருந்து 1:5 விகிதாசாரத்தில் பெறப்படும் விருப்பமுள்ள ஆசிரியர்கள் பட்டியலில் இருந்து இன சுழற்சி முறையின்மூலம் ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர் அல்லது விளம்பரங்களின்மூலம் வெளிச்சந்தையில் (Open Market) இருந்து ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்படுவர். காலிப் பணியிடங்களை நிரப்பிக்கொள்ள பழங்குடியினர் நலத் துறைக்கு அதிகாரம் அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

### 4. ஆதி திராவிடர் நலப் பள்ளிகளைப் புதுப்பித்தல் மற்றும் பராமரித்தல்

1,45,493 மாணவ, மாணவியர்கள் 1,095 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் பயில்கின்றனர். 30 வருடங்களுக்கு முன்பு கட்டப்பட்ட தொடக்கப் பள்ளிகளைப் புதுப்பிக்கவும், சீர் செய்யவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க,

முதற்கட்டமாக ரூ.30.00 கோடி செலவில் 200 தொடக்கப் பள்ளிகள் புதுப்பிக்கும் பணி மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 2-20

**5. அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பெண்களுக்கான கூடுதல் வகுப்பறை/விடுதி கட்டுதல்**

தமிழ்நாட்டில் மொத்தம் 297 அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் உள்ளன. மேலும், 2 ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளும் உள்ளன. இவற்றில் 199 தொடக்கப் பள்ளிகள், 61 நடுநிலைப் பள்ளிகள் மற்றும் 39 மேல்நிலை/ உயர்நிலைப் பள்ளிகள் அடங்கும். தொடக்கப் பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் மாணவ, மாணவியருக்கு வகுப்பறைகளே விடுதிகளாகவும் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. மாணவியர்களுக்கென தனியாக விடுதிகள் இல்லை. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, முதற்கட்டமாக 20 தொடக்கப் பள்ளிகளிலும், 10 நடுநிலைப் பள்ளிகளிலும் அனைவருக்கும் கல்வி திட்டத்தின் (SSA) மூலம் கூடுதல் வகுப்பறை/விடுதிகள் கட்டப்படும்.

**6. இந்திய ஆட்சிப் பணிக்கான பயிற்சி வகுப்புகளுக்கு ஊக்கத் தொகையினை உயர்த்துதல்**

மத்திய அரசின் UPSC முதனிலைத் தேர்வில் (Preliminary) தேர்ச்சி பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவ, மாணவியர்களுக்கு ரூ.25,000 (ரூ.15,000 புத்தகங்களுக்கும் ரூ.10,000 இடைநிகழ் செலவினங்களுக்கும்) வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இத்தொகை, அவர்கள் முதன்மைத் தேர்வு (Main) எழுதுவதற்கு முன்பாக சிறந்த கல்வி நிறுவனங்களில் பயிற்சி பெற ஏதுவாக ரூ.50,000 ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**7. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயிலும் முதல் மதிப்பெண் பெறும் மாணவ/மாணவியருக்கு மாநில அளவிலான பரிசுத் தொகை**

ஒவ்வோர் ஆண்டும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் தேர்ச்சி பெறுவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின்



ஆணைக்கிணங்க, இத்துறையின்கீழ் இயங்கும் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிருத்தவ ஆதி திராவிட மாணவ/மாணவியர்களை ஊக்கப்படுத்த மாநில அளவில் பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

| பரிசுகள் | மாணவர்களின் எண்ணிக்கை | பரிசுத் தொகை | |
|---|---|---|---|
| | | 10 ஆம் வகுப்பு | 12 ஆம் வகுப்பு |
| முதல் பரிசு | 01 | ரூ.10,000/- | ரூ.10,000/- |
| இரண்டாம் பரிசு | 01 | ரூ.7,000/- | ரூ.7,000/- |
| மூன்றாம் பரிசு | 01 | ரூ.5,000/- | ரூ.5,000/- |

மூன்று பிரிவினரில் 18 மாணவ/மாணவியருக்கு ஒவ்வொரு ஆண்டும் ரூ.1,32,000 செலவில் பரிசுத் தொகைகள் வழங்கப்படும்.

**8. எழுத்தாளர்களுக்கு வழங்கப்படும் பரிசுத் தொகையை உயர்த்தி வழங்குதல்**

ஆதி திராவிடர்/பழங்குடியினர்/மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிட இனத்தைச் சேர்ந்த பத்து எழுத்தாளர்கள் மற்றும் ஆதி திராவிடரல்லாத ஒரு எழுத்தாளருக்கு ஒவ்வொரு வருடமும் சிறந்த படைப்புகளுக்காக ஒருவருக்கு ரூ.20,000 வழங்கப்பட்டு வருகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, இனி ஒரு எழுத்தாளருக்கு ரூ.40,000/- என உயர்த்தி வழங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)

**9. பழங்குடியினருக்கான சிறப்புப் பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள்**

மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, பழங்குடியினரின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும், பழங்குடியின இளைஞர்கள் வேலைவாய்ப்பு பெறும் வகையிலான திட்டங்களைச் செயல்படுத்தவும், பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களை வலுப்படுத்தவும், உள்கட்டமைப்பு மேம்பாடு, வறுமை ஒழிப்புத் திட்டங்களோடு ஒருங்கிணைந்த ஒரு முன்னோடித் திட்டம் ரூ.50.00 கோடி செலவில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

**10. புதிய ஆதி திராவிடர் நல விடுதிகள் துவங்குதல்**

*தற்போது தமிழ்நாட்டில் 1,317 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகள் உள்ளன. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, 2012-2013 ஆம் நிதியாண்டில் மாணவ/மாணவியர்களின் தேவை கருதி 25 புதிய விடுதிகள் ஆதி திராவிடர் மாணவ/மாணவியர்க்கென துவங்கப்படும் (மேசையைத் தட்டும் ஒலி)*

**11. விடுதிகளுக்கு எடைக் கருவி வழங்குதல்**

*ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின்கீழ் 1,616 விடுதிகளுக்கு சமையல் பொருட்களை சரியான அளவில் பெற்றிடவும், விநியோகிக்கவும் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் ஆணைக்கிணங்க, மின்னணு எடைக்கருவி (50 கிலோ வரை அளவிட) ஒன்று ரூ.5,000 வீதம், ரூ.80.80 இலட்சம் செலவில் 1,616 விடுதிகளுக்கும் எடைக் கருவிகள் வழங்கப்படும்.*

**12. ஆதி திராவிடர்/பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளுக்கு சுகாதாரக் குட்டை தகனி (Napkin Burner) வழங்குதல்**

*தமிழ்நாட்டில் 1,277 ஆதி திராவிடர் நல விடுதிகளும், 40 பழங்குடியினர் நல விடுதிகளும், 299 பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளும் உள்ளன. இவற்றில் 466 ஆதி திராவிடர் பெண்கள் விடுதிகளும், 16 பழங்குடியினர் நல விடுதிகளும், 100 நடுநிலை/உயர்நிலை/மேல்நிலை உண்டி உறைவிடப் பள்ளிகளும், ஆக மொத்தம் 582 விடுதிகள் மற்றும் உண்டி உறைவிடப் பள்ளிகள் பெண்களுக்காக உள்ளன. இந்த விடுதி/உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் மாணவிகளின் சுகாதார நலனைப் பாதுகாக்க சுகாதாரக் குட்டை தகனி* (Napkin Burner) *தலா ரூ.15,000 விலையில் ரூ.87.30 இலட்சம் செலவில் வழங்க மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இம்மானியக் கோரிக்கை விவாதத்தில் பங்கு பெற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவருக்கும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய மானியக் கோரிக்கை எண் 4-ன்மீது மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்களைப் படித்துப் பார்த்தேன். இந்த மானியக் கோரிக்கை தொடர்பாக, மாண்புமிகு மாமன்ற உறுப்பினர்கள் வழங்கிய ஆலோசனைகளுக்கும், கருத்துகளுக்கும் வேண்டிய விளக்கங்களை, எனது பதிலுரையில் அளித்துள்ளேன் எனக் கருதுகிறேன். எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் வெட்டுத் தீர்மானங்களில் சுட்டிக்காட்டிய கருத்துகளையும், திட்டங்களையும் நன்கு பரிசீலித்து, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, உரிய வகையில் நடவடிக்கை எடுக்கும் என்பதைப் பண்போடு தெரிவித்துக்கொண்டு, வெட்டுத் தீர்மானங்களை அளித்த மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள், அவற்றைத் திரும்பப் பெற்றுக்கொண்டு, இம்மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொண்டு, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்கள் பணிந்து வணங்கி என் உரையை நிறைவு செய்கிறேன், நன்றி (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் விளக்கமாக பதில் அளித்திருக்கின்றார்கள். நேரம் இப்போது 2 மணி 24 நிமிடங்கள். இதற்கு மேலும் விளக்கம் கேட்பது சரியா? (குறுக்கீடு) திரு. க. பாண்டியராஜன், please sit down, நீங்கள் அந்த point-ஐ note செய்து வைத்துக்கொள்ளுங்கள், வேறு ஒரு சந்தர்ப்பத்தில், ஆதி திராவிடர் குறித்த வினா வரும்போது, அதைக் கேளுங்கள். please co-operate.

*பிற்பகல் 2-25*

மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

*வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.*

*"ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய 4 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.1,151,49,48,000/-, மூலதனக் கணக்கில் ரூ.135,21,79,000/- மற்றும் கடன்*

கணக்கில் ரூ.1,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப் பெறுகின்றன. (மேசையைத் தட்டும் ஒலி)

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் 7-5-2012 (திங்கட்கிழமை) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 2-26 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

— ஏதுமில்லை —

### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

165. மானியக் கோரிக்கை எண் 4-ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

166. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)

167. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை பற்றிய வரவு-செலவு செயலாக்கத் திட்டம், 2012-2013. (தமிழ், ஆங்கிலம்)



168. தொழில் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012-2013. (தமிழ்)

169. வணிக வரிகள் (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) மற்றும் முத்திரைத் தாள்கள் மற்றும் பத்திரப் பதிவு (வணிக வரி மற்றும் பதிவுத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012-2013. (தமிழ்)

170. நீதி நிருவாகம் மற்றும் சிறைச்சாலைகள் (உள் துறை, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை) ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012-2013. (தமிழ்)

171. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கையின் மீதான பதிலுரையின்போது மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2012-2013. (தமிழ்)

172. பொது நிறுவனங்கள் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை. (2011-2012)

173. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பதாவது அறிக்கை. (2011-2012)

174. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை. (2011-2012)

175. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்திரண்டாவது அறிக்கை. (2011-2012)

176. பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்துமூன்றாவது அறிக்கை. (2011-2012)

[2012 மே 4

*177.* பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்துநான்காவது அறிக்கை. *(2011-2012)*

*178.* பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை. *(2011-2012)*

*179.* பொது நிறுவனங்கள் குழுவின் முப்பத்தாறாவது அறிக்கை. *(2011-2012)*

*180.* சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் ஒன்றாவது அறிக்கை. *(2011-2012)*

*181.* சட்ட விதிகள் ஆய்வுக் குழுவின் இரண்டாவது அறிக்கை. *(2011-2012)*

*182.* அரசு உறுதிமொழிக் குழுவின் பதினேழாவது அறிக்கை. *(2011-2012)*

*183.* அரசு உறுதிமொழிக் குழுவின் பதினெட்டாவது அறிக்கை. *(2011-2012)*

*184.* அரசு உறுதிமொழிக் குழுவின் பத்தொன்பதாவது அறிக்கை. *(2011-2012)*

*185.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபதாவது அறிக்கை. *(2011-2012)*

*186.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தொன்றாவது அறிக்கை. *(2011-2012)*

*187.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்திரண்டாவது அறிக்கை. *(2011-2012)*

*188.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்துமூன்றாவது அறிக்கை. *(2011-2012)*

*189.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்துநான்காவது அறிக்கை. *(2011-2012)*

*190.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தைந்தாவது அறிக்கை. *(2011-2012)*



2012 மே 4]

*191.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தாறாவது அறிக்கை. *(2011-2012)*

*192.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தேழாவது அறிக்கை. *(2011-2012)*

*193.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தெட்டாவது அறிக்கை. *(2011-2012)*

*194.* அரசு உறுதிமொழிக் குழுவின் இருபத்தொன்பதாவது அறிக்கை. *(2011-2012)*

*195.* அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பதாவது அறிக்கை. *(2011-2012)*

*196.* அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்தொன்றாவது அறிக்கை. *(2011-2012)*

*197.* அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்திரண்டாவது அறிக்கை. *(2011-2012)*

*198.* அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்துமூன்றாவது அறிக்கை. *(2011-2012)*

*199.* அரசு உறுதிமொழிக் குழுவின் முப்பத்துநான்காவது அறிக்கை. *(2011-2012)*

****

## இணைப்பு

*(66 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 4—ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2012—2013

*"அங்கே எந்த இளைஞனும் வேலையின்றி இல்லை,
அங்கே ஏழ்மை முற்றிலும் ஒழிக்கப்பட்டிருக்கிறது,
அங்கே ஒவ்வொரு குடிமகனும் அடிப்படை
வசதிகளைப் பெற்றுள்ளார்.
அங்கே அனைத்து மக்களும் வளமாக,
பாதுகாப்பாக, சமாதானத்துடன்
வாழ்கின்றனர் என்ற நிலையுள்ள ஒரு தமிழகத்தை
உருவாக்க விரும்புகிறேன்."*

*புரட்சித் தலைவி ஜெ ஜெயலலிதா
மாண்புமிகு முதலமைச்சர்*

**முன்னுரை**

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 624.06 இலட்சமாக இருந்தது. அதில் ஆதி திராவிட மக்கள் தொகை 118.58 இலட்சமாகவும் (19%), பழங்குடியின மக்கள் தொகை 6.51 இலட்சமாகவும் (1.04%) இருந்தது. 2011 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழ்நாட்டின் மொத்த மக்கள் தொகை 721 இலட்சமாக உயர்ந்துள்ளது. அதில் ஆதி திராவிடர் / பழங்குடியினரின் மக்கள் தொகை ஏறக்குறைய அதே விழுக்காடு அளவில் உள்ளது.

ஆதி திராவிட மக்கள் தொகை அதிகம் உள்ள மாநிலங்களில், தமிழ்நாடு, இந்தியாவிலேயே ஐந்தாவது இடத்தில் உள்ளது.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் நிலையான வளர்ச்சியே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசின் முதன்மையான நோக்கமாக உள்ளது.

[2012 மே 4

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களின் சமூக, பொருளாதார மற்றும் கல்வி வளர்ச்சியை, பொதுப் பிரிவினர் அளவிற்கு இணையாகக் கொண்டு வருவதை உறுதி செய்ய, தமிழக அரசு, பொருளாதார வளர்ச்சிக்காக பல்வேறு திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்வதுடன் குடிநீர், வீட்டுமனைகள் மற்றும் இணைப்புச் சாலைகள் வழங்குதல், ஆரம்பப் பள்ளிகள், விடுதிகள் மற்றும் சமுதாயக் கூடங்கள் கட்டுதல் போன்ற அடிப்படை வசதிகளையும் உருவாக்கி வருகிறது.

**கல்வி**

நல்ல தரமான கல்வியை வழங்குவதன் வாயிலாக, ஒடுக்கப்பட்ட சமுதாய மக்களின் சமூக நிலை மற்றும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த முடியும். கல்வி அறிவு விகிதமே ஒரு சமுதாயத்தின் சமூக-பொருளாதார நிலையினைக் கண்டறியும் ஒரு முக்கிய குறியீடாகும். எனவே, ஆதி திராவிடர் / பழங்குடியினரின் கல்வி மேம்பாட்டிற்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது. கல்வி அறிவு விகிதத்தினை உயர்த்தவும், பள்ளிப் படிப்பிலிருந்து இடைநிற்றலைக் குறைக்கவும் எண்ணற்ற திட்டங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசால் அறிவிக்கப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. 2002-2003 ஆம் ஆண்டில் 89% ஆக இருந்த பள்ளிச் சேர்க்கை விகிதம் தற்பொழுது 99.36% ஆக உயர்ந்துள்ளது மற்றும் 1.99% ஆக இருந்த இடைநிற்றல் விகிதம் 0.88% ஆகக் குறைந்துள்ளது.

1981-ல் இருந்து, தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் / பழங்குடியினரின் கல்வியறிவு விழுக்காடு பின்வருமாறு:

| இனம் | மக்கள் தொகை கணக்கெடுப்பு | | | |
|---|---|---|---|---|
| | 1981 (விழுக்காடு) | 1991 (விழுக்காடு) | 2001 (விழுக்காடு) | 2011 (விழுக்காடு) |
| பொது | 54.40 | 62.70 | 73.45 | 80.33 |
| ஆதி திராவிடர் | 29.67 | 46.74 | 63.19 | 70.20* |
| பழங்குடியினர் | 20.46 | 27.89 | 41.53 | 46.32* |

(*தோராய மதிப்பீடு)



2012 மே 4]

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் கல்வி அறிவு விழுக்காடு அதிகரித்து வருகிறது. பொதுப் பிரிவினரின் கல்வி அறிவு விழுக்காடு மற்றும் ஆதி திராவிட / பழங்குடியினரின் கல்வியறிவு விழுக்காடு இவற்றிற்கிடையே உள்ள வேறுபாட்டை வெகுவாகக் குறைக்கும் நோக்கில் வரவு செலவுத் திட்டத்தில் கல்வி மற்றும் கல்வி சார்ந்த திட்டங்களுக்காக சுமார் 81.65 விழுக்காடு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஆதி திராவிடர் / பழங்குடியினர் நலத் துறையின்கீழ் இயங்கும் பள்ளிகள் மற்றும் மாணவ / மாணவியரின் எண்ணிக்கை பின்வருமாறு:

| தொடர் எண் | பள்ளிகளின் வகைப்பாடு | பள்ளிகளின் எண்ணிக்கை | மாணவ / மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஆதி திராவிடர் நலப் பள்ளிகள் | 1,095 | 1,45,493 |
| 2(அ) | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் | 297 | 30,116 |
| (ஆ) | ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளி | 2 | 767 |
| | **மொத்தம்** | **1,394** | **1,76,376** |

2011-2012-ல் 10 நடுநிலைப் பள்ளிகள் (8 ஆதி திராவிட, 2 பழங்குடியின) உயர்நிலைப் பள்ளிகளாகவும், 10 உயர்நிலைப் பள்ளிகள் (8 ஆதி திராவிட, 2 பழங்குடியின) மேனிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்பட்டன.

**1. கல்வி உதவித் தொகைத் திட்டங்கள்**

**(அ) 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post-Matric) மத்திய அரசு உதவித் தொகைத் திட்டம்**

"மத்திய அரசு, கல்வி உதவித் தொகை திட்டம்" 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட கல்வி பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின மாணவ/மாணவியருக்காக செயல்படுத்தப்பட்டு

*வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன்பெற பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமான உச்சவரம்பு ரூ.2 இலட்சம் என 01-07-2010 முதல் மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கல்வி பயிலும் ஆதி திராவிட/பழங்குடியின மாணவ/மாணவியர்க்கு இக்கல்வி உதவித் தொகை கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகிறது.*

**பராமரிப்புப் படிகள்**

| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படிகள் (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | மாணவர் இல்லங்களில் தங்கும் மாணவர் களுக்கு | மாணவர் இல்லங்களில் தங்காத மாணவர்களுக்கு |
| I | மருத்துவத்தில் பட்டப்படிப்பு மற்றும் பட்ட மேற்படிப்பு, பொறியியல் மற்றும் தொழில் நுட்பக் கல்வி, விமான ஓட்டுநர் பயிற்சி, மேலாண்மை மற்றும் மருத்துவத்தில் முதுநிலை பட்டயப்படிப்பு, CA / CWA/ CS / CFA மற்றும் LLM, M.Phil., PhD. | 1200 | 550 |
| II | 12 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாக கொண்ட தொழில் கல்வியில் பட்டப்படிப்பு, பட்டயம் மற்றும் சான்றிதழ் படிப்பில் மருந்தாக்கியல், செவிலியர், LLB, விருந்தோம்பல், சுற்றுலா, போக்குவரத்து மற்றும் ஹோட்டல் மேலாண்மை போன்ற படிப்புகள் மற்றும் தொகுதி I-ல் சாராத முதுநிலைப் பட்டப் படிப்புகள் (எ.கா. M.A.,/ M.Sc.,/ M.Com.,/ M.Ed.,/ M.Pharm., etc., | 820 | 530 |





| தொகுதி | படிப்புகள் | ஒரு மாதத்திற்கான பராமரிப்புப் படிகள் (ரூபாயில்) | |
|---|---|---|---|
| | | மாணவர் இல்லங்களில் தங்கும் மாணவர் களுக்கு | மாணவர் இல்லங்களில் தங்காத மாணவர்களுக்கு |
| III | தொகுதி I மற்றும் II–ல் இடம் பெறாத இதர பட்டப்படிப்புகள் | 570 | 300 |
| IV | 10 ஆம் வகுப்பு படிப்பினை நுழைவுத் தகுதியாகக் கொண்ட பட்டப்படிப்பு அல்லாத படிப்புகள் (எ.கா. XI, XII, ITI, தொழில் பயிற்சிக் கல்வி etc.) | 380 | 230 |

*மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக வரலாற்றிலேயே முதன்முறையாக சுய நிதிக் கல்வி நிறுவனங்களில் இலவச / கட்டண இருக்கைகளில் அனுமதிக்கப்பட்ட ஆதி திராவிட / பழங்குடியின மாணவ / மாணவியர்க்கு “சுய நிதி கல்லூரிகளுக்கான கட்டணக் குழு” நிர்ணயித்த கற்பிப்புக் கட்டணம் உட்பட கட்டாய கல்விக் கட்டணங்களை 2011-2012 ஆம் கல்வி ஆண்டு முதல் வழங்க ஆணையிட்டுள்ளார்கள்.*

*இதன்மூலம் சுமார் 26,000 மாணவ/ மாணவியர் பயனடைகின்றனர். அதற்கான கூடுதல் நிதிப் பொறுப்பு ரூ.111.45 கோடி எனக் கணக்கிடப்பட்டுள்ளது. 2011-2012 ஆம் கல்வியாண்டில் 7,42,329 மாணவ / மாணவியருக்கு கல்வி நிறுவனங்கள் வாயிலாக ரூ.360.69 கோடி உதவித் தொகை வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ், மாநில அரசு ஏற்றுள்ள செலவு* (Committed liability) *ஆதி திராவிடருக்கு ரூ.118 கோடியாகவும், பழங்குடியினருக்கு ரூ.68.28 இலட்சமாகவும் உள்ளது. எஞ்சியிருக்கும் செலவுத் தொகை மத்திய அரசால் வழங்கப்படுகிறது.*

*2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.410 கோடி செலவிடப்படும் என எதிர்ப்பார்க்கப்படுகிறது.*

[2012 மே 4

### (ஆ) 10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பிற்கான (Post Matric) மாநில அரசின் சிறப்பு உதவித் தொகை வழங்கும் திட்டம்

*10 ஆம் வகுப்பிற்கு மேற்பட்ட படிப்பு படிப்பவரும், மத்திய அரசின் கல்வி உதவித் தொகை திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை பெற தகுதி பெறாதவரும் ஆகிய கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியருக்கென தனியே சிறப்பு உதவித் தொகை வழங்கும் திட்டத்தை மாநில அரசு செயல்படுத்தி வருகிறது. கிருத்துவ மதம் மாறிய 71,912 ஆதி திராவிட மாணவ/ மாணவியர், இத்திட்டத்தின்கீழ் கல்வி உதவித் தொகை பெற்று வருகின்றனர். பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். தொகுதி-*IV *முதல் தொகுதி-*I *வரை +1 மற்றும் அதற்கு மேல், மாணவர் இல்லங்களில் தங்காது பயிலும்* (Day Scholar) *மாணவ / மாணவியருக்கு மாதமொன்றிற்கு ரூ.100 முதல் ரூ.175 வரை பராமரிப்புக் கட்டணமாக வழங்கப்படுகிறது. தொகுதி-*IV *முதல் தொகுதி-*I *வரை மாணவர் இல்லத்தில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு மாதம் ஒன்றிற்கு ரூ.175 முதல் ரூ.350 வரை வழங்கப்படுகிறது. கல்வி உதவித் தொகையானது அவரவர் கல்வி நிறுவனங்கள் வாயிலாக மாணவ / மாணவியருக்கு வழங்கப்படுகிறது.*

*2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.12.73 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

### (இ) சுகாதாரமற்ற தொழிலில் துப்புரவுப் பணி புரிவோரின் குழந்தைகளுக்கு 10 ஆம் வகுப்பு வரை படிப்பதற்கு (Pre-Matric) மத்திய அரசு உதவித் தொகைத் வழங்கும் திட்டம்

*இத்திட்டத்தின்கீழ் சுகாதாரமற்ற துப்புரவுப் பணி புரிவோரின் குழந்தைகளுக்கு அவர்களது சாதி, மதம் மற்றும் பெற்றோரின் ஆண்டு வருமான வரம்பினைக் கணக்கில் கொள்ளாமல், உதவித் தொகை மற்றும் சிறப்பு உதவித் தொகை* (Adhoc grant) *பின்வருமாறு வழங்கப்படுகிறது:*



2012 மே 4]

| | உதவித்தொகை (திங்கள் ஒன்றுக்கு) | சிறப்பு உதவித் தொகை (ஆண்டொன்றுக்கு) |
|---|---|---|
| மாணவர் இல்லத்தில் தங்காது கல்வி பயிலும் மாணவ / மாணவியருக்கு | **ரூ.110** (1 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை) | **ரூ.750** |
| மாணவர் இல்லத்தில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியருக்கு | **ரூ.700** (3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை) | **ரூ.1,000** |

*2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.1443.60 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

### (ஈ) உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை

*கல்விக் கடன் உதவித் தொகைத் திட்டம் “உயர் கல்வி சிறப்பு உதவித் தொகை”* (HESS) *என மாநில அரசின் நிதியுதவி அடிப்படையிலான திட்டமாக மாற்றப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கல்வி நிறுவன மாணவர் இல்லங்களில் தங்கி பட்டப் படிப்பு பயில்வோருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.7,500-ம், பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில் கல்வி* (Professional Course) *பயில்வோருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.8,000-மும் மானியமாக வழங்கப்படுகிறது. அவர்களின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். 2011-2012 ஆம் ஆண்டில், 39,353 மாணவ / மாணவியர் பயனடைந்துள்ளனர்.*

*2012-2013 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.2,026.47 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

### (உ) அயல்நாடு சென்று உயர் கல்வி பயில உதவித் தொகை

*பொறியியல், தொழில்நுட்பவியல் மற்றும் அறிவியல் சார்ந்த துறைகளில் இந்தியாவில் இல்லாத படிப்புகளில் ஆராய்ச்சிப் படிப்பை மேற்கொள்ள விரும்புகிறவர்கள் அயல்நாடு சென்று*

[2012 மே 4

கல்வி பயில ஊக்குவிக்கப்படுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் 10 மாணவர்களை, ஒவ்வொரு மாணவருக்கும் ரூ.3 இலட்சம் உதவித் தொகை அளித்து ஆராய்ச்சிப் படிப்பினை மேற்கொள்ள அயல்நாட்டிற்கு அனுப்புவதே இத்திட்டத்தின் நோக்கம் ஆகும். பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.3 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும்.

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.21.55 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**2. கல்விக் கட்டணச் சலுகைகள்**

**(அ) கற்பிப்புக் கட்டண விலக்களிப்பு**

அரசு மற்றும் அரசு நிதி உதவி பெறும் கல்வி நிறுவனங்களில் பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர் கற்பிப்புக் கட்டணம் செலுத்துவதிலிருந்து முழுவதுமாக விலக்களிக்கப்படுகிறது. மேற்கண்ட திட்டத்தின் வாயிலாக பயனடைய வருமான உச்ச வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.750.90 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஆ) பட்டப் படிப்பு பயிலும் மாணவ / மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டண விலக்களிப்பு**

பட்டப் படிப்பு பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியரின் பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் மத்திய அரசு நிர்ணயித்துள்ள வருமான உச்ச வரம்பிற்கு மேற்பட்டிருப்பினும் அவர்களுக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

2012-2013 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.94.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ) பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டண விலக்களிப்பு**

பட்ட மேற்படிப்பு படிக்கும் மாணவியருக்கு சிறப்புக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து



2012 மே 4]

விலக்களிக்கப்படுகிறது. இத்திட்டத்தின் வாயிலாக பயனடைய வருமான உச்ச வரம்பு ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை. 2012—2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.52.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஈ) சிறப்புக் கட்டணச் சலுகை**

6 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை கல்வி பயிலும் அனைத்து ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியரின் சிறப்புக் கட்டணத்தை அரசு திரும்ப அளிக்கிறது.

பொதுப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்கான சிறப்புக் கட்டணத்தை, கல்வித் துறை திரும்ப வழங்குகிறது. தமது பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்கான சிறப்புக் கட்டணத்தை ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை வழங்குகிறது.

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.164.01 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(உ) தேர்வுக் கட்டணம் / விண்ணப்பக் கட்டணம் / பதிவுக் கட்டண விலக்களிப்பு**

10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியர் அனைவருக்கும் தேர்வுக் கட்டணங்கள் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது. மேலும், அரசு / அரசு உதவி பெறும் கல்லூரிகளில் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழிற்கல்வி பயிலும் மாணவ / மாணவியருக்கு விண்ணப்பக் கட்டணம் மற்றும் பதிவுக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்படுகிறது.

2012-2013 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.276.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**3. பெண் கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டம்**

ஆதி திராவிட / பழங்குடியினப் பெண் குழந்தைகள் இளம் வயதில் பள்ளிக் கல்வியை இடைநிற்றல் இன்றி தொடர்ந்து பயில

[2012 மே 4

ஊக்குவிக்கும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், முதன்முதலாக 1994-1995 ஆம் ஆண்டு மாணவியருக்கான கல்வி ஊக்குவிப்பு சிறப்புத் திட்டத்தை அறிவித்தார்கள். 2010-2011 ஆம் ஆண்டு வரை, 16 மாவட்டங்களில், கல்வி பயிலும் ஆதி திராவிட மற்றும் பழங்குடி மாணவியர் 1.20 இலட்சம் பேருக்கு மட்டும் ரூ.8 கோடி என குறிப்பிட்ட அளவே ஒதுக்கீடு செய்யப்பட்டு வந்தது. தற்போது, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இத்திட்டத்தினை தமிழகம் முழுமைக்கும் விரிவுபடுத்தி, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின பள்ளிகளில் பயிலும் மாணவியர் உட்பட, அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் பயிலும் 6.38 இலட்சம் மாணவியரும் பயன்பெறும் வகையில், 2011-2012 ஆம் ஆண்டில், ரூ.40 கோடி நிதி ஒதுக்கீடு செய்து ஆணையிட்டார். 3 ஆம் வகுப்பு முதல் 5 ஆம் வகுப்பு வரையில், பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.500-ம், 6 ஆம் வகுப்பில் பயிலும் மாணவியருக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1000-மும் பெறுகின்றனர். இந்த உதவித் தொகையானது, அவரவர் அஞ்சலக சேமிப்புக் கணக்கில் வைப்புத் தொகையாக வைக்கப்படுகிறது.

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.42 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. பரிசுத் தொகைகள்**

பத்து மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு அரசு பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியரை கௌரவிக்கும் வகையிலும், உயர் கல்வி பயில்வதற்கு அவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், பின்வரும் பரிசுத் தொகைகள் வழங்கப்படுகின்றன.

**(i) மாநில அளவிலான பரிசுத் தொகைகள்**

பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்பு, பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கான மாநில அளவில் பரிசுத் தொகைகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:



2012 மே 4]

| தொடர் எண் | வகுப்பு | விவரம் | நிலை | ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | பன்னிரண்டாம் வகுப்பு | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு. (2X3X3=18 பரிசுகள்) | முதல் நிலை<br>இரண்டாம் நிலை<br>மூன்றாம் நிலை | 50,000<br>30,000<br>20,000 |
| 2. | பன்னிரண்டாம் வகுப்புத் தேர்வு (25 பாடங்கள்) | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு. (1X25X3=75 பரிசுகள்) | பாடம் 1க்கு | 2,000 |
| 3. | பத்தாம் வகுப்பு | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு. (2X3X3=18 பரிசுகள்) | முதல் நிலை<br>இரண்டாம் நிலை<br>மூன்றாம் நிலை | 25,000<br>20,000<br>15,000 |
| 4. | பத்தாம் வகுப்பு (ஐந்து பாடங்கள்) | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய ஒவ்வொரு பிரிவிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் ஒரு மாணவர் அல்லது ஒரு மாணவிக்கு. (1X5X3=15 பரிசுகள்) | பாடம் 1க்கு | 1,000 |

மொத்தம் 126 பரிசுத் தொகைள் வழங்கப்படுகின்றன. 2012-2013 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.12.40 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ii) மாவட்ட அளவிலான பரிசுத் தொகைகள்**

மாவட்ட அளவில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வுகளில் அதிக மதிப்பெண்கள் பெறும் மாணவ / மாணவியருக்கு பரிசுத் தொகைகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:

| தொடர் எண் | வகுப்பு | விவரம் | நிலை | ரூபாய் |
|---|---|---|---|---|
| 1. | பன்னிரண்டாம் வகுப்பு | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய மூன்று பிரிவிலும் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசுத் தொகை ரூ.6,000 வீதம். (2x32=64 பரிசுகள்; 64xரூ.6000=ரூ.3,84,000) | முதல் நிலை மட்டும் | 6,000 |
| | | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய மூன்று பிரிவிலும் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசுத் தொகை ரூ.2,000 வீதம் (2x32=64 பரிசுகள்; 64xரூ.2000= ரூ.1,28,000) | முதல் நிலை | 2,000 |
| 2. | பத்தாம் வகுப்பு | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய மூன்று பிரிவிலும் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசுத் தொகை ரூ.1000 வீதம். (2x32=64 பரிசுகள்; 64xரூ.1000= ரூ.64,000) | இரண்டாம் நிலை | 1,000 |
| | | ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய மூன்று பிரிவிலும் அதிக மதிப்பெண் பெறும் ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்குப் பரிசுத் தொகை ரூ.500 வீதம். (2x32=64 பரிசுகள்; 64xரூ.500= ரூ. 32,000) | மூன்றாம் நிலை | 500 |

இத்திட்டத்தின்கீழ் 256 மாணவ / மாணவியர் பயனடைகின்றனர். 2012-2013 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.6.53 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iii) முதலமைச்சரின் தகுதிப் பரிசுத் தொகைகள்

பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர்களில் முதல் 1,000 பேருக்கும், மாணவிகளில் முதல் 1,000 பேருக்கும் ஆண்டு ஒன்றுக்கு, ஒவ்வொருவருக்கும் ரூ.3,000 வீதம் 5 ஆண்டுகளுக்கு தகுதிப் பரிசு வழங்கப்படுகிறது.



2012-2013 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.105 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (iv) அண்ணல் காந்தியடிகள் நினைவு பரிசுத் தொகை

பன்னிரண்டாம் வகுப்புப் பொதுத் தேர்வில் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதல் மதிப்பெண் பெறும் இந்து ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த ஒரு மாணவர் மற்றும் ஒரு மாணவிக்கு அண்ணல் காந்தியடிகளின் நினைவாக இப்பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இந்தப் பரிசுத் தொகை முதல் ஆண்டிற்கு ரூ.2000-மும், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,500 வீதமும் வழங்கப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும், இத்திட்டத்தின்கீழ், 32 மாணவர்கள் மற்றும் 32 மாணவியர் அண்ணல் காந்தி நினைவு பரிசுத் தொகையைப் பெறுகின்றனர்.

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.5.26 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (v) சிறப்புப் பரிசுத் தொகை வழங்கும் திட்டம்

இத்திட்டத்தின்கீழ் பட்டப் படிப்பு, பட்ட மேற்படிப்பு மற்றும் தொழில்நுட்பப் படிப்புகளில் 60 விழுக்காடு மற்றும் அதற்கு மேல் மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி பெறும் 550 ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ/ மாணவியருக்கு சிறப்புப் பரிசுத் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இதன்படி பின்வரும் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது:

| தொடர் எண் | படிப்பு | தொகை |
|---|---|---|
| 1. | பட்டப் படிப்பு | ரூ.2,000 |
| 2. | பட்ட மேற்படிப்பு | ரூ.4,000 |
| 3. | தொழிற் படிப்பு (B.E./M.B.B.S. etc.) | ரூ.5,000 |

[2012 மே 4

2012-2013 ஆம் நிதி ஆண்டில் இத்திட்டத்தின்கீழ் 550 மாணவ / மாணவியர் பயன் பெறும் வகையில் ரூ.18.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (vi) தகுதி வழிவகைப் பரிசுத் தொகை

இந்து ஆதி திராவிடர்க்கு, அண்ணல் காந்தி நினைவு பரிசுத் தொகை வழங்கப்படுவது போன்று, ஒவ்வொரு மாவட்டத்திலும் +2 பொதுத் தேர்வில் முதல் மதிப்பெண் பெறும் கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும், பழங்குடியின மாணவர் ஒருவருக்கும், மாணவி ஒருவருக்கும் இந்தவகைப் பரிசுத் தொகை வழங்கப்படுகிறது. இந்தப் பரிசுத் தொகை முதல் வருடத்திற்கு ரூ.2,000-மும், அடுத்து வரும் ஐந்து ஆண்டுகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ.1,500-ம் வழங்கப்படுகிறது.

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.1.20 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (vii) கல்வியில் சிறந்த மாணவர்களுக்கான ஊக்கத் தொகை

இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு மாவட்டத்திலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் ஆகிய பிரிவினர்களில், தனித்தனியே 10 ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண் பெறும் முதல் இரண்டு மாணவர் மற்றும் இரண்டு மாணவியர் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவர்களுக்கு முதல் ஆண்டுக்கு ரூ.800/-ம், அடுத்து வரும் 5 ஆண்டுகளுக்கு, ஓராண்டிற்கு ரூ.960 வீதம் அவர்கள் மேல் படிப்பினைத் தொடரும் பட்சத்தில் வழங்கப்படுகிறது.

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென, ரூ.8.16 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 5. கரும்பலகைகள் வழங்கும் திட்டம்

இத்துறைமூலம் நடத்தப்படும் பள்ளிகளில், ஒன்றாம் வகுப்பில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியருக்கும் நெகிழி (பிளாஸ்டிக்) சட்டத்திலான விலையில்லா கரும்பலகைகள் ஆண்டுதோறும் வழங்கப்படுகின்றன.



2012 மே 4]

## 6. பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர் / அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் மற்றும் பொதுப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்கு விலையில்லா பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் பின்வருமாறு வழங்கப்படுகின்றன:

| | |
|---|---|
| பாடப் புத்தகங்கள் | 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை, ஆதி திராவிடர் நலப் பள்ளி / அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியருக்கும். |
| குறிப்பேடுகள் | (i) 3 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை ஆதி திராவிடர் நலப் பள்ளி / அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் பயிலும் அனைத்து மாணவ / மாணவியருக்கும்.<br>(ii) 4 ஆம் வகுப்பு முதல் 10 ஆம் வகுப்பு வரை பொதுப் பள்ளிகளில் பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட மாணவ / மாணவியருக்கும். |

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென, ஆதி திராவிடர் / பழங்குடியினர் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்காக ரூ.500 இலட்சமும், பொதுப் பள்ளிகளில் பயிலும் மாணவ / மாணவியருக்காக ரூ.1,400 இலட்சமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 7. சீருடைகள் வழங்கும் திட்டம்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகளில் 1 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்து மாணவ / மாணவியருக்கும் மற்றும் ஆதி திராவிடர் நல மாணவர் இல்லங்களில் தங்கிப் பயிலும் அனைத்து மாணவ / மாணவியருக்கும், 2012-2013 ஆம் ஆண்டிலிருந்து 4 ஜோடி விலையில்லா சீருடைகள் வழங்கப்படும்.

[2012 மே 4

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.2,600 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. பள்ளிகள் மற்றும் மாணவர் இல்லங்களுக்கு பொது அறிவுப் புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் வழங்கும் திட்டம்**

மாணவ / மாணவியர் போட்டித் தேர்வுகள் எழுத தயார் செய்யும் பொருட்டு, பொது அறிவுப் புத்தகங்கள் மற்றும் பத்திரிகைகள் ஆதி திராவிடர் / பழங்குடியினர் நலத் துறையின் அனைத்து உயர்நிலை / மேனிலைப் பள்ளிகளுக்கும் மற்றும் மாணவர் இல்லங்களுக்கும் வழங்க அரசு நிதி ஒதுக்கீடு செய்கிறது.

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.54.22 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**9. மிதிவண்டிகள் வழங்கும் திட்டம்**

இந்தியாவிலேயே, முதன் முதலாக, பெண் கல்வியை ஊக்குவிக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் பள்ளி செல்லும் மாணவியருக்கு விலையில்லா மிதிவண்டிகள் வழங்கும் திட்டம் 2001-2006 ஆட்சிக்காலத்தில் தொடங்கப்பட்டது. தற்போது அரசு / அரசு உதவி பெறும் மற்றும் ஒரு பகுதி தொகையை நிதியுதவியாகப் பெறும் பள்ளிகளில் 11 மற்றும் 12 ஆம் வகுப்புகளில் பயிலும் ஆதி திராவிட / பழங்குடியின / மதம் மாறிய கிருத்துவ ஆதி திராவிட மாணவ / மாணவியர் பயன்பெறும் வகையில், விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

2011-2012 ஆம் ஆண்டில், 1.72 இலட்சம் மாணவ / மாணவியர்க்கு ரூ.49.47 கோடியில் விலையில்லா மிதிவண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

2012-2013 ஆம் நிதியாண்டில் இத்திட்டத்திற்கென ரூ.51.45 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் மாணவியருக்காக ரூ.27.48 கோடியும், மாணவர்களுக்காக ரூ.23.97 கோடியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2012 மே 4]

**10. தரமான கல்வி நிறுவனங்களில் மாணவர்களை சேர்த்தல்**

(i) மாணவ / மாணவியருக்கு தரமான கல்வியை வழங்க வேண்டும் என்ற நோக்கில், அரசு / மாநகராட்சி / நகராட்சி / ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைப் பள்ளிகளில் பயின்று, 10 ஆம் வகுப்புப் பொதுத் தேர்வில் அதிக மதிப்பெண்கள் பெறும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மாணவர்களில், மாவட்டத்திற்கு 10 மாணவர்கள் வீதம் தெரிவு செய்யப்பட்டு, மொத்தம் 320 மாணவ / மாணவியர் நற்பெயர் பெற்றுள்ள தனியார் பள்ளிகளில் +1 வகுப்பில் சேர்க்கப்பட்டு, அவர்களுக்கு, தரமான கல்வி வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் பயன் பெறுபவர்களுக்கு பெற்றோர் / பாதுகாவலரின் ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்க வேண்டும். 2012-2013 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்கென ரூ.180 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

(ii) அரசு / அரசு உதவி பெறும் / ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் 5 ஆம் வகுப்பு பயிலும் ஆதி திராவிடர் / பழங்குடியினர் / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிடர் வகுப்பைச் சேர்ந்த சிறந்த மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு நற்பெயர் பெற்ற தரமான உண்டி உறைவிடப் பள்ளிகளில் 6 ஆம் வகுப்பில் சேர்க்கப்பட்டு, 12 ஆம் வகுப்பு வரை அங்கேயே பயில அனுமதிக்கப்படுகின்றனர். வட்டார அளவிலான போட்டித் தேர்வின்மூலம், ஒரு வட்டாரத்திற்கு ஒரு மாணவர் / மாணவி வீதம் தெரிவு செய்யப்படுகின்றனர். இத்திட்டத்தின்கீழ் ஒவ்வொரு ஆண்டும் 385 மாணவ / மாணவியர் பயனடைகின்றனர். அவர்களுடைய படிப்பிற்கான முழு செலவையும் அரசே ஏற்கிறது.

**11. மாணவரில்லங்கள்**

இத்துறையின்கீழ் இயங்கும் மொத்த மாணவரில்லங்களும் அவற்றில் அனுமதிக்கப்பட்டுள்ள மாணவ / மாணவியரின் எண்ணிக்கையும் வருமாறு:

[2012 மே 4

| தொடர் எண். | மாணவர் இல்லத்தின் வகை | மாணவர் இல்லங்களின் எண்ணிக்கை | மாணவ / மாணவியர் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | ஆதி திராவிடர் நல மாணவரில்லங்கள் | 1,277 | 96,156 |
| 2 | பழங்குடியினர் நல மாணவரில்லங்கள் | 40 | 2,472 |
| 3 (அ) | அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகள் | 297 | 30,116 |
| (ஆ) | ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகள் | 2 | 767 |
| | **மொத்தம்** | **1,616** | **1,29,511** |

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அறிவிப்புகள் அனைத்தும் செயல்வடிவம் பெற்று நிறைவேற்றப்பட்டுள்ளன.

i. 2011-2012 ஆம் ஆண்டில் 25 மாணவரில்லங்கள் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளன.

ii. தனியார் கட்டடங்களில் இயங்கிய 93 மாணவரில்லங்களில் 49 மாணவரில்லங்களுக்கு கட்டடம் கட்டும் பணி நடந்து வருகிறது.

iii. மீதமுள்ள 44 மாணவரில்லங்கள் 2012-2013 ஆம் ஆண்டில் நபார்டு நிதியுதவியுடன் கட்டப்படவுள்ளன.

iv. வெளியூர்களில் உள்ள 1,059 மாணவரில்லங்களைப் புதுப்பிக்க, ரூ.76.33 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

v. சென்னை நகரில் உள்ள 21 மாணவரில்லங்கள் ரூ.7.07 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்டு அழகுபடுத்தப்பட்டுள்ளன.



2012 மே 4]

vi. கல்லூரி மாணவரில்ல மாணவ / மாணவியருக்கு ரூ.550 ஆக இருந்த உணவுக் கட்டணத்தை ரூ.750 ஆகவும், பள்ளி மாணவரில்ல மாணவ / மாணவியருக்கு ரூ.450 ஆக இருந்ததை ரூ.650 ஆகவும் உயர்த்தி, 2011-2012-லிருந்து வழங்கப்படுகிறது. 2012-2013 ஆம் ஆண்டில் உணவுக் கட்டணத்திற்கென ரூ.76.76 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

vii. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவரில்லங்களில், ஒவ்வொரு மாணவரில்லத்திலும் 5 இடங்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டு, தமிழ்நாட்டில் முகாம்வாழ் இலங்கைத் தமிழர்களின் குழந்தைகளுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**ஏனைய வசதிகள்**

i. அனைத்து மாணவரில்லங்களுக்கும் வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டிகள் மற்றும் தண்ணீர் சுத்திகரிக்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

ii. அனைத்து மாணவரில்லங்களிலும் ஒரு சிறிய நூலகம் அமைக்கப்பட்டுள்ளது.

iii. மாணவரில்ல மாணவ/மாணவியருக்கு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பாய் மற்றும் போர்வை வழங்கப்படுகிறது.

iv. சோப்பு, எண்ணெய் போன்ற பல்வகை செலவினத்திற்காக, பள்ளி மாணவரில்ல மாணவ / மாணவியருக்கு மாதமொன்றுக்கு ரூ.50 வீதமும் கல்லூரி மாணவரில்ல மாணவ/மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு தலா ரூ.75 வீதமும் வழங்கப்படுகிறது.

**12. (அ) அரசுசாரா தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மாணவரில்லங்கள்**

ஆதி திராவிடர் / பழங்குடியினர் வகுப்பைச் சேர்ந்த மாணவ/ மாணவியருக்காக, அரசு சாரா தொண்டு நிறுவனங்களால் நடத்தப்படும் மாணவரில்லங்களுக்கு இவ்வரசு உணவுக் கட்டணத்தை அளித்து வருகிறது. இத்துறையின்கீழ் 36 அரசு

[2012 மே 4

சாரா தொண்டு நிறுவனங்கள் நிதியுதவி பெறுகின்றன. இவ்விடுதிகளில் 5,654 ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் வகுப்பு மாணவ / மாணவியர் பயன் பெறுகின்றனர்.

**(ஆ) மானியம் பெறும் பள்ளிகள்**

திருவண்ணாமலை மாவட்டத்தில் பழங்குடியினர் மாணவ / மாணவியருக்காக கிராம முன்னேற்றத்திற்கான மாநிலக் கூட்டமைப்பு (SFRD) என்ற தொண்டு நிறுவனம் மூலம் நடத்தப்படும் பழங்குடியினர் நலப் பள்ளிக்கு கல்வி மானியம் மற்றும் மாணவரில்ல மாணவ / மாணவியருக்கு உணவுக் கட்டணம் அளிக்கப்பட்டு வருகிறது.

தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், முத்துக்கருப்பன் நினைவு கல்வி அறக்கட்டளையால் ஆதி திராவிடர்களுக்காக நடத்தப்படும் பள்ளிகளுக்கு கல்வி மானியம் மற்றும் மாணவரில்ல மாணவ / மாணவியருக்கு உணவுக் கட்டணம் வழங்கப்பட்டு வருகிறது.

**13 (அ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்**

நீலகிரி மாவட்டத்தில், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைமூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

உள்கட்டமைப்புப் பணிகளான மழைநீர் வடிகால், தடுப்புச் சுவர் மற்றும் பொதுக் கழிப்பிடம் கட்டுதல் போன்ற பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(ஆ) மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம்**

ஆதி திராவிட மக்கள் பயன்பெறும் வகையில் மேற்குத் தொடர்ச்சி மலைப்பகுதிகளான கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, திண்டுக்கல், தேனி, மதுரை, விருதுநகர், திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறைமூலம் கீழ்க்காணும் பணிகளுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது:

1 கறவை மாடுகள் / ஆடுகள் வழங்குதல்

2 குடிநீர் வசதி மற்றும் சாலை வசதிகள் ஏற்படுத்துதல்



2012 மே 4]

3 பள்ளிகள் மற்றும் மாணவரில்லங்களுக்கு சுற்றுச் சுவர் கட்டுதல்

4 பள்ளி வகுப்பறைகளைப் பழுதுபார்த்தல்

5 ஆதி திராவிடர் குடியிருப்புப் பகுதிகளில் சிமென்ட் கான்கிரீட் சாலைகள் அமைத்தல், மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி, கைப் பம்புகள் மற்றும் ஆழ்துளைக் கிணறுகள் அமைத்தல்.

**14. (அ) வீட்டுமனைப் பட்டாக்கள்**

வீடற்ற ஆதி திராவிடர் / பழங்குடியினருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் ஒவ்வோராண்டும் வழங்கப்படுகின்றன. இதற்கான நிலங்கள், தனியார் பேச்சுவார்த்தை மூலமாகவோ தமிழ்நாடு நிலம் கையகப்படுத்தல் சட்டம் 31/78-ன்படியோ கையகப்படுத்தப்பட்டு வருகிறது. பயனாளியின் ஆண்டு வருமானம் கிராமப்புறங்களில் ரூ.40,000-க்கு மேற்படாமலும் நகர்ப்புறங்களில் ரூ.60,000-க்கு மேற்படாமலும் இருக்க வேண்டும்.

2012-2013 ஆம் நிதியாண்டில், இதற்கென ரூ.512.93 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(ஆ) இடுகாடுகள் மற்றும் பாதை வசதி**

ஆதி திராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு இடுகாடு மற்றும் பாதை வசதிகள் செய்து கொடுப்பதற்காக, நிலம் கையகப்படுத்த அரசு நிதி ஒதுக்கீடு செய்து வருகிறது. ஊராட்சிகளும் இவ்வசதிகளை தங்களுடைய சொந்த நிதியிலிருந்து செய்வதுடன், ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் செய்து தருகின்றன. குடிநீர் வசதிக்கு 15 விழுக்காடு செலவையும், இணைப்புச் சாலை வசதிக்கு 10 விழுக்காடு செலவையும் ஆதி திராவிடர் நலத் துறை ஏற்கிறது. இடுகாட்டுப் பாதை வசதிக்கென ரூ.75.84 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**15. ஈமச் சடங்குக்கு உதவித்தொகை**

ஆதி திராவிடர்/பழங்குடியினர்/கிருத்தவ மதம் மாறிய ஆதி திராவிடர் குடும்பத்தில் உறுப்பினர் ஒருவர் இறந்துவிட்டால் அவரது ஈமச் சடங்கிற்காக ரூ.2,500 நிதி உதவியாக வழங்கப்படுகிறது.

இத்திட்டத்திற்காக ரூ.500 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 16. ஆதி திராவிடர் துணைத் திட்டம்

தமிழக வரலாற்றில் முதன் முறையாக, 2011-2012 ஆம் ஆண்டில் மொத்த மாநில ஆண்டுத் திட்ட ஒதுக்கீடான ரூ.23,535 கோடியில் ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் வரலாற்றுச் சிறப்புமிக்க வகையில், ரூ.5,007 கோடி (21.27%) ஆதி திராவிடருக்கென ஒதுக்கீடு செய்யப்பட்டது. மத்திய திட்டக் குழுவின் பரிந்துரைப்படி, துணைத் திட்டத்தின்கீழ் ஒதுக்கீடு, குறைந்தபட்சம் ஆதி திராவிடர் மக்கள் தொகை விழுக்காடு அளவிற்காகவாவது இருக்க வேண்டும். ஆனால், நமது மாநிலத்தில், ஆதி திராவிடரின் மக்கள் தொகையான 19 விழுக்காட்டைவிட அதிகமாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எப்பொழுதும் இல்லாத அளவில் மிக உயர்ந்த ஒதுக்கீடாக ரூ.6,108.60 கோடி, அதாவது மாநில மொத்த ஆண்டுத் திட்டத் தொகையான ரூ.28,000 கோடியில், 21.82 விழுக்காடு 2012-2013-ல் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மொத்த நிதியும், ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான துணைக் கணக்குத் தலைப்பான “789”ன்கீழ் 21 செயலாக்கத் துறைகள்மூலம் செலவிடப்படும்.

ஆதி திராவிடர் துணைத் திட்டத்தினை உருவாக்கவும், செயல்படுத்தவும், மாநில அளவில், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, ஒருங்கிணைப்புத் துறையாக நியமிக்கப்பட்டுள்ளது. அதன் செயலர், ஆதி திராவிடர் துணைத் திட்டத்தின்கீழ் திட்டங்களை உருவாக்கவும், செயல்படுத்தவும், ஒருங்கிணைப்பு அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார். மாவட்ட அளவில் திட்டங்களைக் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் ஆதி திராவிட நல ஆணையர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

### ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மத்திய நிதியுதவி

இந்திய அரசு, ஒவ்வொரு ஆண்டும் சராசரியாக, ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மத்திய நிதியுதவியின்கீழ் ரூ.60 கோடியினை, ஆதி திராவிட மக்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக வழங்கி வருகிறது. இதில் 90





விழுக்காடு, தாட்கோமூலம் ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காகவும், மீதமுள்ள 10 விழுக்காடு, ஆதி திராவிடர் நல ஆணையர்மூலம் ஆதி திராவிட மக்கள் வசிக்கும் இடங்களில் அடிப்படை வசதிகளை ஏற்படுத்தவும் செலவிடப்படுகிறது.

## 17. சாதிச் சான்றிதழ்கள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் சாதிச் சான்றிதழ்கள் கோரும் விண்ணப்பங்களின்மீது உடனடியாக விசாரணை மேற்கொண்டு நடவடிக்கை எடுக்குமாறு தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர்கள், வருவாய் கோட்டாட்சியர் மற்றும் வட்டாட்சியர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஆதி திராவிடர்களுக்கு வட்டாட்சியரும், பழங்குடியின மக்களுக்கு வருவாய் கோட்டாட்சியரும் சாதிச் சான்றிதழ்கள் வழங்க அதிகாரமுடையவர்களாவர்.

2. குமாரி மாதுரி பட்டேல்—எதிர்—கூடுதல் ஆணையர், பழங்குடியினர் மேம்பாடு, மும்பை, உரிமையியல் மேல்முறையீட்டு வழக்கு எண் 5854/94-ல் 02-09-1994 ஆம் நாளிட்ட உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி வெளியிடப்பட்ட அரசாணை (2ப) எண்.108, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை, நாள் 12-09-2007-ல் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியின மக்களின் சாதிச் சான்றிதழ்களை சரிபார்ப்பதற்காகக் கீழ்க்காணும் இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டன. அது பற்றிய விவரம் வருமாறு:

### மாவட்ட அளவிலான கண்காணிப்புக் குழு

| | | | |
|---|---|---|---|
| 1. | மாவட்ட ஆட்சித் தலைவர் | தலைவர் | வட்டாட்சியர்களால் ஆதி திராவிடர் என வழங்கப்பட்ட சான்றிதழ்களின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து, இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில், இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 226-ன்படி, உயர் நீதிமன்றத்திலும் பிரிவு 136-ன்படி, உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |
| 2. | மாவட்ட ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர் | உறுப்பினர்—செயலர் | |
| 3. | மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் | |

**மாநில அளவிலான நுண்ணாய்வுக் குழு**

| | | | |
|---|---|---|---|
| 1. | செயலாளர், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை | தலைவர் | வருவாய் கோட்டாட்சியர்களால் பழங்குடியினர் என வழங்கப்பட்ட சான்றுகளின் மெய்த்தன்மையினைக் கூர்ந்தாய்வு செய்து இறுதி ஆணை பிறப்பிக்கலாம். இந்த ஆணையினை ஏற்கவில்லையெனில் இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 226-ன்படி உயர் நீதிமன்றத்திலும் பிரிவு 136-ன்படி, உச்ச நீதிமன்றத்திலும் மேல்முறையீடு செய்யலாம். |
| 2. | ஆணையர்/ இயக்குநர், பழங்குடியினர் நலம் | உறுப்பினர்—செயலர் | |
| 3. | மானுடவியல் வல்லுநர் | உறுப்பினர் | |

**18. 1955 ஆம் ஆண்டு குடியுரிமைப் பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம்**

**(அ) தீண்டாமை ஒழிப்பு**

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கு எதிரான தீண்டாமையை ஒழிக்கவும், வன்கொடுமைகளைத் தடுக்கவும், அரசு, அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்து வருகிறது. இதற்காக, 1955 ஆம் ஆண்டு குடியுரிமை பாதுகாப்புச் சட்டம் மற்றும் 1989 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் (வன்கொடுமைத் தடுப்பு) சட்டம் ஆகியவை மாநில அரசால் முனைப்புடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

இதற்கென சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவு ஒன்று, சென்னையைத் தலைமையிடமாகக் கொண்டு, காவல் துறை கூடுதல் தலைமை இயக்குநர் அவர்களின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கி வருகிறது.

இந்த இரு சட்டங்களின்கீழ் (i) வழக்குகளைப் பதிவு செய்தல், விசாரணை செய்தல், வழக்குத் தொடுத்தல் ஆகியவற்றைக் கண்காணித்தல் மற்றும் (ii) ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்குப் பாதுகாப்பு அரணாக விளங்குவதுமே சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் பிரிவின் பணிகளாகும்.





தஞ்சாவூர், திருச்சி, மதுரை மற்றும் திருநெல்வேலி ஆகிய 4 மாவட்டங்களில் சிறப்பு நீதிமன்றங்களை அரசு அமைத்துள்ளது. அவை, 8 மாவட்டங்கள் மற்றும் 3 காவல் துறை ஆணையரகங்களின் எல்லை வரம்பிற்குள், பதிவு செய்யப்படும் வழக்குகளை விசாரிக்கும். ஏனைய மாவட்டங்களில், தற்போதுள்ள மாவட்ட குற்றவியல் அமர்வு நீதிமன்றங்களுக்கு இவ்வழக்குகளை விசாரணை செய்ய அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது. சென்னை, காஞ்சிபுரம், திருச்சி, தஞ்சாவூர், விழுப்புரம், இராமநாதபுரம், வேலூர், சேலம், கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய 11 மாவட்டங்களில், ஒரு மாவட்டத்திற்கு ஒரு காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் தலைமையில் ஒரு மேற்பார்வைக் குழு என்ற அளவில் மேற்பார்வைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு நடமாடும் குழுவிற்கு ஒரு காவல் துறை ஆய்வாளர் என 36 நடமாடும் காவல் குழுக்கள் மாநிலத்தில் திறம்பட செயல்பட்டு வருகின்றன.

1995 ஆம் ஆண்டு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான (வன்கொடுமைத் தடுப்பு) விதிகள் பிரிவு 17(1)-ன்படி மாவட்டந்தோறும், அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் அலுவல் சார்ந்த மற்றும் அலுவல் சாரா உறுப்பினர்களைக் கொண்ட மாவட்ட அளவிலான விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்றினை அரசு அமைத்துள்ளது. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் பிரச்சினைகளைப் புரிந்த, நல்ல நோக்கம் கொண்ட நபர் ஒருவரை உறுப்பினராக நியமிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

மாவட்ட அளவிலான குழு, குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கூடி இச்சட்டங்களை நடைமுறைப்படுத்தியது பற்றியும், பாதிக்கப்பட்டவர்களுக்கு இடருதவி மற்றும் மறுவாழ்வு அளித்தது குறித்தும், இச்சட்டங்களின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளின் நிலை பற்றியும் ஆய்வு செய்கிறது. மேலும், மாநில அளவில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான வன்கொடுமை தடுப்புச் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை ஆய்வு செய்யவும், கண்காணிக்கவும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தலைமையில் ஒரு உயர்நிலை விழிப்பு மற்றும் கண்காணிப்புக் குழு அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

[2012 மே 4

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.225 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) விழிப்புணர்வுப் பிரச்சாரம்

1 தீண்டாமைக் கொடுமை குறித்து மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்த, சென்னையில் ஒரு விளம்பரப் பிரிவு, திருச்சிராப்பள்ளியில் மற்றொரு விளம்பரப் பிரிவு என இரண்டு விளம்பரப் பிரிவுகள் செயல்பட்டு வருகின்றன. கிராமங்களில் குறும்படங்கள் திரையிடப்படுகின்றன.

2 "மனித நேய வார விழா" ஒவ்வொரு ஆண்டும், அனைத்து மாவட்டங்களிலும் ஜனவரி 24 முதல் 30 ஆம் நாள் வரை கொண்டாடப்பட்டு, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தப்படுகிறது.

3 தீண்டாமையை ஒழிக்க, வில்லுப்பாட்டு நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

4 ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 26, ஆகஸ்டு 15, அக்டோபர் 2 ஆகிய தேதிகளில் அனைத்து இனத்தினரும் கலந்துகொள்ளும் வகையில் சமபந்தி விருந்து நடத்தப்படுகிறது.

5 மக்கள் விழிப்புணர்வு பிரச்சாரம், மாவட்டங்களில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் மேற்கொள்ளப்படுகிறது. அதற்கான செலவினத்தை மத்திய அரசும், மாநில அரசும் 50:50 என்ற விகிதத்தில் பங்கிட்டுக்கொள்கின்றன. முக்கிய விழாக்களின்போது, சமூக நீதி தேநீர் விருந்துகள், மாநிலத்தில் அனைத்து கிராமங்களில் நடத்தப்படுகின்றன.

2012-2013 ஆம் நிதியாண்டில், இத்திட்டத்திற்கென ரூ.46.49 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) தீண்டாமையற்ற கிராமம்

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு மாவட்டத்திலும் (சென்னை நீங்கலாக), தீண்டாமையைக் கடைப்பிடிக்காமல் பொதுமக்கள் நல்லிணக்கத்துடன் வாழும் ஒரு கிராமம் தெரிவு செய்யப்பட்டு, அக்கிராமத்திற்கு ரூ.2 இலட்சம் ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.



2012 மே 4]

இத்திட்டத்திற்கென ஆண்டுதோறும் 31 கிராமங்களுக்கு, ரூ.62 இலட்சம் செலவிடப்படுகிறது.

## 19. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு அமைப்பு (ADATA)

கலை, கலாச்சாரம், இலக்கியம் போன்ற துறைகளில் சிறந்த படைப்புகளை உருவாக்கும் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரை ஊக்குவிக்கவும், அவர்களின் ஆராய்ச்சி தொடர்புடைய செயல்பாடுகளுக்கு உதவிடவும் "ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் மேம்பாட்டு அமைப்பு" என்ற ஒரு அமைப்பு 2003 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. சிறப்பு நிதியாக ரூ.50 இலட்சம் ஒதுக்கப்பட்டு, ஆணையரின் வைப்புக் கணக்கில் வைக்கப்பட்டுள்ளது. அதிலிருந்து பெறும் வட்டி, சிறந்த இலக்கியம் படைக்கும் எழுத்தாளர்களுக்கு பரிசுத் தொகையாக வழங்க பயன்படுத்தப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 10 ஆதி திராவிட / பழங்குடியின / கிருத்துவ மதம் மாறிய ஆதி திராவிட எழுத்தாளர்கள் மற்றும் ஒரு ஆதி திராவிடர் அல்லாத எழுத்தாளர் தெரிவு செய்யப்படுகின்றனர். அவர்களின் சிறந்த இலக்கியப் படைப்புகளுக்காக ஒவ்வொருவருக்கும் ரூ.20,000 நிதியுதவி வழங்கப்படுகின்றது.

## 20. கொத்தடிமை ஒழிப்பு

கொத்தடிமை முறையானது, இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 21 மற்றும் 23 ஆம் பிரிவுகளின்படி தடை செய்யப்பட்டுள்ளது. எனவே, மத்திய அரசு 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டத்தை இயற்றியது.

கொத்தடிமை முறை என்பது ஒரு தொழிலாளர் முற்றிலும் கட்டாயப்படுத்தப்பட்ட அல்லது ஓரளவில் கட்டாயப்படுத்தப்பட்ட பணிச்சூழலில் ஊதியமின்றியோ அல்லது மிகக் குறைந்த ஊதியத்துக்காகவோ பணிபுரியும் முறையாகும். கொத்தடிமை முறையால் தொழிலாளர்கள் ஒரு பணியிடத்திலிருந்து மற்றொரு பணியிடத்திற்கு சுதந்திரமாக மாறவோ அல்லது ஒரு வாழ்வாதாரத்திலிருந்து மற்ற வாழ்வாதாரங்களைத் தேடிக்கொள்ளவோ இயலாமல் உரிமைகள் மறுக்கப்படுகின்றன.

[2012 மே 4

கொத்தடிமை முறையினைப் பின்பற்றாமல் தடுக்கவும், கொத்தடிமைகளைக் கண்டறியவும், மற்றும் விடுவிக்கப்பட்டவர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவும், தமிழக அரசு, மாவட்ட ஆட்சியர்களின் தலைமையில் மாவட்ட அளவிலான குழுக்களை அமைத்துள்ளது. இதுவரையில் 14,567 கொத்தடிமைத் தொழிலாளர்கள் விடுவிக்கப்பட்டு, ரூ.17.84 கோடி செலவில் மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

இச்சட்டத்தின்படி, கோட்டாட்சியர்கள், கொத்தடிமைகள் விடுவிப்பு மற்றும் மறுவாழ்வு அளிக்கும் அலுவலர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர். மாவட்ட ஆட்சியர்கள் கண்காணிப்பு அலுவலர்களாகவும் இச்சட்டப் பிரிவுகளைச் செயல்படுத்தும் முழு பொறுப்பாளர்களாகவும் விளங்குகின்றனர். 1976 ஆம் ஆண்டு கொத்தடிமை முறை (ஒழிப்பு) சட்டம், 21-ன்படி அனைத்து வருவாய் கோட்டாட்சியர்களுக்கும் நீதித் துறை நடுவருக்கான அதிகாரங்கள் வழங்கப்பட்டு, கொத்தடிமை குறித்த வழக்குகளை நடத்தவும், குற்றவாளிகள் என கண்டறியப்படுபவர்களைத் தண்டிக்கவும் வகை செய்யப்பட்டுள்ளது. விடுவிக்கப்பட்ட கொத்தடிமைத் தொழிலாளர்களுக்கு, விடுவிக்கப்பட்டவுடன் உடனடி நிவாரணமாக, ரூ.1,000 வழங்கப்படுகிறது. விடுவிக்கப்பட்ட நாளில் இருந்து ஒரு வாரத்திற்குள்ளாக, ரூ.19,000 ரொக்கமாகவோ அல்லது பொருளாகவோ வருமானம் ஈட்டக் கூடிய பணிகளுக்காக வழங்கப்படுகிறது.

தலைமைச் செயலரின் தலைமையில் உள்ள மாநில அளவிலான கண்காணிப்புக் குழு, மாவட்ட அளவிலான விழிப்புணர்வுக் குழுவின் பணிகளான கொத்தடிமைத் தொழிலாளர்களை அடையாளம் காணுதல், விடுவித்தல், விடுவிக்கப்பட்ட கொத்தடிமைகளின் மறுவாழ்வு ஆகிய பணிகளின் முன்னேற்றத்தை ஆய்வு செய்கிறது.

2012-2013-ல் இத்திட்டத்திற்கென ரூ.125 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2012 மே 4]

## 21. பாரதப் பிரதமரின் இலட்சிய கிராம வளர்ச்சித் திட்டம் (PMAGY)

50 விழுக்காடுக்கும் அதிகமாக ஆதி திராவிடர்கள் வாழும் கிராமங்களின் ஒருங்கிணைந்த வளர்ச்சியினைக் கருத்திற்கொண்டு, “பாரதப் பிரதமரின் இலட்சிய கிராம வளர்ச்சித் திட்டம்” என்ற முன்னோடித் திட்டத்தை, மத்திய அரசு அறிமுகப்படுத்தியது. நாட்டில் 5 மாநிலங்களில் உள்ள 1000 கிராமங்களில் இம்முன்னோடித் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. திருவாரூர் மாவட்டத்தில் 157 கிராமங்களிலும், கடலூர் மாவட்டத்தில் 68 கிராமங்களிலும் ஆக மொத்தம் 225 கிராமங்களில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. மத்திய அரசு, கிராமங்களின் உள்கட்டமைப்பு வளர்ச்சிக்காக கிராமம் ஒன்றுக்கு ரூ.20 இலட்சம் வீதம் நிதியை அனுமதித்துள்ளது.

இத்திட்டம் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிப்பதற்காக, மாநில அரசு, மாநில ஆலோசனைக் குழு ஒன்றையும் மாநில அளவிலான நெறிப்படுத்தல் மற்றும் கண்காணிப்புக் குழு ஒன்றினையும் அமைத்துள்ளது.

[2012 மே 4

## பழங்குடியினர் நலன்

### முன்னுரை

பழங்குடியினரின் நலனை கவனிப்பதற்கென்று தனியாக ஓர் இயக்ககம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. சேலம், திருவண்ணாமலை, விழுப்புரம், வேலூர், தருமபுரி, கிருஷ்ணகிரி, நாமக்கல், திருவள்ளூர், கோயம்புத்தூர், நீலகிரி, காஞ்சிபுரம், திருச்சிராப்பள்ளி, ஈரோடு, அரியலூர், கடலூர் மற்றும் திருநெல்வேலி ஆகிய 16 மாவட்டங்களில் பழங்குடியினர் மக்கள் தொகை கணிசமான அளவில் உள்ளது.

குறைந்த கல்வி அறிவு சதவீதம், பாதியிலேயே படிப்பை நிறுத்திவிடுவோரின் எண்ணிக்கை அதிகரிப்பு, ஊட்டச்சத்துக் குறைபாடுகள், ஏழ்மையான வாழ்வு, வன வளங்கள் அழிக்கப்படுவதால் மக்கள் இடம் பெயர்தல் போன்ற விளைவுகளை எதிர்கொள்வதற்கு அரசால் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது.

### ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகள் (ITDP)

மொத்த மக்கள் தொகையில் 50 விழுக்காடு மற்றும் அதற்கு மேலும் பழங்குடியினர் வாழும் 10 ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளைக் கொண்ட 7 மாவட்டங்களில் அதாவது சேலம் (ஏற்காடு, பச்சமலை, அரநூத்து மலை மற்றும் கல்ராயன் மலை), நாமக்கல் (கொல்லிமலை), விழுப்புரம் (கல்ராயன் மலை), திருவண்ணாமலை (ஜவ்வாது மலை), திருச்சிராப்பள்ளி (பச்சமலை), தருமபுரி (சித்தேரி மலை) மற்றும் வேலூர் (ஜவ்வாது மற்றும் ஏலகிரி மலை) ஆகிய பகுதிகளில் பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

### அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் (PTG)

மாநிலத்திலுள்ள 36 வகையான பழங்குடியினரில் 6 வகை பழங்குடியினர், அதாவது தோடர், கோட்டா, குரும்பர்ஸ், இருளர், பணியன் மற்றும் காட்டுநாயகன் ஆகியோர் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினராகக் கண்டறியப்பட்டுள்ளனர். இவ்வினத்தவரின் மக்கள் தொகை குறைந்து கொண்டோ அல்லது அதிகரிக்காமலோ உள்ளது. மாநிலத்தில் பரவலாகக் காணப்படும் ஏனைய பழங்குடியினர், பரவி வாழும் பழங்குடியினர் என வகைப்படுத்தப்பட்டுள்ளனர்.



2012 மே 4]

### 1. மத்திய அரசின் உதவித் தொகை

மத்திய அரசு (i) பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் சிறப்பு மத்திய உதவி (ii) இந்திய அரசமைப்புச் சட்டப் பிரிவு 275(1)-ன்கீழ் ஒதுக்கீடு மற்றும் (iii) அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினருக்கு சிறப்பு ஒதுக்கீடு ஆகிய மூன்று திட்டங்களின்கீழ் நிதி ஒதுக்கீடு வழங்கி வருகிறது. இம்மூன்று திட்டங்களின்கீழ் 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.22.62 கோடி உதவித் தொகை அனுமதித்துள்ளது. இவ்வாண்டிலும் தொடர்ந்து இத்திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

### (அ) பழங்குடியினர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மத்திய நிதியுதவி

இத்திட்டத்தின்கீழ், முக்கியமாக, வருவாய் ஈட்டும் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இதில் 30 விழுக்காட்டிற்கு மேற்படாத வகையில், பழங்குடியினர் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்வதற்காக செலவிடப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் கறவை மாடுகள், ஆடுகள் மற்றும் மரக்கன்றுகள் விநியோகிக்கப்படுகின்றன. செங்கல் சூளைகள் அமைக்கவும் மற்றும் சில பொருளாதார நடவடிக்கைகளுக்காகவும் நிதியுதவி அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்கென மத்திய அரசு 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.572 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. இவ்வாண்டில், ரூ.651 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது.

### (ஆ) இந்திய அரசமைப்புச் சட்டத்தின் 275(1) ஆம் பிரிவு

1) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 275(1) ஆம் பிரிவின்கீழ், மத்திய அரசால் வழங்கப்பட்ட நிதியுதவியிலிருந்து பழங்குடியினர் பகுதிகளில் உள்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

2) இத்தொகை சேலம் மாவட்டத்தில் அபிநவம் மற்றும் விழுப்புரம் மாவட்டத்தில் வெள்ளிமலை ஆகிய இடங்களிலுள்ள ஏகலைவா மாதிரி உண்டி உறைவிடப் பள்ளிகளைப் பராமரிப்பதற்கு பயன்படுத்தப்படுகிறது.

3) 2006 ஆம் ஆண்டு வனங்களில் குடியிருப்போர் சட்டத்தைச் செயல்படுத்துவதற்கும் இத்தொகை பயன்படுத்தப்படுகிறது.

[2012 மே 4

இத்திட்டத்தின்கீழ், 2012-2013 ஆம் ஆண்டில், ரூ.901 இலட்சம் உத்தேச ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**(இ)அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினர் மேம்பாடு**

அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினரின் மேம்பாட்டிற்காக, மத்திய அரசு ஆண்டுதோறும் நிதியுதவி வழங்கி வருகிறது. ஐந்தாண்டு திட்ட காலத்திற்கு, இவர்களின் பாதுகாப்புடன் இணைந்த மேம்பாட்டுத் திட்டம் (CCD Plan) ஒன்று தயாரிக்கப்பட்டு மத்திய அரசிற்கு அனுப்பி வைக்கப்பட்டது. அதனடிப்படையில், ஒவ்வொரு ஆண்டும், மத்திய அரசால் அழிவின் விளிம்பிலுள்ள பழங்குடியினருக்கு நலத் திட்டங்களை மேற்கொள்ள நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மத்திய அரசு, 2011-2012 ஆம் ஆண்டில், ரூ.1075.94 இலட்சம் ஒதுக்கீடு செய்துள்ளது. குறிப்பிட்ட பகுதிகளில் வாழும் அழிவின் விளிம்பிலுள்ள மக்களுக்கென்று வீடுகள் கட்டித் தருதல், கறவை மாடுகள் மற்றும் ஆடுகள் வழங்குதல், குடிநீர் வசதி செய்து தருதல் மற்றும் தெரு விளக்குகள் முதலியவற்றை அமைத்து தருதல் ஆகியவை செய்து தரப்படுகின்றன.

**(ஈ) 2006 ஆம் ஆண்டு பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டத்தைச் செயல்படுத்துதல்**

மத்திய அரசு, 2006 ஆம் ஆண்டு பழங்குடியினர் மற்றும் பிற மரபு வழியாக வனங்களில் குடியிருப்போர் (வன உரிமைகள் அங்கீகரித்தல்) சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 29-12-2006 முதல் நடைமுறைக்கு வந்தது. இதன்படி, 13-12-2005 ஆம் நாளுக்கு முன்பிருந்தே வனங்களில் குடியிருந்து வரும் பழங்குடியினருக்கும், மூன்று தலைமுறைகளாக அதாவது 75 ஆண்டுகளாக வனங்களில் குடியிருக்கும் பிற மரபு வழியினருக்கும் வன உரிமைப் பட்டா வழங்குவதற்கு வகை செய்யப்பட்டுள்ளது.

மாநில அரசு, இச்சட்டத்தைச் செயல்படுத்த பின்வரும் குழுக்களை அமைத்துள்ளது:

(i) தலைமைச் செயலரைத் தலைவராகக் கொண்ட மாநில அளவிலான கண்காணிப்புக் குழு



2012 மே 4]

(ii) மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக் கொண்ட மாவட்ட அளவிலான குழு

(iii) வருவாய் கோட்ட அலுவலரை தலைவராகக் கொண்ட உட்கோட்ட அளவிலான குழு

இதுவரையில் 21,781 கோரிக்கைகள் மாவட்ட ஆட்சியர்களிடம் வரப்பெற்றுள்ளன. அவற்றில் 3,723 விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வன உரிமை பட்டா வழங்குவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளன. சென்னை உயர் நீதி மன்ற நீதிப் பேராணை மனு எண் 4533/2008-ன்படியான தடையாணை விலக்கிக்கொண்ட பின்னர் பட்டா வழங்கப்படும். பிற கோரிக்கைகளும் மாவட்டங்களில் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன.

**2. பழங்குடியினர் துணைத் திட்டம்**

பழங்குடியினரின் பொருளாதார மேம்பாட்டினை உறுதிப்படுத்தும் வகையில், மாநிலத்தில் அம்மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்குக் (1.04%) குறையாமல் நிதி ஒதுக்கீடு செய்து அத்தொகை முழுமையாக அவர்களை சென்றடையும் வகையில் ‘பழங்குடியினர் துணைத் திட்டம்’ என்ற செயல் திட்டம் 5—வது ஐந்தாண்டு திட்ட காலத்தின் தொடக்கக் காலமான 1976-1977 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. ஏனைய மக்கள் வளர்ச்சிக்கு இணையாக, பழங்குடியினரை மேம்படுத்தும் நோக்கத்துடன், பழங்குடியினருக்காக செயல்படுத்தப்படும் திட்டங்களின் செலவினத்தை, கணக்கு வைப்பதற்கு ‘796’ என்ற துணைக் கணக்குத் தலைப்பு தொடங்கப்பட்டது. பழங்குடியின மக்களின் விகிதாச்சாரத்திற்கும் மேலாக, ரூ.349.31 கோடி ஒதுக்கீடு (1.25%) செய்யப்பட்டு, 21 துறைகள் வாயிலாக இத்தொகை 2012-2013 ஆம் ஆண்டில் பழங்குடியினர் துணைத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைப்படி முதன்முறையாக, 2012-2013 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்டத்தில் பழங்குடியினரின் ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்திற்காக ரூ.50 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்தொகை, பழங்குடியினர் நலத் துறை, வனத் துறை ஆகியவற்றின் வாயிலாக, பழங்குடியினருக்காக சிறப்புத் திட்டங்கள் தீட்டப்பட்டு, செலவிடப்படும். ஆதி

[2012 மே 4

திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை ஒருங்கிணைப்புத் துறையாக நியமிக்கப்பட்டுள்ளது. அதன் செயலர் பழங்குடியினர் துணைத் திட்டத்தை உருவாக்கி செயல்படுத்துவதற்கான ஒருங்கிணைப்பு அதிகாரியாக இருக்கிறார். இத்திட்டங்களை மாவட்டந்தோறும் கண்காணிக்கவும், ஆய்வு செய்யவும் பழங்குடியினர் நல இயக்குநர் கண்காணிப்பு அலுவலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

செயலாக்கத் துறைகளால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்பு அதிகாரிகள், பழங்குடியினருக்கான திட்டங்களை சிறப்பாக செயல்படுத்துவதற்காக ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையுடன் இணைந்து செயலாற்றி வருகின்றனர்.

**3(அ) பழங்குடியினர் ஆராய்ச்சி மையம் மற்றும் பழங்குடியினர் அருங்காட்சியகம்**

பழங்குடியினர் பற்றிய விவரங்களைச் சேகரிக்கவும், பழங்குடியினர் வாழ்க்கை முறை, கலாச்சாரம், மொழி, சமூகம்-பொருளாதாரம் மற்றும் கல்வி நிலை முதலியவற்றை ஆராய்ச்சி செய்வதற்காகவும் மத்திய அரசின் நிதியுதவியுடன் 1983 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில், முத்தரை பாலாடா எனும் இடத்தில் “பழங்குடியினர் ஆராய்ச்சி மையம்” ஒன்று அமைக்கப்பட்டது. இம்மையம் மானுடவியல் நிபுணத்துவம் வாய்ந்த இயக்குநர் ஒருவரின் தலைமையில் செயல்படுகிறது.

இங்கு நூலகம் ஒன்றும், பழங்குடியினர் அருங்காட்சியகம் ஒன்றும், அமைக்கப்பட்டதுடன், பழங்குடியினரின் வாழ்க்கை முறை குறித்த புகைப்படங்கள் மற்றும் கலைப் பொருட்கள் ஆகியன பொதுமக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

**(ஆ) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் (HADP)**

நீலகிரி மாவட்டத்திலுள்ள பழங்குடியினர் நலனுக்காக இத்திட்டம், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது. பழங்குடியின மக்கள் வசிக்கும் பகுதிகளில் சிமென்ட் சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதி ஏற்படுத்துதல், பழங்குடியினர் வசிக்கும் பகுதிகளை முதன்மை கிராமத்துடன் இணைத்தல் மற்றும் சூரிய சக்தி விளக்குகள் அமைத்தல் போன்ற பணிகள் இத்திட்டத்தின்மூலம் மேற்கொள்ளப்படுகின்றன.



2012 மே 4]

**(இ) மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் (WGDP)**

கோயம்புத்தூர், விருதுநகர், திருநெல்வேலி, தேனி, திருப்பூர், கன்னியாகுமரி, திண்டுக்கல் ஆகிய 7 மேற்கு மலைத்தொடர் மாவட்டங்களில் திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை வாயிலாக மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் செயல்படுத்தப்படுகிறது. பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளிகளில் சமையல் கூடத்துடன் இணைந்த பொருள் வைப்பறைகள் கட்டுதல், குடிநீர் வசதி செய்து தருதல், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு சிமென்ட் சாலை வசதி செய்து தருதல், பழங்குடியினர் குடியிருப்புகளுக்கு குடிநீர் குழாய்கள் நீட்டித்தல், இணைப்புச் சாலைகள் அமைத்தல், பழங்குடியினர் குடியிருப்புப் பகுதிகளில் தரைப்பாலம் கட்டுதல் மற்றும் சூரிய சக்தி விளக்குகள் அமைத்தல் போன்ற பழங்குடியினர் நலத் திட்டங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

**(ஈ) பெரிய அளவிலான பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள்**

பழங்குடியின மக்களுக்கு உதவி புரியும் வகையில் அவர்களின் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யவும், குறுகிய கால மற்றும் மத்திய கால கடன்கள் வழங்கவும், பெரிய அளவிலான பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மாநிலத்தில் செயல்பட்டு வருகின்றன. பல்நோக்கு கூட்டுறவுச் சங்கங்களால் நடத்தப்படும் 101 நியாயவிலைக் கடைகள் வாயிலாக இன்றியமையாப் பொருட்கள் விநியோகிக்கப்படுகின்றன. இவ்வகையான 19 கூட்டுறவுச் சங்கங்கள், ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுப் பகுதிகளில் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களில் 33,890 பழங்குடியின குடும்பங்கள் உறுப்பினர்களாக உள்ளனர்.

**(உ) வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி மையம்**

பழங்குடியின இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புக்கு வழிகாட்டும் வகையில், சிறப்பு வாழ்க்கைத் தொழில் வழிகாட்டி மையம் ஒன்று நீலகிரி மாவட்டம் உதகமண்டலத்தில் இயங்கி வருகிறது. பழங்குடியினருக்கென தொழிற்பயிற்சி நிறுவனம் ஒன்று சங்கராபுரத்தில் இயங்கி வருகிறது.

**(ஊ) வீட்டு வசதித் திட்டம்**

பழங்குடியின மக்களுக்கு, மலைப்பாங்கான மற்றும் சமதளப் பகுதிகளில் இந்திரா வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டப்படுகின்றன. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்தவாறாக, பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ், பழங்குடியின மக்களுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன. 2012-2013 ஆம் ஆண்டில், சூரிய மின்சக்தியுடன் கூடிய பசுமை வீடுகள் கட்டும் திட்டத்தின்கீழ், பழங்குடியினருக்கென ரூ.12 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் பழங்குடியினருக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டு, நிதிப் பற்றாக்குறையால் வேலூர், திருவண்ணாமலை மற்றும் நாமக்கல் மாவட்டங்களில் கட்டப்படாமல் நிலுவையிலுள்ள 439 வீடுகளுக்கு நடப்பு விலையில் கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டு வீடுகள் கட்டித்தரப்படும்.





## தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (TAHDCO)

**முன்னுரை**

தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டுக் கழகம் (தாட்கோ), 1974 ஆம் ஆண்டு, கட்டுமான நிறுவனமாக, 1956 ஆம் ஆண்டு இந்திய நிறுவனச் சட்டத்தின்கீழ் தோற்றுவிக்கப்பட்டது. தமிழக அரசும், இந்திய அரசும் இணைந்து இக்கழகத்திற்கு 51:49 என்ற விகிதாச்சாரத்தில் பங்கு மூலதனம் அளிக்கின்றன. இக்கழகத்தின் அங்கீகரிக்கப்பட்ட மூலதனம் ரூ.100 கோடியாகவும், செலுத்தப்பட்ட மூலதனம் ரூ.95.12 கோடியாகவும் உள்ளது.

தாட்கோ நிறுவனமானது, ஆதி திராவிடர்களிடையே வறுமை மற்றும் வேலையின்மையை ஒழிக்கும் ஒரு கருவியாக விளங்குகிறது. கடந்த காலத்தில் தாட்கோவின் பங்கு மூலதனம், தொடக்க நிதியுதவியாக (Margin Money) கடனாளிகளுக்கு வழங்கப்பட்டதாலும், அது திரும்பப் பெறப்படாததாலும் பங்கு மூலதனம் வெகுவாகக் குறைந்துவிட்ட நிலையில், நலியும் நிலையில் இருந்த இந்நிறுவனத்திற்கு புத்துயிரூட்டும் வகையில், ரூ.13.26 கோடி நிதியை பங்கு மூலதனமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு, 2011-2012ஆம் ஆண்டு வழங்கியது. மீண்டும் 2012-2013 ஆம் ஆண்டு வரவு—செலவு திட்ட மதிப்பீட்டிலும் ரூ.13.26 கோடி ஒதுக்கீடு செய்துள்ளது. மத்திய அரசிடம் இருந்து அதற்கு ஈடான பங்குத் தொகையை பெற நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

**1. நிருவாக அமைப்பு**

i. இக்கழகத்தின் விவகாரங்கள், இயக்குநர் குழுமத்தால் நிருவகிக்கப்படுகின்றன. ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் செயலாளர் அதன் தலைவராகவும், தாட்கோவின் மேலாண்மை இயக்குநர் அதன் முதன்மைச் செயல் அலுவலராகவும் செயல்படுகிறார்கள்.

ii. ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ள தாட்கோ அலுவலகம் ஒரு மாவட்ட மேலாளர் தலைமையில் செயல்படுகிறது. தாட்கோவின் திட்டங்களைச் செயல்படுத்தும் பொறுப்பு அவருக்கு அளிக்கப்பட்டுள்ளது.

[2012 மே 4

iii. 32 மாவட்டங்களை உள்ளடக்கிய வகையில், செயற் பொறியாளர்கள் தலைமையில், 9 கோட்டங்களைக் கொண்ட ஒரு கட்டுமானப் பிரிவு, தாட்கோவில் இயங்கி வருகிறது.

## 2. கழகத்தின் செயல்பாடுகள்

இத்துறையின் கட்டுமானப் பணிகள் தாட்கோவிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. அத்துடன், தாட்கோ நிறுவனம் ஆதி திராவிடர் / பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட கிருத்துவ இளைஞர்களுக்கு வருவாய் ஈட்டும் திட்டங்கள் மற்றும் திறன் வளர் பயிற்சித் திட்டங்களை அளித்து வருகிறது.

### (அ) கட்டுமானப் பணிகள்

தாட்கோவின் கட்டுமானப் பிரிவு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையின் கட்டுமானப் பணிகள் அனைத்தையும் மேற்கொள்கிறது.

தற்போது தாட்கோ நிறுவனம், 1,059 ஆதி திராவிடர் நல விடுதிகளில் பழுதுபார்ப்புப் பணிகள், 779 ஆதி திராவிடர் நலப் பள்ளிகளில் கழிப்பறைகள் கட்டுதல், 49 புதிய விடுதிக் கட்டடங்கள் மற்றும் 10 சமுதாய நலக் கூடங்கள் கட்டுதல் ஆகிய பணிகளை மேற்கொண்டு வருகிறது. இந்தப் பணிகளின் மொத்த மதிப்பு ரூ.13,841.59 இலட்சம் ஆகும்.

### நபார்டு வேலைகள் (ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதித் திட்டம்)

நபார்டு ஊரக உட்கட்டமைப்பு மேம்பாடு XII & XIV திட்டத்தின்கீழ் 121 உயர்நிலை மற்றும் மேனிலைப் பள்ளிகளிலும், 249 ஆதி திராவிடர் / பழங்குடியினர் குடியிருப்புகளிலும் ரூ.161.01 கோடி செலவில், தாட்கோ வாயிலாக உட்கட்டமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. தனியார் கட்டடங்களில் இயங்கிய 93 விடுதிகளில், 49 விடுதிகளுக்கு கட்டடம் கட்டும் பணி நடந்து வருகிறது. மீதமுள்ள 44 விடுதிகளுக்கு நபார்டு உதவியுடன், இவ்வாண்டில் சொந்தக் கட்டடம் கட்டப்படும். ஒவ்வொரு விடுதியும் ரூ.71.31 இலட்சம் செலவில் தாட்கோமூலம் கட்டப்படும்.



2012 மே 4]

### ஆ) பொருளாதார வளர்ச்சித் திட்டங்கள் (ஆதி திராவிடர் துணைத் திட்டத்திற்கான சிறப்பு மத்திய நிதி உதவி)

ஆதி திராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக தாட்கோ, உதவித் தொகையுடன்கூடிய வங்கிக் கடன் பெறுவதற்கு ஏற்பாடு செய்து, கீழ்க்காணும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

(i) நிலம் வாங்குதல் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டம்

(ii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்

(iii) இளைஞர்களுக்கான சுய வேலைவாய்ப்புத் திட்டம்

(iv) சுய உதவிக் குழுக்களுக்கான சுழல் நிதி

(v) சுய உதவிக் குழுக்களுக்குப் பொருளாதார நிதியுதவி

(vi) நல நிதி

(vii) துரித மின் இணைப்பு வழங்குதல் (மின்வாரிய வைப்பீடு)

(viii) இந்திய குடிமைப் பணி முதன்மைத் தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி

(ix) சட்டம் பயின்ற இளம் பட்டதாரிகளுக்கு தொழில் துவங்க நிதியுதவி

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழக வரலாற்றில் முதன் முறையாக, தாட்கோ வாயிலாக நிறைவேற்றப்படும் பொருளாதார முன்னேற்றத் திட்டங்களுக்கு, திட்டச் செலவில் உயரளவாக 30 சதவீதம் அல்லது ரூ.2.25 இலட்சம் இவற்றில் எது குறைவோ, அத்தொகையை 2011-2012 ஆம் ஆண்டிலிருந்து உதவித் தொகையாக வழங்கப்படும் என அறிவித்து ஆதி திராவிடர்களின் வாழ்வில் ஒளியேற்றியுள்ளார்.

மேற்சொன்ன திட்டத்திற்கு, முன்னெப்போதும் இல்லாத அளவில், 51,479 ஆதி திராவிட தொழில் முனைவோருக்கு ரூ.79.86 கோடி உதவித் தொகையும், ரூ.145 கோடி வங்கிக் கடனும் 2011-2012 ஆம் ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 2012-2013 ஆம் ஆண்டிலும் தொடர்ந்து செயல்படுத்தப்படும்.

**(i) நிலம் வாங்கும் திட்டம் மற்றும் நில மேம்பாட்டுத் திட்டம்**

ஆதி திராவிட மக்கள், தமக்கென சிறிது நிலமாவது வைத்திருக்க வேண்டும் என்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். வங்கிக்கடன் வாயிலாக, தகுதி வாய்ந்த உதவித் தொகை வழங்கி நிலங்கள் வாங்கப்படுகின்றன. இத்திட்டத்தின் சிறப்பு அம்சங்கள் வருமாறு:

- ஆதி திராவிட மகளிரின் பெயரில் நிலங்கள் வாங்கப்படுகின்றன.
- ஆதி திராவிடர்களின் நிலங்கள் வாங்கப்படுவதில்லை.
- ஒவ்வொரு பயனாளியும் 2.5 ஏக்கர் நன்செய் நிலம் அல்லது 5 ஏக்கர் வரை புன்செய் நிலம் வாங்க தகுதியுடையவர்கள் ஆவர்.
- நில மேம்பாட்டிற்காக பயனாளிக்கு நிதியுதவி அளிக்கப்படுகிறது.
- 100 சதவீதம் முத்திரைத்தாள் மற்றும் பதிவுக் கட்டணத்திற்கு விலக்களிக்கப்படுகிறது.
- வேளாண் பணிகளுக்காக முன்னுரிமை அடிப்படையில், மின் இணைப்புப் பெற பயனாளிகள் தகுதி உடையவர்கள் ஆவர்.

**உதவித் தொகை**

திட்டச் செலவின் உயரளவாக 30 விழுக்காடு அல்லது ரூ.2.25 இலட்சம், இதில் எது குறைவோ அத்தொகை உதவித் தொகையாக வழங்கப்படும். நிலத்தின் மதிப்பை நிர்ணயிப்பதற்கு, வழிகாட்டி மதிப்பு பின்பற்றப்படும். இந்த உதவித் தொகை, பகுதி இறுதி உதவித் தொகையாக (Back End Subsidy) இருக்கும்.

**(ii) தொழில் முனைவோர் மேம்பாட்டுத் திட்டம்**

வருவாய் ஈட்டும் தொழில் தொடங்குவதற்காக தனி நபர்களுக்கு, நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**உதவித் தொகை**

திட்டச் செலவின் உயரளவாக 30 விழுக்காடு அல்லது ரூ.2.25 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகையானது உதவித் தொகையாக வழங்கப்படும். இத்தொகை பகுதி இறுதி உதவித் தொகையாக (Back End Subsidy) இருக்கும்.





**(iii) இளைஞர்களுக்கான சுய வேலை வாய்ப்புத் திட்டம் (SEPY)**

இத்திட்டத்தின்கீழ், படித்த வேலையற்ற மற்றும் குறைவான சம்பளத்தில் வேலை செய்யும் இளைஞர்கள் தங்களுக்குத் தெரிந்த விருப்பமான தொழில் செய்வதற்கு, நிதியுதவி அளிக்கப்படுகிறது.

**உதவித் தொகை**

திட்டச் செலவின் உயரளவாக 30 விழுக்காடு அல்லது ரூ.2.25 இலட்சம், இதில் எது குறைவானதோ அத்தொகை ஒவ்வொரு குடும்பத்திற்கும் உதவித் தொகையாக வழங்கப்படும். இத்தொகையானது, பகுதி இறுதி உதவித் தொகையாக ((Back End Subsidy) இருக்கும்.

**(iv) சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதியுதவி**

இத்திட்டத்தின்கீழ், உறுப்பினர்கள் தங்களுக்குள் உள் கடன் அளித்துக்கொள்ள ஏதுவாக, சுழல் நிதியுதவி வழங்கப்படுகிறது.

வங்கிக் கடன் ரூ.50,000 மற்றும்

உதவித் தொகை ரூ.10,000

**(v) சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார நிதியுதவி**

ஆதி திராவிடர் மகளிர் ஒரு குழுவாக இணைந்து தங்களுக்குத் தெரிந்த வருமானம் ஈட்டக்கூடிய தொழில் தொடங்குவதற்கு உதவித் தொகையுடன்கூடிய கடனுக்கு ஏற்பாடு செய்யப்படுகிறது.

**உதவித் தொகை**

திட்டச் செலவின் உயரளவாக 50 விழுக்காடு அல்லது ரூ.2.50 இலட்சம் இதில் எது குறைவானதோ அத்தொகை உதவித் தொகையாக வழங்கப்படும். இவ்வாறு வழங்கப்பட்ட இந்த உதவித் தொகை, பகுதி இறுதி உதவித் தொகையாக (Back End Subsidy) இருக்கும்.

**(vi) நல நிதி**

இத்திட்டத்தில், பயனாளிக்கு உயரளவாக ரூ.10,000 உதவித் தொகை வழங்கப்படுகிறது. ஆதி திராவிடர் இனத்தைச் சேர்ந்த மாற்றுத் திறனாளிகள், ஆதரவற்ற விதவைகள், வன்கொடுமையால் பாதிக்கப்பட்ட நபர்கள் மற்றும் கொத்தடிமையில் இருந்து விடுவிக்கப்பட்ட தொழிலாளர்கள் முதலியோருக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

[2012 மே 4

மாவட்ட ஆட்சியர்களுக்கு ரூ.10,000 ஒட்டுமொத்தத் தொகையை வழங்குவதற்கு விருப்புரிமை அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.

**(vii) துரித மின் இணைப்பு வழங்கல் (மின்வாரிய வைப்புத் தொகை) திட்டம்**

முன்னுரிமை அடிப்படையில், துரித மின் இணைப்பு பெறும் வகையில் ஆதி திராவிட விவசாயிகளுக்கு நபர் ஒருவருக்காக 10,000 ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு தாட்கோ நேரடியாக செலுத்தி வருகிறது.

**(viii) இந்திய குடிமைப் பணிகளுக்கான முதன்மைத் ((Main) தேர்வு எழுதுவோருக்கு நிதியுதவி**

இந்திய குடிமைப் பணி முதனிலைத் (preliminary) தேர்வில் தேர்ச்சியடைந்த ஆதி திராவிட மாணவர்கள், முதன்மைத் தேர்வு (Main) எழுத உதவும் பொருட்டு ரூ.25,000 நிதியுதவி அளிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ், விண்ணப்பதாரர் இந்நிதியுதவியை மூன்று முறை மட்டுமே பெற முடியும்.

**(ix) சட்டம் பயின்ற இளம் பட்டதாரிகளுக்கு தொழில் துவங்குவதற்கு நிதியுதவி**

சட்டம் பயின்ற இளம் பட்டதாரிகள் தங்கள் தொழிலைத் துவங்க அலுவலகம் அமைக்க விரும்பினால், அவர்களுடைய ஆண்டு வருமானம் ரூ.1 இலட்சத்திற்கு மிகாமல் இருக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அவர்களுக்கு, ரூ.10,000 நிதியுதவி வழங்கப்படும்.

**(இ.) திறன் வளர்ப்புத் திட்டங்கள் (சிறப்பு மாநில நிதியுதவி திட்டத்தின்கீழ்)**

மாநில அரசு, ஒவ்வொரு ஆண்டும் சிறப்பு மாநில நிதியுதவியாக ரூ.25 கோடி ஒதுக்கீடு செய்கிறது. அதன்படி ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய ஆதி திராவிட கிருத்துவ இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பைப் பெறக்கூடிய, திறன் வளர் பயிற்சிகள் தாட்கோ வாயிலாக வழங்கப்படுகின்றன.

- ➢ ஒவ்வொரு ஆண்டும் சுமார் 25,000 இளைஞர்கள் பயனடைகிறார்கள்.



2012 மே 4]

- ➢ அவர்களுக்கு, கட்டணமின்றி இலவசமாகப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.
- ➢ பயிற்சியாளர்களுக்கு, மாதாந்திர உதவித் தொகை வழங்கப்படுகின்றன.
- ➢ பயிற்சி முடித்தவுடன், பயிற்சி பெற்றவர்களில் 50 விழுக்காடு இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு உத்தரவாதம் அளிக்கப்படுகிறது.

மத்திய / மாநில அரசின் அங்கீகாரம் பெற்ற பயிற்சி நிறுவனங்கள் மற்றும் புகழ் பெற்ற தனியார் நிறுவனங்கள் வாயிலாக, வேலைவாய்ப்பினைத் தரக்கூடிய கீழ்க்காணும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன.

- **தேசிய நிறுவனங்கள் மூலம் பயிற்சி**
  - ➢ ஆயத்த ஆடை வடிவமைப்புப் பயிற்சி (ATDC & NIFT)
  - ➢ நெகிழிப் (பிளாஸ்டிக்) பொருட்கள் தயாரித்தல் பயிற்சி (CIPET)
  - ➢ காலணி மற்றும் தோல் பொருட்கள் தயாரிக்கும் பயிற்சி (CFTI)
  - ➢ திரைப்படம் சார்ந்த துறையில் பயிற்சி (NFDC)
- **ஏனைய பயிற்சிகள்**
  - ➢ விருந்தோம்பல், சுற்றுலா மற்றும் போக்குவரத்து மேலாண்மை சார்ந்த பயிற்சிகள்
  - ➢ சுகாதாரம் தொடர்புடைய பயிற்சிகள்
  - ➢ கணினி மற்றும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான பயிற்சிகள்
- **போட்டித் தேர்வுகளுக்கான பயிற்சிகள்**
  - ➢ பொது திறனாய்வு தேர்வு (CAT) / சேவியர்ஸ் திறனாய்வு தேர்வு (XAT), பட்டயக் கணக்கர் (CA) / விலை மதிப்பீட்டுக் கணக்கர் (CWA) வங்கிப் பணி, பணியாளர் தேர்வாணையம் (SSC), இரயில்வே தேர்வு வாரியம் (RRB) / தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் (TNPSC) முதலிய தேர்வுகளுக்கு பயிற்சி

- ஆதி திராவிடர் / பழங்குடியினர் பள்ளிகளிலும் விடுதிகளிலும் உள்ள 9 மற்றும் 11 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு, மென்திறன் மற்றும் ஆங்கிலப் பேச்சாற்றல் பயிற்சி.

**2012–2013 ஆம் ஆண்டில் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறைக்கான நிதி ஒதுக்கீடு**

(ரூபாய் கோடியில்)

| தொடர் எண் | துறைத் தலைவர்கள் | வருவாய் | மூலதனம் | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | தலைமைச் செயலகம் | 5.12 | 0 | 5.12 |
| 2. | ஆதி திராவிடர் நலத் துறை | 1025.37 | 100.29 | 1125.66 |
| 3. | பழங்குடியினர் நலத் துறை | 125.21 | 34.93 | 160.14 |
| | மொத்தம் | 1155.69 | 135.22 | 1290.91 |

***